
காஞ்சி
ஆசிரியர் அண்ணாதுரை
பொங்கல் மலர் ௧௯௬௭
விலை ரூ 1.50
கே.மாதவன்

கோட்டாகுடி பெரியநாயக்கர்
வெ. கோவிந்தசாமி அவர்களின்
நூல் தொகுப்பு

உமையாள் புரொடக்ஷன்ஸ்

கலைஞர் மு.கருணாநிதியின்

தங்கத்தம்பி

டைரக்ஷன்

ராமநாத் பிரான்ஸிஸ்

தயாரிப்பு:

S.P.கருப்பையா

P.அங்கமுத்து

R.பெரியநாயகம்

பாடல்கள்	இசை	கலை
வாலி	K.V.மஹாதேவன்	அங்கமுத்து

காமிரா	எடிட்டிங்	ஸ்டில்ஸ்
T.M.சுந்தரபாபு BA, LCSE	R.தேவராஜன்	சந்தாமியன்

எமது
பொங்கல்
நல்வாழ்த்துகள்

இந்தப் பொங்கல் திருநாளன்று
ஒவ்வொருவர் மகிழ்ச்சியும் பொங்கி வழியட்டும்.
அப்பொழுது நீடித்து உழைக்கும் அழகு ஆடைகளை
எப்பொழுதும் திறமையுடன் நெய்து கொடுக்கும்
நெசவாளர்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.
உங்கள் பணத்திற்கான முழு மதிப்பையும்
கோ-ஆப்டெக்ஸ் துணிகள் இப்பொழுதும்,
எப்பொழுதும் அளிக்கும்.

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி துணிகள்

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட்.,
34/1-A, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை-8.

ELEGANT

''உமர்''

''உமர்'' ஆபரணங்களினுல் அலங்காரம் செய்வதில் ஓர் இன்பம்!

''உமர்'' ஆபரணங்களே அணிவதில் ஓர் பெருமை!

''உமர்'' ஆபரணங்கள் ஆசிய, ஐரோப்பிய கூட்டு முறையில் தயார் செய்யப்பட்டது; மூன்று ஆண்டுகள் உத்திரவாதமுடைய நூதன படைப்பு!

''உமர்'' ஆபரணங்கள் 22 காரட அசல் தங்கத் தகடடால் உறுதியாக கவரிங் செய்யப்பட்டது; தங்க் கவரிங் ஆபரணங்கள் தயாரிப்பதில் முக்கியமான முன்னேற்றம்!

''உமர்'' ஆபரணங்கள் பள. பளப்பான மெருகுடன் கூடிய பல ஆண்டுகள் குன்ருப பொலிவுடன் உறுதியாக உழைக்கும் திறமை!

''உமர்'' ஆபரணங்கள், மேலும் ஏராளமான கவர்ச்சி வண்ணங்களிலும், புதுமையான டிசைன்களிலும உள்ளன.

உள்ளம் கவரும் 'உமர்' நகைகள்

நகைச் செல்வம்
நாடிடும் நல்லழகு
நங்கையர் விரும்புவது

''கலா''

பல ஆண்டுகள் உறுதியாகவும், மங்காத பொலிவுடனும், மாருத மெருகுடனும் உழைக்கும் பொருட்டு எக்ஸ்ட்ரா தங்கத்தினுல் கவரிங் செய்யப்படட ஒரே ஆபரணம் ''கலா'' கவரிங் ஆபரணம்.

ஐந்து ஆண்டுகளுக்கு மேல் உத்திரவாதத்துடன் உழைக்கக்கூடியதும் எப்படி பார்த்தாலும் ''தங்கம்'' என்று மதிப்பிடக்கூடிய ஒரே ஆபரணம் ''கலா'' கவரிங் ஆபரணம்.

தங்களுக்கு தேவையற்ற நிலேயிலோ வேறு புதுமையான டிசைன் ஆபரணங்கள் பெற எண்ணியோ உபயோகித்த பின்பும் பணம் பெரும் வாய்ப்புகளைத் தரும் ஒரே ஆபரணம் ''கலா'' கவரிங் ஆபரணம்.

உம்மா கோல்டு கவரிங் ஒர்க்ஸ்
552, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி,
சென்னே-5

தபால் மூலம் வரும் ஆர்டர்கள் முதலில் கவனிக்கப்படும். படவிலேப் பட்டியல் வேண்டுவோர் 25 பைசா ஸ்டாம்பு அனுப்பவும்.

சென்னை தேனம்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சியில் எமது 20-ம் நம்பர் ஸ்டாலுக்கு வருகை தாருங்கள்.

—RAJATHI

இல்லாமை பொங்குவதா?

நா. புகழேந்தி

என்ன இருக்கிறது? எதை வைத்துப் பொங்கலிட?
செந்நெல் அரிசியுண்டா? செங்கரும்பு வெல்லமுண்டா?

மஞ்சள் குலையுண்டா? மருக்கொழுந்து மணமுண்டா?
இஞ்சி பருப்பேலம், இளக்கிவைத்த நெய்யுண்டா?

அடுப்புக்கு விறகுண்டா? ஆவின்பால் வரவுண்டா?
இடுப்புக்கு மேல்கந்தை இருக்கிறதா குளிருக்கு?

சின்னக் குழந்தைகன் சிரித்து மகிழ்ந்தாட
வண்ணத் துணியுண்டா? வாங்கும்படி விலையுண்டா?

குந்தக் குடிலுண்டா? கோரைப்பாய் ஒன்றுண்டா?
வந்த விருந்தினரை வரவேற்கத் தெம்புண்டா?

உழைப்பாளர் உள்ளத்தில் ஒளியுண்டா; மகிழ்வுண்டா?
உழைக்கின்ற உழைப்புக்கு பலனுண்டா பயனுண்டா?

நெஞ்சம் வெடிக்கின்ற நிலைமைகளை எடுத்தோதிக்
கெஞ்சி அழுதாலும் கிஞ்சிற்றும் பயனுண்டா?

இல்லாமை எனஒன்று இருக்கிறது! அதைவைத்து
தொல்லையாம் பொங்கலிட துடிக்காதோ எம்முள்ளம்?

இல்லாமை பொங்குவதா? இன்னிலையா எந்நாளும்?
நல்லாட்சி நல்வளத்தை நாம் காண வேண்டாமா?

தம்பி

வெற்றி விழா காண

எல்லா வளங்களும் தருகிறேன், என் மக்களிடம் பரிவுமிகக் கொண்டிருப்பதனால்! இருந்தும் என் மக்களிடமே ஏழ்மை கப்பிக்கொண்டிருக்கக் காண்கின்றேன்; ஏக்கம்கொள்கின்றேன்.

எல்லா சீரும் தந்துள்ளேன்; எனினும் என் மக்கள், இங்கும் வெளியிலும், கூலிகளாகி உழலக் காண்கிறோம்; தங்கத் தொட்டிலில் தவழ்ந்த குழந்தை, பெரியவனான பிறகு கரத்தில் தகரக்குவளையுடன் காணப்படின், இரத்தமல்லவா வடியும் கண்களிலிருந்து.

எங்கும் காணப்படாத அளவு இலக்கியச் செல்வத்தைத் தந்துள்ளேன், எனினும் என் மக்களிலே பெரும்பாலோர் எழுத்தறிவும் அற்றவராயுள்ளார்; கற்றோரிலும் மிகப்பலர், பகுத்தறிவற்றுக் கிடக்கின்றார்; என் செய்வேன!—என்று எண்ணி எண்ணித் தமிழன்னை குமுறுகின்றாள் என்று கூறிடின், கற்பனை என்றும், கதைநடை என்றும் கூறிட முற்படுவர்.

ஆனால் தமிழகத்துக் குடில்களில் உலவிடும் ஒவ்வொரு தாயும், இந்நிலையில் இருந்திடக் காண்கின்றோம்; அந்தத் தாயே, தமிழன்னை; தத்தளிக்கும் தமிழன்னை!!

எனினும் அந்தத் தாயும் ஒருநாள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, மனையிலிருந்தும் மனதிலிருந்தும இருளை விரட்டிவிட்டு, புத்தொளி கூட்டி, புதுக்கோலம் புனைந்து, பொங்கற் புதுநாள் கொண்டாடுவதனை ஒரு 'மரபு' ஆக்கிக்கொண்டிருக்கக் காண்கிறோம்.

கவலைகள் மடிந்திடவில்லை; மறைந்துள்ளன ஒருநாள்; மறைத்துவைக்கப்பட்டுள்ளன, விழா நாள் என்பதால்.

விழாக்கள், ஒரு நாட்டு மக்களின் வளர்ச்சியும் வளமும், உளப்பாங்கும் எந்நிலையில் உளது என்பதனை எடுத்துக்காட்டுவன.

வீடும் நாடும் விழாக்கோலம்பூண்டு, மக்கள் ஒன்றுகூடி மனம் மகிழ்ந்து, கலைநடமிட, களிப்பு ஒளிவிட உலவிடும் நாள், விழா நாள்; திருநாள்!

நிம்மதியான வாழ்வும், நிலையான அரசும் பெற்றிருந்தாலொழிய, ஒரு நாடு, விழா நடத்திடும் இயல்பினைப் பெற்றிட முடியாது.

பிற நாடுகள் அந்நிலை பெறுமுன்பே, தமிழகம் சீரான நிலை பெற்றிருந்ததனாலேயே, பொங்கற் புதுநாள், தமிழர் திருநாள், அறுவடை பெருநாள், பொன்னாள், நன்னாள் என்று பல்வேறு சிறப்புப் பெயர்களைப் பெற்றுள்ள தனித் திருநாளைக் கொண்டாடி வந்துளது.

அந்நாள், உமது இல்லத்தில் இன்பம் வழங்குவதாக அமையட்டும் என்று வாழ்த்துகின்றேன். கவலையும் கலக்கமும், கண்ணீரும் பெருமூச்சும் அந்த ஒரு நாளாகிலும், இல்லங்களில் இருந்திடாத நிலை வேண்டும்; களிப்பும் கனிவும், பரிவும் பாசமும், மலரும் மணமும், பசுமையும் பாங்கும், பாட்டும் கூத்தும், எழிலும் மழலையும் அந்த ஒரு நாளாகிலும் இல்லந்தோறும் அரசோச்சட்டும். இன்பம் என்றால் இப்படித்தான் இருக்கும, அன்புவழி என்றால் இதுபோலத்தான் இருக்கும், உளம் என்றால் இதுதான், வண்ணம் என்றால் இதுதான் என்று உணரச் செய்திடவாகிலும் ஆண்டுக்கு ஒருநாள் இந்த அருமைத் திருநாளைப் பெறுகின்றோம்.

முயற்சி திருவினையாக்கும்; கூடிவாழ்ந்தால் கோடி இன்பம்; இல்லறமே நல்லறம்; நல்ல வீடு ஓர் பல்கலைக்கழகம்; மழலைக்கீடாகாது குழலும் யாழும்; என்பனபோன்றவைகளை ஏடு

களிலே படித்திடும்போது கிடைத்திடும் மகிழ்ச்சியை விட, வீடுகளில், காண்பதற்கு வாய்ப்புக் கிடைத்திடும்போது, மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

இன்றுபோல் என்றென்றும் இருந்திடலாகாதா என்ற எண்ணம் கூடக் கொள்கின்றோம்; இருந்திடுவதில்லையே என்பதனை எண்ணி ஏங்குகின்றோம்.

இவ்வாண்டு பொங்கற் புதுநாள் கொண்டாடுங் காலை, ஏக்கம் துரத்திவிட்டு, ஏற்புடை ஓர் உறுதி கொண்டிட வேண்டுகின்றேன்.

பொழுது புலர்ந்தது; பொற்கோழி கூவிற்று: புதுமலர் காண்கின்றோம்; பொன்னொளி காண்கின்றோம்; விழா! எனவே இவை கண்டு மகிழ்கின்றோம்.

நாட்டுக்கே ஓர் பொற்காலம், பொழுது புலரும் நாள், கண்டிட முடியும், நல்லரசு அமைத்திடின் அந்த நல்லரசு அமைத்திடும் உரிமையாளரே, நாம் ஒவ்வொருவரும்! "இந்நாட்டு மன்னர்கள்"!

நாட்டு மக்கள், இவ்வாண்டு பொங்கற் புது நாளன்று, நல்லாட்சி அமைத்திடும் உரிமை பெற்றுள்ளோம் என்பதனை உணர்ந்து உவகை கொண்டிடல் வேண்டும்; அதற்கேற்ற முறையில் பணியாற்றிடும் உறுதி பூண்டிடவேண்டும்.

ஓர் திங்கள் கூட அல்ல; இரு கிழமைகளே! இடையில்! இருளுக்கும் ஒளிக்கும் இடையில்! இல்லாமைக்கும் 'எலலோர்க்கும் எல்லாம்' எனும் நிலைக்கும் இடையில்; அன்பு வழி மறந்து அறம் பழித்து நடாத்தப்படும் அரசியலுக்கும் அன்பரசுக்கும் இடையில்!

இந்த இடையிலே உள்ள நாட்களில், மக்கள் தமது கடமை உணர்ந்து, ஆற்றல் மறவாமல், நெறி பிறழாமல் பணியாற்றிடின், புத்தாட்சி அமைத்திட இயலும், நாட்டிலே புத்தொளி பரவிடச் செய்திட முடியும்.

முடியும், முயன்றால்! முயற்சித்தோர் வெற்றி கண்டுள்ளனர்! முடியன்று பல முடித்த மரபினரே நாம்! அதனை மறவாது, எழுச்சியுடன் பணிபுரிந்திடின், வெற்றி நமதே! ஐயமில்லை! உதயசூரியன் எழுவான்! ஐயமில்லை! எழு ஞாயிறு கண்டிடின், ஏது இருள்! எங்கும் ஒளிமயம்! அகத்திலும் புறத்திலும்! நாடெங்கும்! வீடெல்லாம்.

அந்த எழிலையும் ஏற்றத்தையும் பெற்றாக வேண்டும் என்ற உறுதியைச் சமைத்தெடுத்து, தானும் உண்டு, மனையுளார் அனைவர்க்கும் தந்து மகிழ்ந்திட வேண்டுகிறேன்; மாண்புபெற வேண்டுகிறேன்.

அகமும் புறமும்கொண்டோர் நாம்; இன்று அறியாமையின் பிடியில் சிக்கியுள்ளோம்.

கருப்புவிளையும் நாடு இது; மக்கள் கசப்பு உண்டு உழல்வது காண்கின்றோம்.

செந்நெல் விளைந்திடும் வளமிகு பூமிஇது; இன்று கட்டாயப் பட்டினி, அரச கட்டளையாகிடக் காண்கின்றோம்.

எல்லோரும் ஓர் நிறை என்ற கவிதை பெற்றோம்; இன்றோ இல்லாதார் தொகை வளர்ந்திடக் காண்கின்றோம்.

உலை கொதிக்கிறது, பானை இசைபாடுகிறது, கொண்டுவந்துபோடு! கொண்டுவந்துபோடு!—என்று; அரிசி கொட்டிடின் சோறு காண்போம்; மணலைக் கொட்டிடின்?

செங்கரும்புத் துண்டொன்றைத் தூக்கிச்சென்று சிவந்த அதரம் இரத்தச் சிகப்பாகுமட்டும் கடித்துத் தின்கின்றான், கண்ணின்மணி! காண்கின்றோம், களித்திடுகின்றோம். கரும்புத்துண்டாக இன்றி, மூங்கில் துண்டாக இருந்திடின்!

முக்கனி கிடைத்திடாமல், எட்டிக்கனியைக் கொட்டி இஃது வேண்டுமோ என்று கேட்டிடின், என்ன எண்ணிக்கொள்வோம்!

இன்று 'பசுமையை' வெகுபாடுபட்டு இல்லங்கள் தேடிப் பெறுகின்றன. பசுமை, தன்னாலே கிடைத்திடவில்லை; தாராளமாகவும் காணப்படவில்லை.

எங்கும், என்றும் பசுமை கொலுவிருக்கத்தக்க நிலை பெற்றிடலாம் இன்பத் திரு இடத்தில்; அதற்கான தேர் நல்லரசு அமைத்திடின்.

இன்று, ஏற்படுத்திக்கொண்டுள்ள விழாக்கோலம், இயற்கையானதாகிட; இன்று வருவித்துக் கொள்ளும் மகிழ்ச்சி உயிருள்ளதாக, இன்று மனையுள்ளார் கொண்டிடும் பொலிவு என்றும் நிலைத்திருக்க, யாது செயல்வேண்டும் என்ற எண்ணத்தைப் பெற்றிடவேண்டும்.

தமிழன் எண்ணிப் பார்த்திடின், தக்கவழியினைக் கண்டறியும் திறனுடையான்.

தமிழன், செயலார்வம் கொண்டிடின் எண்ணியதைச் செய்துமுடிக்கவல்லான்.

காஞ்சி

மலர் 3 :: இதழ், 23, 24, 25

பொங்கல் மலர் அலுவல்களை முன்னிட்டு கடந்த 1-1-67ம் நாளைய இதழ் வெளிவரவில்லை. 8-1-67ம் நாளைய இதழ் மலராக வெளிவருகிறது, அடுத்து பொங்கல் விழாவை முன்னிட்டு இரு கிழமைகளுக்கு அலுவலகத்துக்கு விடுமுறை என்பதையும் அடுத்த இதழ் 29-1-67ல் வெளிவரும் என்பதையும் எல்லா விற்பனையாளர்களுக்கும், நூலகங்களுக்கும் சந்தாதாரர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

உரிமையாளர்.

தமிழன் கத்தும் கடல் அடக்கிக் கலம்விட்டான், கடக்கொணாதது என்று மற்றையோர் எண்ணி மலைத்திருந்த நாடுகளிலே!

கங்கைகொண்டான், கடாரம் வென்றான், இமயம் சென்றான், கொடிபொறித்தான்; ஏற்றம் எல்லாம் கண்டான்.

வரலாறு மறவாமல் இருந்திடின், இன்றும் எண்ணியதை முடித்திட இயலும்.

கழகம், அந்த வரலாற்றுச் சிறப்பினை நினைத்தும் எடுத்துக் கூறி வருகிறது.

நல்லாட்சி அமைத்திடுவீர் என்று வேண்டியபடி இருந்துவருகிறது.

இன்று பொங்கற் புதுநாள்; மகிழ்ச்சி பெற்றிடும் நன்னாள். இந்நாளில் என் வாழ்த்துக்களை வழங்குகின்றேன்; ஒன்று கேட்கின்றேன்; நல்லரசு கண்டிடும் நற்பணிக்கான உறுதி பெற்றிடுவீர், மற்றையோர்க்கு அளித்திடுவீர்!

இன்று விழா மட்டுமல்ல; வீரம் விளைவிக்க உறுதி கொண்டிடும் நாள்!

நாடு விழாக்கோலம் கொண்டிடச் செய்வோம் என்ற உறுதி கொண்டிடும் நாள்.

விழா தரும் மகிழ்ச்சி அந்த உறுதியினை வளர்த்திடட்டும்! ஆற்றலை வளர்க்கட்டும் வெற்றி நோக்கி நடைபோடச் செய்யட்டும்!

கல்லும் முள்ளும் மண்டிக்கிடந்த இடம், மலர்த் தோட்டமானதும், கனிதரு நிறை சோலையானதும், கதையல்ல! விழா காட்டிடும் உண்மை!

ஒரு நல்லாட்சி கண்டிடும் ஆற்றல் நமக்கு உண்டு என்பதனை, உழைப்பின் மூலம் நாட்டின் புன்கலத்தையே மாற்றிட வல்லோர் நமது மக்கள் என்பதனை எடுத்துக் காட்டிடும் இந்நாளன்று, நல்லாட்சி அமைத்திட உறுதி கொண்டேன்; செய்து முடிப்பேன்; வெற்றி காண்பேன்! — என்ற முழக்கம் எழட்டும்! புறப்படு, தம்பி! புறப்படு! புனிதப்போர் நடாத்திட! வெற்றி பெற்றிட! புறப்படு!

ஒருமுறை — மற்றோர் முறை — விழாக்கோலம் கொண்டுள்ள மனையினைக் கண்டு களித்திடு; இல்லத்துள்ளாரின் இன்முகம் கண்டு மகிழ்ந்திடு!

புதியதோர் 'தெம்பு' பெறுகின்றாய் அன்றோ! அந்தத் 'தெம்பு' தரும் புதிய நடையுடன் புறப்படு. தமிழ்மகனை அழைக்கின்றார், எல்லா வளமும் நான் தந்தேன், தக்க முறையில் பயன்படுத்தி என் மக்களை வாழ வைக்கும் நல்லரசு அமைத்திட வா! மகனே வா! என்று.

ஆமாம், தம்பி! அன்னை அழைக்கின்றாள் புறப்படு! — என்று நானும் அழைக்கின்றேன்! வெற்றி விழா, காணலாம், வீரநடை போடலாம், புறப்படு!

அண்ணன்,

அண்ணாதுரை

தந்தி:
ஆர்வீஸ்

ஆர்வீஸ்
காபி

38, நெல்லுக்காரத் தெரு, காஞ்சீபுரம்.

தொலைபேசி எண்:
212

உயர்ந்த ரக காப்பிக் கொட்டையும்,
மணமிக்க காப்பித்தூளும்
மொத்தமாகவும், சில்லரையாகவும், மலிவாகவும் கிடைக்கும்.

சுகர்ணோவின் தேவி!

எஸ்·ராமசாமி எம்.ஏ.

“அதிபருக்கு மனைவியர்கள் தேவையாயிருக்கலாம்; எங்களுக்கு வேண்டியது பசிக்கு உணவு” என்று ஆர்ப்பரிக்கும் ஊர்வலங்கள் அண்மையில் சுகர்ணோவுக்கு எதிராக இந்தோனேஷியாவில் ஆங்காங்கே நடைபெற்றது.

மக்களது கோபம் அத்துடன் கூட நின்றுவிடவில்லை. ஒரு அழகிய பெண்ணின் கொடும்பாவி ஒன்றினை தெருக்களில் எடுத்துச் சென்று தீயினில் போட்டுக் கொளுத்தினர்.

இதற்குக் காரணமாக இருந்தவர் ‘தேவி’ என்னும் சுகர்ணோவின் சமீபத்திய மனைவி.

இருபத்துஆறும் வயதுப் பருவத்தில் இருக்கும் இந்த முன்னாள் ஜப்பானிய ஓட்டல் பணிப் பெண் சுகர்ணோவின் உள்ளம் கவர்ந்த பெண்டிரில் முதன்மையானவர்: மனைவியர் என்ற வரிசையில் நான்காமவர்.

இவர்மீது இருந்த வெறுப்பினைக் காட்டுவதற்குத்தான் ஜாகர்தாவின் தெருக்களில் கண்டன ஊர்வலங்கள், கொடும்பாவி உருவங்கள் தீயிடுதல் அனைத்தும்!

கடந்த அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் அதிபர் சுகர்ணோவின்மீது சாட்டப்பட்ட அதிருப்தி — கண்டனங்கள் ஆகியவைகளில் ஐம்பது சதவிகிதத்துக்குமேல் தேவியின் மீதும் காட்டப்பட்டது.

காரணம் சுகர்ணோ அவரிடம் கொண்டிருந்த நெருக்கம் — நம்பிக்கை!

ஏழுஆண்டுக்கால இந்தோனேஷியாவில் நிகழ்ந்த பெரிய மகிழ்வு தரத்தக்க சம்பவம் எது—அதிகம் வருந்தத்தக்க நிகழ்ச்சி என்ன என்று யாரையாவது கேட்டால் முதலாவதற்கு உதாரணமாக சுகர்ணோவும் தேவியும் வாழ்க்கையில் இணைந்ததையும் இரண்டாவதற்குச் சான்றாக தேவியின்மீது மக்கள் காட்டும் வெறுப்பையும்தான் உதாரணமாகக் காட்டுவார்கள்.

டோக்கியோவின் இரவு விடுதி ஒன்றில் தேவியைக் கண்டெடுத்த சுகர்ணோ ஏழு ஆண்டுகளாக அவரைத் தனது வாழ்விலும் தாழ்விலும் மேலான ஒரு துணையாக வைத்துப் போற்றுகிறார்.

அண்மைக்காலமாக சரிந்துவரும் அரசியல் பெருமைகளுக்குப் பின்னும் சுகர்ணோ பழைய கீர்த்தியிலேயே யாராலாவது வைத்து எண்ணப்படுகிறார் என்றால் அது ‘தேவி’ ஒருவர்தான்.

அவரது மற்றைய மனிதர்கள் இப்போது அவருக்கு எவ்வித ஆறுதலோ தேறுதலோ கூறும் நிலையில் அவரிடம் இல்லை. அவர் சந்தித்துப் பழகிய எத்தனையோ சர்வதேசப் பெண்கள் இன்று அவரது பெயரை இதழ்களில்தான் பார்க்கின்றனர்.

தனது 19-ம் வயதில் சுகர்ணோவுடன் இந்தோனேஷிய மண்ணை மிதித்த தேவி அன்று முதல் இரண்டு நிலைகளில் பிறழாமல் வாழ்ந்து வருகிறார். ஒன்று: அதிபரின் மனைவி; இரண்டு: ஒரு இந்தோனேஷிய பிரஜை.

சுகர்ணோவின் கலையுணர்வைத் தன்னிடமிருந்தும் பிரதிபலித்துக் காட்டும் திறமைபடைத்தவர் தேவி. தனக்காகவே சுகர்ணோ உருவாக்கித் தந்த அழகிய அரண்மனைக்கு தனது கைவண்ணத்தையும் சேர்த்து எழில் கூடமாக்கியிருக்கிறார் அவர்.

சுகர்ணோவின் 64-வது பிறந்த தினத்தையொட்டி தானே எழுதிய அவரது உருவப் படத்தை தனது பரிசாக அவருக்கு அளித்திருக்கிறார். சுகர்ணோவும் தன்னால் எழுதப்பட்ட தேவியின் உருவப் படத்தை தேவிக்கு வழங்கியிருக்கிறார். இரண்டும் தேவியின் அரண்மனையில் எதிர் எதிராக மாட்டப்பட்டுள்ளன.

ஓய்வு நேரங்களில் ஒரு இந்தோனேஷியப் பெண்ணாக எல்லா வகைகளிலும் மாறுவது எப்படி என்று பயிற்சிகள் மேற்கொள்வதுதான் தேவியின் அன்றாட கடமைகளில் ஒன்றாக இருக்கிறது. “ஆரம்பத்தில் மக்கள் என்னை வெறுத்தது சரி; ஒரு இந்தோனேஷிய பிரஜையாக மாறவேண்டும் என மனதார முயன்று வரும்போதும் ஏனோ அவர்களுக்கு என்மீது இத்தனை வெறுப்பு என உள்ளம் நொந்து கேட்கிறார் தேவி.

மக்கள் மட்டுமல்ல; இந்தோனேஷியப் பத்திரிகைகளும் தேவியைப் பற்றி கொதிப்போடுதான் எழுதுகின்றன. இந்தோனேஷியாவைப் பிரதிபலிக்கும் உண்மை அரசியல் தூதுவர்கூட எனக்கு அடுத்தபடிதான். இருந்தும் ஏன் பத்திரிகைகளுக்கு இன்னும் மாறாத கோபம்” என வருந்துகிறார் தேவி.

ஜாகர்தாவில் இவரது தனிப்பட்ட முயற்சியினால் ஒரு பெரிய மருத்துவமனையே உருவானது. ஆனால் இந்தோனேஷியாவையே பாதித்த வெளிநாட்டுப்பொருள்கள் தட்டுப்பாட்டினால் கட்டிட வேலைகள்பாதியிலேயே நின்றுவிட்டன.

இந்தோனேஷியாதான் எனது தாயகம் என மனம் திறந்து ஒப்பும் இவர் சுகர்ணோ என்னை எங்கு வருமாறு நினைக்கிறாரோ அங்கெல்லாம் நான் போகக் காத்திருக்கிறேன் என்று கூறுவது அரசியல் நிலைமைகளையும் உணர்ந்த அனுபவத்தினையும் காட்டுகிறது. ஏனெனில் சுகர்ணோவுக்கே இந்தோனேஷியா இதுவரை கொடுத்து வந்த மதிப்பினை இனியும் கொடுக்காது என்பதை தேவியும் அறிந்திருக்கிறார்.

அதிபரின் மனைவியாக இந்தோனேஷியா வந்த தேவி சாதாரண சுகர்ணோவுடன் ஜாகர்தாவை விட்டு வெளியேறும் நிலை வந்தாலும் ஆச்சரியமடைவதற்கில்லை.

அரசியல் உலகத்தை உருவாக்கும் சுகர்ணோவுக்கு அதனினும் முற்றிலும் மாறுபட்ட ஒரு உலகத்தைக் காட்டிய பெருமை தேவிக்கே உண்டு.

இந்தோனேஷிய மக்கள் மனதிலிருந்து சுகர்ணோ அகற்றப்பட்டு விடக்கூடும். ஆனால் சுகர்ணோவின் இதயத்திலிருந்து மட்டும் தேவி போகவேமாட்டார்.

அவரது வாழ்விலும் இனி ஏற்படலாம் என கருதப்படும் தாழ்விலும் நிலையாக இருந்து வருபவராக தேவி ஒருவர்தான் இருக்கக்கூடும்.

நாட்டுக்கு ஒரு தலைவன்!

வீட்டிற்கு ஒரு தலைவி!

ஏட்டிற்கு நம் குறள்!

ஆடைக்கு காஞ்சி பட்டாடை!



காஞ்சி பட்டாடைகளை கவினுறும் பல்வண்ணங் களில் பெரும் அளவில் தயாரித்து 300-க்கும் மேலான நெசவாளர் குடும் பங்களுக்கு நல்வாழ்வு நல்கி வருகிறது.

காஞ்சிபுரம்

திருவள்ளுவர்

பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிட்., நெ. 2054

காஞ்சிபுரம் 207-பி, காந்திரோடில் தேரடிக்கு எதிரில்
அமையப் பெற்றிருக்கும் எங்கள் விற்பனை நிலையத்தில்
தேவைக்கேற்ற எல்லா பட்டு ரகங்களும் கிடைக்கும்.
உத்தரவாதமான ரகங்கள்! நேர்மையான விலை!

ஒருமுறை தங்கள் வருகை எங்கள் விற்பனை நிலையத்திற்கு வேண்டப்படுகிறது.

இரா. வெங்கடேசன்,
தலைவர்.

போன் நெ. 222

வீடு கட்டுவோரின் வெற்றிக்கு...
தர நிர்ணயம், உற்பத்தித்திறன்,
பாராட்டுக்குரிய அம்சம், உபயோகிப்-
பாளர் நம்பிக்கை ஆகியவை அமைந்த
உயர்தர செங்கல், ஓடு தயாரிப்பாளர்
எம். எம். ஒர்க்ஸ்.
அலுவலகம்: 28-B, மேட்டுத்தெரு,
காஞ்சிபுரம்.
தொழிலகம்: ஆரப்பாக்கம்
கிராமம், செங்கற்பட்டு மாவட்டம்.

அவன் கேட்பது வாழ்வு

[அண்ணாதுரை]

முகப்பு விளக்கம்:

அவன், படைப்புத் தொழிலில் வல்லவன்!

அவன், பிறர் நலம் நாடிடும் நல்லவன்!

அவன், பரிவும் கனிவும் ததும்பும் உள்ளம் உள்ளவன்!

அவன், பகட்டும் பசப்பும் அறியாதவன்!

அவன், சூதும் சூழ்ச்சியும் தெரியாதவன்!

அவன், தான் செய்யும் பணியின் கணக்குப் பார்க்காதவன்!

அவன், இல்லையேல், அரசு இல்லை! வெற்றி முரசு இல்லை! அணி பணி இல்லை! அமைதி இல்லை! இல்லம், இன்பம், இல்லை! ஏற்றம் என்பதே இல்லை!

அவன், அவனிக்கே ஓர் அச்சாணி!

அவன், கரம் பட்டதாலேயே செழுமை காண்கின்றோம்!

அவன், வியர்வை கொட்டியதாலேயே மண், மணம் பெருகிறது!

அவன், அழித்த காடுகள் பலப் பல!

அவன், அமைத்த பாதைகள் பலப் பல!

அவன், வெட்டிய திருக்குளம் பலப் பல!

அவன் கட்டிய கோட்டைகள் பலப் பல!

அவன், ஆக்கித் தந்ததே அனைத்துப் பொருள்களும்!

அவன், படைப்புத் தொழிலில் வல்லவன்

அவன் பழிபாவத்துக்கு அஞ்சாதாரிடம் பகடையானான்

அவன், உழைக்கிறான்; உருக்குலைந்து போகிறான்!

அவன், உழுகிறான்; மற்றவர் உல்லாச புரியில் உலவுகிறார்கள்!

அவன் அறுத்துக்குவிக்கிறான்; மற்றவர் அள்ளிச் செல்கிறார்கள்!

அவன், ஏழ்மையில் உழல்கிறான்; எல்லாச் செல்வத்தையும் ஆக்கி அளித்து விட்டு!

அவன் ஆடை அணி தேடிடவில்லை; ஆடம்பரம் நாடிடவில்லை!

அவன், மேனி அழகு கூடிட, புனைவனவும் பூசுவனவும் தேடிடவில்லை!

அவன், உழைக்கிறான், உழைக்கிறான், உழைக்கத்தானே பிறந்தோம் என்ற உணர்வுடன்.

அவன், தன்னைச்சுற்றி சீமானும் பூமானும் உலவிடக் காண்கிறான்; இவர்கள் இந்நிலை பெற்றது எதனால் என்று கேட்டிட முனைகின்றான் இல்லை!

அவன், கண் எதிரே மணி மாடங்கள் தெரிகின்றன; நமக்கு மண் குடிசைதானா? என்று கேட்டிடத் தோன்றவில்லை!

அவன், உழைப்பால் உலகை வாழ வைத்திடும் உத்தமன்!

அவன், உழவன்! அவன், பாட்டாளி!

அவன், ஏழை!

அந்த ஏழைக்கு ஒரு விழா எடுக்கிறார்கள்! உழவனுக்கு என்று ஒரு திருநாள் நடத்துகிறார்கள்! உழவர் திருநாள்! பொங்கற் புதுநாள்!—என்றெல்லாம் பெயரிடுகிறார்கள்! போற்றுகிறார்கள், நாட்டைப் பொன் கொழிக்கும், பொலிவு பூத்த இடமாக ஆக்கி அளித்ததற்காகப் பெருமைப்படுத்துகிறார்கள். அவன், புகழ் பாடுகின்றனர் கவிஞர்கள்! அவன், இயல்புகளைப் போற்றுகின்றனர் நல்லோர்! அவனை, அரசு கூட வாழ்த்திட முன் வருகிறது! அவன், விழிகளை அகலத் திறந்து பார்க்கிறான், வியப்புடன்! புறக்கணிக்கப் பட்டுக் கிடந்தவனை நோக்கி, புகழ் மாலையுடன் பலர் ஓடோடி வந்திடக்கண்டு, ஈதென்ன புதுமை? இதற்கு என்ன காரணம்? என்னவோ இதன் விளைவு? என்றெல்லாம் அவன் தன்னைத்தானே கேட்டுக் கொள்கிறான்.

அவன் ஏழை—ஆனால் இன்று அவனைப் புறக்கணிக்க அஞ்சுகிறார்கள்! அவன் சிந்திக்கத் தொடங்கி விட்டானே, சிறுமைப்படுத்தப்படுகிறோம் என்ற உணர்வு கொண்டிடின் சீற்றம் பொங்கிடுமே, அஃது தடுத்திட முடியாத அழிவையன்றோ மூட்டிடும், போகபுரியைத் தகர்த்திடுமே என்று அஞ்சத்தொடங்கி விட்ட கனதனவான்கள், அவனை மயக்கிட, இனிப்புப் பேச்சு தந்திட முனைகின்றனர். அவன் ஏழை; வெள்ளை உள்ளம் கொண்டவன்; எனவே எளிதிலே அவனை மயக்கிவிடலாம் என்று எண்ணுகின்றனர்!

எல்லாம் உன்னால்தானே!—என்று புகழ்ந்தால், அவன் உச்சி குளிர்ந்து விடும் என்று எண்ணுகின்றனர்!

உன்னாலன்றோ உலகு என்று உரைத்ததும் அவன் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளும்; அவன் தனக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளை மறந்திடுவான்; புதிய உற்சாகத்துடன் உழைத்திடுவான்; புதுப்புது செல்வத்தை ஆக்கித் தந்திடுவான் என்று எண்ணுகின்றனர். அவன் ஏழை! எத்தர்கள் அவனை ஏமாளி என்றே தீர்மானித்து விட்டுள்ளனர்!

கந்தனு! கிடாமாடும் அவனும் ஒன்றுதானே!— என்று கேலி பேசி வந்த கனவான், "உழைப்பின் பெருமை" பற்றி அவனிடம் பேசுகிறான்!! உலகம் உய்வதே உழைப்போனால்தான் என்று பாராட்டுகிறான். ஏழை, திகைக்கிறான்; இதென்ன என்றும் கேளாத பேச்சாக இருக்கிறதே என்று!

தமிழக அரசு, பொங்கற் புதுநாளை, உழவர் திருநாளாகக் கொண்டாட ஏற்பாடு செய்வது பொதுவாக ஏற்பட்டுள்ள புதிய போக்கின் ஒரு பகுதியே யாகும். உழைப்போரின் உள்ளம் எரிமலையாகி வெடித்திடாதபடி தடுத்திட, தடவிக் கொடுத்திடும் ஓர் முயற்சி! பாட்டாளிகள் உள்ளத்திலே பகை உணர்ச்சி மூண்டெழுகிறது என்று கண்டு கொண்டவர்கள், பாகு மொழி பேசி மயக்கிட எடுத்துக் கொள்ளும் முயற்சி! அவன் ஏழை! ஆனால் அவன் எங்கும் இருக்கிறான்!! ஆகவே அவனைப் பகைத்தொழிக்க முடியாது; மயக்கிட முடியும் என்று எண்ணுகின்றனர், அவன் உழைப்பை உண்டு பெருத்திட்ட உல்லாசபுரியினர்.

அவனை மிதித்துத் துவைத்துவந்த நாள் போய், மதித்து மகிழச் செய்திட முயற்சி மேற்கொள்ளப்படும் நாள் வந்திருப்பது, வரவேற்கத்தக்க ஒரு கட்டம்; அஃது போலிகள் நடாத்திடும் நாடகமாக இருந்திடும் நிலையிலேயும், ஏழையைப் புறக்கணித்தபடி இனி இருந்திட முடியாது என்ற எண்ணம் இடம் பெற்றுவிட்டதனை இந்தக் கட்டம் தெளிவாக்கிக் காட்டுகிறது.

இந்தக் கட்டம், இறுதிக் கட்டமல்ல! ஆனால் இந்தக் கட்டம் காணவே, நீண்ட பயணம் நடாத்த வேண்டி இருந்தது; இன்னல் பல ஏற்கவேண்டி வந்தது.

அவன் ஏழை! ஆமாம்! வேறே எப்படி இருக்க முடியும்! என்ன தெரியும் அவனுக்கு! உழைக்கத் தெரியும் மாடுபோல! சுமக்கத் தெரியும்; கல்லைப்பிளக்கத் தெரியும்; கட்டை வெட்டத் தெரியும்; குப்பை கூட்டத் தெரியும்; வேறென்ன தெரியும்! அறிவின் துணைகொண்டு செய்திடவேண்டிய பல செயல்கள் உள்ளன; அவன் என்ன கண்டான் அவைபற்றி! அவனுக்கு ஏது அதற்கான தெளிவு — பயிற்சி! அவன் பாவம், ஏழை, என்று பரிதாபம் கலந்த ஏளனப் பேச்சு நடத்திவந்தனர் சீமான்கள்! நளினிகள் அந்தப் பேச்சு கேட்டு 'கலகல'வெனச் சிரித்தனர்!

அவன் ஏழை! உழைக்கிறான்; அவனும் பிழைத்திருக்க வேண்டாமா! அவன் ஏழை, ஆனாலும் நமது உடைமை அல்லவா? அவன் உயிருடன், உடல் வலிவுடன் இருந்தால்தானே, உழைக்க முடியும்! அதனால் அவன் வாழ வழி செய்து தரவேண்டியது நமது கடமை! அவன் உடல் நலம் கெடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டியதும் நமது கடமை! அவன் ஒரு நாலு நாள் படுத்துவிட்டாலோ, அல்லது ஒரே அடியாகக் கண்ணை மூடிவிட்டாலோ, யாருக்கு நட்டம்? நமக்குத்தானே! ஆகவே அவனைக் காப்பாற்ற வேண்டியது நமது கடமை!—இந்தவிதமான 'வியாபார'ப் போக்கிலே பேசி வந்த கட்டம் பிறகு!

இப்போது வந்துள்ள கட்டம் அவன் உழைக்கிறான், ஆனால் இப்போது உண்மையையும் உணரத் தலைப்பட்டு விட்டான்; நம்மாலன்றோ உலகு என்றே பேசுகிறான், மெல்லிய குரலில்! நான் இல்லையேல், இங்கு வேறு ஏதும் இல்லை என்று முணு முணுக்கிறான் ஆகவே அவனை இனியும் புறக்கணிக்கக் கூடாது; அவன் பகையைத் தேடிக்கொள்ளக் கூடாது, பசப்பிட வேண்டும், மயக்கிட வேண்டும் என்ற திட்டம் போட்டிடவேண்டியதாகிவிட்டது.

உழைப்பவனே உத்தமன்! உழைப்பே செல்வம்! உழைப்புக்கே எல்லாப் பெருமையும்! உலகம் இயங்குவதே உழைப்பினால்தான்!—என்ற திருப்புகழ் பாடுகின்றனர்.

நமது பெருமை இத்தகையதா! நாம் உழைத்திடுவது கண்டு நம்மை இவ்வளவு உயர்வாகப் பேசுகின்றனரா? மேலும் உழைத்திடின், மேலும் போற்றுவர்! வாழ்த்துவர்!—என்று பாட்டாளி எண்ணிக்கொள்வான்; மனதிலே எழும்பிய குமுறலும் அடங்கிப் போகும்; கணக்குப் பார்க்கமாட்டான்; கணக்கு கேட்கவும் மாட்டான்; காலத்தை நமதாக்கிக்கொள்வோம், இரண்டொரு கற்கண்டுத் துண்டுகளை வீசிவிட்டு!— என்று எண்ணி, தன்னலக்காரர் திட்டம் தீட்டிவிட்டுள்ளனர். அந்தக் கட்டம் இது!

கேள்வி ஏதும் கேட்காதிருந்து வந்த ஏழை, எப்போது, எதனால் கேள்வி கேட்கத் தொடங்கினான்? ஓயாது உழைத்தும், வாழ முடியாத நிலைபெற்று, வாட்டப்பட்டபோது, எண்ணம் மனதினைக் கிள்ளத் தொடங்கிற்று. பசுமையைத் தந்தவன், தன் வாழ்க்கை வரண்டுபோகக் கண்டபோது, உலகுக்குப் பசுமை தேடித் தந்திடும் நம்மாலே நமது வாழ்விலே வரட்சி ஏற்பட ஒட்டாது தடுத்திட முடியாது போய்விட்ட காரணம் என்ன? என்று கேட்கத் தொடங்கினான் அதன் தொடர்பாக, அடுக்கடுக்கான கேள்விகள் கிளம்பின! அதிர்ச்சி தரத்தக்க பதில்கள் கிடைத்தன!

கனியின் சுவையை மலரின் மணத்தை, பூங்காற்றின் நேர்த்தியை இசையின் இனிமையை நாம் பெற்று மகிழ்ந்திட முடியவில்லை...ஆனால்...என்று எண்ணிடலானான். அவன் மனம் எங்கெங்கோ சென்றது! பெருமூச்சு கிளம்பிற்று! ஓர் கடுமை நிரம்பிய பார்வை கண்களிலிருந்து புறப்படலாயிற்று!

உழைப்பே செல்வம்! உழைப்பின் பெருமையே பெருமை!—என்று விழா நடாத்திப் பேசிடின் ஏழை, 'இது போதும்' என்று இருந்துவிடுவானா?

உழைப்பே செல்வம்! ஒப்புக்கொள்கிறீர்கள்! ஆனால் அந்தச் செல்வம் உழைப்பவனிடம் இல்லையே, ஏன்? உழைக்காதவனிடம் போய்க் குவிகிறதே எப்படி என்று எண்ணிடுவான்! அந்த எண்ணம் ஆபத்தான எண்ணம் என்பர் ஆதிக்கக்காரர்கள்! வந்து தீரவேண்டிய எண்ணம் என்பர் வரலாறு அறிந்தவர்!

அந்த எண்ணத்தைத்தான், மெள்ள மெள்ள ஆனால் நிச்சயமாக, ஏழையை மயக்கிடும் நினைப்புடன் விழா நடத்துவோர் ஊட்டிவிடப் போகின்றனர்; தம்மையும் அறியாமல்.

உழைப்பின் பெருமை பற்றி இத்தனை உருக்கத்துடன் பேசுகின்றனரே, விழா நடத்துவார்—விவரம் தெரிந்தவர் அல்லரா அவர்கள்—ஆயின் உழைப்போன் பெற்றுள்ள பெருமை என்ன, இதுவரை?

பெருமை தரும் இடமா, சமுகத்தில் இருக்கிறது உழைப்போனுக்கு?

பெருமைக்குரிய உழைப்போனுக்கா ஊராளும் மன்றங்களில் இடம் இருக்கிறது?

உழைப்பின் பெருமை எனறு பேசுபவர், உழைக்கவா முன் வருகின்றனர்? பேசுகின்றனர்!

உழைப்பின் பெருமையை அவர்கள் உணர்ந்து உரைப்பவரெனில், உழைப்பவன் உருக்குலைந்து கிடக்கிறானே, அவனுக்காக என்ன செய்தனர்?

உடைமையும் உல்லாசமும் சீமான்களிடம்; உழைப்பு எம்மிடம்! எமக்கென்று அவர்கள்விட்டு வைத்துள்ள ஒரே உடைமை, உழைப்பின் பெருமை என்று பேசுகிறார்களே அந்தப் 'பெருமை' மட்டுந்தானே! நியாயமா இது!—என்று கேட்கவைக்கவே விழா பயன்படும்;—உடனடியாக இல்லையெனினும் மெள்ள மெள்ள.

உழைப்பின் பெருமையை உணர்ந்துள்ள பெரியவர்களே! உழைத்திட வாரீர்!—அந்தப் பெருமையிலே பங்கேற்க வரீர் என்று ஒருவன், கேலிக் குரலில் அழைப்பு விடுத்திடுவான்!

உழைப்புதானே, ஐயன்மீர்! பெருமை தருவது! அங்ஙனமிருக்க, உண்டு கொழுத்து உருண்டு கிடக்கின்றீரே, பிறர் உடைமையைக் கவர்ந்திட வழிதேடி அலைகின்றீரே!— ஏன்? வந்து உழைத்திடுவீர்! பெருமை பெறுவீர்' —என்றொருவன் கேட்டுவிட்டு, புன்னகை உதிர்த்திடுவான்.

உழைப்பின் பெருமைபற்றித்தானே ஐயா பேசுகிறீர்! உண்மை ஐயா! உண்மை! பெருமை நிரம்பத்தான் இருக்கிறது. பட்ட கடனைத் தீர்த்திட வக்கற்று பதுங்கிப் பதுங்கிச் செல்கிறாயே, நீயும் ஒரு மனிதனா? என்று பக்கிரி கேட்டான், பத்துப்பேர் எதிரில், பட்டப்பகலில், நடுத்தெருவில்! அந்தப் 'பெருமை'யை நான் பெற்றேன்! உழைத்துத்தான் பெற்றேன் அந்தப் பெருமையை!

உழைப்பின் பெருமை எத்தகையது என்பது புரிந்ததய்யா எனக்கு; என் மனைவிக்குக் குலைநோய்; மருந்து பெறச் சென்றேன்! சர்க்காரின் மருத்துவ மனையில்; உழைப்பால் கிடைக்கும் பெருமையைத் தேடிப் பெற்றிடத் தெரியாத உடைமையாளன் ஒருவனுடைய மூன்றாந்தாரம், முத்துப்பல்லழகி வந்தாள், முதுகுப்புறம் அரிப்பு என்றாள்; மூன்று டாக்டர்கள் அந்த மருத்துவ மனையில்; மூவரும் சென்றுவிட்டனர் அம்மையின் கட்டளைக்கு நடுங்கி. கால் கடுக்க நின்றேன்; கண்ணால் சென்னான் காவலாளி போகச் சொல்லி; மறுத்தேன்; பிடரியைப் பிடித்து வெளியே தள்ளினான், டாக்டரய்யாவைத் தொந்தரவு செய்யாதே என்று! பெருமை ஐயா! பெருமை! உழைப்பால் வந்த பெருமை!—என்றொருவன் உருக்கத்துடன் பேசிடத் தலைப்படுவான்.

வைரம்! வைரம்! அருமையான வைரம்! மணங்கு ஒரு ரூபாய் வாங்கிட வந்துங்கள்! அருமையான வைரம்!— என்று எங்காவது கூறிடுவாரா? இங்கு கூறுகின்றனர்! உழைப்பு! உழைப்பு! பெருமைமிக்கது அருமைமிக்கது! உழைத்திடுவீர்கள்! நாலெல்லாம் உழைத்திடின் நாலணா கூலி! நல்லோரே! வல்லோரே! உழைத்திடுவீர், பெருமை பெற்றிடுவீர்! நாலணா! - என்று அழைக்கின்றனர்! – என்றொருவன் கேலி பேசக் கிளம்புவான்.

உழைப்பின் பெருமை பற்றியும் பேசிவிட்டு, உழைப்பாளனைத் தாழ்நிலையில், தரித்திர நிலையில் இருந்திடச் செய்வது, முடியாத காரியம்.

உழைப்பவன், நிம்மதியான வாழ்வு, சமூகத்தில் மதிக்கத்தக்க நிலை, பெற்றிட வழி கண்டாக வேண்டிய பிரச்சினை தீரப்போவதில்லை. அந்த வழி காணும் வரையில், குமுறல் நிற்கப்போவதில்லை, உழைப்பின் பெருமை பேசீர் என்று பேசிவிடுவதால் பிரச்சினை பட்டுப்போய் விடப்போவதில்லை.

உழைப்பே செல்வம்! உண்மை' அதனை ஒப்புக்கொண்டாகவேண்டிய கட்டம் பிறந்தது உண்மைக்குக் கிடைத்த ஒரு வெற்றி என்றே கூறலாம். ஆனால் உழைப்பால் கிடைக்கும் செல்வம், சமூகத்தில் ஒரு சீராகப் பரவிட வேண்டும் உழைப்போருக்கு உரியது கிடைத்திட வேண்டும்' அந்த நீதி நிலை நாட்டப்படுகிற வரையில், உழைப்பே செல்வம் என்று பேசிப்பயனும் விளையப் போவதில்லை.

உழைப்பே செல்வம்! உண்மை! அந்தச் செல்வம், சமூகம் முழுவதும் காத்திடத் தக்க அளவு உள்ளது! அதிலே பெரும் பகுதியை, முடக்கிவிடுவதால், முடக்கிவிடுவதால், அந்தச் செல்வம் சமூகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் பயன்படும் நிலை கெடுகிறது; குறிப்பாக உழைப்போருக்கு உரியது போய்ச்சேருவதில்லை; சேர்ந்திடாததால், அவர்களின் 'உழைக்கும் திறன்' குறைந்து போகிறது. நலிவு மேலிடுகிறது; நலிவு மேலிடும்போது நினைப்பே கெடுகிறது. யாருக்காக உழைக்கிறோம்? எதற்காக உழைக்கிறோம்' என்ற கேள்வி மடமைக் குடைகிறது; உழைக்கும் நினைப்பையே மாய்த்துவிடுகிறது; அஃது மாய்ந்துவிடுவதால், செல்வ உற்பத்தி குறைகிறது; குறைவதால் சமூகம் முழுவதும் வறுமையின் பிடியில் சிக்கிக் கொள்கிறது.

உழைப்பவனை வஞ்சித்து ஒரு சிலர் செல்வத்தை முடக்கிக் கொள்வது, சமூகத்தையே நலிவுக்கட்டத்தில் பாழாக்கிவிடுகிறது; அதனால்தான், அது சமூக விரோதச் செயலாகிறது.

அத்தகைய சமூக விரோதிகளும், அவர்களுக்குத் துணையாக இருப்பதற்கான ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளவர்களும், ஒருநாள் கூடி, உழவர் திருநாள்—உழைப்போரின் திருநாள் என்று கொண்டாடுவது, ஏபாந்தவனைச் சேற்றிலே தள்ளிவிட்டு, அவன் மீது சிறிதளவு பன்னீர் தெளிப்பது போன்றதாகும்; புண்ணின் மீது புனுகு பூசுவது போன்றதாகும்; கண்ணைக் குத்திவிட்டு, கைக்குக் காப்புபோடுவது போன்றதாகும், குன்மம் போக்க மருந்து தராமல், அவன் முன் குழல் ஊதி, இனிமையைப் பெறு என்று கூறுவது போன்றதாகும்.

உழைப்பவன் இன்று கேட்பது நீதி உழைப்பின் பெருமை பற்றிய சிந்து' அல்ல! உழைப்பவன் இன்று கேட்பது வாழ்வு! பொருளற்ற புகழுரை அல்ல.

அவன் ஏழை! அவன் வாழ விரும்புகிறான்!

அவன் ஏழை! அவன் நீதி கேட்கிறான்!

அவன் ஏழை! உண்மையை உணர்ந்து கொண்டான்!

அவன் ஏழை' வாழ்வுக்காகப் போராடுகிறான்

அவன் ஏழை! உரிமைக்குரல் எழுப்புகிறான்!

அவன் ஏழை! ஆனால் அவன் உழைப்பே, செல்வம் என்பதை அறிந்துகொண்டுவிட்டான்.

அவன் ஏழை! விழித்துக்கொண்டுவிட்டான்:

அவன் கேட்பது 'வாழ்வு' ஏமாற்றும் விழா அல்ல!

உரிமைத் திருநாள் காணவிழைகிறான், ஊராள்வோர், உழவர் திருநாள் நடத்தி அவனை மயக்கிட முடியாது.

உண்மையான உழவர் திருநாள்; உழுபவனுக்கு நிலம் கிடைத்திடும் நாளே!

நேர்மையான உழவர் திருநாள் நெற்றி வியர்வை நிலத்தில் சொட்டச் சொட்டப் பாடுபடும் உழவன் வாழ்வில் நிம்மதி ஏற்படும் நாளேயாகும்!

நாணயமான உழவர் திருநாள், அவன் சோலைவனத்தைத் தன் உழைப்பால் தந்துவிட்டு, அதிலே சொகுசுச் சீமாட்டிகளும் அவர்களிடம் சொக்கிடும் சீமான்களும் உலவிட, தனக்கென்று அமைந்த வாழ்வு பாலைவனமாக இருந்திடும் கொடுமை நீக்கப்படும் நாளேயாகும்.

அந்நாளே, திருநாள்; பொன்னாள்; உழைப்போர் உண்மையான பெருமையினைப் பெற்றிடும் நன்னாள்.

அந்நாளைக் கண்டிடவே கழகம் விழைகிறது.

அதற்காகப் பாடுபடும் ஆற்றலைப் பெற்றிடவே பணியாற்றி வருகிறது.

அதற்கான செய்திடவே மக்களின் ஆணையை எதிர்பார்த்து நிற்கிறது.

புதுப்பாடல்

சேதுபதியின் அவைக்களம். நான்கு புலவர்கள் அவைக்களத்தில் கம்பீரமாக உட்கார்ந்திருக்கின்றனர். இந்நான்கு புலவர்களும் நல்ல நினைவாற்றல் பெற்றவர்கள். வழக்கம் போல் அவர்கள் வரிசையாக உட்கார்ந்துள்ளனர்.

செந்தமிழ்ப் புலவர் ஒருவர் அவைக்களத்தில் நுழைகிறார். சேதுபதியைக் காண அவர் வந்திருக்கிறார். கையோடு தாம் எழுதிய ஒரு தமிழ்க் கவியையும், புலவர் கொண்டு வந்திருந்தார். பாடல், சேதுபதியின் கொடைப் பண்பினைப் புகழ்கிறது, 'நோக்கம்' புரிகிறதல்லவா? புலவர், பொன்னும் மணியும் பிறவும், சேதுபதியிடம் பரிசாக வாங்கிப்போக வந்திருக்கிறார். சேதுபதி தமிழறிந்தவர். நகைச்சுவையாகப் பேசுபவர். புலவர் 'தமிழ்க் கவியொன்று உங்கள்மேல் யான் பாடியிருக்கிறேன்' என்றதும் சேதுபதி சற்றும் தாமயாமல் 'பாடுங்கள்கேட்தியோம்' என்றார். புலவர், வேந்தரிடம் பரிசில் பெற வேண்டுமென்று, தம் முயற்சியெல்லாம் பயன்படுத்தி எழுதியிருந்தக் கவியை, மிகவும் அருமையாகப் பாடி முடித்தார். மன்னர், இப்பாடலைக் கேட்டு மகிழ்ச்சி கொண்டிருப்பாரென்று, புலவர் சேதுபதியின் முகத்தைப் பார்த்தார். அரசரோ புலவரைப் பார்த்து தம் முகத்தைச் சுளித்தார். இது போதாதென்று, 'இப்பாடல் நீர் பாடிய பாடலா? என் அவைக்களப் புலவர்கள் ஏற்கெனவே பலமுறை பாட, நான் அநேக தடவை கேட்டிருக்கிறேனே!' என்று சேதுபதி கூறினால், பாட்டெழுதிக் கொண்டு வந்ததாகக் கூறிய, செந்தமிழ்ப் புலவருக்கு எப்படி இருக்கும்? சேதுபதி இத்துடன் புலவரை விட்டுவிடவில்லை. 'நீங்களும் வேண்டுமானால் என் அவைக்களப் புலவர்கள், இப்பாடலைப் பாடுவதைக் கேட்டு ரசியுங்களேன்!' என்று கூறி, அவைக்களத்திருந்த முதற் புலவரை சேதுபதி நோக்க, அரசரின் குறிப்பறிந்த அப்புலவர், ஒரு சிறு பிழையுமின்றி புதுப்புலவர் பாடிய பாடலை, அற்புதமாகப் பாடிக் காட்டினார். இரண்டாம் புலவரை மன்னர் நோக்க, அவரும் அப்பாடலைத் தத்ரூபமாகப் பாடினார். அப்படியே மூன்றாவது புலவரும் நான்காவது புலவரும் அதியற்புதமாகப் பாடிக் காட்டினர். புதுப் புலவரின் முகத்தைப் பார்க்கவே வேண்டாம்! அவமானத்தால் அவர் முகம் தொங்கிற்று, அவர் மிகவும் நாணமடைந்தார். உண்மையில் புதுப்புலவர் பாடிய பாடல், அவரே இயற்றியதுதான்!

இரகசியம் இதுதான்-

சேதுபதியின் அவைக்களத்தில் முதலாவது இடத்தில் உட்கார்ந்திருக்கும் புலவர், ஒரு புதுப் பாடலை ஒருமுறையும், இரண்டாவது வீற்றிருக்கும் புலவர் ஒரு புதுப்பாடலை இருமுறையும் மூன்றாவதாக வீற்றிருக்கும் புலவர் மூன்று முறையும், நான்காவதாக வீற்றிருக்கும் புலவர் நான்கு முறையும் கேட்டால், அப்புதுப் பாடலைக் கேட்டவாறே, ஒரு சொல்கூட பிழையின்றி பாடிக் காட்டுவார்கள்.

புதுப்புலவர் பாடிய பாடலை, முதலாவது இடத்தில் உட்கார்ந்திருந்த தன் அவைக்களப் புலவரைப் பார்த்து, சேதுபதி 'பாடுக!' என்றதும், அப்புலவர்-புதுப்புலவர் ஒருமுறை பாட அப்பாடலைக் கேட்டுவிட்டதால், மிக எளிதாகப் பாடிவிட்டார், இப்புலவரைப் போலவேதான், புதுப்பலவர் ஒருமுறையும், தம் அவைக்களத்தின் முதற்புலவர் ஒருமுறையும்-ஆக இரண்டுமுறை அந்தப் புதுப்பாடலைக் கேட்டுவிட்டதால் இரண்டாவது புலவரும், இதேபோல் மூன்றுமுறை கேட்டுவிட்டதால் மூன்றாவது புலவரும், நான்குமுறை கேட்டுவிட்டதால் நான்காவது புலவரும் புதுப்புலவர் பாடிய புதுப்பாடலை, சேதுபதியின் அவைக்களப் புலவர்கள் மிகச் சுலபமாகப் பாடி, புதுப்புலவரை தலைகுனிய வைத்தனர்.

சேதுபதி, புதுப்புலவர் அவைக்களத்தில் நின்றுகொண்டு விழிப்பதைப் பார்த்து, இன்னும் அவரைச் சோதித்து தர்மசங்கடத்திற்குள்ளாக்காமல், தம் அவைக்களப் புலவர்களின் நினைவாற்றலை எடுத்துரைத்தபோதுதான், புதுப் புலவர் தலைநிமிர்ந்து புன்னகை செய்தார்.

—வி. ஆர். துரை

நற்சுவைக்கும் நறுமணத்திற்கும்

அனைவரும் விரும்பி வாங்குவது

"தாம்சன் காபி"

தாம்சன் மானுபாக்சரிங் கம்பெனி,

71, நியூமார்க்கட் 2-வது லைன்,

தாம்பரம் (மேற்கு)

கடந்த 10 ஆண்டுகளாக 'காபி' உலகத்திலே ஓர் சக்ரவர்த்தி!

நற்சுவைக்கும் நறுமணத்திற்கும்

அனைவரும் விரும்பி கேட்டு வாங்குவது

"அம்பாள் காபியே"

கடைத்தெரு, :: விருத்தாசலம் S. A.

போன் நெ. 23

எமது பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

J. T. C.

P. B. 331 Temple of Learning

பழைய சிந்தாமணி பஸ் நிலையம், திருச்சி-2

கடந்த Sep. 66 தேர்வில்

P. U. C. I and II Part 100%
III Part 75%
B. A. I Part 80%

**ஆண்டு தோறும் வெற்றியில்
முன்னணியில் நிற்பது**

J. T. C.

சிறந்த பயிற்சி, சிறந்த ஆய்வுக்கூடம்- பெண்களுக்கு தனி வகுப்பு-சிறந்த விடுதி - சிறந்த ஆசிரியர்கள் இத்தனையும் ஒருங்கே அமைந்து மாணவர்களின் பாராட்டுதலைப் பெற்று வருவது J. T. C.

S. S. L. C., P. U. C. (All Parts)
B A., B.Sc. & B.Com.
வகுப்புகள் நடைபெறுகின்றன.

விரைக! வெற்றி சூடுக!!

RAJASEKAR, M A.
Principal.

முக்கிய வினுக்களும் விடைகளும்

MARCH 1967

B.A, B.Sc, P.U.C, S.S.L.C.

தயாராகிவிட்டன!
மாணவர்களின் முன்னேற்றத்திற்காகத் தரப்படுகிறது!
தேர்வில் வெற்றிபெற நீங்கள் நிச்சயம் உடனே பெறுக!
எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்!

		வினுக்கள் மட்டும்	வினுக்களும் விடைகளும்
1.	B.A. B.Sc. Part I	Rs. 2—00	7—00
2.	B.A. (Economic)	Rs. 2—00	12—00
3.	P.U.C. (Science Group)	Rs. 2—00	7—00
4.	P. U. C. (Art Group)	Rs. 2—00	7—00
5.	S. S. L. C. (Acadamic)	Rs. 2—00	7—00

இன்றே பெறுக வெற்றி பெறுக!

உடனே பெற M O. அனுப்புக.

மூர்த்தீஸ் டுடோரியல் காலேஜ்

கீழரதவீதி, திண்டுக்கல்.

J. James & Co.,

(AERATED WATER MANUFACTURERS)

10, NANAL HOSPITAL ROAD,

MADRAS-3.

PHONE: 31623

L. Robert & Co.,

(BRANCH OF J. JAMES & Co.)

(AERATED WATER MANUFACTURERS)

65-66, Srinivasaperumal Sannadhi St.,

ROYAPATTAI, MADRAS-14.

PHONE: 86217

Raju Aerated Water Works,

Our Special Cork Bottel Aerated

Water Manufacturers,

10, Nanal Hospital Road,

MADRAS-3

PHONE: 31623

WITH THE BEST COMPLIMENTS OF:—

Madras-Crown-Cork Co.

(High class crown Cork Manufacturers)

Factory: PALLAVARAM Phone: 89371

Office: 10, Nanal Hospital Road,

Madras-3 Phone: 31262

மாணிக்கம்:

நீர் சுமந்துள்ள கார்மேகம்போல் நெஞ்சம் கனத்துக் கிடக்கிறது; எங்கேபோய் அழுவேன்? கொடி, மனைவி என்றால் கொழு கொம்பு கணவன் என்கிறார்கள். கொண்ட கொடி நச்சுமலர்களைப் பூக்கும்போது கொம்பு அதை உதற முடியாதா? இது என்ன உலக நீதி? மனைவியா அவள்? பாவத்தின் மொத்த உருவம்! பழிச்சரக்கின் முழுமையான வியாபாரி!

ஐயோ! அவளை எப்படி நான் தொலைப்பேன்? எப்பொழுது நான் அவளிடமிருந்து அறுபடப் போகிறேன்? எனக்கு விடிவே கிடையாதா?

காவிரியும் கங்கையும் இணைந்தாலும் கழுவித் தீர்க்க முடியாத களங்கத்தைப் பெற்றுவிட்டாளே! காலத்தால் அழித்தெடுக்க முடியாத கயமைச் செயல் புரிந்துவிட்டாளே?

எப்படி நான் வெளியே செல்வேன்? இந்த முகத்தை இனி யாரிடம், எப்படிக் காட்ட முடியும்? ஊர் சிரிக்காதா என்னைப் பார்த்து? உலகம் முகத்தில் காரி உமிழாதா?

சுவர் கொண்டதெல்லாம் வீடென்று சொல்லி விடலாமா? பாழ் மண்டபமும் இருக்குமல்லவா? அங்கே ஆந்தையும் கருநாகமும் உலவுமல்லவா? கட்டிக் கொண்டதெல்லாம் மனைவியாகிவிடுமா? ஆம். நான் எட்டிக்கனிக்கும் விளாங்கனிக்கும் வேற்றுமை காணமல் போய்விட்டேன். ஓட்டுக்குள் என்ன இருக்கிறது என்பதை உடைத்துப் பார்த்தால்தானே தெரிகிறது.

நான் கோமேதகத்துடன் கோலாகலமாக வாழத்தான் ஆசைகொண்டு அவளை மணம்புரிந்தேன்.

தொடக்கத்தில் அவள் அடக்கத்தோடும் அன்போடும் தான் வாழ்ந்தாள். திருமணம் ஆகி எப்படியோ பத்தாண்டுகள் திரும்பிப்பார்ப்பதற்குள் பிறந்துவிட்டன. ஆனல் இத்தனை நாட்களுக்குப் பிறகு இப்படி மாபெரும் துரோகம் செய்வாள் என்று நான் கனவிலும் நினைத்தேனா?

என் தாய்க்கு உடல்நிலை சரியில்லை என்று என் ஊருக்குப் பதினைந்து கல் தொலைவுடைய கிராமத்திற்கு மருத்துவத்திற்காக அனுப்பியிருந்தேன். அங்கேதான் கைதேர்ந்த நாட்டு வைத்தியர் ஒருவர் இருந்தார். ஒரு சொந்தக்காரர் வீட்டில் தங்க ஏற்பாடு செய்திருந்தேன். தளர்வுற்ற தாய்க்குத் துணையாக இருக்கட்டுமே என்று கோமேதகத்தையும் அனுப்பியிருந்தேன். ஆனல் தனக்குப் புதிய

துணையை அங்கே தேடிக்கொண்டாள் அந்தத் தரங்கெட்டவள்.

யாரோ முத்து என்ற ஒரு நாடோடியிடம் தீராத மயக்கம் கொண்டுவிட்டாள். அவன் இலங்கையிலே பணிபுரிபவனும். விடுமுறைக்கு ஊருக்கு வந்திருந்தான். அவன் விரித்த வலையிலே வீழுந்து எனக்கு மாசு சேர்த்துவிட்டாள்!

இந்தப் பாழும் காட்சியை நானே என் தாயை அழைக்கச் சென்றபோது பார்த்துவிட்டேன். வழிவழியாக வளர்ந்த என் குடும்பப் பண்பாடு அழிந்தது; அழிந்தே போய்விட்டது.

இனி என் எதிரே நிற்கும் ஒரேவழி நீதிமன்றம் தான்! ஆம் மணமுறிவு செய்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன். உடலோடு பிறந்த ஒரு கையில் புரையோடிவிட்டால் அதை அறுவைச் சிகிச்சையால் வெட்டிக் களைகிறோம் என்றால், வாழ்க்கையிலே இடையிலே வந்து இணைந்தவளைத் தூக்கி எறிய முடியாதா? கூடாதா?

போகிறேன் நீதிமன்றத்திற்கு. போக்கற்ற இந்தக் கழுதையுடன் வாழ நானென்ன குட்டிச்சுவரா? என் வழக்கிற்கு ஆதாரமாக அந்தக் கள்ளக்காதலன் முத்து எழுதியுள்ள கடிதங்கள் என்னிடம் சிக்கியுள்ளன. இவை போதாதா?

O

கா. வேழவேந்தன்

கோமேதகம்;

வழக்கு மன்றத்திற்கு வாவென்று அழைப்பார் என் துணைவர் என்று நான் அணுவளவும் சிந்தித்திருப்பேனு? மணமுறிவு வழக்கு தொடங்கப்பட்டுள்ளது என்று நீதிமன்ற அழைப்பு கண்டதும் நான் மயங்கி விழுந்தேன்.

என்னல் எப்படித் தாங்கிக்கொள்ள முடியும்? ஓராயிரம் இடிகள் ஒரே நேரத்தில் என் மண்டையில் விழுந்து தாக்கித் தகர்த்தன. எதிரே எது இருந்தாலும் ஏன் அதில் மோதிக்கொண்டு இன்னும் சாகாமல் இருக்கிருய்?' என்று என் மான உணர்வு என்னை கேள்விகளால் துளைத்தெடுத்தது.

ஆம். வானமே விலக்கிவிட்ட பிறகு நட்சத்திரம் எங்கே ஒட்டிக்கொள்ளும்? வளமார் குளமே தூக்கியெறிந்தால் அல்லிமலர் மேட்டிலா போய் வாழப்போகிறது? வழக்கு மன்றத்திற்கு அழைத்து இவள் என் வாழ்க்கைத்துணைவி அல்ல, வழுக்கி விழுந்தவள் என்று அவர் சொல்லிவிட்ட பிறகு நான் வாழ்ந்தால் என்ன? செத்தால் என்ன?

இருந்தாலும் ஒன்று சொல்கிறேன். நான் குற்றமற்றவள். இல்லாத பழி என்மீது சுமத்தப்பட்டுள்ளது. நான் தொடாத நெருப்பு; தூய்மையான கொற்கை முத்து.

இதை நானே சொல்லி யாரை நம்பவைப்பேன்? அவர் என்னுடன் நிம்மதியாகத்தான் வாழ்ந்தார். எங்கள் வாழ்வில் வாழ்க்கைத்தென்றல் நறுமணம்கொண்டு வழங்கிற்று.



ஆனல்......

மிதமான குளிரைத் தரும்போது "தென்றல்" என்று பெயரெடுக்கும் காற்று, உடலை வெடவெடக்க வைக்கும்போது 'வாடை' என்ற பெயரைப் பெறுவதில்லையா?

அதுபோலத்தான் 'குடும்பவிளக்கு' என்று என்னைக்கொலுவேற்றிவைத்திருந்தவர் 'கொடுந்தீயே' என்று தூற்றத் தொடங்கினர். என் அசைவிற்கும், நெளிவிற்கும், ஏழாயிரம் கற்பனைக் கவிதைகளைத் தீட்டிப் புகழாரம் தொடுத்தவர் இன்று பேய்க்கும் நாய்க்கும் ஒப்பிட்டுக் காட்டுகிருர்.

தூங்கும்போதும் உன்னிடம் சொல்லால் விவரிக்க இயலாத அழகு உள்ளது என்று சொன்னவர், இன்று விழித்துக்கொண்டே இருக்கும் போதும் 'பிணமே' என்கிருர். 'கணுவில்லாத கரும்பே' என்று என்னை அணுஅணுவாகத் தொட்டுச் சுவைத்தவர், கனலைத் தொட்டதுபோல் தாவி ஓடுகிருர்.

நான் என்ன செய்தேன்? எந்தக்கால்களைத் தொட்டு என் முகத்தில் ஒற்றிக்கொள்வேனே அவற்றை நான் தொடவேவிடமாட்டேன் என்கிருரே! ஏன்?

எந்தக்கரங்கள் என் அங்கத்தின் ஒவ்வொரு அணுக்களுக்கும் மின்னலையைப் பாய்ச்சிற்றே அந்தக் கரங்கள் என் கன்னத்தை ஓங்கி அறைந்து பதம்பார்க்கின்றனவே! ஏன்?

இடைவிடாமல் சிரிக்கவைத்து என் விழிகளில் உவகைநீர் ஓடிவருவதைக்கண்டு இமைகொட்டாமல் பார்த்து மகிழ்ந்தவர், ஓயாமல் அழவைத்து ஒருமுறை கூட பார்க்காமல் போகிருரே, ஏன்?

என்னல் புரிந்துகொள்ளவே முடியவில்லை. இவ்வளவு பெரிய மாற்றத்தை இவ்வளவு விரைவில் நான் எதிர்பார்த்தேனு? அவருடைய தாயுடன்—என்மாமியுடன் மருத்துவத்திற்குத் துணையாகச் சென்றிருந்தேன். அவரும் அப்போதெல்லாம் அடிக்கடி வந்து பார்த்துச் சென்ருர்.

ஆனல் திரும்பி அழைத்து வருவதற்குள் இந்தக் கொடுமை நிகழவேண்டுமா? இவர் கட்டிய தாலியை அறுத்தெறிய சட்டக்கத்தியையா தூக்கிவரவேண்டும்? தாலிமட்டுமென்ன? அது வேலிகட்டி வளர்த்திருக்கும் நானே அவர் முன்னல்தானே இருக்கிறேன். ஆத்திரம் தீர அவர் என்னை வெட்டிச் சிதைத்திருக்கலாமே!

வழக்கு மன்றமா செல்லவேண்டும்? ஐயோ! நாளை அந்த மன்றம் கூடும்போது நான் எப்படி அங்கேபோய் நான்குபேர் எதிரில் நிற்பேன். அங்கே கறுப்பு அங்கி அணிந்து வாதாடப்போகிருர்களே! அந்த வழக்கறிஞர்களின் மூலாதார கருப்பொருள் எது? என் கற்பு! அது அழிந்ததா, வாழ்கிறதா என்பதுதான் அந்த அரங்கிலே மூளப்போகும் வாதம்.

உயிர் என்ற ஒரு பொருளை கண்டுபிடிக்க உடலை அறுத்துப் பார்ப்பவர்கள் இருக்கிருர்களா? இல்வாழ்க்கையில் கற்பு இருக்கிறதா, இல்லையா என்பதை அறிய வழக்கு மன்றம் செல்பவர் இருக்கின்ருர்களா?

நான் மாசற்றவள் என்பதை எப்படி நிறுவப் போகிறேன்? இதற்கெல்லாம் காரணமான அந்த முத்து யார்? அவன் எப்படி இருப்பான் என்பதுகூடத் தெரியவில்லையே! அப்படி ஒருவன் இருந்தால் நேர்மைத்தீ அவனைச் சுட்டெரிக்கவேண்டாமா? அவன் எப்படி இந்தக் குடும்பச் சுடரை அணைக்கச் சான்ருக வருவான்? பார்த்துவிடுகிறேன்! நீதி செத்துவிட்டதா என்பதையும் பார்த்துவிடுகிறேன்.



முத்து:

வழக்கு மன்றத்திலிருந்து அழைப்பு வந்திருக்கிறது. மங்கை கோமேதகத்திற்கும் எனக்கும் உள்ள தொடர்பைப்பற்றி அறியப்போகிருர்களாம். இன்று இரவு முழுவதும் சிந்தித்தேன். என் மனச்சான்று என்னையே குறிவைத்துக் குத்திக் கிழித்துவிட்டது.

நாளை அந்தப் பேதைப் பெண் கோமேதகத்தின் முகத்தைப்பார்த்து அவளுக்குக் களங்கம் விளைவித்தவன் நான் என்று சாட்சிவேறு கூறவேண்டுமா? முடியாது. முடியவே முடியாது. மாணிக்கம்தான் எனக்கு எப்படியோ நண்பனுகிவிட்டான். ஆனல் அந்த மாதரசி யார் என்று இன்றுவரை நான் பார்த்ததில்லையே. அவன் தூண்டுதலால் நான்தான் அந்தக் கடிதத்தை எழுதி அஞ்சல் செய்தேன். அதையும் மற்றச் சான்றுகளையும் வைத்துக்கொண்டு வழக்குத் தொடர்ந்திருக்கிருன்.

இப்போதுதான் எனக்குப் புரிகிறது. மாணிக்கத்தின் விலங்குணர்வுக்கு நானும் ஒத்துப் பலியாகிவிட்டேன். "பத்து ஆண்டுகள் ஆயிற்று, முத்து! ஆனல் பவளக்கால்களால் எட்டி உதைக்க ஒரு மழலைச் செல்வம் இல்லையே" என்று ஒப்பாரிவைத்தான் அவன்.

"அதற்கு என்ன செய்வது மாணிக்கம்? தீராத குழந்தை ஆசை இருந்தால் வேருெருத்தியை மணந்து கொள்வதுதானே" என்று சொன்னேன்.

அவன் தன் மனிதத்தன்மையை மறந்தான். கோமேதகத்திடம்போய் வேருெரு பெண்ணை மணந்து கொள்வதற்கு ஒப்புதல் கடிதம் எழுதிக்கொடுக்கச் சொல்லியிருக்கிருன். கணவனின் அன்புக்காற்று திசை மாறிப்போய்விடுமோ என்று அஞ்சி அவள் கையெழுத்திட மறுத்திருக்கிருள்.

மாணிக்கத்திற்கோ குழந்தைச் செல்வத்துடன் தன் முறைப் பெண் கொண்டுவரப்போகும் பணச் செல்வமும் கிடைக்கும் என்ற ஆசை கொழுந்துவிட்டு எரிந்தது; அந்த தீயில் கோமேதகத்தின் அன்பு கொழுந்துவிட்டு எரிந்துவிட்டது. அவன் கடைசியில் எதைச்செய்யவும் துணிந்துவிட்டான். அதன் விளைவுதான் நீதிமன்றம் ஏறுவதற்காக நாங்கள் இருவரும் சேர்ந்து தீட்டிய வழக்குமன்றத்தை நம்பவைக்கும் கதை உருவானது.

ஆனல் என் மனித உணர்வு இன்று விழித்துக் கொண்டது, கூவிக்கொண்டிருக்கும் வாழ்க்கைச் சோலையில் ஒருகுயில் அடித்துக்கொல்லப்பட இனியும் நான் பார்த்துக்கொண்டிருக்க மாட்டேன்.

நாளை விடிந்தவுடன் வழக்குமன்றம் சென்று இந்தப் புனைகதையை வெளியாக்குவேன். இனி எனக்கு அமைதியான தூக்கம்வரும். அந்த இனிய உறக்கத்தில் மாணிக்கமும் கோமேதகமும் மீண்டும் இணைந்து வாழும் வாழ்வு கனவாக மிதந்துவரும்!

*

கொச்சைத் தமிழ்!

ரசிகர்கள், நடிகர்களிடமிருந்து அழகான பேச்சையே கேட்க விரும்புகிருர்கள். நாம், நமது அன்ருட வாழ்க்கையில் மிகுந்த கொச்சைத் தமிழில் பேசுகிருேம். ஆனல், ஒரு மேடையில் அதைப் பேசக்கூடாது.

சில பாத்திரங்களுக்கு, அப்படிப்பட்ட பேச்சு தேவையாக இருக்கலாம். ஆனலும் அப்போதுகூட மிகவும் கொச்சையாக இருக்கக்கூடாது. அதற்காக ஒரு வரியிலுள்ள சில வார்த்தைகளுக்கு மட்டும் முக்கியத்துவம் அளித்துப் பேசவேண்டும் என்பது அர்த்தமல்ல.

—நாடகக் கலைக் களஞ்சியம்.

தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

ஜெயா பார்மஸி H.O. பெரியகுளம்

சர்க்காரால் அங்கீகாரம் செய்யப்பட்டது.

(Recognised by Central Board of Indigenous Madicine Madras)

பொதுமக்கள் ஏமாற்றமடையா திருக்க, எங்களது மருந்துகளை வாங்கும்போது, ஜெயா பார்மஸி H. O. பெரியகுளம் என்பதையும் லேபிளில் உள்ள முத்திரையை யும் கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

JEYA

பிராஞ்சுகள்:

51, Dr. நடேசன் ரோடு, சென்னை-5.
51, செஞ்சி ரோடு, திண்டிவனம்.
17, நெல்கடைத் தெரு, மாயவரம்.
2 வள்ளிமால் தெரு (சிங்காரத்தோப்பு எதிர்) பெரியகடைவீதி, திருச்சி-8.
28, நெத்திமேடு, கோயம்புத்தூர் ரோடு, சேலம்'-2
208 ஒப்பணக்காரத்தெரு கோயம்புத்தூர்
63, மார்க்கட் ரோடு, தஞ்சாவூர்.
47A, கன்னம்மாள்கோயில்தெரு திருநெல்வேலி ஜங்.
மற்றும் தமிழகமெங்கும் ஏஜண்டுகள்.

புதிதாக ஏஜன்ஸி வேண்டுவோர், தலைமை நிலயத்திற்கோ, பிராஞ்சிற்கோ விண்ணப்பிக்கவும்.

உரிமையாளர்: **J. M. ராஜன்,** ஜெயா பார்மஸி, மதுரைரோடு திண்டுக்கல்.

போன்: 348, 348-A, 438.

குடவோலை கண்ட குடியாட்சி

இரா. நெடுஞ்செழியன்

ஒவ்வொரு ஊரிலும், இந்த நாட்களில், ஊர் மக்களுக்கான பணிகளை ஆற்றுவதற்கு ஊராட்சி மன்றம் இருப்பதைப் போல, பண்டைத் தமிழகத்தில் ஒவ்வொரு ஊரிலும் **'ஊர்ச் சபை'** என்னும் **'ஊர் அவை'** இருந்து பணியாற்றி வந்திருக்கின்றது.

ஊர் அவையில் இடம் பெறுவோர், இப்போதைப் போலவே ஊர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஊர்கள் இப்பொழுது பல 'வார்டுகளா'கப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு 'வார்டி'லிருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவதைப் போலவே, ஒவ்வொரு ஊரும் பல **'குடும்புகளா'**கப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குடும்பிலிருந்தும் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த உத்திரமேரூர் என்னும் ஊர் முப்பது குடும்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்றும், தஞ்சை மாவட்டத்தில் செந்தலை என்று இன்று வழங்கப்பெறும் சந்திரலேகைச் சதுர்வேதி மங்கலம் என்னும் ஊர் அறுபது குடும்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்றும் கல்வெட்டுச் செய்திகளிலிருந்து அறியப்படுகின்றன.

இப்பொழுது 'தேர்தல் சாவடி'யில் வாக்காளர்கள் சென்றிருந்து வாக்குகளைப் பதிவு செய்வது போல, அப்பொழுது ஊர்ச் சான்றோர் கூடுவதற்காக ஊர் நடுவே அமைக்கப்பெறும் **'பொது யில்'**லில் ஊர் மக்கள் கூடியிருந்து வாக்குகளைப் பதிவு செய்தனர். இப்பொழுது வாக்குச் சீட்டு 'பாலட் பேப்பர்' (**Ballat Paper**) என்று அழைக்கப்படுவது போல, அப்பொழுது வாக்குச் சீட்டு **'குடவோலை'** என்று கூறப்பட்டது. வாக்குச் சீட்டுகளைப் போடுவதற்கு இப்பொழுது 'பாலட் பாக்ஸ்' (**Ballat Box**) பயன்படுத்தப்படுவதைப் போல, அப்பொழுது **'குடம்'** (**மட்குடம்**) பயன்படுத்தப்பட்டது.

இப்பொழுது அதிகமான எண்ணிக்கையுள்ள வாக்குச் சீட்டுகளைப் பெறுபவரே பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்ற முறை மேற்கொள்ளப்படுகிறது; ஆனால் பண்டைத் தமிழகத்தில், தேர்தலுக்குப் போட்டியிடுபவர்களின் பெயர்கள் தனித்தனி ஓலைகளில் (பனையோலைகள்) குறிக்கப்பட்டு, அவை குடத்தில் இடப்பட்டு, அவை குலுக்கப் பெற்று, அவற்றிலிருந்து பொறுக்கியெடுக்கப்படும் வீட்டில் உள்ள பெயருக்குரியவரே பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

ஊர்களில் ஊரவையினர் இருந்து ஊர்ப் பணிகளைக் கண்காணித்து வந்ததைப் போலவே, பூம்புகார், உறையூர், காஞ்சி, வஞ்சி, மதுரை போன்ற பெருநகரங்களில், நகரத்தார் என்று அழைக்கப்பெறும் **நகர அவையினர்** இருந்து நகரப் பணிகளைக் கண்காணித்து வந்தனர் என்று தெரியவருகிறது.

ஊர்ப் பணி, நகரப் பணிகளைக் கவனிப்பதற்காக இந்தக் காலத்தில் ஊராட்சி மன்றம்—நகராட்சி மன்றம் போன்றவற்றில் 'கணக்குக் குழு', 'பொதுநலக் குழு', 'வரிக் குழு', 'பணிகள் குழு' என்று பல்வேறு குழுக்கள் அமைக்கப்படுவதைப் போலவே, பண்டைத் தமிழகத்தின் ஊரவையில் பலவகையான குழுக்கள் இருந்து பணியாற்றி வந்திருக்கின்றன.

இப்பொழுது 'குழு' (Committee) என்று அழைக்கப் பெறுகின்ற ஒன்று, அப்பொழுது **'வாரியம்'** என்று அழைக்கப்பெற்றது. வாரியம் என்பது மேற்பார்வை அல்லது மேலாண்மை என்று பொருள்படுவதாகும்.

கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் தரும் செய்திகளிலிருந்து வாரியங்கள் பலவற்றின் பெயர்களும், அவற்றின் பணிகளும், அவை பற்றிய குறிப்புக்களும் ஓரளவுக்குத் தெரியவருகின்றன.

ஆட்டை வாரியம்: இது ஊர் வாரியங்களிலே மிகமுக்கியமான தலைமை வாரியமாகும். இந்த வாரியத்திற்குப் பன்னிரண்டு பேர்கள் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஊரின் பொதுப் பணிகளைக் கவனிப்பது, அறச் செயல்களை ஆற்றுவது, குற்றத் தீர்ப்பு வழங்குவது போன்ற பணிகள் இந்த வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

தோட்ட வாரியம்; இந்த வாரியத்தில் பன்னிரண்டு பேர்கள் இடம் பெற்றனர், தோட்டம், தோப்பு கொல்லை, புன்செய் நிலங்கள் முதலியவற்றைக் கவனிப்பது இந்த வாரியத்தின் கடமையாகும்.

கழனி வாரியம்: இந்த வாரியத்தில் ஆறு பேர்கள் இடம் பெற்றனர். நன்செய் நிலங்களைக் கவனிப்பது இந்தவாரியத்தின் கடமையாகும்.

ஏரி வாரியம்: இதில் ஆறு பேர்கள் இடம் பெற்றனர். ஏரி, குளம், ஆறு ஆகியவைகளில் தக்க காலத்தில் நீரைத் தேக்குவது, விடுவது போன்ற பணிகளை இந்த வாரியம் மேற்பார்வை செய்தது.

கலிங்கு வாரியம்: இதில் அறுவர் இடம் பெற்றனர். ஏரி, குளம், ஆறு முதலியவைகளிலுள்ள கலிங்குகளையும், மதகுகளையும் கவனிப்பது இந்த வாரியத்தின் பொறுப்பாகும்.

பொன் வாரியம்: இதில் ஆறு உறுப்பினர்கள் பொறுப்பு ஏற்பர். ஊரில் வழங்கும் நாணயங்களில் கள்ள நாணயங்களையும், பழுதுபட்ட நாணயங்களையும் களைந்தெடுத்துவிட்டு, நல்ல நாணயங்களை மட்டும் புழக்கத்தில் விடுவது இந்த வாரியத்தின் கடமையாகும்.

கணக்கு வாரியம்: இந்த வாரியத்திற்கு அறுவர் தேர்ந்தெடுக்கப்படுவர். ஊர்ப் பொதுக் கணக்குகளைக் கவனித்துச் சீர்செய்து வைத்திருப்பது இந்த வாரியத்தின் பணியாகும்.

பஞ்சவார வாரியம்: இந்த வாரியத்திற்கு ஆறு பேர்கள் உறுப்பினர்

களாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பஞ்சகாலத்தில் பயன்படும்படி, நன்முக விளைவு ஏற்படும் காலத்தில் உணவுப் பொருள்களைத் தொகுத்துவைப்பது இந்த வாரியத்தின் பணியாகும்.

தடிவழி வாரியம்: இதில் ஆறு உறுப்பினர்கள் இடம் பெறுவர். ஊரிலும் பக்கத்திலுமுள்ளபெருவழிகளைக் கவனிப்பது இந்த வாரியத்தின் கடமையாகும்.

குடும்பு வாரியம்: இந்த வாரியத்திற்கு ஆறு பேர் தேர்ந்தெடுக்கப்படுவர். ஊரில் அமைந்துள்ள குடும்புகளின் நலன்களைக் கவனிப்பது இதன் பணியாகும்.

இந்த வாரியங்கள் எல்லாமுமே எல்லா ஊர்களிலும் இருந்தன என்று சொல்வதற்கில்லை. சிற்சில வாரியங்கள் சில ஊர்களில் இருப்பதில்லை. ஆட்டை வாரியம், தோட்ட வாரியம், ஏரிவாரியம், பொன்வாரியம், பஞ்சவார வாரியம் என்னும் ஐந்து வாரியங்கள் எல்லா ஊர்களிலும் இருந்து வந்தன.

ஒவ்வொரு வாரியமும் தனித்தனியாக அழைக்கப் பெறும்போது சிறுகுறி என்றும், எல்லா வாரியமும் சேர்ந்து அழைக்கப்பெறும்போது 'பெருங்குறி' என்றும் சொல்லப்பட்டன.

இது மட்டும் ஏன்?

ஒரு மனிதன் தன்னிடம் இருப்பதாகச் சொல்லும் குறைபாடுகள் எல்லாம் நம்பப்படுகின்றன; தன்னை மெச்சிக் கூறிக்கொள்ளும் புகழ்மொழிகள் ஒன்றுகூட நம்பப்படுவதில்லை. மொத்தத்தில் தன்னைப் பற்றிப் பேசிக்கொள்ளும்போதெல்லாம் அவன் நஷ்டமே அடைகிறான்.

—மாண்டேன்.

ஒவ்வொரு ஊரவையின் தேர்தலும் அரசனின் ஆணையின் பேரில்தான் நடைபெறும். அரசன் நாட்டதிகாரிக்காவது (பல ஊர்கள் சேர்ந்த நாட்டின் பகுதிக்கு அதிகாரி) ஊரதிகாரிக்காவது, ஊர்ப்பெருமகனுக்காவது, தேர்தல் விதிகள் அடங்கிய ஆணையை அனுப்பி வைத்துத்தேர்தலை நடத்திவைக்கும்படி கூறுவான்.

தேர்தல் ஆணையைப் பெற்ற அதிகாரி, ஊர்ப் பொதுயில்லில் ஊரவையினரைக் கூட்டி அரசனது ஆணையைக் காட்டுவான். அவர்கள் அதனைத் தலைமேற்கொண்டு, கண்ணில் ஏற்றி அதற்கு மதிப்பு அளிப்பர்.

ஆணை அதிகாரி தேர்தல் நாளை முறைப்படிப் பறையறைந்து ஊர் மக்களுக்குத் தெரிவித்து, பெரியவர் முதல் சிறியவர்வரை அனைவரையும் ஊர்ப் பொதுயில்லில் கூட்டுவான். சில வேளைகளில் தேர்தல் கோயில் பொதுமண்டபத்திலும் கூட்டப்பெறும். புதிய ஆளுங் கணத்தில் இருந்து வாரியஞ் செய்யக்கூடியவர்களை கூடியிருப்போர் தேர்ந்தெடுப்பர். ஒவ்வொரு குடும்பாரும், தத்தம் ஊரின் நிலைமைக்கும், அளவுக்கும், தேவைக்கும் ஏற்ப ஒருவரையோ அல்லது பலரையோ குடும்பின் சார்பாகத் தேர்ந்தெடுப்பர். ஒரு தடவைக்கு ஒருவர் வீதம், குடவோலை வாயிலாக ஒவ்வொருவரும் தேர்ந்தெடுக்கப் படுவர்.

முதலில் தேர்தல் அதிகாரி, அரசாணைத் திருமுகத்திலுள்ள தேர்தல் விதிகளைப் பொதுமக்களுக்குப் படித்துக் காட்டுவார். தேர்தல் நடைபெற வேண்டிய முறை பற்றியும், தேர்ந்தெடுப்பதற்கான தகுதி படைத்தவர் யார், தகுதியில்லாதவர்கள் யார் என்பதுபற்றியும், எந்தெந்த வாரியங்களுக்குத் தேர்தல் நடைபெற வேண்டும் என்பது பற்றியும், ஊர் அவை உறுப்பினர்களின் கடமைகள் பற்றியும் அரசாணைத் திருமுகத்தில் விரிவாக விளக்கப்பட்டிருக்கும்.

கல்வெட்டுக்களில் காணப்படுகின்ற செய்திகளின்படி தேர்ந்தெடுக்கப்படுகிற வாரிய உறுப்பினர்க்குக் கீழ்க்கண்ட தகுதிகள் இருக்கவேண்டும்.

1. காணிக் கடன் செலுத்தும் நிலம் கால் வேலிக்குக் குறையாமல் உடைமை.

3. சொந்த மனையிற் கட்டிய வீட்டில் குடியிருத்தல்.

3. சிறந்த கல்வியுடைமை.

4. செயலை நிறைவேற்றும் ஆற்றலுடைமை.

5. அறநெறியில் ஈட்டிய பொருளைக் கொண்டு செம்மையான வாழ்க்கையை நடத்துதல்.

6. முப்பத்தைந்து ஆண்டிற்குக் குறையாதும், எழுபத்தைந்து ஆண்டிற்குக் கூடாது மிருத்தல்.

7. முந்திய மூவாண்டிற்கு உட்பட்டு எந்த வாரியத்திலும் இருந்திராமை.

இருக்கக்கூடாத தகுதிகள்:

1. எந்த வாரியத்திலேனும் இருந்து கணக்குக் காட்டாதார்.
2. ஐம்பெருங் குற்றம் செய்தோர்.
3. ஊர்க் குற்றப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டோர்.
4. பிறர் பொருளைக் கவர்ந்தோர்.
5. குற்றங் காரணமாக கழுதைமீது ஏற்றப்பட்டோர்.
6. கையூட்டு (இலஞ்சம்)க் கொண்டோர்.
7. ஊர்க் கண்டகர்.
8. முறைகெட்ட மணம் புரிந்தோர்.
9. துணிச்சலுள்ளார்.
10. உண்ணத் தகாததை உண்டோர்
11. இப்பதினொரு சாராரின் நெருங்கிய உறவினர்.
12. கீழ்மக்களோடு கூடியுறைந்து கழுவாய் தேடாதோர்.

தேர்தல் ஆணையாளரால் தேர்தல் விதிமுறைகள் படித்துக் காட்டப்பட்டவுடன் தேர்தல் நடைபெறும். குடும்பிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தின் தலைவரும் அந்தக் குடும்பின் குடவோலையாளராக (வாக்காளராக)க் கருதப்படுவர். நடுவில் இரண்டு பெரிய வெறுங்குடங்கள் வைக்கப்பட்டிருக்கும். ஒரு குடம் குடும்புவாரி கட்டுக்களைப் போட்டு வைப்பதற்கும், மற்றொரு குடம் கட்டு ஓலைகளைப் பிரித்துப் போட்டுக் குலுக்குவதற்கும் ஆகும்.

கூட்டத்திலுள்ளவர்களில் மிகவும் வயது முதிர்ந்த பெரியவர் ஒருவர் எழுந்து, கட்டுகள் போடும் குடத்தை எடுத்து அதில் ஒன்றுமில்லையென்பதை எல்லோரும் அறியுமாறு காட்டுவார். பின்னர் ஒவ்வொரு குடும்பைச் சேர்ந்த குடவோலையாளரும், தத்தம் குடும்பில் தாம் தாம் யாரை விரும்புகிறார்களோ அவரின் பெயரை ஓலையில் வரைந்து அந்த ஓலைச் சீட்டைக் கொடுப்பர். ஓலைச் சீட்டுகளெல்லாம் குடும்புவாரியாகச் சேர்த்துக் கட்டப்பெற்று, குடும்பின் பெயர் பொறித்த வாயோலை பொறுத்தப்படும், பின்னர் அந்தக் கட்டு உரிய குடத்தில் இடப்பெறும், எல்லாக் குடும்புகளின் கட்டுக்களும் அந்தக் குடத்தில் போடப்படும். அடுத்து அந்த முதியவர், கூட்டத்திலுள்ள சின்னஞ்சிறு பிள்ளை ஒன்றை அழைத்துக் குடத்திலிருந்து ஒரு கட்டை வெளியே எடுக்கச்சொல்லுவார், அந்தக்கட்டைக்குலைத்து, ஓலைகளையெல்லாம் மற்றொரு குடத்தில் போடச்சொல்லுவார். பிறகுகுடம், அனைவரும் அறியும்படி குலுக்கப்படும். அடுத்து அந்தச் சிறு பிள்ளையைவிட்டு அந்தக் குடத்திலிருந்து ஒரு ஓலையை எடுக்கச் சொல்லுவார். அந்தச் சிறுவன் அந்தப் படிக்கு ஒரு ஓலையை எடுத்துத் தேர்தல் ஆணையாளர் கையில் கொடுப்பான். அந்தத் தேர்தல் அதிகாரி தன்வலக்கைவிரல் ஐந்தையும் விரித்துக்காட்டி, அந்தஓலையை வாங்கி, கூட்டத்திலுள்ள அனைவரும் கேட்கும்படி அந்த ஓலையிலுள்ள பெயரைப் படித்துக்காட்டுவான். அந்த ஓலையைப் பெரியவர்கள் பலரும் வாங்கிப் படித்துப் பார்ப்பர். அந்தப் பெயர் தேர்தல் ஆணையாளரால் ஒரு ஓலையில் குறிக்கப்பெறும். இவ்வாறே எல்லா உறுப்பினரின் பெயர்களும் குறிக்கப்படும். பின்னர், வாரியப் வகுப்பு நடைபெறும். குடவோலை முறையாலேயே வாரியத்திற்கான உறுப்பினர்கள், அந்த ஊரவை உறுப்பினர்களிலிருந்து முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுவர்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஆளுங்கணத்தார் ஓராண்டிற்குச் செவ்வனே முறைப்படிபணியாற்றி வரவேண்டும். யாரேனும் தம் கடமையைச் செய்யத் தவறினாலும், குற்றம் புரிந்தாலும், அவர் உடனே வாரியத்திலிருந்து நீக்கப்பட்டு, ஊர்க் குற்றப் புத்தகத்தில் பதிவு செய்யப் பெறுவர்.

தேர்தல் விதிமுறைகள் அவ்வப்போதும், ஊருக்கு ஏற்ற வகையிலும் அரசனால் திருத்தி அமைக்கப்படுவது என்று கல்வெட்டுகளிலிருந்து தெரிய வருகிறது.

குடவோலை முறையினால் குடியாட்சி நடைபெற்ற வரலாற்றை, இடைக்காலக் கல்வெட்டுக்களாலும், செப்பேடுகளாலும் தெரிந்து கொள்ள முடிகிறது என்றாலும், இத்தகைய குடியாட்சி முறை சங்க காலம் முதற்கொண்டே நின்று நிலவிவந்திருக்கின்றது என்றுதான் கொள்ளவேண்டியிருக்கிறது. சங்க இலக்கியங்களில் காணப்படும் சிறு சிறு குறிப்புக்கள் அந்த உண்மையைப் புலப்படுத்துகின்றன.

பண்டைத் தமிழர்கள் தலை சிறந்த நாகரிகத்தையும், பண்பாட்டையும் கொண்டிருந்தனர் என்பதற்குக் குடவோலைத்தேர்வுமுறை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு தங்கம், வெள்ளி, தாம்பரம் மற்றும் உலோகங்கள், அநேக அபூர்வ மூலிகைகள் மருந்துப் பொருள்கள் சேர்த்து உருவாக்கிய

டாக்டர் சாது. ப. நாராயணசாமி பிள்ளையின்

சித்தர் நவலோக கல்பம்

ஸ்ரீ ராஜராஜேஸ்வரி சித்த வைத்தியசாலை,

5, ஜெனரல் சாமிநாயக்கன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5. தொலைபேசி: 84786

கிளை வைத்தியசாலை:

மாமண்டூர் வடபாதி, பாலாற்றங்கரை சமீபம், செங்கற்பட்டு ஜில்லா.

ஆஸ்துமா, மதுமேகம் (டையாபடீஸ்) T. B. குஷ்டம், வெண் குஷ்டம், யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கு

பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக்கிழமைகளில் சென்னையிலும்,
பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் மாமண்டூரிலும்

டாக்டர் சாது V. நாராயணசாமி பிள்ளை அவர்களைக் கலந்து குணம் பெறலாம்.

கந்தல்

சிங்கை-உலகுதாசன்

கைவண்ணம் தனைக்காட்டி வியர்வை சிந்தி
கணக்காக பூவேலை தன்னைச் செய்து
மெய்வண்ணம் தாமுற்று மாந்தர் வாழ
மேதினிக்கு எனைப்பெற்றுத் தந்தான் ஏழை!
நெய்வண்ண மாடியிலே இருப்பார் வாங்கி
நிலை,மாடம், வாயிலெலாம் தொங்க விட்டார்
பொய்தன்னைச் செய்கின்றார் என்றெண் ணுது
புலனெல்லாம் மகிழ்வுக்குத் தந்து நின்றேன்!

போவோரும் வருவோரும் கண்ணைப்போட்டார்
புதிதாக வந்தவர்கள் தொட்டுப் பார்த்தார்!
தாவாத இடமெல்லாம் தென்றல் காற்றால்
தழுவிவிட்டு என் இடத்தில் வந்து நின்றேன்.
பூவாத மலர்மேனி மங்கை தன்னைப்
பூவெடுத்துப் புதுமுத்தம் ஈதல் போல
'தாவாமல்' அவளுடலை தாங்கிக் கையில்
தலையணைபோல் மெலவெடுத்து நுழைந்தான்
அன்பன்.

மேவிவிட்ட காதலுக்கு வழி திறக்க
மீன்விழியைத் திறந்துதிறந் தூடல் கொண
டாள்!
ஆவியைத்தான் விரட்டுகிறன்! ஓட லுற்றாள்!
அவன் காலில் நான்சிக்கி சீர ழிந்தேன்!
பூவிழியை அவன்பிடித்துப் போட்டான் முத்தம்
பொக்கென்று என்வாழ்வைக் கிழித்தெ
றிந்தான்!
தாவிவந்த வேலையாள் பெற்றுச் சென்றே
தைத்துடலை மூடிக்கொண் டின்பங் கண்டான்!

வெய்யிலையும் பேய்மழையும் தலையில் வாங்கி
வேதனையில் தினம்உழலும் வேலை யாளின்
'மெய்யழகை' ஒருசிலநாள் காத்துப் பின்னர்
மிககிழிச லாய்ப்போனேன்! ஓட்டை எங்கும்!!
கையதனை நீட்டிவந்த பிச்சைக் காரன்
கைசேர்ந்தேன் கைக்கொண்டான் போர்த்தி
ருந்து
மெய்யிதனின் ஓர்புறத்தில் எறிந்தான் நாற்றம்
மேல்மணமாய்த் தான்கொண்டேன் மேலும்
நைந்தேன்

இதனோடு நம்வாழ்வு முடிந்த தென்று
ஏகாந்தி யாபொதுங்கிக் கிடந்த போது
அதனோடு இதைச்சேர்,போ தும்வா வென்று
அங்குவந்த பிள்ளைகளோ பட்டம் கட்டி
விதவண்ணத் தாளோடு பறக்க விட்டார்!
விட்டிட்டார் கை நூலை விழுந்தேன் எங்கோ
இதுபோதும் நல்வாழ்வு என்றே நொந்தேன்,
எப்பிறப்பும் இப்பிறப்பாய்க் கொள்ளேன்
என்றே!

எங்கேயோ பிறந்திட்டேன்; எங்கோ வாழ்ந்
தேன்
என்வாழ்வை எப்படியோ முடித்து விட்டார்!
தங்கநிற நெல்விளைத்தும், பொருள்வி ளைத்தும்
தாரணியில் எனைப்போன் றுசிதைந்து வாழும்
உங்களின ஏழையரின் உழைப்பு தன்னை
உறுஞ்சியபின் ஒதுக்குகிறீர், நன்றி யுண்டோ?
எங்கும்நிறை ஏழையருள் ஏழை யாக
இறைவனுமை படைத்திருந்தால் உணர்வீ
ரன்றோ!



குழந்தைகள்

சபரி

ராதை, திடீரென்று விழித்துக் கொண்டாள். மணியைப் பார்த்தாள். மணி இரண்டு. இனி எப்படித் தூக்கம் வரும்? எப்போது பொழுது விடியும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பவளுக்கு இனி எப்படித் தூக்கம் வரும். நாளை அவளுக்கு முடிவு தெரிய வேண்டும். தன் எதிர்கால வாழ்க்கையைப்பற்றி

காதலிக்கக்கூடாது தான். காதலித்தவரை வரும் திருமணம் செய்துகொண்டதில்லை - மனம்போல். அதையும் அவள் அறிவாள். ஆனால் காதலித்துவிட்டாளே! இனி அதை நினைத்து என்ன பயன். அவளும் காதலிக்க ஆரம்பித்து இரண்டு வருடத்திற்கும்மேல் ஆகிவிட்டது. சேகர் — கண் நிறைந்தவன். அவனும் நல்லவன் தான். முதலில் அவள் இப்படித்தான் நினைத்தாள். நாளாக, நாளாக அவளையறியாமல் ஓர் பயம், அவள் நெஞ்சத்தில். தன்னைவிட்டு அவன் விலகிப் போவது போல்ஒரு பிரமை! சாதாரண அச்சம் தான்.

அச்சத்திற்கும் உண்மைக்கும் சம்மந்தமிருந்து விட்டால்!

ஒவ்வொரு நாளும் அவளும் சேகரைக் கேட்பாள், சேகர் எப்போது நம் திருமணம் என்று. அவன் பிடிகொடுத்ததே இல்லை. அவனிடம் உள்ளத்தைமட்டும் அவள் இழக்கவில்லை. இன்னொன்றையும் சேர்த்து மெதுவாக அவள் இழந்துகொண்டிருந்தாள். பெண் தன் பெண்மையை அவ்வளவு சுலபமாக எப்போதும் இழப்பதில்லைதான்.

ஆனால் பெண்களுக்கு ஒரு குணம்; ஆண்களிடம் அவ்வளவு சுலபமாக அவர்கள் உள்ளத்தை இழந்து விடுவதில்லை. ஆனால் ஒருதரம் தங்கள் உள்ளத்தை இழந்து விட்டாலோ, ஆண் எந்த பொய்யைச் சொன்னாலும் நம்புவார்கள். ஆணின் பேச்சில் மயங்கி விடுவார்கள். பெண்ணின் அந்த மயக்கத்தில் ஆண் துணிந்து தவறு செய்து விடுகிறான். இதற்குப்பின் பெண்ணுக்குத் துணிவு வந்து விடுகிறது. ஆனால் ஆணோ துணிவை இழந்து பெண்ணைவிட்டு விலகிச் செல்கிறான். ராதாவுக்குள் என்னென்னவோ நினைப்புகள். நேற்று மாலை கூட ராதா, சேகரிடம் கேட்டாள்;

“சேகர், நாம் பலமுறை நம் நிலை இழந்து தவறுகள் செய்திருக்கிறோம். நினைக்க, நினைக்க எனக்குப் பயமாக இருக்கிறது. விரைவில் திருமணத்தை முடித்து விடுவது நல்லதென்று நினைக்கிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்” என்று கேட்டாள்.

“நாளை ‘முடிவாக’ சொல்கிறேன் ராதா” என்று சொல்லிப் போய்விட்டான்.

நாளைய முடிவைப் பற்றியே அவள் நினைத்துக்கொண்டிருந்தாள்.

ஆனால் இரவு இன்னும் முடியவில்லை. இன்றைய இரவு ஏன் இவ்வளவு நீள்கிறது!

*

ராதைக்கு சொந்தக்காரர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் எவரும் இல்லை, ஒரே ஒரு சித்தி-சாந்தம்மாள. சாந்தம்மாளுக்கு எப்படியாவது ஒரு பெரிய இடத்தில் ராதாவை திருமணம் செய்து கொடுக்கவேண்டும்; தன் ‘கடைசிக்’ காலத்தில் தான் நிம்மதியாக இருக்கவேண்டும்; இதுவே அவள் பிரச்சினை. இதற்காக எதையும் செய்ய அவள் தயாராய் இருந்தாள். எதையாவது என்பதற்குப் பொருள் ராதையின் வாழ்வு பலியானாலும் சரி, பெரிய இடத்தில் அவள் வாழ்க்கைப் பட வேண்டும் என்பதே சாந்தம்மாள் குறிக்கோள். சேகரும் ராதையைப் போல் தான். ராதைக்காவது ஒரு சித்தியிருந்தாள. ஆனால் சேகருக்கோ, ஒருவரும் இல்லை. நீதான ராதா, எனக்கு வாழ்க்கையில என்று சொல்லியிருந்தான். உண்மையா என்று நாளைதானே தெரியவேண்டும்!

பொழுதும் விடிந்தது. ராதைக்கு முடிவு தெரியவில்லை. காரணம் அன்று மாலை சேகர் அவளைச் சந்திக்கவே வரவில்லை. மூன்று நாட்களுக்கு மேல ஆகிவிட்டது. சேகரைச் சந்திக்க முடியவில்லை! அவளையும், அவளையறியாமல்; அவளை ஓர் பயம் கவ்விக்கொண்டது. இதே சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அவளை யாரோ அழைக்கும் குரல் கேட்டுத் தன அறையை விட்டுக் கூடத்திற்கு வந்தாள்.

சிவசங்கரம் பிள்ளை, சாந்தம்மாளுடன் பேசிக் கொண்டிருந்தார்

‘என்னம்மா, சௌக்கியமா?’ எப்போதும், அவர் ஓர் பாசத்துடன ராதாவிடம் பழகுபவர். கொஞ்சம்

நிலபுலனுடையவர், தனிக்கட்டை. ஊரில் முக்கியப் புள்ளி, "உங்களுடைய ஆசியில், நலமாகவே இருக்கிறேன், நீங்களும் நலந்தானே."

"இருக்கிறேம்மா. என்னம்மா, உன் முகம் கொஞ்சம் வாடியிருக்கிறது. கலகலப்பு இல்லை" ராதைக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"அதெல்லாம் ஒன்றும் இல்லீங்க. நீங்க சித்திகிட்ட பேசிட்டு இருங்க நான் வர்ரேன்" என்று சொல்லிவிட்டு குடத்தை எடுத்துக்கொண்டு ஊர்ப் பொதுக்கிணற்றை நோக்கி நடந்தாள். கிணற்று நீரை வெள்ளமா அடித்துக்கொண்டு போய்விடும் என்று சொன்னவனைக் காணுமே என்ற ஒரு சிந்தனைதான் அவளிடம் மேலோங்கி நின்றது!

தண்ணீர் எடுத்துக்கொண்டு எல்லோரும் சென்றுவிட்டார்கள். ராதை மட்டும் நின்றுகொண்டிருந்தாள்.

சற்றுமுன் பாக்கியமும், சோமுவும் பேசிக்கொண்டிருந்தது அவள் காதில் ஒலித்துக்கொண்டிருந்தது.

"ஏண்டி, பாக்கியம் உங்க அண்ணன் பட்டாளத்திலே சேரப்போறதா சொல்லிக்கிட்டு இருந்ததே என்னாச்சு?"

"சோமு உனக்கு விஷயம் தெரியாதா? நேற்று நம்மூர்லே இருந்து மூன்று போ பட்டாளத்திலே சேர்ந்து, கிளம்பிக்கூட போய்ட்டாங்களே. ஒருத்தர், என் அண்ணன். இன்னொருத்தர் கணக்குப் பிள்ளை மவன், பழனி. இன்னொருத்தர் சேகர்."

சேகர் பட்டாளத்திலே சேரப் போய்விட்டான். ஊரைவிட்டுச்சென்று இரண்டு நாட்கள் ஆகிவிட்டன.

வீட்டுக்குக் கிளம்ப குடத்தைத் தூக்கினாள். குடம் காலியாக இருந்தது. ஓட்டைக் குடம்! நிரம்பிய தண்ணீர் ஓட்டை வழியே போய்விட்டது!

அவள் ஆசை, மனக்கோட்டைகள், சேகர் இவையும்தான் போய்விட்டன!

காலிக் குடத்துடன் வீட்டை நோக்கி நடந்தாள். கனக்க வேண்டிய குடம் லேசாக இருந்தது! ஆனால் இப்போது அவள் நெஞ்சு கனத்தது!!

எத்தனை நேரம் அவள் அப்படி அழுது கொண்டிருந்தாள் என்று அவளுக்குத் தெரியாது. கண்ணீர் வரவில்லை. ஒருவேளை வற்றிவிட்டதோ சேகரின் அன்பைப்போல்!

அழுது தீர்த்து விட்டாள். நெஞ்சத்தில் ஏற்பட்ட வடுவின் பசுமை இருக்கும்வரைதானே அழுகை வரும். தானாகவே தேற்றிக்கொள்ள வேண்டியதுதானே. காலம் இந்த வடுவை ஆற்றத்தானே போகிறது- ஆறித்தானே போகவேண்டும்! சேகர் போய்தான் இரண்டு மாதம் ஆகிவிட்டதே!!

"ராதை, உனக்கென்ன வந்தது. ஏன் இப்படி முகத்தை வைத்துக்கொண்டிருக்கிறாய்" சாந்தம்மாள் சீறினாள்.

இதெல்லாம் ராதைக்குப் பழக்கம்தான். திடீரென்று சாந்தம்மாள் முகத்தை மாற்றிக்கொண்டாள். சிரிப்பையும் வரவழைத்துக்கொண்டாள் குழைவாகப் பேச ஆரம்பித்தாள்.

"கண்ணு ஏண்டா இப்படி இருக்கிறே! விளக்கு வைக்கிற நேரமாச்சு. போய் முகத்தை கழுவி, அந்தப் பட்டுப் புடவையைக் கட்டிக்கொண்டு, அந்தப் பூவையும் வைத்துக்கொள். உன்னைத்தேடி அதிர்ஷ்டம் வந்திருக்கிறது. சீக்கிரம், போ. அவர் வந்து விடுவார்"

ராதைக்கு ஒன்றும் புரியவில்லை. எதற்கு இந்தக் கனிவு! எதற்கு இந்தக் குழைவு? எதற்கு இவள் வலை விரிக்கிறாள். ஏற்கனவே ஒரு வலையில் விழுந்த பறவைதானே அவள்!

"எவர் வரப்போகிறார்? என்ன சித்தி நீங்க சொல்வது ஒன்றும் புரியவில்லையே"

"ஆமாம்மா, சிவசங்கரம்பிள்ளை, உன்னைப் பெண் பார்க்க வரப்போகிறார். அதிர்ஷ்டம் உன்னைத்தேடி வருகிறது;"

"சித்தி! என்ன இது! எனக்குத் திருமணமா? என்ன அவசரம் வந்தது இப்போது!"

"ராதா, இப்படி அசடு மாதிரி பேசாதே, எதிர்ப் பார்க்காத இடத்திலே இருந்து அழைப்பு வந்து இருக்குது. தவற விடடுவிடாதே போ சீக்கிரம் சிங்காரிச்சுக்கிட்டு வா."

ராதை சிறிது நேரம் யோசித்தாள். தான் நினைத்ததுதான் நடக்கவில்லை. இனி இந்த உலகத்தில் அவளுக்கென்று வாழ்வில்லை, இன்பமில்லை, எதிர்காலமில்லை. தன்னால், தன் சித்தியின் எண்ணமாவது நிறைவேறட்டுமே என்று நினைத்தாள். ஆனால் தெரிந்து ஒரு நல்லவருக்குத் துரோகம் செய்வதா. அவள் மனம் அவளைக்கேட்டது. ஒருவனிடம் உள்ளத்தையும், உடலையும் சேர்த்து இழந்தவள், இதை மறுத்துவிட்டு ஒரு நல்லாரின் வாழ்வைப் பாழாக்குவதா? ராதைக்கு தலை சுழன்றது. ராதை நிமிர்ந்து பார்த்தாள்.

"சித்தி இந்த ஏற்பாடு எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை."

"என்னடி இது? நமக்குக் கிடைக்கக்கூடிய சம்மந்தமா? ஏன் உனக்குப் பிடிக்கவில்லை என்கிறாய். வயதானவராயிற்றே என்று யோசிக்கிறாயா?"

"இல்லை சித்தி. நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். நான் ஒருவரை காதலித்தேன். அவர் பெயர் சேகர்."

"அடிப்பாவி, என்ன இது. காதலாவது கத்திரிக்காயாவது. சேகர் ஒரு அனாதை. சொத்து ஒன்றுமில்லா பஞ்சை அவன். நாலு காசு சம்பாதிக்க வழியில்லாதவன். அவனைப்போய் காதலிக்கிறேன், கல்யாணம் செய்து கொள்கிறேன் என்கிறாயே. அதெல்லாம் ஒன்றும் நடக்காது."

ஓட்டா போடுவார்கள்?

வாரத்துக்கு இரண்டு நாட்கள் கட்டாயப் பட்டினி கிடக்கவேண்டிய நிலைமைக்கு நாட்டு நிர்வாகத்தை மோசமாக்கி விட்டதற்காக வெட்கப்படாமல், வருத்தப்படாமல் அதே காங்கிரஸ் கட்சி, எந்த மக்களைப் பட்டினி போடுகிறதோ அதே மக்களிடம் ஓட்டுப் போடும்படியும் வற்புறுத்துகிறது; போடுவார்கள் என்றும் நம்பிக்கொண்டிருக்கிறது.

“சித்தி, நீ கவலைப்பட வேண்டியதில்லை. அவ ராகவே என்னைக் கைவிட்டுப்போய்விட்டார். அவரைக் காதலித்தவள் நான். ஒருவரிடம் உள்ளத்தைக் கொடுத்தவள் நான், எப்படி மற்றொருவரைத் திரு மணம் செய்துகொள்ள முடியுமா?”

“கைவிட்டு விட்டானா, எப்படி?”

‘ இந்த ஊரைவிட்டே போய்விட்டார். இரண்டு மாதத்திற்கு மேல் ஆகிவிட்டது. இனி அவர் திரும்பி வருவார் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

“சனியன் விட்டது என்று நினைத்துக்கொள். உன் அதிர்ஷ்டம்தான், அவனும் ஒழிந்தான். இவரும் உன்னைத்தேடி வந்தார். கடவுள் நமக்கு வழிகாண்பித் திருக்கிறார் என்று நினைத்துக்கொள்.”

“சித்தி, நான் சேகரிடம் உள்ளத்தை மட்டும் இழக்கவில்லை. பெண்மையையும் சேர்த்து இழந்து விட்டேன். நான் எப்படி மற்றொருவரை திருமணம் செய்துகொள்ள முடியும். எப்படி என் நெஞ்சுக்குப் பொய் சொல்வேன்!”

“அடிப்பாதகி, பெண்மையையும் இழந்துவிட் டாயா? என்ன சொல்கிறாய்; குலப் பெருமையை அழித்துவிட்டாயா!”

இருவரும் சிறிது நேரம் மௌனமாக நின்றார்கள். அந்த பயங்கர உண்மை இருவருடைய வாயையும் அடைத்துவிட்டது!

சாந்தம்மாள் திரும்பவும் பேச ஆரம்பித்தாள். அவள் மனதில் ஏதோ குரோத எண்ணம்—குறுக்கு வழி தோன்றியிருக்கிறது என்பதை அவள் முகமே காட்டியது.

“ராதே, உண்மையைச் சொல். நீ முழுகாமல் இருக்கிறாயா!”

“சித்தி, சத்தியமாக அப்படியொன்றுமில்லை”

“அப்பா இப்பதான், எனக்கு நிம்மதியாச்சு. ராதே, இப்பவும் கடவுள் நம் பக்கம்தான் இருக்கிறார். பயப்படாதே. நீ முட்டாள்தனமாக நடந்துவிட்டிருக் கிறாய். உன்னுடைய நல்ல காலம்தான் இப்படியொரு வாய்ப்புக்கிடைத்திருக்கிறது. நீயோ அவனைக் காத லித்து, அவனை நம்பி உன் உள்ளத்தையும் பெண்மை யையும் சேர்த்து இழந்திருக்கிறாய். அவனோ திரும்பி வரப்போவதில்லை என்கிறாய். அவனை நம்பி காலமெல் லாம் காத்திருந்து நீ பயனடையப் போவதில்லை. உன் வாழ்வு வீணாகி கருகும் இந்த நேரத்தில் இப்படி யொரு சம்மந்தம் வந்திருக்கிறது. பெரிய இடத்து சம் மந்தம். கிடைக்க முடியாததும்கூட. உன் வாழ்வை சீராக்கிக்கொள்ள இது ஒரு நல்ல சந்தர்ப்பம், உன் வாழ்வை வீணாக்கிக்கொள்வதால் யாருக்கும் லாபம் இல்லை. உன்னைக் காதலித்தவன், எங்கோ ஓர்இடத்தில் சுகமாகத்தான் வாழ்ந்துகொண்டிருப்பான். உன்னைக் கெடுத்தவன் சுகமாக வாழ்ந்துகொண்டிருக்கும்போது நீ மட்டும் ஏன் அவளை நினைத்து, நினைத்து உருகிச் சாகவேண்டும். நீ வாழ்வை ஒழுங்காக அமைத்துக் கொண்டால் அதுவே, இவனுக்கு — என்றாவது ஒரு நாள் அவன் அறியும்போது—பாடமாக அமையும். இது நல்ல சந்தர்ப்பம். நீ நிச்சயம் இதற்கு சம்மதிக்க வேண்டும்.”

சித்தி சொன்னவைகளை ராதா நன்றாக யோசித் தாள்.

அங்கு அப்படி - இங்கு எப்படி?

காங்கிரசாட்சியிடம் மக்கள் கொண்டுள்ள கோபமும், கொதிப்பும் பற்றி வெளிநாடுகளிலே உள்ள ஆய்வாளர்களும்கூட அறிந்துள்ளனர். மக்களிடையே இவ்வளவு ஏமாற்றத்தையும் எரிச்சலையும் மூட்டிவிட்ட காங்கிரஸ் கட்சியை மக்கள் மீண்டும் ஆதரித்து ஆட்சியில் அமர்த்த மாட்டார்கள் என்று கருதுகிறார்கள். ஏனெனில் இங்கு காங்கிரசாட்சி செய்திருப்பது போன்ற தவறுகளிலே நூற்றிலே ஒரு பங்கு தவறு செய் திடினும் போதும், அங்கு அத்தகைய ஆட்சியை மக்கள் தாங்கிக்கொள்ள மாட்டார்கள்!

நல்லவர்மனதை நாம் நோகவைத்தாலும் துரோகம் செய்கிறோம் என்று தெரிந்த போதிலும், பெண் இனத் திற்கே இது இழுக்கு என்று தெரிந்த போதிலும், சித்தி சொன்னதிலும் சில உண்மைகள் இருக்கத்தான் செய்கின்றன. எவனோ ஒருவன் செய்த தவறுக்காக நாம் ஏன் நம்வாழ்வைப் பொசுக்கிக்கொள்ளவேண்டும். விதவைத் திருமணங்கள் நாட்டில் நடக்கவில்லையா அதை எல்லோரும் சம்மதிக்கவில்லையா!! விதவைத் திருமணத்திற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்?

விதவைத் திருமணத்தில் அந்த உண்மை, வெளியே பகிரங்கமாக அறிவிக்கப்படுகிறது. ஆனால் இதில் நானே, அந்த உண்மையை மறைக்கப் போகி றேன் — என்னை மணக்கப் போகிறவரிடம் இருந்து.

எவ்வளவோ சமாதானங்கள் சொல்லிப்பார்த்தாள். அவள் மனம் கேட்கவில்லை. என்ன இருந்தாலும் இது துரோகம் என்று அவள் மனம் உறுத்திக் கொண்டி ருந்தது. என்ன காரணத்தினாலோ சிவசங்கரம்பிள்ளை பெண்பார்க்க வரவில்லை. மறுநாள் ராதையே அவரைக் குளத்தங்கரையில் சந்தித்தாள்.

அப்போது எப்படியும் சொல்லிவிடுவது என்று முடிவு செய்தாள். அவரே பேச ஆரம்பித்தார்.

“என்னம்மா, ராதா அம்மா விஷயத்தைச் சொன் னார்களா! நேற்று நான் வரமுடியாமல் போய்விட்டது. வெளியூர் சென்றிருந்தேன். பஸ்’தவறுவிட்டது. உன் அம்மாவும் நீயும் எதாவது தவறாக நினைத்துக் கொண் டார்களா? உனக்கு சம்மதம்தானே?” அவர் அடுக்கிக் கொண்டே போனார்.

“சற்று அந்த மண்டபத்திற்கு வாருங்கள்” என்று அழைத்தாள்.

“ஐயா என்னை திருமணம் செய்துகொள்ளுவதாக முடிவு செய்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். அதற்கு முன் நான் ஒரு விஷயத்தை உங்களிடம் சொல்லப் போகிறேன். அதைக் கேட்டப் பிறகு உங்கள் முடிவைச் சொல்லுங்கள்”

“ராதா, நீ என்ன சொல்லப்போகிறாய் என்பது எனக்குத்தெரியும். நீ ஒருவனைக் காதலித்தாய். அவனை நம்பினாய். ஆனால் அவன் உன்னைவிட்டு ஓடிவிட் டான். இது ஊர் அறிந்த கதை. நானும் அறிவேன். ஆனால் நான் உன்னை நம்புகிறேன். மணக்க சித்தமாய் இருக்கிறேன். இதைப்பற்றி நீ கவலைப்படவேண்டிய தில்லை; நீ சம்மதம் என்றால் எல்லாம் முடிந்தமாதிரி!”

“ஐயா, உங்கள் திடமான மனதைக் கண்டு நான் வணங்குகிறேன். ஆனால் நான் சொல்லவந்தது....”

“என்ன சொல்”

ராதை சிறிது நேரம் விழித்தாள்.

இருவரும் மவுனமாக நின்றார்கள். எல்லா மவுனங்களும் சம்மதத்திற்கு அறிகுறியாகிவிடுமா! சங்கரம் பிள்ளை சிரித்தார்.

"ராதா நீ சம்மதம் என்றால் நாளையே நம்மூர் பிள்ளையார் கோயிலில், நம் திருமணத்தை முடித்து விடலாம். நான் நாளை உங்கள் வீட்டிற்கு வருகிறேன்." அவர் போய்விட்டார்.

ராதை மௌனமாக நின்றாள்.

"ஐயோ சொல்லவந்த உண்மை, பாதியிலேயே நின்றுவிட்டதே ஏன்? சொல்லவேண்டும் என்று நினைத்தும் ஏன் சொல்ல முடியாமற்போனதேன். சுயநலம் உண்மையை மறைத்துவிட்டதா? பெண்மை, பெண்மைக்கு ஏற்பட்ட பலவீனத்தை சொல்ல முடியாமல் திணறுகிறதா? ஏன் பாதியில் வாயடைத்துப் போய்விட்டது? எனக்கே புரியவில்லை. பழிக்குப் பழி, வாங்கும் உணர்ச்சியா? யாரோ என்னைப் பழிவாங்கியதற்கு, நான் வேறொருவரைப் பழிவாங்குவதா? இதென்ன நியாயம்! சேகர் ஏன் நியாய அநியாயம் பார்க்கவில்லை? சிவசங்கரம் பிள்ளைக்கு ஏன் நியாய, அநியாயம் தெரியவில்லை?

பழிவாங்குவதாக நினைத்துக்கொண்டு என்னை நானே பழிவாங்கிக்கொள்ளப்போகிறேனா? இன்று நெஞ்சத்திற்குள் மூடிவைக்கலாம் — அழுத்திவைக்கலாம். என்றாவது ஒருநாள் பீறிட்டு வெளிக்கிளம்பாது என்று என்ன நிச்சயம்? வாழ்நாள் முழுதும் நெஞ்சிற் சுமையுடன் கழிக்கவேண்டியதுதானா?

இருட்டிவிட்டது — வெளியில்; அவள் நெஞ்சத்தைப்போல்.

மறுநாள் சிவசங்கரம்பிள்ளை வீட்டிற்கு வந்தார். இன்றே திருமணம்—நம் ஊர் பிள்ளையார் கோயிலில்; கிளம்புங்கள் என்றார்.

ராதைக்கு உலகம் சுழலுவதுபோல் இருந்தது. மயக்கமுற்றுச் சாய்ந்தாள். விழித்தபோது — பிள்ளையார் கோயிலில் இருப்பது தெரிந்தது. சாந்தம்மாள், ராதையைத் தாங்கிக்கொண்டு நின்றிருந்தாள்.

சிவசங்கரம் பிள்ளை எதிரில் தாலியுடன் நின்றிருந்தார்.

"ஐயா, நான் சொல்வதைக் கேளுங்கள் நான் சொல்லவந்தது என்னவென்றால்......அவள் வார்த்தையை முடிக்கவில்லை.

"ராதே, நேற்றுதான் எல்லாவற்றையும் சொல்லிவிட்டாயே, இன்னும் என்ன இருக்கிறது? எனக்கு சம்மதம்."

சங்கரம் பிள்ளையின் கை ராதையின் கழுத்தை நெருங்கியது.

அவ்வளவுதான் ராதைக்குத் தெரியும். மறுபடியும் அவள் மயக்கமுற்றாள்.

அவள் வாழ்க்கை முழுவதும் இதே மயக்கம் தானோ?

❀

மணம் முடிந்து ஒரு வாரத்திற்குமேல் ஆகிவிட்டது. சிவசங்கரம் பிள்ளை வேற்றூருக்குச் சென்று குடும்பம் அமைத்துக்கொண்டார். சாந்தம்மாள் அதே ஊரில் இருக்கவேண்டும்; மாதா, மாதம் பணம் அனுப்புவதாகப் பேச்சு. ராதை தனிக்குடித்தனம்

THE SCHOOL OF ENGLISH LEARNING
ஆங்கிலக் கல்வி நிலையம்
60, பிராட்வே, சென்னை-1.

வீட்டிற்கோர்
நூல் நிலையம்
எங்கள் ஆங்கில
மொழிப் பாடங்கள்

ஆங்கிலம்
அறிவின் சுடர்—
அணையா
விளக்கு

வீட்டிலிருந்தபடியே...

குறைந்த செலவில்
அடிப்படையிலிருந்து
இலக்கண ரீதியாக

நிறைந்த
ஆங்கில மொழி
ஞானம் பெற

முழு விவரங்களுக்கு
உடனே 10-காசு
தபால் பில்லையுடன்
எழுதுக.

ஆரம்பித்துப் பதினைந்து நாட்களுக்குமேல் ஆகி விட்டது.

நாளாக, நாளாக சிவசங்கரம் பிள்ளையின் நல்ல குணம், பழக்கம் தன்மை அவர் ராதையின்மேல் வைத்திருக்கும் பாசம், அன்பு இவை வளர்ந்துகொண்டேயிருந்தது. ராதையால் அவருடைய அன்பை ஜீரணிக்க முடியவில்லை—திணறினாள்.

தவறு செய்தவள் இவள் — தனக்குள்ளேயே துடித்துக்கொண்டிருக்கிறாள். இந்த நேரத்தில் அவனுடைய அன்பு எல்லைமீறி, நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. அவளுக்கு எப்படியிருக்கும்.

தவறுக்குத் தண்டனை கிடைத்துவிட்டால் மனித மனம் சாந்தியடைந்துவிடும்.

ஆனால் தான் செய்த தவறுக்காகத் தண்டனையை எதிர்பார்க்கும் இடத்தில் இருந்து, எதிர்பாராத விதமாக அன்பு கிடைத்தால் எப்படியிருக்கும்? செய்த தவறுக்குத் தண்டனை அளிப்பதைவிட பெரிய தண்டனை — தவறைப்பற்றியே கேட்காமல் இருப்பது. ஒருவேளை சிவசங்கரம்பிள்ளை தன்னை பழிக்குப்பழி வாங்குகிறாரோ என்றுகூட ராதா நினைத்தாள்!

சிவசங்கரம் பிள்ளையே அவளுக்கு ஓர் மர்ம மனிதராகத் தோன்றினார்!

அவளுக்கு, அவளுடைய செய்கைகள் ஒவ்வொன்றும் புதிராகவே இருந்தது!

அவளுக்குப் புரியாதபுதிராக இருந்தது மற்றொரு விஷயம். திருமணம் ஆகி கிட்டத்தட்ட, ஒரு மாதம் ஆகிறது. கணவன், மனைவியாக இருவரும் வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கின்றனர் அவள் கேட்பதற்கு முன், துணிமணிகள், வீட்டுக்கு வேண்டிய பொருள்கள் யாவும் வாங்கிக்கொண்டு வந்து கொடுக்கிறார். அன்பைப் பொழிவதிலும் குறையில்லை. ஆனால் இது வரை ராதையை அவர் நெருங்கியது இல்லை! மறந்து கூட அவளைத் தொட்டதில்லை!

ராதைக்கு அவர் செய்கைகள் ஒவ்வொன்றும் தன்னைக் குத்திக்காட்டுவதுபோல் இருந்தது! அவள் நெஞ்சம் குறுகுறுத்தது!!

✻

இப்படியே மூன்று மாதங்களுக்குமேல் ஓடி விட்டது. சாந்தம்மாள் ஒருநாள் வந்திருந்தாள். சிவசங்கரம் பிள்ளை விளையாட்டாக, ராதா நிம்மதியுடன் இருப்பதாகச் சொன்னாளா என்று கேட்டார்.

ராதா இதை மறைவாக நின்று கேட்டுக்கொண்டு தான் இருந்தாள்.

எதை நினைத்து இவர் இப்படிக் கேட்கிறார் என்று அவளுக்குப் புரியவில்லை.

சாந்தம்மாள் ஊருக்குப் போய்விட்டாள்.

ராதை பிள்ளைக்கு சாப்பாடு போட்டுக்கொண்டே கேட்டாள்.

“சித்தியிடம் அப்படிக் கேட்டீர்களே, நன்றாகயிருக்கிறதா? நான் உங்களைச்கணவராக அடைய பாக்கியம் செய்திருக்கவேண்டும். நீங்கள் எனக்கு என்ன குறை வைத்திருக்கிறீர்கள். நான் வேண்டுமானால் உங்களுக்கு அருகதையற்றவளாக இருக்கலாம்.”

“ராதா, அப்படியெல்லாம் சொல்லாதே. என்ன தான் நான் உன்னிடம் அன்பைப் பொழிந்தாலும், நான் எப்படி உனக்குப் பொருத்தமானவனாக இருக்க முடியும். நான் வயதானவன். அதனால் உன் சித்தியிடம் கேட்டேன் நீ நிம்மதியாக இருக்கிறாயா என்று.”

“நீங்கள் என்னுடைய கண்கண்ட தெய்வம். உங்களைப் பூஜிக்கக்கூட அருகதை இல்லாத பக்தை நான். உங்களுக்காக என் உயிரைக்கூட நான் கொடுப்பேன்”

“ராதை, உனக்கு உலகம் தெரியவில்லை. எதையும் நம்புகிறாய். ஏமாற்றுபவனுக்குத்தான் இந்த உலகம். ஏமாறுகிறவர்கள் இருக்கிறவரை ஏமாற்றுகிறவனுக்குக்கொண்டாட்டம்தான். ஆனால் ஏமாற்றப் பட்டவர்கள் எல்லாரும் தங்கள் வாழ்வை முடித்துக் கொண்டால், ஏமாற்றுக்காரர்களுக்கு என்றுதான் பாடம் கற்பிப்பது? தீங்கு செய்தவன் உல்லாசமாக வாழ, தீங்கிழைக்கப்பட்டவன் மட்டும் ஏன் தன் வாழ்வை சோகமாக ஆக்கிக்கொள்ளவேண்டும் இதையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால் உலகம் அப்படியிருக்கிறது. நீ ஒன்றும் தெரியாதவள்”

சிவசங்கரம் பிள்ளை கைகழுவிக்கொண்டு எங்கோ வெளியே கிளம்பிவிட்டார்.

நான் ஒன்றும் தெரியாதவளாம். ஒன்றை மட்டும் நான் தெரிந்துகொண்டேன். ஆனால் எதைத் தெரிந்து கொள்ளக்கூடாதோ அதைத் தெரிந்துகொண்டேன்!

என்று இவர் இதை தெரிந்துகொள்ளப்போகிறார்! அன்றுதான் எனக்கு நிம்மதி.

அப்படியே ராதை உறங்கிவிட்டாள்.

✻

ராதை குளித்துவிட்டு, காபி போட்டு எடுத்துக் கொண்டு கூடத்திற்கு வந்தாள். அதற்குள் சிவசங்கரம் பிள்ளை குளித்துவிட்டு, உடை உடுத்திக்கொண்டிருந்தார். ராதை கொடுத்த காபியை வாங்கி சாப்பிட்டு, “ராதை. நான் சிறிது வேலையாக வெளியே போகிறேன் மாலை வருகிறேன்” என்று சொல்லிவிட்டுக் கிளம்பி போய்விட்டார்.

ராதை குடத்தை எடுத்துக்கொண்டு குளத்தை நோக்கி நடந்தாள்.

குளத்தில்இறங்கி தண்ணீர் எடுத்துக்கொண்டிருந்தாள். தூரத்தில் இரண்டுபெண்கள் இவளைக் காண்பித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

அவர்கள் பேச்சு இவள் காதில் விழுந்தது.

காதில் விழவேண்டும் 'என்றுதானே' பேசுகிருர் கள்! அது சிலருக்கு வாழ்க்கையில் ஓர் ரசிப்பு!

"அதோ தண்ணீர் எடுக்கிருளே, ஒருத்தி, அவள் பக்கத்து ஊராம். அவள் சிவசங்கரம்பிள்ளையை கல்யா ணம் செய்துகொள்வதற்கு முன்னமே இவளுக்கு ஒரு காதலன் இருந்தானும். அவன் இவளை விட்டுவிட்டு ஓடிவிட்டானும் இவளுயை சித்திபணத்திற்கு ஆசைப் பட்டு இந்தக் கிழத்திற்குக் கொடுத்திருக்கிறது. இந்த கிழமும் அவள் அழகிலும், இளமையிலும் மயங்கி அவளைக் கல்யாணம் செய்துகொண்டதாம். அவர்கள் போய்விட்டார்கள். ஆனுல் அவர்கள் பேசிய பேச்சு கள் ராதையின் மனதைவிட்டுப் போகவில்லை அவர்கள் தன்னைப்பற்றிப் பேசியதைக்கூட அவள் அவ்வளவு பொருட்படுத்தவில்லை. உண்மையைத்தானே பேசினு கள். ஆனுல் அவருடைய கணவரைப்பற்றி அவர்கள் பேசியபேச்சுகள் — கிழம் என்ருர்கள், மயங்கித் திரு மணம் செய்துகொண்டார் என்ருர்கள். அவர்களுக்கு என்னதெரியும் அவரைப்பற்றி. தெய்வத்தை எப்படித் தூற்றிவிட்டுப்போய்விட்டார்கள் அவள் தெய்வத்தை! அவளால்தானே அந்த தெய்வம் தூற்றப்படுகிறது. இப்போது நம் காதில் விழுந்ததுபோல் அந்த தெய் வத்தின் காதிலும் விழுந்திருக்குமோ? இதையெல் லாம் கேட்டுக்கொண்டும் என் தெய்வம் ஒன்றும் தெரி யாதவர்போல் இருக்கிருரோ!?

உண்மையில் அவர் தெய்வம் இல்லை! தெய்வத்தின் தெய்வம்!!

ராதைக்குத் தலை சுழன்றது; இடுப்பில் இருந்த குடம் நழுவியது—வேரற்ற மாம்போல் சாய்ந்தாள்.

நெஞ்சத்தில் சுமை!
இடுப்பில் சுமை
வயிற்றில் சுமை!!!
எந்த பெண்தான் மயங்கி விழமாட்டாள்.

✻

ராதை கண் விழித்தாள்

தன் கணவர் தன் அருகில் அமர்ந்து விசிறிக் கொண்டிருப்பது தெரிந்தது!

"ராதை இந்தப் பாலைக் கொஞ்சம் சாப்பிடம்மா" இரண்டு முழுங்கு குடித்தாள்.

"ராதை ஒரு சந்தோஷமான செய்தி, நீ இன்னும் கொஞ்சம் நட்களில் தாயாகப் போகிருய்"

ராதை கண்களை மூடிக்கொண்டாள்.

"ராதை, ராதை" என்று அவர் அழைத்தார். ராதை கண்களைத் திறக்கவில்லை.

ராதை மயக்கமாக இருப்பதாக நினைத்து அவர் எழுந்து போய்விட்டார்.

"ஐயோ என்னகொடுமைஇது. எனக்கு குழந்தை பிறக்கப்போகிறதா! நான் தயாகப்போகிறேனு! எவ் வளவு அமைதியாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். அவர் முகத்தில் சிறு சுளிப்புக்கூட இல்லையே. திரு மணம் ஆன நாளிலிருந்து அவர் என்னைத் தொட்டது கூட இல்லை. திருமணத்திற்கு முன்னுல் ஒருவனைக் காதலித்ததையும் அவர் அறிவார். இப்போது நான் கருதறித்திருக்கிறேன். இதையெல்லாம் கோர்வைப் படுத்தி அவர்பார்த்திருக்கமாட்டாரா? இருந்தும் அவர் முகத்தில் எந்த உணர்ச்சியின் சாயலும் இல்லையே! அவருடைய மனத்தையே நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லையே. இவ்வளவு தெரிந்தும் அவர் எப்படித் தாங்கிக்கொண்டிருக்கிருர்? ஏன் தாங்கிக்கொண்டிருக் கிருர்? என் வயிற்றில் வளருவது அவர் வாரிசு அல்ல என்பது தெரியும். தெரிந்தும், எனக்கும் அந்த வாரி சுக்கும் ஏன் அடைக்கலம் கொடுக்கிருர் — அன்பைப் பொழிகிருர். யாரோ விதைத்த நிலத்திற்கு இன்னெரு உழவன் வேலிகட்டி, காவல் காப்பானு? இது நடக் குமா? நம்ப முடியவில்லை, ஆனுல் நடக்கிறதே!

காலம் பறந்தது! ராதை குழந்தையை ஈன்றெடுக் கும் காலமும் வந்தது!

ராதைக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. சேக ரின் முகஜாடைதான் குழந்தைக்கு. ராதா இப்படி நினைக்கக்கூடாது என்றுதான் நினைத்தாள். ஆனுல் அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

சிவசங்கரம்பிள்ளை எப்போதும் போலத்தான் இருந்தார். குழந்தையிடம் கொஞ்சிக்கொண்டுதான் இருந்தார். இதைக் காணும்போது ராதை நெஞ்சமே பிளந்துவிடும்போல் இருக்கும்.

காக்கை குயிலின் முட்டைகளை அடைகாத்து, குயில்குஞ்சுகளைப் பொறிக்கத்தான்செய்கிறது. குயில் குஞ்சுகளும் சிறிதுவளர்ந்து பிறகு, காக்கையை விட்டுப்பறந்து சென்றுவிடுகின்றன. ஆனுல் காக்கைக் குத் தெரியாது தான் அடைகாக்கும் முட்டைகள் குயி லின் முட்டைகள். வெளியே வரப்போவது குயிலின் குஞ்சுகள் என்று! காக்கைகூட, இது குயிலின்முட்டை என்று தெரியாததால்தான் அடைகாக்கிறது! அது பறவை இனம்! ஆனுல் இவரோ எல்லாம் தெரிந்தும் மௌனமாக இருக்கிருர். இவர் நெஞ்சு திடத்தை என் னென்பது! போற்றிப் புகழ்வதா, சந்தேகப்படுவதா, வணங்குவதா?

✻

"ராதே, இரண்டு காபி எடுத்துவா. என் நண் பன் ஒருவன் வந்திருக்கிருன்"

குரல்கேட்டு, குழந்தையைத் தூளியில் போட்டு விட்டு, இரண்டு காபி எடுத்துக்கொண்டு கூடத்திற்கு வந்தாள் ராதை.

உலகம் சுழல்வதுபோல் இருந்தது அவளுக்கு. அவளுக்குப் பக்கத்தில் அமர்ந்திருப்பது. ஆம்...சேகர்.

காபியை வைத்துவிட்டு அவள் உள்ளே போய் விட்டாள்.

"பிள்ளை, என்ன இது? ஏன் அவள் ஓடி விட்டாள்."

"சேகர் சீக்கிரம் காபியைசாப்பிடு, நாம் வெளியே போய் பேசுவோம்"

இருவரும் காபியைக் குடித்துவிட்டு ஆற்றங் கரையை நோக்கி நடந்தார்கள்.

ஆற்றங்கரையில் ஒரு நாவல் மரத்தடியில் அமர்ந் தார்கள்.

சிவசங்கரம்பிள்ளைதான் முதலில் பேச ஆரம் பித்தார்.

"தம்பி, சேகர் நடக்கக்கூடாதது ஒன்று நடந்து விட்டது. நான் அவளை திருமணம் செய்துகொண் டேன்; என்னை மன்னித்துவிடு, என்னுல் அந்த நேரத் தில் இதைத் தவிர வேறென்றும் செய்யமுடியாமற்

போய்விட்டது. நீ பதினைந்து நாட்களில் வந்துவிடுகிறேன், அதுவரையில் ராதாவை நீங்கள்தான் பார்த்துக்கொள்ளவேண்டும். அதாவது சாந்தம்மாள், ராதாவை வேறு யாருக்கும் திருமணம் செய்துகொடுக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். என்று சொல்லிச் சென்றாய். பதினைந்து நாட்களுக்குள் நீயும் வரவில்லை. சிலர் நீ இராணுவத்தில் சேர்ந்துவிட்டதாகச் சொன்னார்கள். சிலர் நீ மலேயாவுக்குச் சென்றுவிட்டதாகச் சொன்னார்கள். நீயும் என்னிடம் எங்கு போகிறாய், எதற்குப் போகிறாய் என்பதையும் சொல்லவில்லை. நீ சொன்ன கெடு முடிந்ததும், எனக்கும் உன் மேல் சந்தேகம் வந்துவிட்டது. ஊரில் பேசிய பேச்சுக்களை நானும் நம்பிவிட்டேன்.''

''பிள்ளை, நான் உங்களிடம் சொல்லாமல் சென்றது உண்மைதான். அதற்குக் காரணம் இருக்கிறது. ராதா, என்னைத் திருமணத்திற்கு வற்புறுத்தியதும் எனக்கு ஓர் எண்ணம் தோன்றியது. சாந்தம்மாளுக்கு வெறும் ஆளான எனக்கு, ராதையைக் கொடுக்க மனம் வராது என்று நான் அறிவேன். அதனால் பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற ஆசைவந்தது. குறுக்குவழியில் இறங்கினால்தான், விரைவில் அதிகப் பணம் திரட்ட முடியும் என்று எனக்கு, 'அறிவுரை' சொன்னார்கள். எப்படியும் எனக்கு ராதையை திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்ற ஆவல்—அதனால் அவர்கள் சொன்ன முறைக்குத் தலையாட்டினேன். பல இலட்ச ரூபாய் பெறுமானமுள்ள 'அபினை' நான் பம்பாய்க்குக் கொண்டு சேர்க்கவேண்டும். அதை ஒழுங்காகச் செய்தால் எனக்குப் பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதாகப் பேச்சு. நானும் சென்றேன். ஆனால் பம்பாயில் நான் கைதுசெய்யப்பட்டேன். என்னுடைய, பூர்விகத்தைக் கேட்டார்கள். நான் ஒன்றும் சொல்லவில்லை. ஒருவருடம் ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை பெற்றேன். தண்டனை முடிந்ததும் இதோ ஓடி வருகிறேன்''

''சேகர், நீ திரும்பிவராததால், நானும் ஊர் பேச்சை நம்பினேன். நீ ராதையை மோசம்செய்து விட்டுப் போனதாக நினைத்தேன். இந்த நேரத்தில், ஊரில் வேறொரு பேச்சும் அடிபட்டது, ராதை கருவுற்றிருக்கிறாள் என்றும், இது தெரிந்து, அவளுக்கும் அவள் சித்திக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டிருக்கிறது என்றும், ராதை தற்கொலை செய்துகொள்ள முயன்று கிணற்றில் விழுந்து காப்பாற்றபட்டாள் என்றும், நான் கேள்விப்பட்டேன். இதைக் கேள்வியுற்றதும் என்னால் அமைதியாய் இருக்கமுடியவில்லை. அவள் கருவுற்றிருக்கிறாள் என்றும், தற்கொலைக்கு முயற்சித்தாள் என்றும் கேள்விப்பட்டதும் உன்னைப் பற்றி எனக்கு ஏற்பட்ட சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டது. ராதை கருவுற்றிருப்பது தெரிந்து அவளை நீ ஏமாற்றி விட்டுப்போய்விட்டாய் என்று நான் நினைத்துக்கொண்டேன். அந்த நேரத்தில் நான் என்ன செய்யமுடியும். நீயே சொல்!''

ராதை, ஒருமுறை தற்கொலைசெய்ய முயன்று தோற்றவள், தான் ஏமாற்றப்பட்டதாக நினைத்துக்கொண்டிருப்பவள். மறுபடியும் எப்படியும் தன் உயிரைப் போக்கிக்கொள்ள அவள் முயற்சி செய்வாள் என்பது உறுதி. நீயும் வரப்போவதில்லை; அதனால் நானே அவளைத் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தேன். என்னை மன்னித்துவிடு!''

போன்: 64153

குறைந்த விலையில் தரமிகுந்த ஜவுளி ரகங்களுக்கு

சம்பந்தம்
டெக்ஸ்டைல்ஸ்

மில், கைத்தறி ஜவுளி வியாபாரம்

91, ஸ்ட்ராஹன்ஸ் ரோடு, சென்னை-12.

“ஐயா, நீங்கள், செய்ததில் ஒரு தவறும் இல்லை. தவறு செய்தவன் நான்தான்”

“சேகர், நான், ராதையைத் திருமணம் செய்து கொள்ளும் முடிவை எடுப்பதற்கு முன், வேறொன்றும் யோசித்தேன். ராதையிடம் உனக்காகக் காத்திருக்கச் சொல்லலாமா என்று கூட நினைத்தேன். நீ வராமல் போய்விட்டால் அந்த அபலையின் வாழ்க்கை என்ன ஆகும். இதையெல்லாம் யோசித்து, பிறகுதான் அவளைத் திருமணம்செய்துகொள்ள முடிவு செய்தேன். ஆனால் சேகர், திருமணத்திற்கு அவள் அவ்வளவு சுலபமாக இசையவில்லை. என்னிடம் உன் உறவைச் சொல்லி, இந்தத் திருமணத்தை நிறுத்திவிடத் துடித்தாள். ஆனால் நான்தான் அவளைப் பேசவிடவில்லை. கட்டாயமாக, அவள் பேச்சுக்கு இடங்கொடாமல் இந்தத் திருமணத்தைமுடித்துவிட்டேன். அவளுடைய நல்வாழ்வை நினைத்தே நான் இந்தத் திருமணத்தை செய்துகொண்டேன். நான் தவறு செய்திருந்தால் என்னை மன்னித்துவிடு.

“பிள்ளை, நீங்கள் செய்ததுதான் சரியான முடிவு. இந்த முடிவை நீங்கள் எடுக்கவில்லையென்றால் அவள் தற்கொலை செய்துகொண்டிருப்பாள்.”

“தம்பி, ஆனால் திருமணம் ஆனநாளில் இருந்து இதுவரை நான் அவளைத் தொட்டதுகூட கிடையாது. இப்போது குழந்தை வேறு பிறந்திருக்கிறது. என்றாவது ஒருநாள் நீ வருவாய் அப்போது அவளை உன்னிடம் ஒப்படைக்கலாம் என்று நினைத்திருந்தேன். அப்படியில்லையென்றால், என் சொத்துகளை குழந்தைக்கு எழுதிவைத்துவிட்டு, எங்காவது சென்றுவிடுவது என்று முடிவு செய்திருந்தேன். குழந்தை பிறப்பதற்கு முன்னமே, என் சொத்துகளை அவள் பேருக்கு எழுதிவைத்துவிட்டுச் செல்வோமா என்றுகூட நினைத்தேன். ஆனால் அதில் ஒரு பெரிய சங்கடம் இருந்தது. நான் அப்படிப் போய்விட்டால் இந்த ஊர் மக்கள் அவளைத் தூற்றுவார்கள். இந்த குழந்தை யாருக்கோ பிறந்தது. அந்தக் கிழவன் எங்கோ ஓடிவிட்டான். அவன் ஓடிப்போன பிறகு இது பிறந்திருப்பதால், இதற்குத் தகப்பன் யாரென்று தெரியவில்லை என்று ஊர் மக்கள் தூற்றுவார்கள். பிறகு என்ன நடக்கும் என்று எதிர்பார்க்கிறாய். மறுபடியும் ராதை, சாவை நோக்கிச் செல்வாள். அவளை எதற்காகத் திருமணம் செய்து கொண்டேனோ அந்தப் புனிதமான காரணத்திற்குப் பயனில்லாமல் போய்விடும். பிறக்கும் குழந்தைக்கு நான்தான் தகப்பன் என்பதை ஊர் மக்களுக்குத்தெரியப்படுத்திவிட்டு நான்மறைந்துவிட்டால், அவளாவது சுகமாக வாழ்வாள் என்று நினைத்து இத்தனை நாள் காத்திருந்தேன். நானே எதிர்பார்க்கவில்லை, நீ வந்துவிட்டாய். என்னை நீ நம்புவாய் என்று நினைக்கிறேன். உன் மனைவிதான் அவள். உன் மகன்தான் அவன். நடுவில் நான் ஒரு போலி. என்னைப்பற்றி மறந்துவிடு. உன் மனைவிக்கும், உன் மகனுக்கும் ஊர் பழி வராமல் பாதுகாத்து உன் கையில் ஒப்படைத்துவிட்டேன். நான் செய்த தவறுக்காக என்னை மன்னித்துவிடு, என் சொத்துக்கள் முழுதும் உன்மகனுக்குதான். இந்தா, அதற்கு அத்தாட்சிப் பத்திரம்.

“ஐயா, நீங்கள் மனித தெய்வம். நண்பனுக்காக ஊர்ப்பழியை ஏற்றீர்கள். ஊர் உங்களைப் பார்த்து கேலி செய்தபோதும் எனக்காக ஒரு திருமணம் செய்து கொண்டீர்கள். என் ராதையை நலமுடன் காத்துவந்தீர்கள். என் மகனுக்கு சொத்து எழுதிவைத்திருக்கிறீர்கள். உங்களுககு எப்படி நான் நன்றி சொல்வது என்றே எனக்குப் புரியவில்லை. “உங்களைப்போல் இலட்சத்தில் ஒருவரை காண்பதுகூட அரிது.”

“சேகர், நீ வீட்டிற்குச் சென்று ராதையிடம் நடந்தவைகளை விளக்கிக் கூறி, அவளை மறுமணத்துக்கு சம்மதிக்கச் சொல். பிறகு நான் வருகிறேன்” என்று சொல்லிவிட்டு சிவசங்கரம் பிள்ளை ஆற்றொமாக நடந்து சென்றுவிட்டார்.

சேகர் வீட்டை அடைந்தான். அவனுக்கு எப்படி ராதையிடம் இதையெல்லாம் சொல்வது என்றே புரியவில்லை. கனவில்கூட நடக்கக்கூடாததெல்லாம் நடந்திருக்கிறது; என்ன செய்வது நடந்துவிட்டதே!

சேகர் வீட்டினுள் எட்டிப் பார்த்தான்.

“ராதை, ராதை.”

ராதை அவன் முன்வந்து நின்றாள். குழந்தையுடன்.

“ராதை, குழந்தையை இப்படிக் கொடு......என் மகனை நான் பார்க்கிறேன்.”

“சீ, உனக்கு வெட்கமாகயில்லை. மகனும் மகன். காதலித்தவளைக் கைவிட்டு ஓடியவன் நீ இன்று இங்கு வந்து என் மகன் என்கிறாய் போ, இங்கிருந்து”

“ராதை. என்னை மன்னித்துவிடு. உன்னை மணம் செய்துகொள்ள வேண்டும் என்ற ஆசையில்தான் நான், குறுக்கு வழியில் பணம் சேர்க்க ஓடினேன். அகப்பட்டுக் கொண்டேன். ஒன்றரை வருடம் சிறையில் இருந்துவிட்டு ஓடிவந்திருக்கிறேன். இங்கு நடந்ததை எல்லாம் சிவசங்கரம்பிள்ளை என்னிடம் சொன்னார். அவர் என்னுடைய உயிருக்கு உயிர்த் தோழர், நான் திரும்பிவராமல் போய்விட்டால், உன்னுடைய பெண்மைக்கு அழிவு ஏற்படுமே — உன்னை நீயே அழித்துக்கொள்வாயே என்று அஞ்சி உன்னை மணம் செய்து கொண்டார். இப்போது நான் வந்ததும் இவ்வளவு கதையையும் என்னிடம் சொல்லி என்னை அனுப்பியிருக்கிறா உன்னையும் என்னையும் வாழச் சொல்லி.”

“சேகர், உனக்கு இதைச் சொல்ல வெட்கமாக இல்லை. நீ ஓடிப்போனதற்குப் பல காரணங்கள் சொல்கிறாய். எது எப்படியிருந்தாலும், நீ என்னைவிட்டு ஓடிப்போயவிட்டாய். என் கதி என்ன ஆவது. அந்த நேரத்தில் என்னை, அவர் திருமணம் செய்துகொண்டார். எனக்கு ஒரு காதலன இருககிறான் என்று முன்னமே தெரிந்தும் அவர் என்னை மணந்துகொண்டார். ஊரார் இழிவுப்பேச்சைத் தாங்கிகொண்டார். இன்னொ

ஓட்டுச் சாவடியில் - ஒரு வினாடி!

காங்கிரசை ஆள அழைத்தீர்களானால், இப்போது கிடைத்திருக்கிற தகவலின்படி 2760 - கோடி ரூபாய்க்குப் புதிய வரிகள் உங்கள் தலை மீது காத்திருக்கிறது!

கசக்கிப் பிழிந்திட அவர்கள் வருகிறார்கள். கொட்டிக் கொடுத்திடத்தக்க நிலையில் ஏழைகள் இல்லை!

முடியுமா என்பதை எண்ணிப் பாருங்கள்! ஓட்டுச் சாவடிக்குப் போகுமுன் எண்ணிப் பாருங்கள்!

ருத்தன் காதலியை, தன் மனைவியாகப் பாவனை செய்து கொண்டார். இன்னொருத்தன் மகனை, ஊருக்காகத் தன் மகனாக ஏற்றுக்கொண்டார். இவ்வளவும் ஏன்? நண்பன் தன்னிடம் சொல்லிச்சென்றானே என்பதற்காக. நண்பனுக்காக, நண்பன் காதலித்த ஓர் அபலைப் பெண்ணின் வாழ்வு சீரழியாமல் இருப்பதற்காக, எவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்திருக்கிறார்! மனிதருள் மாணிக்கம் அவர். அவரே உன்னை இங்கு அனுப்பியிருக்கிறார். நீ, வெட்கமில்லாமல் என்னை அழைக்கிறாய் உன்னுடன் வாழ்வதற்கு! நீ என்னுடன் உடலுறவு கொண்டதின் சின்னம்தான் இந்தக் குழந்தை. இவன் உன் மகன்.

ஆனால் நான் உன் மனைவியில்லை! நான் சிவசங்கரம் பிள்ளையின் மனைவி!

அவர் என் உடலைத் தொட்டதில்லை. உனக்கு வேண்டுமானால் என் உடல் சொந்தமாக இருந்திருக்கலாம் ஒரு காலத்தில்! என் உள்ளம் அவருக்குத்தான் சொந்தம்.

இந்தக் குழந்தை உன் மகன்தான்! உன்னிடமே ஒப்படைக்கிறேன். நான் வருகிறேன்.

ராதை வாசற்படி கடந்துசென்று கொண்டிருந்தாள்.

சேகருக்கு அவளை அழைக்க வாய் வரவில்லை. அவள் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் அவள் எதிர்பார்த்திருந்தாள். இவன் சென்றான்.

இன்று இவன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறான், அவள் சென்று கொண்டிருக்கிறாள்!

ஒரு முடிவு

தாங்கள் நல்லது என்று நினைப்பவை கிடைக்கப் பெறாததாலும், அல்லது பெற்றிருந்தால் இழந்துவிடுவோமே என்ற அச்சத்தினாலும், அல்லது தாங்கள் தீயவை என்று நினைப்பவற்றைப் பொறுத்துக்கொள்ள வேண்டி இருப்பதாலும் மக்கள் துன்பப்படுகிறார்கள். இத்தகைய நம்பிக்கைகளுக்கு ஒரு முடிவுகட்டிவிட்டால் தீயவை யாவும் மறைந்துவிடும்.

அனடோல் பிரான்ஸ்.

அவள் சொன்னது அவ்வளவும் சரியென்று அவனுக்குத் தோன்றியது.

ஏமாற்றிச் சென்றவன் அவன். அன்று அவளை வாழவைத்தது அந்த மனித தெய்வம்—சிவசங்கரம் பிள்ளை. அந்த மனித தெய்வத்தைத் தேடி இன்று அவள் போகிறாள். அவள் செல்வது சரிதான். அவள் போகும் பாதை சரியான பாதைதான். அவளைத் தடுக்க நான் யார்? இப்படித்தான் நினைத்தான் சேகர். குழந்தை இவனைப் பார்த்து அழுதது. குழந்தையை கையில் எடுத்துக் கொண்டான்.

முதல் முதலாக அந்தக் குழந்தை—அந்தப் பிஞ்சு—அவன் இரத்தம் அவனைப் பார்க்கிறது.

அதுகூட அழுகிறது.

அதற்குக்கூட இவன் செய்த செயல் தவறு என்று தெரிகிறதோ!

சேகருக்கு தான் மட்டும் ஏன் வாழவேண்டும் என்று தோன்றிற்று.

அவன் சிந்தித்தான். இந்த குழந்தைக்காக அவன் வாழ்ந்துதான் ஆகவேண்டும்.

அவனால் பிறர்க்கு ஏற்பட்ட கஷ்டங்கள் போதும்.

அவனால்தான், இந்தக் குழந்தை இந்த உலகத்திற்கு வந்தது. அந்தக் குழந்தையை வாழ்விக்க வேண்டியது அவன் பொறுப்புதான்! குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு இரயிலடியை நோக்கி அவன் நடந்தான். சென்னைக்குச் செல்ல அவன் முடிவு செய்து கொண்டான். இரவெல்லாம் அவன் இரயிலில் தூங்கவில்லை. பொழுதும் விடிந்தது. ஏதோ ஒரு ஸ்டேஷனில் ரயில் நின்றது. குழந்தையுடன் இறங்கி காபி சாப்பிட பிளாட்பாரத்தில் நடந்து சென்றான். ஒரு பத்திரிகையும் வாங்கிக்கொண்டான். இரயிலில் வந்து அமர்ந்துகொண்டான். குழந்தையைத் தூங்கச் செய்து விட்டான்.

பத்திரிகையைப் பார்த்தான்.

திடுக்கிட்டான்.

பத்திரிகையின் முதல் பக்கத்தில் இருந்த செய்தி—அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

......இந்த ஊரின் பெரிய பணக்காரர்களில் ஒருவர் இந்த சிவசங்கரம்பிள்ளை. அவர் பிணத்தை ஆற்றில் கண்டெடுத்தனர், ஊர் மக்கள். அந்த சடலத்துடன் அவர் வீட்டுக்குச் சென்றனர். அங்கு மனைவியில்லை. அவர் மனைவியை ஊர் முழுதும் தேடினர். கிடைக்கவில்லை. மறுநாள் காலையில் அதே ஆற்றங்கரையில் சிவசங்கரம்பிள்ளை மனைவியின் சடலத்தையும் கண்டெடுத்தனர். இதிலிருந்து பஞ்சாயத்தார் முடிவு செய்தது என்னவென்றால் கணவன், மனைவி இருவரும் தங்கள் குழந்தையுடன் தற்கொலை செய்து கொண்டிருக்கின்றனர் என்று தெரிகிறது. குழந்தையின் சடலம் கிடைக்கவில்லை. இந்தக் குடும்பத்தின் தற்கொலைக்குக் காரணம் தெரியவில்லை.

செய்தி அத்துடன் நின்றது. சேகர் நினைத்துக் கொண்டான் காரணம் எனக்குத் தெரியும். ஆனால் ஊராருக்குத் தெரிவிக்கக்கூடிய காரணமா இது.

ராதைக்குத் தெரியாமல் சிவசங்கரம்பிள்ளையும், சிவசங்கரம்பிள்ளைக்குத் தெரியாமல் ராதாவும் உயிரை விட்டிருக்கிறார்கள்! என்ன வேடிக்கை!

திருமணமும், ஒருவரை ஒருவர் தெரியாமல்தான் செய்து கொண்டார்கள்—சாவிலும் அப்படியேதான்! இந்த செய்தி அவன் நெஞ்சத்தைப் பிளந்தது!

ஊரைப் பொறுத்தவரையில் சிவசங்கரம்பிள்ளை' ராதை தம்பதிகளின் குழந்தை அவர்களுடன் இறந்து விட்டது!

என் குழந்தைதான் இப்போது இருக்கிறது! குனிந்து குழந்தையைப் பார்த்தான். குழந்தை சிரித்தது—தூக்கத்தில். எப்போதும் இந்தச் சிரிப்பு, இந்த குழந்தையின் முகத்தில் இருக்கும்படி வைத்திருப்பதுதான் என் வாழ்க்கையின் லட்சியம் என்ற உறுதி எடுத்துக் கொண்டான்!

❀

ஏஜண்டுகள் தேவை

மலையாள வைத்தியசாலை

"கிஸ்கோ" (ஜில்லா ஏஜண்ட்) மலையாள பார்மஸியில் தயாராகும் பவர்கூடிய ஆசவ அரிஷ்டங்கள் விற்பனை செய்ய எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

எங்களது ஏஜண்டுகள்:

K. M. சாகுல்ஹமீது, 95, அபிபுல்லாரோடு, சென்னை-17
N. K. C. சண்முகம் அண் கோ.,
அங்காளம்மன் கோயில் தெரு, கோயம்புத்தூர்-1
K. M. சம்சுதீன், 28, கிருஷ்ணாபுரம், மதுரை,
R. M. A. கோபால் அண் பிரதர்ஸ்
ரெங்கராஜா தியேட்டர் சமீபம், பழனி.
N. மகாசாமி,
விசாலாட்சி தியேட்டர் சமீபம், தாராபுரம்.
N. சாகுல்அமீது, மெயின்ரோடு, பார்த்தபனூர்.
S. கந்தசாமி, என். கோவில்பட்டி, நத்தம்.
D. ரெங்கநாதன், நல்லமநாய்க்கன்பட்டி, தாராபுரம்.
K. சாகுல்ஹமீது, டர்னபுரம், கொடைக்கானல்.
இராஜகோபால், கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்கு அருகில்
சண்முக முதலியார், ஒட்டன்சத்திரம். [மணப்பாறை.

உடனே விண்ணப்பிக்க:

State Sole Agent: **சுலைமான்**
மலையாள வைத்தியசாலை,
நெ. 145, R. S. ரோடு, :: திண்டுக்கல்-3



முன் கூற்று:

அகிலத்து வரலாற்று வீதியிலே-அடித்துவந்த புதுவெள்ளம் அலெக்சாந்தர். அது அழித்துவந்த பேரரசுகளோ அநேகமநேகம். குருதிக் கோலமும், கோதையர் ஓலமும், கொய்த தலைகளின் தோரணமும் அலங்கரிக்க, அந்தக் கொடும்புலி குமுறிச் சென்ற வழிநெடுகக் குனிந்த தலையினராய், கூப்பிய கரத்தினராய் கோமக்கள் பலர் முடிகழற்றி, அடியொற்றி, முழந்தாளை முத்தமிட்டார் அவர் பிழைத்திட்டார். அதற்கு மறுத்திட்டார், படுகளத்தில் மரித்திட்டார் என்ற, செருமுனைச் சேதி இந்தியாவின் மறுமுனை வரை எதிரொலித்தது; இமயத்தின் அடிவாரத்தில் பல அரசுகள் கிடுகிடுத்தன!

இந்த நேரத்திலேதான்-

குடிகெடுத்த கோடரியாம் ஹம்பி என்னும் குறுநிலமன்னன் விடை கொடுத்தான் பொது எதிரிக்கு-எப்படி? "விருந்துக்கு வா" என்று! பருந்துக்கு வாய்த்த இரையாய்ப் பகைவன் விரைந்துவந்தான் இங்கே! மருந்துக்கும் இல்லையோ எதிர்ப்பு என்று மறவர் வருந்துகின்ற நேரத்தில்-

எதிர்ந்தான் புருசோத்தமன் எரிமலையாய். புரிந்தான் போர் பொங்குகின்ற கடலாய்: அதனால் தெரிந்தான் அலெக்சாந்தர், திறல்மிகு பாரதத்தின் தேனூர் வீரச்சுவையை!

அந்த நாளில்-

வான் எனும் வைர எழுத்தாணியை வண்ணக் குழம்பாய் இரத்தத்திலே துவைத்து, தோள் எனும் துலங்கும் ஏட்டிலே, தூரத்து நாட்டில் தீட்டிச் சென்ற வீரத்துச் சரித்திரத்திலே அமைந்த ஒரு கற்பனையே இந்த நாடகம்!

காட்சி 1.

ஹம்பியின் அரண்மனை

[நிலைக்கண்ணாடியின்முன்நின்று ஹம்பி மன்னன் நிறைவேற்றப் போகும் தன் திட்டத்தைப் பற்றிப் பேசிக் களிப்படைகிறான்]

ஹம்பி:- (தனிமொழி) காத்திருந்தாயே ஹம்பி மன்னா! உன் கனவுகள் நனவாகும் காலம் வந்துவிட்டது! சின்னஞ்சிறு குறுகிய நாட்டிலே சிறைப்பட்டுக்கிடக்கும் சிம்புட் பறவையே, சிறகை விரி! ஜீலத்துச் சோலை வரை சிந்து சமவெளிச் சாலையெல்லாம் சிறகடித்துப் பறக்கின்ற சிந்தை குளிரும் சேதியொன்று வந்தது கேள்! வருகிறான் அலெக்சாந்தர், வணங்காமுடிகளின் தலைமேல் நடந்து; வாளோச்சும் விசையினிலே இந்த வைய முழுவதும் அவன் காலடி பட்டு மன்னாதி மன்னரெல்லாம்நசுங்கவேண்டும். அந்தப் பொசுங்கிய சாம்பல் மேட்டிலே ஹம்பியின் புதுப் பேரரசு பூத்துக் குலுங்க வேண்டும். வளமனையிலே வாழ வேண்டுமானால், வையமெல்லாம் கட்டி ஆளவேண்டுமானால், வருகிறான் அலெக்சாந்தர் வணங்கா முடிகளின் தலைமேல் நடந்து. வாளையும் வேலையும் தூக்கி எறிந்துவிட்டு ஓடு; வரலாற்று வாழ்த்துப்பா பாடு!

அமைச்சன்:- (உள்ளே வந்து கொண்டே) அரசே! அலெக்சாந்தர் தன் படையொடு நம் எல்லைக்குள் புகுந்துவிட்டான்.

ஹம்பி: அப்படியா? வரட்டும். வானத்துச் சந்திரனைப்பழிக்கும் வையத்துச் "சுந்தரிகளைக்" கொண்ட வனிதையர் படையொன்றைக் தயார் செய்! வரலாற்றிலேயே காணமுடியாத "புதுமையான போர் முறை.

அமை:- அழகிகளுக்கும் அலெக்சாந்தர் படையெடுப்புக்கும் என்ன தொடர்பு இருக்கிறது?

ஹம்பி:- நிறைய இருக்கிறது! அலெக்சாந்தர் ஓர் அழகுவிரும்பி அது மட்டுமல்ல, அவனது வீரர்கள் தங்களது அருமை மனைவியரைப் பிரிந்து ஆண்டு பல ஆகின்றன. யுத்த வெறியிலே அத்தனையையும் மறந்திருக்கிறார்கள். அந்தச் சித்தம் தெளிய வைக்க சித்துவேலை வித்தைகள் வேண்டாம்! சிங்காரிகள் எனக்குத் தேவை!

அமை:- பேயும் அஞ்சும் அந்தப் போர் வீரர்களைப் பெண்களால் என்ன செய்ய முடியும்?

ஹம்பி:- என்ன செய்ய முடியாது என்று கேள்! காதலைக் களமாக்கி அங்கே கட்டழகைத் தேராக்கி, அதற்குக் காமனைச் சாரதியாக்கி, விழியை வேலாக்கிச் சுழற்றி, வியன் புருவத்தை வில்லாக்கி வளைத்து, முத்தத்தை முரசாக்கி முழக்கி, முத்துப்போன்ற முறுவலார் மோகத்தைப்போராக்கி பொருதி விட்டால் முடி மன்னரையும் குரங்காக்கி ஆட்டிடுவார்!

அமை:- ஓ! அந்தப்புர அரசியலைச் சொல்லுகிறீரா? அதற்குத்தான் சிந்து நதிப்புறமுண்டே! சுந்தரிகளுக்கா பஞ்சம்?

ஹம்பி:- சிங்காரிகள் என்றால் சிரித்தால் கிறுக்கு வரவேண்டும்

பெய்யாத மேகமா, அல்லது கூந்தலா? கொய்யாத கனியா, அல்லது கன்னமா? எய்யாத அம்பா? அல்லது விழியா? ஈ மொய்யாத தேனா அல்லது மொழியா? சிப்பி ஈனாத முத்தா அல்லது பல்லா? சிற்பி செய்யாத சிலையா அல்லது இவள் சிங்காரியா? என்று சித்தம் மயக்கும் கொத்துமலர் கோதையரைத் தயார் செய்!

அமை:- வெஞ்சமர் நோக்கி வருகின்ற வீரன் அலெக்சாந்தர் மஞ்சணைக்கு வரவேண்டுமே?

ஹம்பி:- வஞ்சனைக்குப் பெயர் போனவன் நான். மஞ்சணை என்ன? மரண வாயிலுக்கே அழைத்து வரமுடியும்! அமைச்சரே, இதை அறிவீரா? அலெக்சாந்தர் வெஞ்சமர் வீரனாக வரவில்லை. நமது அந்தப்புரத்துக்கு விருந்தினனாக வருகிறான். ஆகவேதான் சொல்லுகிறேன். ஆரத்தி எடுத்த அழகிகள் தயாராகட்டும். அந்தப்புரமெல்லாம் அம்சதூளிகா மஞ்சமாகட்டும்; பாசறையெல்லாம் பாவையர் ஆடிடும் பள்ளியறையாகட்டும்!

வரும்போது கேளுங்கள்

கோடி கோடியாகப் பொது மக்களது வரிப் பணம் நட்டமாகி இருக்கிறது!

மாநிலத்துக்கு மாநிலம் ஊழல் குற்றச் சாட்டுகள் மிகுந்துள்ளது!

மக்கள் நலத்தைக் காட்டிலும் பதவிநலம் பேணப்பட்டுள்ளது!

திறமைக் குறைவு காரணமாக மக்கள் பட்டினிச்சாவுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்!

மொழியுரிமை கோரியதற்காகத் தமிழ்நாடெங்கும் துப்பாக்கிச் சூடு!

விநியோகச் சீர்கேட்டால் நாடெங்கும் பசி, பஞ்சம், பட்டினி!

நிறைவேற்றப் படாதிருக்கும் வெறும் வாக்குறுதிகளால் வஞ்சிக்கப்பட்டுள்ள நிலைமை!

உரிமைகள் நசுக்கப்பட்டுள்ளன; உணர்வுகள் ஒடுக்கப்பட்டுள்ளன!

ஏனென்று கேட்க வேண்டாமா!

இனி நீங்கள் வேண்டாம் என்று சொல்லவேண்டாமா?

காட்சி 2
விருந்து மண்டபம்

அலெக்சாந்தர்:- ஹம்பி! வெஞ்சமரிலே உம்மை நாம் வீரனாகச் சந்திப்போம் என்றுதான் எண்ணியிருந்தோம். ஆனால் இப்பொழுது விருந்து மண்டபத்திலே தோழனாகச் சந்தித்தோம்.

ஹம்பி:- வந்தாரை வாழ்த்தி வரவேற்காது வாள் சுழற்றி எதிர்ப்பது இந்திய நாட்டு விருந்தோம்பலுக்கே இழுக்கல்லவா?

அலெக்:- மல்லாடிப் பழக்கமே அன்றி நமக்குச் சொல்லாடிப் பழக்கமில்லை. சுருங்கச் சொல்லி விடுகிறேன். எம்மை நீர் இந்தியாவின் ஏகச் சக்கரவர்த்தியாக ஏற்றுக்கொள்கிறீரா?

ஹம்பி:- ஏற்றுக்கொள்வது நான் மட்டும் அல்ல; இந்தியப் பேரரசர் அனைவருமே ஏற்றுக்கொண்டாக வேண்டும். இந்தக் குறிக்கோளை நிறைவேற்ற அலெக்சாந்தர் ஏறிச்செல்லும் குதிரைகளைத்துப் போகுமேயானால் ஹம்பி குனிந்து தூக்கிச் செல்லத் தயார்! ஆம். அலெக்சாந்தரின் வாள் முனையிலே அனைத்திந்தியப் பேரரசு ஒன்று உருவாக வேண்டும்.

அலெக்:- அது நிறைவேறுமானால், அந்தப் பேரரசின் அரசுக் கட்டிலில் அலெக்சாந்தரின் நிழலாய் அமர்வான் ஹம்பி.

ஹம்பி:- அது நிறைவேறுமல் என்ன? அடித்துவரும் வெள்ளத்தை அணைபோட்டுத் தடுக்கும் ஆற்றல் எவருக்குண்டு?

அலெக்:- ஆம். வேலுக்கும் வாளுக்கும் வேலைதராது வேந்தர் பலர் எமக்கு வெற்றி மாலை சூட்டினூர் —விருந்து படைத்தார் ஆனால் வேடிக்கையிலும் கேளிக்கையிலும் எனது வீரர்கள் கோழைகளாகிக் கொண்டிருக்கிறார்கள்; வேல்விழியாரின் மடியிலே அவர்களின் வெற்றிக் கனவுகள் கலைந்து கொண்டிருக்கின்றன! வீரப்போதை தெளிந்துகொண்டிருக்கிறது! வீட்டு எண்ணம் அவர்களைவாட்டுகிறதாம். வெஞ்சமர் இனி வேண்டாம், விரிமலர்ப் பஞ்சணையில் மனைவி காத்துக்கிடப்பாள் என்கிறார் வீரர். வில்லின் நாணிலே விளையாடிக் களைத்துப்போன விரல்கள் வீணையின் நரம்புகளை மீட்டிடத் துடிக்கின்றன! இந்த நிலையில் வேங்கைநிகர் மன்னனும் புருசோத்தமன் வீறுகொண்டு எதிர்ப்பானே என்று நாம் யோசிக்கிறோம்.

ஹம்பி:- புருசோத்தமன் ஒரு பூனை. அவனைப் புலி என்று அஞ்சுகிறீர்? இடியோசை கேட்ட நாகம்போல உமது பெயரைக் கேட்டுப் பதுங்கிக் கிடக்கிறான் அவன்!

அலெக்:- புலி பதுங்குகிறது என்றால் பயந்தல்ல, பாய்வதற்கு!

ஹம்பி:- பாய்ந்தாலென்ன? எரிகின்ற நெருப்புக்கு எண்ணெய் வார்ப்பதுபோல அலெக்சாந்தரின் வீரத்தோடு ஹம்பியின் சூழ்ச்சியும் சேர்ந்துவிட்டால்— எதிரிக்கு வீழ்ச்சி என்றுகானே பொருள்? அவனது போர்த் தந்திரங்கள் எல்லாம் எங்களுக்கு மனப்பாடம்!

அலெக்:- புருசோத்தமன் போர்முறை தெரிந்துவிட்டால், அவனைப் புறங்காண்பது எளிது! புருசோத்தமன் அவைக்கு இப்போதே ஒரு போர்த் தூது அனுப்புகிறேன்!

காட்சி 3
புருசோத்தமன் கொலுமண்டபம்

புருசோத்தமன்:- யார் நீ?

போர்த்தூதுவன்:- நீ யார்? என்று உணர்த்த வந்தவன்!

புரு:- (சினத்துடன்) மரியாதை...!

தூது:- கொடுத்துப் பெறுவது!

புரு:- கொடுக்காவிட்டால்...?

தூது:- கிடைக்காது!

புரு:- புருசோத்தமன் ஆற்றல் புரியாமல் பேசுகிறாய்...!

தூது:- அலெக்சாந்தரின் ஆற்றல் அறியாமல் பேசுகிறாய்?

புரு:- அப்படி என்று ?

தூது:- அலெக்சாந்தரின் ஆணை மேற்கொண்டு வந்த ஹம்பி நான். (வேடத்தைக் கலைக்கிறான்)

புரு:- (ஏளனமாக) ஓ! நீரா? வருக...... வருக ... அதிக வெறியனை பரதத்திற்குள் ஆரத்தி எடுத்து அழைத்து வந்த வீராதி வீரவே வருக! வருக! உதைக்க வந்த காலை முத்தமிடவும் உமிழ வந்த வாயை புகழ்ந்து பாடவும் ஒப்பரிய நாட்டிலே தப்பிப்

பிறந்தவரே, அமர்க! அமர்க! அனைவரும் நலமோ? அறுபது மனைவியர் நலமோ?......அந்தப் புரத்தைத் தன் சொந்தப்புரமாக்கிக் கொண்ட அலெக்சாந்தர் நலமோ?......முடி நலமோ?...... முதுகு நலமோ?...

ஹம்பி:- புருசோத்தமா! பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு, வெறுப்பின் எல்லைக்கே என்னை நீ தள்ளாதே; விபரீத முடிவை நீ அணைத்துக்கொள்ளாதே!

புரு:- முழுக்க நனைந்த பின்னே முக்காடு எதற்குப் போட்டு வந்தீர்? மூடிமறைவது பெண்களின் பழக்கமாயிற்றே வீரரே உமக்கு ஏன் இந்த வேடம்?

ஹம்பி:- வீரம் நீ நேற்றுக் கற்றுக்கொண்ட பாடம்! மரியாதை என்றால் "விலை என்ன" என்று கேட்கின்ற புரியாத போதையிலே இருக்கின்ற புருசோத்தமனே! வீரம் மானம் — அவை என் பிறவிக்குணம்! பரம்பரைச் சொத்து!

புரு:- வீரம் மானம்—என்ற சொத்தின் மொத்த வியாபாரியே! விற்பனைக்குத் தயாரா? வீரத்தின் பேரம் எப்படி? விலை என்ன தருவதாகச் சொன்னான்? பொன் தருவானோ?-அல்லது புருசோத்தமன் மண் தருவானோ? என்ன தருவதாகச் சொன்னான் அந்த மாசிடோனியா மன்னன்?

ஹம்பி:- வாய்வீச்சென்றால் வெல்லலாம் நீ......ஆனால் வருகின்றவனோ வாள்வீச்சுக்காரன். வீரனுக்கு வாள் பேசும், தோள் பேசும், வெறும் வாய்பேசாது!

புரு:- உள்ளத்தில் நெருப்புண்டானால் உரைக்கின்ற சொல்லிலே பொறியுண்டாம்!

ஹம்பி:- உன்னை நான் எச்சரிக்கிறேன். உனது வீரர்களை அவனது வேலோடு பறந்துவரும் கழுகுகளுக்கு விருந்தாக்காதே!

புரு:- காளையரை நான் களத்திலே கழுகுகளுக்கு விருந்திடுகிறேன். ஆனால் நீ போய் உன் போர்வீரர்களின் பொதி உடலை வளர்த்துப் புதை குழிப் புழுக்களுக்கு விருந்திடு, ஆறிலும் சாவு, நூறிலும் சாவு! நோயால் சாவு, நொடியால் சாவு. ஆனால் வீரர் விரும்புவது வெற்றுச் சாவல்ல, வெஞ்சமரிலே போராடி அணைகின்ற வீரச்சாவு!

ஹம்பி:- விஷமுண்டால் கொல்லுமென்று தெரிந்தும் அதை உண்பவன் முட்டாள்!

புரு:- மரண வாசலிலேதான் மானம் கிடைக்குமெனத் தெரிந்தும் அந்த மரண மாளிகையை நெருங்க அஞ்சுபவன் கோழை!

ஹம்பி:- சாகத்துணிந்துவிட்டாய்; இனி உனக்குச்சமுத்திரம் முழங்கால் மட்டும்தான்!

புரு:- வீரன் வாழ்விலே ஒருமுறைதான் சாகிறான், ஆனால் வீணனும் கோழையும் வேளைக்கு வேளை சாகின்றார்!

ஹம்பி:- இனிப் பேசிப் பயனில்லை. இதோ, போர்த்தூது, உன்னைப் பொறுத்தவரையில் இது மரணத் தூதும்கூட!

புரு:- துரோகத்திற்குத் தூதுநடந்தவனே! அதை நீயே படி!

ஹம்பி,- (படிக்கிறான்) வானத்திலே பல ஒளிச்சுடராம்; இருந்தாலும் வானுளும் சுடர் சூரியன் ஒன்றே பூமியில் பல சிற்றரசாம்—இருந்தாலும் புவியாளும் அரசர் அலெக்சாந்தர் ஒருவரே! இதை ஒத்துக்கொண்டு என் கல்லடியில் வாழ விரும்புகிறாயா? அல்லது மறுத்து என் வாளடியில் மாளவிரும்புகிறாயா? இரண்டில் ஒன்று! இப்படிக்கு, மன்னர் மன்னன்.

புரு:- மன்னர் மன்னன்! யாருக்கு மன்னன் இவன்? நெருப்புடன் போர் கொடுத்திருக்கிறது விட்டிற்பூச்சி! வெள்ளாடுகளை அழித்துப் பழகிய வேங்கை வேழத்தோடு போராட வந்திருக்கிறது! சிறுத்தையைக் கண்டு சிறுநரிகள் ஒளியலாம், ஆனால் சிங்கம் அஞ்சாது! வேங்கையின் வாலை மிதித்து விளையாடுகிறான் விழியற்ற குருடன்!

ஹம்பி:- வீணான வாய்ப்பந்தல்! விடையென்ன சொல்லுகிறாய்?

புரு:- வீரம் எங்கள் மூச்சு' வெஞ்சமர் எங்கள் விளையாட்டு; வெங்கொடுமை சாக்காட்டில் விளையாடும் வெற்றித்தோள் எங்கள் தோள்கள், என்று போய்ச் சொல்லடா சொல்! வாள்முனைக்குத்தோள்காட்டும் வைர நெஞ்சு கொண்டோர் இந்தத் தேன் கொடுக்கைக் கண்டு திக்கிட மாட்டார், என்று போய்ச் சொல்லடா சொல்!! கூற்றுடன்று மேல்வரினும் கூடியெதிர்த்து நிற்கும் ஆற்றல்கொண்ட படையார், தோற்றோடார்; தொடை நடுங்கார், தொகைதொகையாகப் படை வரினும் துன்னிடும் வேல், தாள் தாள்தான் மாற்றாரின் படை என்று போய் சொல்லடா சொல்!!

ஹம்பி;- உமக்கு எமது அனுதாபங்கள்! கடைசி வணக்கம், போய் வருகிறேன்!

[ஹம்பி போய் மறைகிறான்]

புரு:- வீழ்ச்சியுற்ற பாரதத்தின் வேங்கை நிகர் மறவர்களே! எழுச்சியுகம் காண 'ஈட்டி இங்கே! எதிரி எங்கே?' என்று கிளம்பி வாருங்கள்! வீரம் விளம்பி வாருங்கள்! விலங்கிட வந்த வேற்று நாட்டான் கலங்கிட, வீரம் துலங்கிட வேலெங்கே? வாளெங்கே? வெற்றித் தோளெங்கே? இந்திய மானத்தை அடகு வைத்து இங்கே சிலர் பரணி பாடினார். இழந்த மானத்தைத் திருப்ப நாம் பரணி பாடுவோம்! குமுறி வரும் வெள்ளமாம் அலெக்சாந்தர், அதைக் குலங்கெடுக்கும் குணம் கொண்டோரின் பிணங்கொண்டு அணையிட்டு, கொய்த தலைகள் கரைகளாக, குருதி ஆற்றைக் குறிஞ்சி சிரிக்கும் ஜீலமெல்லாம் பாய்ச்சி, குங்குமக் கோலமிட்டு அழகு பார்ப்போம்! நீர்க்கோல வாழ்வு நெடிது நில்லாது; போர்க்கோலம் பூண்டு, புரட்சிப் பண்ணமைத்துப் போர்ப்பரணி பாடிப் புறப்படுவீர்!

சிரித்தது, வஞ்சம் சிரித்தது, சிறுத்தையே சீறி வா! வந்தது பகை! வந்தது, கொந்தளிக்கும் எரி

வழக்கிலில்லை

புதிய கருத்துக்கள் எப்பொழுதும் சந்தேகக் கண்கொண்டே பார்க்கப்படுகின்றன- எதிர்க்கப்படுகின்றன. காரணம் அவை ஏற்கனவே வழக்கிலில்லை என்பதுதான்.

—ஜான்லாக்

மலேயே குமுறி வா! மானம் அளித்திடும் சாக்காடு, நமக்கு மாதர் களித்திடும் பூக்காடு!!

பாசறை திறக்கட்டும்! படை கிளம் பட்டும்! பறை முழங்கட்டும்! மண்ணதிர விண்ணதிர, மாற்ரு ரின் நெஞ்சமெல்லாம் அதிர முழங்கட்டும்!

காட்சி 4.

[இருள் கோலோச்சும் இரவு. எங்கும் அமைதி. அந்த அமைதியைக் கலேத்துக்கொண்டு ஜீலம் நதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. அந்த வெள்ளத்தைக் கடந்து வருகிறதே அந்த உருவம் யார்? அதோ, அந்தக் கரையில் காவல் நிற்கும் புருசோத்தமரின் வீரர்கள் அதைக் கவனித்துவிட்டார்கள். அந்த உருவம் தப்பி ஓடுகிறது. வீரர்கள் விரட்டுகிருர்கள் ஓடி வரும் அந்த உருவம் ஒரு குடிசைக்குள் நுழைகிறது. அங்கே ஒரு பெண், வந்தவனேப் பார்த்துத் திகைத்து நிற்கிருள்]

பெண்:- யார் நீ?

ஒற்றன்:- அம்மா என்னேக் காப்பாற்றுங்கள்! வீரர்கள் என்னே விரட்டி வருகிருர்கள்.

பெண்,- அப்படியானுல் நீ எதிரியின் ஒற்றனு?

ஒற்றன்:- என்னேக் காப்பாற்றுங்கள்! இங்கு நான் ஒளிந்து கொள்கிறேன். உங்கள் காலில்விழுந்து கேட்டுக் கொள்கிறேன். என் உயிரைக் காப்பாற்றுங்கள்! (கதவு தட்டப்படுகிறது. பெண் கதவைத் திறந்து விடுகிருள். வேலோடு வீரர்கள் உள் நுழைந்து தேடுகிருர்கள். கட்டிலில் போர்த்திப் படுத்திருக்கும் அந்தக் கிரேக்க ஒற்றனேக் கண்டு கொள்கிருர்கள்!)

வீரன்:- இங்கே படுத்திருப்பது யார்?

பெண்:- என் கணவர் காய்ச்சலில் படுத்திருக்கிருர்!

வீரன்:- ஆற்றைத் தாண்டி ஒரு கிரேக்க ஒற்றன் ஓடிவந்தான். அவன் இங்கு வரவில்லேயா?

பெண்:- இல்லே. நான் பார்க்க வில்லே! (வீரர்கள் போய்விடுகிருர்கள்)

ஒற்றன்:- அம்மா என்னேக் காப்பாற்றிய நீங்கள் என் தெய்வம். இந்த நன்றியை நான் என்றும் மறக்க மாட்டேன்.

பெண்:- எதிரியின் வாய் நன்றி எனக்குத் தேவை இல்லே. என் கண் முன்னுல் நிற்காதே! இப்பொழுதே ஓடிப்போ! (ஒற்றன் ஓடி மறைகிருன்)

காட்சி 5.

[அன்றிரவு விடிகிறது. புருசோத்தமன் படை கிரேக்க நாட்டுப் படையை எதிர்த்து மோதுகிறது. கடுமையான போர்-கடைசியில் புருசோத்தமன் கைது செய்யப்படுகிருன்.]

[போர்க்களம் நீதிமன்றமாகிறது. அங்கே பெருமையோடு வீற்றிருக்கிருன் அலெக்சாந்தர். அவன் முன் சிறகொடிந்த பறவைபோல இழுத்து வரப்படுகிருன் சிறைப்பட்ட புருசோத்தமன்.]

அலெக்சாந்தர்:- புருசோத்தமா! இப்பொழுது புரிகிறதா, நீ யார் என்று?

தந்தி: மெட்டல் ஒர்க்ஸ்

தொலேபேசி எண்: 221

தென்னகத்தின் தனிச்சிறப்புப் பெற்ற காஞ்சியில்

நீடித்த உழைப்பும் சிறந்த வேலேப்பாடும் கொண்ட

செப்பு பித்தளே பாத்திரங்களுக்கு

காஞ்சிபுரம் பாத்திர தொழிலாளர் கூட்டுறவு சங்கம்

437, காந்தி ரோடு — காஞ்சிபுரம்.

பங்குத் தொகை	ரூ.	32,007-00
தொழில் மூலதனம்	ரூ.	94,443-00

மொத்த உறுப்பினர்கள்: 37

வருடவாரி நிகர லாபங்கள்

1960-61	ரூ.	9,800-00
1961-62	ரூ.	13,372-00
1962-63	ரூ.	7,079-00
1963-64	ரூ.	11,217-00
1964-65	ரூ.	19,991-00

1965-66

கூலி வினியோகம்	உற்பத்தி	விற்பனே
ரூ. 41,473-00	ரூ. 3,54,242-00	ரூ. 3,82,364

காரியதரிசி: T. M. ஸ்ரீவிஜயபாலன்

தலேவர்; K. S. பார்த்தசாரதி

புரு:- புரிகிறது-மானத்திற்காகப் போராடி நிற்கின்ற ஒரு மன்னன்!

அலெக்:- இல்லை. மகுடம் இழந்து நிற்கின்ற ஒரு கைதி! — மன்னிப்புக் கேட்டால்—

புரு:- மன்னிப்புக் கேட்க வேண்டியது குற்றவாளி!

அலெக்;- அலெக்சாந்தரின் ஆணைக்கு அடிபணிய மறுத்தாய் அது உன் குற்றம்!

புரு:- அடிமைத் தளையை முறித்தெறியப் போராடினேன்-அது என் உரிமை!

அலெக்:- உன்னைப் பொறுத்த வரையில் அது உரிமையாகலாம். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் அது குற்றம்! இந்த நீதி என்னைப் பொறுத்தது. இங்கு என் குரல் சட்டம்! கொண்ட முடிவு நீதி! எனவே கூறுகிறேன் நீ செய்தது குற்றம்!

புரு: துரோகம் நீதியானால்-அங்கே நேர்மை குற்றமாகும்! பொய்மை நீதியானால்-அங்கே வாய்மை குற்றமாகும்! கொள்ளை நீதியானால்-அங்கே பாதுகாப்பு குற்றமாகும்! காமம் நீதியானால்—அங்கே கற்பும் குற்றமாகும்! எனவே, எதேச்சாதிகாரம் நீதியானால் இங்கே உரிமைப்போர் குற்றந்தான்!

அலெக்:- அந்த குற்றத்துக்காக உன்னை நான் எப்படி நடத்த வேண்டும்?

புரு:- மன்னனாக!

அலெக்:- பிடியிலே அகப்பட்ட வெள்ளாடு பிளந்த வாயோடு காத்திருக்கிற வேங்கைக்கு விடுத்ததாம் வேண்டுகோள், "உண்ணாவிரதம் இரு' என்று—இப்படி ஒரு வேடிக்கையை வீர வரலாறு இன்றுதான் முதல் முறையாகச் சந்திக்கிறது. இருப்பினும் உன் வீரத்தையும் துணிவையும் பாராட்டுகிறேன்!

புரு:- என்னைப் பாராட்ட நீ யார்? வீரத்திற்குப் பாராட்டு வீரன் தான் தரவேண்டும்!

அலெக்:- (சினமுற்று) சிங்க ஏறு நான்! சிம்மாசனத் தூங்கிகள் எல்லாம் என் காலடியில் செம்மறியாடுகள்! செக்கர் வானத்திலே பவனி வரும் செங்கதிரோன்போல், செங்குருதி ஆற்றிலே நீந்துபவன் நான்! விழித்தால் எதிரிகள் நாடு சாம்பல்! வேல் சுழன்றுவிட்டதென்றால், வேற்றார் தலை சுழன்றுவிட்டதென்றுதான் பொருள்! என் வெற்றிப் பண்பாடி வருகின்ற என்னைப் பார்க்கிலும் வீரன் எங்கே இருக்கிறான்?

புரு:- வீரம் வேறு, வெற்றி வேறு! வீரத்திற்குத் துணை வீரம் ஒன்றே! ஆனால் வெற்றிக்குத் துணை வருவது வீரம் மட்டுமல்ல! சூது, வஞ்சம், சூழ்ச்சி, கோழைத்தனம் எல்லாம்.

அலெக்;- கோழை யார்?

புரு:- என்னையா கேட்கிறாய்? விடியட்டும் போருக்கு என்று வேலை குறித்துவிட்டு, இருட்டிலேயே—எதிரிகளுக்குச் சொல்லாமலேயே,—திருட்டுத் தனமாய்க் கடந்து வந்தாயே—அந்தக் காட்டாற்று வெள்ளத்தைக் கேட்டுப்பார்—கோழை யாரென்று சொல்லும்! எதிர்த்தோனுக்கு வேல் கொடுத்துப் போரிடுவது எங்கள் மரபு—ஆனால் இருக்கின்ற படையைப் பறிக்கின்ற முறையில் எந்தக் குலம்கெடுப்பானை விட்டுக்கொள்ளையிட சொன்னாயா அவனையே கேட்டுப்பார்-கோழையாரென்று சொல்லுவான்! வேழத்தைக் களத்திலே வீழ்த்திப் பார்ப்பது தான் வீர இலக்கணம்!—ஆனால் வேலெடுத்துப் போர் தொடுக்காமல் வேழம் கட்டியிருந்த கொட்டிலுக்குத் தீமூட்டினாயே—அந்தத் தீவட்டியைக் கேட்டுப் பார்—கோழை யாரென்று தெரியும்!

அலெக்:- தோற்றவன் வாயிலே தொள்ளாயிரம் சாக்காம்! எப்படியோ வென்றவன் நான், வீழ்ந்தவன் நீ! வாழ வேண்டுமானால் வணங்குவது உனக்குக் கிடைத்த வாய்ப்பு!

புரு:-வாளொடு வாள், தோளொடு தோள் மோதி வென்றிருந்தால், உன்னை நான் வணங்கியிருப்பேன். ஆனால் நீயோ கோழையாய் கொள்கையற்ற மோழையாய், கொள்ளைக்காரனாய், குள்ள நரியாய்...!

அலெக்:- குணங்கெடுக்கும் கோபத்தை நீ கிளறாதே! கொடு என்று கேட்டால் நாட்டையே கொடுக்கிறேன்!

புரு: கொடுத்துப்பெறுவது பிச்சை! அடித்துப் பெறுவதுதான் சுதந்திரம்!

அலெக்:- துடித்துப் பயனில்லை, தூண்டிலிற்பட்ட மீன்! கோமானே, உன் நாட்டுக் குலமகள் ஒருத்தி நேற்று ஒரு தியாகம் செய்தாள். அந்த எண்ணம் கோபத்தைக் கிளறுகின்ற உன் கோணல் மொழிமுன் என்னைக் கோழையாக்கி அமர்த்தியிருக்கிறது! என் நாட்டு ஒற்றனுக்கு உயிர்ப்பிச்சை அளித்தாள். நேற்றிரவு-உன் நாட்டுப் பெண்ணொருத்தி அவள் மட்டும் அப்படிக் காப்பாற்றியிராவிட்டால் இந்த அலெகசாந்தர் இந்நேரம் அடிபட்டு ஆற்றங்கரை ஓரத்திலே அநாதைப் பிணமாகக் கிடந்திருப்பான்!

புரு:- என்ன?

அலெக்:- ஆம், அன்று ஒற்றனாக வந்து உயிர்ப்பிச்சை பெற்றது அலெக்சாந்தர்தான்!

புரு:- அப்படியானால் அன்றிரவு அந்தக் குடிசையிலே என் காலிலே வீழ்ந்த ஒற்றன் நீதானா?

அலெக்:- என்ன? உன் காலிலா விழுந்தேன்? நான் விழுந்தது ஒரு பெண் காலில் அல்லவா?

புரு:- ஆம். அங்கு அப்படிப்பெண் வேடம் போட்டிருந்தது நான் தான்!

அலெக்:- நீயா? நீயா என்னைக் காப்பாற்றினாய்! புருசோத்தமா! நீ என்னை வென்றுவிட்டாய்!!

[அலெக்சாந்தர் புருசோத்தமனை அணைத்துக் கொள்கிறான்.]

அறிவிலி!

தான் எழுதிய ஒவ்வொரு சொல்லும் தெய்வத்தன்மை வாய்ந்தது என்றும், ஒரு காற்புள்ளி விடப்பட்டாலோ, ஒரு அரைப்புள்ளி இடம் மாற்றி இடப்பட்டாலோ தன் எழுத்து சீர்கெடும் என்று ஓர் எழுத்தாளன் நினைப்பானே ஆனால் அவன் ஓர் அறிவிலியே ஆவான்.

—சாமர்செட் மாம்.

வாடிக்கையாளர்களுக்கும் வியாபாரிகளுக்கும்
எமது உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

உங்கள் திருப்தியே
எங்கள் சொத்து!

உங்கள் ஆதரவே
எங்கள் மூலதனம்!

கிரிஜா காபி ஒர்க்ஸ்

(போன் 75833)

காபித்தூள், வெண்ணெ, நெய் வியாபாரம்

5/76, ராயப்பேட்டை ஹைரோடு,

மயிலாப்பூர், :: சென்னை-4.

எல்லா வகை காபிக்கொட்டைகள், வறுத்த காபித்தூள், மற்றும் புதிய மணமிக்க ஊத்துக்குளி வெண்ணெ, நெய்

முதலானவைகள் மொத்த விற்பனை விலைக்கே சில்லரைக்குக் கிடைக்கும் என்பதுடன்,

காபிக்கொட்டை வறுத்தும், அறைத்தும் கொடுக்கிறோம் என்பதையும், இலவச சேவையுடன் உங்கள் இல்லம் தேடி வருகிறோம் என்பதையும்,

விழா தேவைகளுக்கு மேற்கண்டவைகளுக்கான பிரத்தியேக ஆர்டர்களை சிறப்பாக ஏற்றுக்கொள்கிறோம் என்பதையும் உங்களுக்கு மகிழ்வோடு அறிவித்துக்கொள்கிறோம்!

போன் செய்யுங்கள்: 75833

படித்து விட்டீர்களா?

வாரந்தோறும்

அறிஞர் அண்ணா

அவர்கள் எழுதும்

ஹோம் ரூல்

(தி.மு.க. ஆங்கில வார இதழ்)

ஏஜண்டுகள் விண்ணப்பிக்க
வேண்டுகிறோம்

விலை 20 காசு

விவரங்கட்கு: ஹோம்ரூல் அலுவலகம் 'அன்பகம்'
மவுண்ட் ரோடு சென்னை-18



காட்சி 1

இடம்: செல்வபுரி ரயில் நிலையம்

இருப்போர்: ராம்லால் வணிகர், பணியாள், வேறு பலர்.

நிலைமை: இரயில், வந்து நிற்கிறது. இறங்குவோரும் ஏறுவோரும் வேலை செய்வோரும் வழி அனுப்ப வந்தவர்களும் பண்டங்கள் விற்போரும் பரபரப்பாகிறார்கள்.

ராம்லால் முதல் வகுப்பு வண்டியிலிருந்து இறங்குகிறார்.

ராமலிங்கம் என்பது அவருடைய பெயர். வடநாட்டு வியாபாரத் தொடர்பு காரணமாக ராம்லால் என்று பெயரை மாற்றிக் கொண்டார்.

பணியாள் ஓடிச்சென்று, அவருடைய பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொண்டு, பின்னால் அடக்கமாக வருகிறான்.

ராம்லால் வருவது கண்டு, பலர் தொலைவில் இருந்தபடியே வணக்கம் கூறுகிறார்கள்.

அவர்கள் வணக்கம் கூறுவது கடமைக்காகவே, பாசத்துடன் அல்ல என்பது விளக்கமாகத் தெரிகிறது.

ராம்லால், யாரையும் குறிப்பிடத்தக்க முறையில் பார்த்து வணக்கம் கூற வில்லை. எல்லோருக்குமாகச் சேர்த்து பொதுவாகத் தலையைச் சிறிதளவு சாய்த்து விட்டு நடக்கிறார். செருக்கு மிக்க சீமான் என்பதைக் காட்டும் நடை-உடை.

பாட்டாளிகள் சிலர், ராம்லாலைக் கேலியாகப் பார்க்கிறார்கள்.

இரண்டு மூன்று இளைஞர்கள், ஏதோ பேசிக் கொண்டும், கைகொட்டிச் சிரித்துக் கொண்டும் ஒரு புறம் இருக்கிறார்கள்.

ரயிலடியில், மிக எடுப்பான இடத்தில் கண்ணைக் கவரும் வகையில்

வாங்கிவிட்டீர்களா?

ரொட்டித் துண்டு

என்ற விளம்பரத்தாள் ஒட்டப்பட்டிருக்கிறது.

ராம்லாலின் கண்களில், அது படுகிறது-ஒரு கணம்.

வெளிப்புறம் வருகிறார்—மோட்டார் தயாராக இருக்கிறது.

பணியாள் பெட்டி, படுக்கையை வைக்கிறான்.

மோட்டார் ஓட்டி, பயந்தபடி, மோடார் கதவைத் திறக்கிறான்.

ராம்லால் மோடாரில் அமருகிறார். பணியாள், முன் பக்கம் உட்காருகிறான். மோடார் கிளம்புகிறது.

நெடுஞ்சாலைகள் வழியாக மோடார் செல்கிறது.

கண்களை மூடிக்கொண்டு ஏதோ யோசனையில் இருக்கிறார், ராம்லால்

ராம்லால்:- சின்னவர், வந்தாரா...?

பணியாள்:- இல்லிங்க.

ராம்:- ஏனும்! வந்திருக்கவேண்டுமே, லீவ்தானே இப்போது...

பணி:- (புன்னகையுடன்) லீவுதானுங்க...ஆனா அவருக்கு ஓய்வு ஏதுங்க....

[ராம்லால் கண்களைத் திறக்கிறார்.

'ரொட்டித்துண்டு' விளம்பரம் பல இடங்களில் இருக்கக் காண்கிறார்.]

பணி:- (பொங்கும் மகிழ்ச்சியை அடக்கிக்கொண்டு) நிறைய மீட்டிங்குங்க சின்னவருக்கு...அதனாலேதான் வரமுடியல்லே...

[மோடார் ஆலை அலுவலகத்தில் சென்று நிற்கிறது.]

ராம்லால் வருவதைக் கூடக் கவனிக்காமல், கணக்காளர் புத்தகத்தைப் படித்துக்கொண்டிருக்கிறார்.

மற்றவர்கள், ராம்லால் உள்ளே வரக் கண்டதும், எழுந்து நிற்கிறார்கள்.

அருகே சென்று ராம்லால் கனைத்த பிறகுதான், கணக்காளர் பதறி எழுந்திருக்கிறார். புத்தகத்தை மூடி, கையிலே வைத்துக் கொண்டே...)

கண:- வாங்க...

[ராம்லால் கூடத்திலே வேறோர் பக்கம் இருக்கும், சோபாவில் போய் உட்கார்ந்தபடி...]

ராம்:- என்னய்யா விசேஷம்...... இந்த ஒரு மாதமா...

[கணக்காளர் ராம்லால் எதிரே நாணிக் கோணி நின்றபடி.]

கண:- நல்ல விசேஷந்தாங்க...

ராம்:- (ஒரு கணக்கேட்டைப் புரட்டியபடி) வசூல் வேலை...?

கண:- முறைப்படி நடக்குதுங்க... சின்னவரைப் பார்த்திங்களா?

ராம்:- இல்லையே...ஏன்?

கண:- (பூரிப்புடன்) கேட்டேனுங்க...நாங்க இங்கே பத்து நாளா, சின்னவரு வருவாரு வருவாருன்னு காத்துக்கிட்டு இருக்கிறோம்...

ராம்:- (கணக்காளரின் பூரிப்பைக் கவனிக்காமல்) லீவுக்குக் கூட வராமலிருக்கிறான்...

கண:- வேலைத் தொந்தரவுதானுங்க...ஏகப்பட்ட கூட்டமாம் ...சின்னவருக்கு...

ராம்:- (கணக்காளர் பேச்சைக் கவனியாமல்) ஏன்யா, நல்ல கூட்டந்தானா நம்ம கொட்டகையிலே...

கண:- பரவாயில்லிங்க .... மோசமில்லே...மத்த கொட்டகை கூட்டத்தைவிட இங்கே ஐம்பது நூறு அதிகம்தானுங்க...

ராம்:- (சலிப்புடன்) கொட்டகை புதிதா கட்டு, ஊரே திரண்டு வரும்...கொட்டகை கொள்ளாத கூட்டம் வரும்னு சொன்னே... அப்பொ ....என் பணத்துக்கு வேட்டு வைக்க...இப்ப, பரவாயில்லை.....மோசமில்லைன்னு பேசறே...சரி, சரி...தபாலெல்லாம் எடுத்துகிட்டு...

கண:- காலையிலேயே பங்களாவுக்கு அனுப்பிவிட்டேனுங்க...

[ராம்லால் எழுந்திருக்கிறார் வெளியே புறப்பட.]

காட்சி 2

இடம்: ஆலை அலுவலகம் உட்புறக்கூடம்.

இருப்போர்: கணக்காளர், அலுவலர்கள், பணியாட்கள்.

நிலைமை: கணக்காளர் மெத்தை போட்ட நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு 'ரொட்டித்துண்டு' என்ற புத்தகத்தைச் சுவையுடன் படித்துக் கொண்டிருக்கிறார்.

மற்றவர்கள், எழுதுவதும் ஏடுகளை ஒழுங்குபடுத்துவதுமாக உள்ளனர்.

காட்சி 3

இடம்: ராம்லால் மாளிகை 'அயோத்யா' என்ற பெயர் கொண்டது. பெரிய நுழைவு வாயில். கூர்க்கா காவல் நிற்கிறான்.

முன்புறம், அழகான தோட்டம்—நிறைய மலர்ச் செடிகள் கொடிகள்.

இருப்போர்: இரண்டு வேலையாட்கள்.

நிலைமை: செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

சிமெண்ட் பெஞ்சுகள் இங்கும் அங்கும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அணில்கள், அவைகளின் மீது தாவுவதும், கீழே குதிப்பதுமாக உள்ளன.

ஒரு வேலையாள்:- அண்ணே...இந்த அணில்களுக்கு, முதுகிலே இருக்கற கோடு இருக்கே மூணு கோடு, அது அந்தக் காலத்திலே, இராமரு தடவிக்கொடுத்ததாலே வந்ததாமே...நெஜமா...?

மற்றவன்:- ஏண்டா, அது நெஜமா இல்லையான்னு; அணிலைக் கேட்கணும், இல்லையானா ராமரைக் கேட்கணும்; என்னைக் கேட்டா ......

ஒரு வேலை:- எதுக்கும் குறும்புப் பேச்சுத்தான்; உன்னோட போக்கை நானும் பார்க்கறேன், வரவர ஒரு தினுசா மாறிக்கிட்டு வருது....

மற்ற:- டேய்! போதும்டா ஆராய்ச்சி...அட எங்கப்பா அறிவுக் களஞ்சியம்.....வேலையைப் பாரு...ஒண்ணு சொல்லட்டுமா ...அந்தக் காலத்திலே ராமர் போட்டார் மூணுகோடு, அணிலோட முதுகுக்குன்னு சொல்றயே, அதைப்பத்தி எனக்குத் தெரியாது...ஆனா இந்த ராமரு இருக்காரே, நம்ம எஜமானரு, இவரு, போட்ட நாலு கோடு, என் முதுகிலே இருக்குது... காட்டவா.....

[மோட்டார் சத்தம் கேட்கிறது.

இருவரும்பதறுகிறார்கள். அங்கொரு பக்கம் கிடந்த செய்தித்தாளை, அவசரமாக வேலையாள் எடுக்கச் செல்கிறான். அது காற்றிலே பறக்கிறது.

அதிலே ரொட்டித்துண்டு விளம்பரம் கொட்டை எழுத்திலே இருக்கிறது.

மோட்டாரில் இருந்த ராம்லால் கண்களில் விளம்பரம் தெரிகிறது.

கீழே இறங்கி, வேகமாக உள்ளே செல்கிறார்,

காட்சி 4.

இடம்: மாளிகை உட்புறக்கூடம்; அலங்கார இருக்கைகள் போடப் பட்டிருக்கின்றன.

ஒருபுறம், மேஜை மீது டெலிபோன் இருக்கிறது,

இருப்போர்: நடுத்தர மாது சோபாவில் உட்கார்ந்திருக்கிறார் கண்பூ தொடுத்துக்கொண்டு.

நிறைய நகைகள் பூட்டிக் கொண்டு சரிகைப் புடவை கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

முகத்திலே கவர்ச்சி துளியும் இல்லை.

நிம்மதியான வாழ்க்கையின் மெருகு மட்டும் முகத்தில் தெரிகிறது.

நிலைமை: ராம்லால் உள்ளே நுழையக்கண்டு, மாது எழுந்து நின்றபடி.

சுப்புத்தாயி:- ரயில் லேட்டா?

[ராம்லால், கோட்டைக் கழற்றி, ஒரு சோபாவில் வீசியபடி]

ராம்:- உம்—உன்னுடை கடியாரம் ஓடுது, கண் மண் தெரியாம. ரயில், வரவேண்டிய நேரத்துக்குத்தான் வந்தது.

[பேசிக்கொண்டே ராம்லால், டெலிபோன் இருக்குமிடம் செல்கிறார்.

சுப்புத்தாய், வெள்ளித் தட்டை எடுத்துக்கொண்டு உட்புற அறை நோக்கிச் செல்கிறார்கள்.]

ராம்:- (டெலிபோனில் கலகலப்பான குரலில்) சங்கரலிங்கமா— ஆமா......ஆமாம் இப்பத்தான் ...ஆமா—யாரு? பாரத்பூஷனு ......நம்ம மகனைத்தானே கேட்கறிங்க—லீவுக்கே வரவில்லை— ஆமா.....சொல்றுங்க.....என்ன மீட்டிங்கோ, மகாநாடோ...இவனுக்கு எதுக்கு அதெல்லாம்... ஆகட்டும், ஆகட்டும்—அதுவா? அதிகம் கிடைக்கல்லே...—நல்ல வைரமாக கிடைக்கல்லே..ஏதோ கொஞ்சம் வாங்கினேன்...இருக்கும் மூணு இலட்சத்துக்கு இருக்கும்னு வையுங்களேன்... சரி...சரி—நாளைக்கு கட்டாயம் பார்க்கறேன், கந்தசாமி கோயில் பக்கம்—......—காசி தீர்த்தமா ஓ! அனுப்புறேன்... ....இரண்டு சொம்பு அனுப்பறேன்...என்னது?......வைரமா? பார்ப்போம்—நமக்குக்கொஞ்சம் தேவை இருக்குது, அதுபோக மத்தது உங்களுக்கு இல்லாம வேறு யாருக்கு..விலை கொஞ்சம் கூடுதல்தான்.—என்ன என்ன? மகன் வந்ததும், சொல்றேன். அடே அப்பா! விருந்தா! சாப்பாட்டுக்கு வாடான்னு வர்றான். பெரிய மனுஷனு...நம்மப்பயலா. இருக்கட்டும் உங்க ஆசீர்வாதம்.. ஊருக்கெல்லாம் பெரிய மனுஷனு ஆகிவிட்டாத்தான் என்னவாம்; உங்களுக்கு அவன் சின்னப்பயதானே...சரி... சரி... ஆகட்டும்——சுப்புத்தாயா...— சௌக்யந்தான்...சொல்றேன்— கட்டாயமாச் சொல்றேன்—

[டெலிபோனை வைத்துவிட்டு ராம்லால் தபால்களைப் பிரித்துப்பர்க்க எண்ணும் போது டெலிபோன் மணி அடிக்கிறது.

நாற்காலியை இழுத்து டெலிபோன் மேஜைஅருகே போட்டு உட்கார்ந்து கொண்டு டெலிபோனை எடுக்கிறார்.]

ராம்:- யாரு? ஓஹோஹோ! என்னங்க! ஆமா—ஆமா...காலையிலேதான்—.இப்பத்தான்—.... குளிக்கக்கூடப் போகலிங்க..... என்னதுங்க ஒரே அடியாப் புகழ்கிறிங்க—என்ன—என்ன? ரொட்டித் துண்டா? என்ன ரொட்டித் துண்டு?

[கணக்காளர் வந்து பக்கத்தில் நிற்கிறார்]



நம்ம மகனு? புஸ்தகமா? அவனு எழுதினான்?...அடபுஸ்தகத்தின் பேரு ரொட்டித் துண்டா அப்படியா! பாராட்டுக் கூட்டமா ...பாரத்பூஷனுக்கா! சரி..சரி.. நானு? எங்கே எனக்கு நேரம் கிடைக்கப்போகுது...ஒரு மாதக் கணக்கு இருக்குது பார்க்க...— உங்களுக்குச் சந்தோஷம்னு எனக்குந்தான்..,படிக்கலிங்க... பார்க்கலிங்க....பல இடத்திலே பார்த்தேன், ரொட்டித்துண்டு-ரொட்டித்துண்டுன்னு பெரிய பெரிய விளம்பரம்.

[கணக்காளர் ரொட்டித் துண்டு புத்தகத்தைக் காட்டுகிறார். அதைப் பெற்றுக் கொண்டபடி.]

சொல்லவே இல்லிங்க......பய ரொம்ப ரகசியமா வைத்திருந்திருக்கிறான்..கெட்டிக்காரப் பய —எல்லாம் உங்களோட ஆசீர்வாதம்...—இதோ இப்பத்தான் நம்ம கணக்கப்பிள்ளை கொடுத்தாரு......ஆமா.....படிக்கணும் நேரம் கிடைக்கணுமே....அடே அப்பா! என்ன அவ்வளவு சுவை தெரிஞ்சி எழுதி இருக்கப் போறான்....— படிக்கிறேன்...... ஆகட்டும்...சரி...சரி—

[டெலிபோனை வைத்துவிட்டு சாய்வு நாற்காலியில் அமர்ந்தபடி, புத்தகத்தைப் பார்க்கிறார்ராம்லால். பார்த்துக் கொண்டே]

ராம்:- என்னய்யா இது...எவனைப் பார்த்தாலும் நம்ம மகனைப் பத்திப் பேசறானுக......ஒரே புகழ்ச்சியா...

கண:- (மகிழ்ச்சியுடன்) ஊரே கொண்டாடுதுங்க...

ராம்:- என்னது இது, ரொட்டித் துண்டு? கதையா...?

கண:- (எழுச்சியுடன்) காவியமுங்க....

ராம்:- (புத்தகத்தின் பக்கம், எடை விலை இவைகளைப் பார்த்துவிட்டு) விலை 15 ரூபாயா? ஒரு புத்தகத்தின் விலையா 15! யார்யா இவ்வளவு விலை கொடுத்து வாங்குவாங்க?

கண:- கிடைக்கலிங்களே தேடினுக்கூட....—அவ்வளவும் வித்துப் போச்சு...நம்ம ஆலையிலே இருக்கறவங்க மட்டும் நூறு புத்தகம் வாங்கி இருக்காங்க...

ராம்:- என்ன எழுதி இருக்கறான்? ஆமா, இதை அச்சடிக்க பணம் எவ்வளவு கொடுத்திருக்கே?

கண:- பணமா! நாமளா! ஒரு காசு கிடையாதே! நான் நீன்னு போட்டி போட்டுக்கிட்டு, புத்தகக்கடைக்காரர்வந்தாங்க செலவு நமக்கு ஏது? சின்னவருக்கு அஞ்சோ ஆறோ—ஆயிரம்ங்க—கொடுத்ததாப் பேசிக் கொள்ளுங்க...

ராம்:- இந்தப் புத்தகத்துக்கா! புத்தகம் எழுதினா அவ்வளவு பணம்கிடைக்குதா? என்னதான் எழுதி இருக்கறான் அப்படி!

[புத்தகத்தைப் பிரித்துப் படிக்கத் தொடங்குகிறார்]

காட்சி 5

இடம்: மணிமண்டபம்

இருப்போர்: பாரத்பூஷண் விழாவில் கலந்துகொள்வோர்.

நிலைமை: பாரத்பூஷண், 25 வயதுள்ள இளைஞன்—அழகிய கம்பீரமான தோற்றம். ஆடம்பரமற்ற முறையில், உடைதரித்துக்கொண்டிருக்கிறான். கையிலே ஆயிரம் ரூபாய் விலையுள்ள முதல் தரமான கடிகாரம். அழகுக்கு அழகளிக்கும் பளபளப்பான பிரேம் போட்ட மூக்குக்கண்ணாடி.

முகமலர்ச்சியுடன், பாரத் வேலைப்பாடுள்ள நாற்காலியில் அமர்ந்திருக்கிறான்.

செல்வபுரியிலே உள்ள பஞ்சநிவாரணச் சங்கத் தலைவர் மஞ்சுநாதராவ் தலைமைவகித்திருக்கிறார்.

பலர், மண்டபத்தில் அமர்ந்திருக்கிறார்கள்.

அனைவரும் பாரத்பூஷணை ஆர்வத்துடன் பார்த்தபடி உள்ளனர்.

அவன் புன்னகைபூத்த முகத்துடன் காணப்படுகிறான்.

விழாத் தலைவர், அனைவரும் கைதட்டிக் களிப்பூட்டும் நிலையில் பெரிய ரோஜா மாலையை, பாரத்துக்குப் போடுகிறார்.

பலர் புகைப்படம் எடுக்கிறார்கள்.

ஒருவர் 'ரொட்டித் துண்டு' புத்தகத்தை பாரத்பூஷண் கரத்தில் கொடுத்து படம் எடுக்கிறார்.

ஒரு முதியவர் பேச முற்படுகிறார். அவரைக் கண்டதும் பாரத் எழுந்து கும்பிடுகிறான். அவர் அப்படியே அவனைக் கட்டிப் பிடித்துக் கொள்கிறார்; பாரத்பூஷண், சிரமப்பட்டுத் தன்னை விடுவித்துக்கொண்டு, அனைவருக்கும் வணக்கம் கூறுகிறான்.]

முதியவர்:- மன்றத்தோரே! மன்றத் தலைமை ஏற்றுள்ள மாண்புமிகு...மாண்புமிகு...

[பெயர் தெரியாமல் முதியவர் திகைப்பது கண்டு, பாரத்பூஷண் கூட்ட விளம்பரத்தாளைக் காட்டுகிறான். முதியவர், பேச்சை நிறுத்திவிட்டு, மூக்குக்கண்ணாடி போட்டுக்கொண்டு தாளைப் பார்த்து, தலைமைவகித்தவர் பெயரைத் தெரிந்துகொண்டு]

மாண்புமிகு மஞ்சுநாதராவ் அவர்களே! இன்று திருநாள்! என் வாழ்நாளிலேயே ஓர் பொன்னாள்! நான் பெருமையும் பூரிப்பும் அடையும் நன்னாள்! ஏழைத் தமிழாசிரியன். இவனுக்கு என்ன தெரியும் என்று பேசினார்கள் பலர். அதிலே சிலர் இங்கே இருக்கக்கூடும்.

[கூட்டத்தில் சிரிப்பொலி கிளம்புகிறது.]

அவர்களைக் கேட்கிறேன்......... மார்தட்டிக் கேட்கிறேன்—தெரிகிறதா தமிழாசிரியன் அருமை, பெருமை.

[மிக உரத்த குரலில் பேசியதால், இருமல் நேரிடுகிறது]

இதோ, என் மாணவன்! நன் மாணவன்! நானிலம் போற்றும் நூல் அளித்த பேராசான்! அவனுக்கு நான் ஆசான்!

[பலத்த கை தட்டுதல் கிளம்புகிறது]

உலக இலக்கியங்களிலே ஒன்று என்று சான்றோர் அனைவரும் கொண்டாடும் நூலை, இவ்வளவு சிறு பிராயத்தில் எழுதிய பாரத்பூஷணை வாழ்த்தாதார் இல்லை! பாராட்டாதார் இல்லை! புதுமைக் குறளாசிரியன், புரட்சி எழுத்தாளன், தமிழ்ச்சங்கக் காவலன், நாவல் போற்றும் நடையுடையான், பாரதன், என் மாணவன்! ஆம்! ஆம்! முக்காலும் கூறுவேன், என் மாணவன், பாரத்பூஷணன்! பெயரைக் கேட்ட மாத்திரத்தில் இந்நாட்டவர் அல்லவோ எனத் தோன்றும். இவன் தந்தைக்கும் பெயர் இது போன்றே ராம்லால் என்றுளது. மயங்காதீர். வடவர் அல்ல, நம்மவர், தமிழர்' வணிகத் தொடர்பு ராமலிங்கனாரை, ராம்லால் ஆக்கிற்று—அவர் தம் மகனை, பாரத்பூஷண் என்று பெயரிட்டார். செந்தமிழ்நாட்டுச் செல்வம் பாரதன்—சேட்டு சௌகார் அல்ல!

[மீண்டும் கைதட்டுகிறார்கள்]

பாரத்பூஷணனுக்கு ஆசிரியனாக இருந்த ஒரு காரணத்தாலேயே நான் இப்போது பெருமையும் பூரிப்பும் அடைகிறேன். இந்தப் பார்முழுதும் பாரதனைப் புகழ்கிறது. புகழ்ந்துவிட்டு, யாரிடம் பயின்றான் என்று கேட்கிறது. கேட்பது முறையன்றோ' கேட்டதும் என்ன கூறுகிறார்கள்? என்ன கூறுவீர்கள்? என்ன கூறுவான் பாரத்பூஷண்? அகிலாண்டேஸ்வரி அம்மானை இயற்றிய அகவலாசிரியன் வரசித்தி விநாயகப் புலவர்...

[கை தட்டுகிறார்கள்.]

என்றன்றோ கூறுவர்! அது போதும்! அதுபோதும் எனக்கு! என் மாணவனை வாழ்த்துகிறேன். ஆசானும் நானே இத்தனை அகமகிழ்ச்சிகொள்ளும் போது, இவன் தந்தை, திருமிகு ராம்லால் எத்துணை எத்தனை பெருமை அடைவார்! மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி இருப்பாரன்றோ! —...

[பலத்த கைதட்டுதல்]

காட்சி 6

இடம்: 'அயோத்தியா' மாளிகை உட்புறக்கூடம்.

இருப்போர்: ராம்லால், சுப்புத்தாய், கணக்காளர்.

நிலைமை: ராம்லால் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கிறார் கடுங்கோபம் கொண்ட நிலையில் காணப்படுகிறார். சுப்புத்தாய் வரக்கண்டு, முறைத்துப் பார்க்கிறார்.

விவரம் புரியாமல், சுப்புத்தாய் மிரள்கிறார்கள்.

ராம்லால் மீண்டும் புத்தகத்தைப் படிக்கிறார்—பதறுகிறார்.

சுப்புத்தாய், திகைத்துக் கிடக்கக்கண்டு, கணக்காளர், ராம்லாலுக்குத் தெரியாமல் குறி காட்டுகிறார், நிற்க வேண்டாம், உள்ளே சென்றுவிடுங்கள் என்று.

சுப்புத்தாய் உட்புறத் தாழ்வாரம் சென்று, கணக்காளரை அழைக்கிறார்கள். இருவரும், மெல்லிய குரலில் பேசிக்கொள்கிறார்கள்.

சு:- என்னய்யா இது, என்னைக்குமில்லாத வழக்கமா இருக்குது. வந்ததிலே இருந்து ஏதோ புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு இப்படி மெய்ம்மறந்து கிடக்காரு...

கண:- ஏதோ புத்தகமா! அல்ல, அம்மா! அல்ல. அதுதான் புத்தகம்! மற்றதெல்லாம் காகிதக் கட்டு......வெறும் காகிதக்கட்டு நம்ம சின்னவரு எழுதிய புத்தகமம்மா அது......

சு:- (ஆச்சரியப்பட்டு) நம்ம பாரதனா?

கண:- ஆமாம்! ஊரே கொண்டாடுதே எத்தனைப்பாராட்டுக் கூட்டம்—புகழ்மாலை, சின்னவருக்கு.

சு:- (முகம் மலர்ந்து) என் மகனா! அவ்வளவு கெட்டிககாரனா பாரதன். இவ்வளவு பெரிய புத்தகமா எழுதினான். என்ன எழுதி இருக்கான்னு சொல்லாம அவர் மட்டும், புள்ளெ எழுதினதைப் படிச்சிப் படிச்சிப் பூரிச்சிப் போறாரு! என்ன எண்ணம் பாரு. ஏன், எனக்குச் சொன்னா என்னவாம்.

[உள்ளே சென்று ராம்லால எதிரே நின்று, செல்லக் கோபத்துடன், குழைவாக]

ஏனுங்க.....உங்களைத்தான்—...நமம பாரதன் எழுதினதாமே... சொல்லக் கூடாதா என்னிடம்...

[ராம்லால், முறைத்துப் பார்க்கிறார்.

அவர்நிலை புரியாமல் பேசுகிறாள சுப்புததாய்]

சு:- நீங்களே படிச்சிப்படிச்சி ரசிக்கிறீங்களே, கொஞ்சம் உரக்கத்தான் படியுங்களேன். எனக்கு மட்டும் ஆசை இருக்காதா, கேட்க!

ராம்:- (கோபமாக) சுப்புத்தாயி! போ, வெளியே நிற்காதே என் எதிரே, படிச்சிகாட்டவா, படிச்சி—இதை...இதையாடி படிச்சிக் காட்டச் சொல்றே... புத்தகமாடி இது...என் தலைக்குத் தீம்புடி, தீம்பு. போ, கோபத்தைக் கிளறாதே.

[ராம்லாலின் கோபம் கணடு, மனைவி திகைத்து நிற்கிறார். கணக்காளர் கலங்கிப்போகிறார்

பல்லைக் கடித்துக் கொண்டு பேசுகிறார் ராம்லால்]

ராம்:- ரொட்டித்துண்டு! உன்னோட அருமை மகன் எழுதி இருக்கிற புத்தகத்துக்குப் பெருடி அது, ரொட்டித்துண்டு! இனி, பழைய சோறு, கந்தத் துணி ஒட்டடைச் சட்டி, இப்படி எல்லாம புத்தகம் போடுவான்.

சு:-(திகைத்து) தப்பாளதாச்சும எழுதி இருக்கானா. அறியாதவன் தானே. இந்த வயதிலே இவ்வளவு பெரிய புத்தகம எழுதினானேன்னு சநதோஷப்படாமெ, கோபிக்கறிங்களே...

ராம்:- (அவளுடைய அப்பாவித்தனத்தைக் கண்டு, கேலியாக) அவனுக்கு அம்மா தானேடி நீ! நீவேறே எப்படிப் பேசுவே. (கோபத்துடன்) என்னைக் கேவலப்படுத்தி, என்னிடம் கூலி வாஙகிகிட்டு வேலை செய்கிற பசங்களை என் மீது ஏவிவிட எழுதிய புத்தகம இது...தெரியுமா, இதுவெடிகுண்டு, வெறும் புத்தகமல்ல என்று ஒரு வெறிப்பய, இதற்கு மதிப்புரை கொடுத்திருக்கான். (கேலிக்குரலில்) படிக்கறேன், கேட்கறியா, உன்னோட தலைப்புதல்வன் எழுதி இருக்கறதை—

[படித்துக்காட்ட புத்தகத்தில் ஒரு பகுதியைத் தேடுகிறார்.]



காட்சி 7

இடம்: மணிமண்டபம்

இருப்போர்: பாரத் பூஷண் விழா காண்போர்.

நிலைமை: ஒரு இளைஞன் மெத்த உருக்கத்துடன் புத்தகத்தில் ஒரு பகுதியை மேற்கோள்காட்டிப் பேசுகிறான். விழா காண்போர், மெய்சிலிர்க்கும் நிலைபெற்றுள்ளனர்.

இளைஞன்:- எலும்புக் கூடாகி விட்ட ஏழையை, ஏன் அப்பா

இப்படி இருக்கிறாய் என்று கேட்கிறான் நீதிதேவன். என் சதையையும் இரத்தத்தையும் கடும் உழைப்பு எனும் ஓநாயப்பருக்குக் கொடுத்துவிட்டேன்: மிச்சம் இருப்பது இவ்வளவுதான்—எலும்புக் கூடுதான் — என்று அந்த ஏழை பதில் அளிக்கிறான்.

[பேசுபவரின் குரல் கம்மிவிடுகிறது. கூட்டத்தில் இரண்டொருவர் கண்களில் நீர் கசிகிறது. தலைவர், உருக்கமாக, பாரத் பூஷணனைப் பார்க்கிறார்.

பாரத் பூஷணன் சிறிதளவு திகைத்துக் கிடப்பது போலத் தெரிகிறது.

புத்தகத்தை எடுத்துக் காட்டியபடி இளைஞன் பேசுகிறான்]

இளை:- இதிலன்றி வேறு எதிலே இத்தகைய அருமையான கருத்தைக் காண முடியும். எப்போது, எங்கே கண்டீர்கள்?

[கை தட்டுகிறார்கள் மகிழ்ச்சியுடன்]

எப்படித்தான் ஏழையின் உள்ளத்தை இவ்வளவு நன்றாகக் கண்டறிந்து ஓவியம் போலத் தீட்ட முடிந்தது! காவியம் தந்தவரோ, குபேரசம்பத்தில் உள்ளவர்—வறுமைத் தேள் கொட்டுவதும், வாழ்வு துடி துடிப்பதும், எப்படிப் புரிந்தது! எப்படி!!

[பலத்த கை தட்டுதல் கேட்கிறது.]

காட்சி 8

இடம்: அயோத்யா மாளிகை உட்புறம்.

இருப்போர்: ராம்லால் சுப்புத்தாயி.

நிலைமை: சிறிதளவு திகிலுடன் நிற்கும் சுப்புத்தாயிடம் கோபமும் கேலியும் கலந்த குரலில ராம்லால் பேசுகிறார்.

ராம்:- கேட்டயாடி, கேட்டயா?

சு:- (சந்தேகம் கொண்ட நிலையில்) நம்ம மகனா இப்படி எழுதினான்?

ராம்:- (குத்தலாக) இல்லே, இல்லே! அவன் தூங்கற போது, யக்ஷிணி வந்து எழுதுது. (கோபமாக) பிழைக்கத் தெரியாத சில துகள், புரட்சி எழுத்தாளன்னு புகழ்வதற்காக, சொந்தத் தகப்பனாருக்குத் துரோகி ஆகிவிட்டாண்டி அத்த அயோக்யப் பய! சுரண்டிப் பிழைக்கும் சுகபோகியாம்...

சு:- (சோகமாக) உங்களையாச் சொல்றான் அப்படி.

ராம்:- என்னைச் சொல்லியிருந்தாப் பரவாயில்லையேடி.....என்னமோ வெறி, பயலுக்கு; தானா தெளியும்னு இருந்துவிடுவனே. ஊரிலே உள்ள பெரிய மனுஷனுங்க அவ்வளவு பேரையுமல்ல ஏசி எழுதி இருக்கறான். கால் தூசிக்கு மதிப்பாங்களா இவனை, இல்லே, சந்தர்ப்பம் கிடைச்சா இவனைச் சும்மாவாவிடுவாங்க, சுரண்டிப் பிழைக்கிற சுகபோகி! யாரு? நானு! (மார்பை அடித்துக் கொள்கிறார்)இவன், கழுத்திலே மாலைபோட்டுகிட்டு விருநது சாப்பிட்டுகிட்டு வாழ்த்துப் பத்திரம் வாங்கிகிட்டு இருக்கறான்... இளிச்சிகிட்டு. இந்த ஒருமாசமா, குடகு பூராவும் அலைஞ்சி, நாலு காசு கிடைக்கட்டுமே, பயலுக்கு நிம்மதியான வாழ்க்கை இருக்கட்டுமேன்னு — இவன் எழுதறான், சுரணடிப் பிழைக்கற சுகபோகின்னு...

[சுப்புத்தாய் முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்.]

காட்சி 9

இடம்: மாளிகை, நுழைவுவாயில்

இருப்போர்: கணக்காளர் பணியாட்கள்.

நிலைமை: கணக்காளர் கவலை மிகக் கொண்டவராக இருக்கக் கண்ட பணியாள் காரணம் அறிந்து கொள்ள அவருடன் பேசுகிறான்.

பணி:- என்னங்கய்யா முகத்தைத் தொங்க போட்டுகிட்டு இருக்கறிங்க. ஐயாவோட அக்னியாஸ்திரம் ரொம்ப பாடுபடுத்தி விட்டுதோ.

கண;- எள்ளும் கொள்ளும் வெடிக்குது அப்பா. அம்மா அகப்பட்டுக்கொண்டு விழிக்கறாங்க. நல்ல வேளை நம்ம பேர்லே பாயறதுக்குள்ளே, நழுவி வந்துவிட்டேன்.

பணி:- அம்மா என்ன தப்பு செய்தாங்க?

கண:- பாரத் பூஷணனைப் பெத்தாங்களேலோ அந்தத் தப்புக்காகத்தான், ஐயா வாட்டறாரு.

பணி:- சின்னவரு என்ன தப்பு செய்தாரு...அப்பாரு மனசு வேதனைப்படுகிறபடி...

கண:- ஒரு புத்தகம் எழுதினாரு... அதிலே உண்மையை எழுதுவிட்டாரு...அவர் செய்த தப்பு அதுதான்...

பணி:- ஊரே கொண்டாடுதாம்' சின்னவரை, அந்தப் புத்தகத்துக்காக...

கண:- ஊரே புகழ்ந்தாலும், உலகமே புகழ்ந்தாலும், உள்ளே இருக்கற ஐயா, ஒப்புக்கொள்ள மாட்டேன்னு சொல்றாரே... என்ன செய்யச் சொல்றே...

பணி:- நீங்க படிச்சிங்களாய்யா புஸ்தகத்தை...

கண:- எட்டுத் தடவை படிச்சேன்...நீதி நியாயத்தை பட்டு பட்டுன்னு எழுதி இருக்காரு சின்னவரு...

பணி:- பெரியவருக்கு ஏன் கோபம் வருது...

கண:- சுரண்டிப் பிழைக்கிறவன் சுகபோகியா இருககறான், மாடா உழைக்கறவன் ஓடாப்போயிட்டான்னு எழுதி இருக்காரு சின்னவரு, சுரண்டிப் பிழைக்கறவங்கன்னு, யாரைடா சொல்றேன்னு கொதிக்கறாரு, குதிக்

ளுரு, இது சமயமல்லப்பா, இங்கே இருக்க. நான் போறேன் —பிறகு வந்து விவரம் எல்லாம் சொல்றேன்...

காட்சி 10

இடம்:- மாளிகை உட்புறம்

இருப்போர்:- ராம்லால் சுப்புத்தாய்.

நிலைமை:- ராம்லால் உலவிக் கொண்டே கோபமாகப் பேசுகிருர்.

வீசி எறியப்பட்ட பத்தகம் ஒருபுறம் கிடக்கிறது. ஒன்றும் புரியாத நிலையில் சுப்புத்தாய், கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கீழே ஒருபுறமாக உட்கார்ந்து கொணடிருக்கிருர்கள்.

பாரத் பூஷண் தன் எதிரே நிற்பது போலவும், நேருக்கு நேராக அவனிடம் பேசுவது போலவும் இருக்கிறது, ராம்லால் பேச்சு.

ராம்:- நாங்க சுண்டிப் பிழைக்கிற சுகபோகிங்க! காரித்துப்பச் சொல்றீ எங்கபேரிலே. சரி. நீ. யார்டா அப்பா! (கேலிக்குரலில்) பிறந்ததும், கையிலே கடப்பாரையும் மண்வெட்டியும் தூக்கிக்கிட்டுப்போயி காடு திருத்தினவனா? (மார்பில் அறைந்து கொண்டு) உனக்கு 'ஆயா' வேலை பார்த்தவளுக்கு மட்டும் மொத்தத்திலே ஆயிரம் ரூபா கொடுத்தனே. நல்ல தமிழ்ப் பண்டிதருக்கு மாதம் 30- அல்ல, சம்பளம், உனக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க. மேதாவின்னு பேர் வாங்கறதுக்காக, பெத்தவனைப் பேயனுன்னு ஏசறே. பசுவைக் கொன்றுபோட்டு செருப்புத் தானம் செய்தவன் கதைபோல, என்னை ஏசி நீ, மேதாவின்னு பட்டம் வாங்கறே இல்லே! வாங்கு! வாங்கு!

[கோபமாகச் சென்று, கடிதக் கட்டை எடுத்து, சாய்வு நாற்காலியில் அமர்ந்தபடி, பிரித்துப் பார்க்கத் தொடங்குகிருர்.

இரண்டொரு கடிதங்களைப் பார்க்கிருர், மனம் மீண்டும் குழம்புகிறது. புத்தகத்தின்மீது கண் பாய்கிறது.]



ஆள் பிடிக்கும் மீன்!

மனிதர்களிடம் தான் பிடிபடுபடுவதற்குப் பதிலாக ஒரு மீன் மனிதர்களைப் பிடிக்கிறது என்ருல் அது நிச்சயமாய் ஒரு பெரிய அதிசயம்! ஆனல் இது உணமையாகவே மேற்கு ஜெர்மனியில் நடக்கிறது. அங்கே லோயர் ஸாக்ஸனீ என்னும பகுதியில் இந்த மாதிரி மீனகள் 20,000 இருக்கின்றன. ஆனல் இந்த மீன்களுக்கு உயிர்கிடையாது.

முதியவர்களோ, நோயாளிகளோ தமக்கு உதவி தேவைப்படும்போது ஒரு வெள்ளி மீனை ஜன்னலில் மாட்டிவைப்பார்கள். இந்த அடையாளம் இருந்தால் அதன் அர்த்தம் என்ன என்பது பொது மக்களுக்குத் தெரியும். மனமுள்ளவர்கள் அதைப் பார்த்தவுடன் வீட்டுக்குள் சென்று விசாரிப்பார்கள். தன்னந் தனியே வாழும் முதியோரும், நோயாளிகளும்தான், பெரும்பாலும் இந்த விதத்தில் பொது உதவியை நாடுவது வழக்கம்! லோயர் ஸாக்ஸனீ மாகாணத்தில் இந்த திட்டம், வியக்கத்தக்க விதத்தில் வெற்றி பெற்றிருக்கிறது, குறிப்பாக தலைநகர் ஹானேவரில் இதற்கு நல்ல வெற்றி, டாக்டரைக் கூட்டி வருவது; மருந்து வாங்கி வருவது, உணவு வாங்கி வருவது, உணவு தயாரித்துக் கொடுப்பது இப்படி எத்தனையோ உதவிகள் நடக்கின்றன,

ராம்:- எடுடி, அதை. (சுப்புத்தாய் பயந்து நிற்க) எடுடின்னு, ஏண்டி எருமை மாடு போல நிற்கறே...

[புத்தகத்தைக் கொண்டு போய்க் கொடுக்கிருள்.

சில வரிகள் அவர் கண்களில் தெரிகின்றன]

ராம்;- கேள்டி, அவன் கேட்கறதை...

சு:- உங்களை எதிர்த்து ஒரு வார்த்தைகூட அவன் பேசமாட்டானே.

ராம்:- அவன் ஏண்டி பேசருன், என்னோடு, பேசினுத்தான், புட்டுப் புட்டுக் காட்டுவனே, உள்ளதை உள்ளபடி, டணம் திரட்டி, நானு போகிறபோது மூட்டை கட்டி எடுத்துக்கிட்டுப் போகப்போறேன்....எல்லாம் உன் இழவுக்குத்தானேன்னு கேட்கமாட்டனு...

சு:- (கலங்கிய நிலையில்) மனம் நொந்து பேசாதிங்க......வேண்டாம்ங்க...நான் யார் பக்கம்னு பேசுவேன்...வரட்டும்ங்க, நானே கேட்கறேன் பாரதனை, இது அடுக்குமாடா, அப்பா மனம் வேகற மாதிரி எழுதலாமான்னு கேட்கறேன்...

ராம்:- நீ, கேட்கறது இருக்கட்டும்டி, பிறகு, இப்ப, அவன் கேட்கருன்...(புத்தகத்தில் ஒரு பகுதியைப் படித்துக் காட்டுகிருர்) ஏழையின் வியர்வை சிந்தாமல் பூமிக்கு அடியில் தூங்கிக்கொண்டிருக்கும் வைரமும் தங்கமும், கடலுக்கு அடியிலே படுத்து உறங்கும் முத்தும், உனக்கு எப்படிக் கிடைத்தது?

சு:- (அப்பாவி நிலையில்) எப்படிக் கிடைத்தா நமக்கு என்னன்னு இருக்கப்படாதா! இவனுக்கு ஏன் இந்த விசாரணையெல்லாம்?

ராம்:- (கேலிக்குரலில்) ஏனு! மேதாவியாகணுமே! என் தலைக்கு வைக்கருன, கொள்ளி.

[சுப்புத்தாய் வாயைப் பொத்திக்கொள்கிருள், அழுகையை அடக்க]

ராம்:- காட்ருன் வித்தையை, என்னிடம். (புத்தகத்தை மீண்டும் பார்த்து) என்னைக்காட்டச்சொல்ருண்டி. (தலைகுனிந்துகொண்டு, சுப்புத்தாய் உட்கார்ந்திருக்கக கண்டு புத்தகத்தால் அவன் தலையைத்தட்டி) கேள்டி, இதை. ஏழையின் கைததிறன் இல்லாத ஒரு பண்டம் உண்டா காட்டு! (புத்தகத்தை மூடியபடி) காட்டறேண்டா, டேய்! காட்டறேன். ஒரு காசு கிடையாது, என் சொத்திலே உனக்கு, (கேலியாக) அக்ரமக்காரன் சொத்தாச்சு! நீ, அநியாயத்தை அழிக்கப் பிறந்த, தர்மவீரன்! உனக்கு ஏன் அந்தச் சொத்து, ஒரு காசு கூடக் கிடையாது. ஆமாம்! அவ்வளவும் ஐயனுரப்பன் கோயிலுக்குத்தான...சத்யமா...

சு:- (பதறி) சத்தியம் கித்தியம் வைத்துத் தொலைச்சுப்புடாதிங்க.

ராம்:- பேசாதே. நீ பேசாதே. அவன் வந்தா என் முகத்திலே விழிக்கக்கூடாது. சொல்லிவிடு,

போயி, [ரொட்டித்துண்டு போதாது,' இனி மளமளன்னு கருவாடு, எருமுட்டை, எருக கஞ்செடி,' என்று எந்த எழவா வது எழுதிகிட்டு இருக்கச் சொல்லு......என் மகன் செத் தான்......

[சுப்புத்தாய், ஓடிச் சென்று அவர் வாயைப் பொத்தியபடி.]

சு:- கருவேப்பிலைக் கொத்து மாதிரி நமக்கு இருப்பது, ஒண்ணே ஒண்ணுங்க....கெட்டப் பேச்சுப் பேசாதிங்க...

ராம்:- என்னை அழியச் சொல் ருண்டி, என்னை.

[படிக்கிருன்]

அம்பாரி மீது ஏறிக்கொண்ட தால் யானையைக் கொடுமைப் படுத்தலாம் என்று எண்ணுதே!

[சுப்புத்தாயை முறைத் துப் பார்த்துவிட்டு நிறுத்தி நிதானமாகப் படிக்கிருர்.]

யானைக்குக் கோபம் பிறந்தால், அது உன்னைத் தன் காலின் கீழ் போட்டு, மிதித்து உன்னைக் கூழாக்கிவிடும்.

[மார்பில் அறைந்து கொண்டு]

என்னை! பெத்தவனே! இவனை இவ்வளவு செல்வத்திலே புரளச் செய்கிற என்னை, சுப்புத்தாயி: யானை காலிலேபோட்டு, மிதச்சி ......

[சுப்புத்தாய் மறுபடியும் அவர் வாயைப் பொத்து கிருள்.]

காட்சி 11

இடம்: விழாக்கூடம்.

இருப்போர்: பாரத்பூஷண் விழா காண்போர்.

நிலைமை: ஒரு முதியவர் பேசிக் கொண்டிருக்கிருர். கூட்டத் தில் பலர் களைத்துப் போயி ருப்பது தெரிகிறது.

விழாத் தலைவர், கைகடி காரத்தைப் பார்த்துக் கொள்கிருர்.

பலர் புகழ்ந்து பேசு வதைக் கேட்டதால், கூச் சம் அடைந்த நிலையில் இருக்கிருன் பாரத்பூஷண்.

முதியவர்:- பகவானுடைய கிருபை யாலே பாரத்பூஷண் தீர்க்காயு

சாக இருந்து பழைய காலத்துச் சங்கப் புலவர்களின் பெருமை யைக் காட்டிலும் அதிகமான பெருமைபெற்று விளங்கவேண் டும்.

[பாரத்பூஷண் அவரைக் கும்பிடுகிருன். முதியவர் உட்கார்ந்துவிடு கிருர்.

விழாத் தலைவர், எழுந் திருக்கருர் பேச.

ஒரு மாது, கூட்டத்தின் ஒருபுறம் இருந்து ஒலி பெருக்கி நோக்கிவரக்கண்டு விழாத் தலைவர், உட் கார்ந்துவிடுகிருர்.

மாது:- இவ்வளவு பெரியவர்க ளெல்லாம் பேசிய கூடத்திலே பேசுவது என்ருல், எனக்குப் பயந்தான். ஆனுல் செல்வன் பாரத்பூஷண அஞ்சாதே! அஞ்சாதே! என்று அழுத்தந் திருத்தமாக எழுதியதைப் படித்த பிறகு அஞ்சலாமா..நான் அஞ்சப்போவதல்லை, இவ்வளவு பேர் பேசினுர்கள்-பல விஷயங் களை—ஆனுல் எல்லோரும் ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துவிட்டார்கள். எனக்குக் கோபம்——வருத்தம் ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்ருன் எனக் கேட்ட தய்! தெய்வப் புலவர் திருவள்ளுவர் வாககு பொய் யாகுமா! திருவள்ளுவருக்குப் பொய்யாமொழியார் என்று ஒரு பெயரும் உண்டு அல்லவா! அப் படிப்பட்ட தாயைப் பெருமைப் படுத்திப் பேசவில்லையே, ஒருவர் கூடப் பேசவில்லையே, என்பது தான் எனக்கு வருத்தம்.

[தமிழாசிரியர் எழுந் திருக்க முயலுகிருர். பக் கத்தில் இருப்பவர், அவரை உட்காரவைத்து விடுகிருர்)

நாம் அனைவரும் இங்குகூடி, கொண்டாடி, பாராட்டி, வாழ்த்தி, மகிழ்ந்தோம். ஆனுல உண்மையான மகிழ்ச்சி, பெருமை, யாருக்கு இருக்கும்? பாரத்பூஷணனைப் பெற் றெடுத்த உத்தமிக்கு.

[பலத்த கை தட்டுதல்]

அந்தப் பெருமாட்டிக்குத்தான் கலைப் பெருமையும். பாரத் பூஷணன் நாடு போற்றிடும் ஏடு தந்தார். அந்தத் தாயோ, பாரதனையே நமக்குத் தந்தார். அந்த அன்னையை வாழ்த்து கிறேன், போற்றுகிறேன். உண் ளத்திலே ஆனந்தம் தாண்டவ மாடும் அந்த அன்னைக்கு.

[கைதட்டி மகிழ்கி ருர்கள்.]

காட்சி 12.

இடம்: மாளிகை உட்புறக்கூடம்.

இருப்போர்; ராம்லால், சுப்புத்தாய்

நிலைமை: ராம்லால், சட்டையைக் கழற்றி ஒருபுறம் வீசிவிட்டு, பனியனோடு காணப்படுகிறார்.

ரொட்டித்துண்டுபுத்தகம் ஒருபுறம் எறியப்பட்டுக் கிடக்கிறது.

ஒரு நாற்காலி கீழே தள்ளப்பட்டுக்கிடக்கிறது.

ராம்லால், கடிதங்களைப் படிப்பதும், கசக்கிக் குப்பைக் கூடையில் வீசி எறிவதும், ஏதேதோ முணு முணுத்துக் கொள்வதுமாக இருக்கிறார்.

கவலை தோய்ந்த முகத்துடன் சுப்புத்தாய் இதைக் காண்கிறாள். மேலும் என்ன கோபமோஎன்று எண்ணிக் கலக்கமடைகிறாள்.

எழுந்து உட்பக்கம் செல்கிறாள். அதைக் கவனிக்காமல், ராம்லால் கடிதங்களைப் படித்தபடி இருக்கிறார்.

டெலிபோன் மணி அடிக்கிறது. ராம்லால் வெறுப்புடன் டெலிபோனைப் பார்க்கிறார்.

[உரத்த குரலில்.]

ராம்:- வேறே வேலை வெட்டி கிடையாதா? ஓயாம டெலிபோன் — செச் செச் செச் சே!

[வேகமாக எழுந்து சென்று டெலிபோனை எடுத்துக் கீழே வைத்து விட்டு வந்துஉட்காருகிறார்.

சுப்புத்தாய், வெள்ளி டம்ளரில் காப்பி கொண்டு வருகிறாள்.

ஓசை கேட்கும்படி, டம்ளரை மேஜைமீது வைக்கிறாள்.

ஓசை கேட்டும், ராம்லால் அவள் பக்கம் திரும்பிப் பார்க்காமல் கடிதத்தைக் கவனிக்கிறார்.

சு:- (சிறிது அழுத்தமாக) காப்பி —...

ராம்:- (கோபமும் வெறுப்பும் தெரியும்படி) தெரியுது.

[கசக்கி எறிகிறார் ஒரு கடிதத்தை.]

சு:- (வேடிக்கை பேசுவது போன்ற நிலையில்) ஏங்க! மகன் பேர்லே இருக்கற கோபத்தை கடுதாசி பேர்லேயும் காட்டணுமா?

[ராம்லால் முறைத்துப் பார்க்கிறார்.]

முக்கியமான கடுதாசியா இருந்து விடப்போகுது. கோபத்துலே கண்மண் தெரியாம வீசிடாதிங்க—

ராம்:- (கேலிக் குரலில்) புத்தி சொல்றயா ...எடுடிம்மா அந்தக் கடுதாசியை.

[கீழேகிடந்த கடிதங்களில் ஒன்றை சுப்புத்தாய் எடுக்கப்போக, கோபமாகி]

ராம்:- (மேலும் கேலியாக) அம்மா அறிவாளியைப் பெத்தவளே! அதல்ல......

[வேறு கடிதத்தைச் சுட்டிக்காட்டி.]

அதோ, அந்த அனுமார் படத்து கிட்ட விழுந்து கிடக்குதே அதை—

[சுப்புத்தாய் அதைக் கொண்டு வந்து கொடுக்க, அதைப் பிரித்தபடி]

ஏன், கசக்கி வீசிட்டிங்கன்னு... கேட்டயே......இதிலே என்ன எழுதி இருக்குது தெரியுமா...

[கீழே கிடந்த கடிதங்களை எல்லாம் காட்டி]

அதோ, எல்லாவற்றிலேயும் ஒரே விஷயம்தான் இருக்குது. எனக்கு அபிஷேகம், அர்ச்சனை-ஆராதனை.

உன் மகனோட புத்தகத்தைப் படித்துவிட்டு கண்ட கண்ட பய எழுதுகிறான், மனம்போன போக்கிலே

[கடிதத்தைப் படிக்கிறார்]

ஆதிக்க வெறி பிடித்து அலையும் ஆலை முதலாளி ராம்லால் எனும் பெயர் பெற்ற, பணக்காரப் பைசாசமே!

[சுப்புத்தாய் தன் வாயைப் பொத்திக்கொள்ளக் கண்டு...]

ஏன்! ஏன்! நல்லா, அழகா, தெளிவா, துணிவோடு எழுதறான், பைசாசமே!

சு:- (ஆத்திரத்துடன்) அடப்பாவி நாசமாப் போக...

ராம்:- ஏண்டி அவனைச் சபிச்சிக் கொட்றே, அவன் என்னடி



நினைவாற்றல்!

இளம் டாக்டர் ஒருவர், தன் முதிய நண்பரும் டாக்டருமான இன்னொருவரைப் பார்க்கச் சென்றிருந்தார். இளம் டாக்டர், முதியவரைப் பார்த்து சில வருஷங்களுக்குமுன் என்னிடம் வந்த ஒரு நோயாளியைப்பற்றிய சில விவரங்களும் மருத்துவமுறையையும் பற்றித்தங்களிடம் கேட்டேன் நினைவிருக்கிறதா? அதற்குத் தாங்கள் கூறிய யோசனைப்படி மருத்துவமும் செய்தேன் நோயாளி பிழைத்துவிட்டான்! ஆனால் சென்றவாரம் அதே நோய்க்குறியுள்ள மற்றொரு நோயாளி வந்தான்; அவனுக்கும் அதே மருத்துவத்தைச் செய்தேன்! ஆனல் இறந்து விட்டான் !! ஏன்? என்று கேட்டார்!

முதிய டாக்டர் அதனைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தார். "இதைக் கேட்டதும் எனது பழைய ஒரு குதிரையைப்பற்றி நினைவுக்கு வருகிறது!"—என்றார் அவர்.

முதியவர், "ஒருமுறை ஒரு சிறிய கிராமத்திற்கு, நான் எனது குதிரைமீது போய்க்கொண்டிருந்தேன். வழியில் ஒரு ஓடையைக் கடக்கவேண்டியிருந்தது. இருந்த பாலமோ, முதல் நாள் அடித்த புயலால் பாழாகிவிட்டிருந்தது. ஓடையைக்கடந்தேயாகவேண்டும்: அதனால் குதிரையைத் தட்டிவிட்டு, லகானை இழுத்துப்பிடித்து ஒரே பாய்ச்சலாகத் தாவச் செய்தேன்! செல்ல வேண்டியிருந்த இடத்திற்கும் சென்று மீண்டேன், இதேபோல, மறு வருடமும் அதே கிராமத்திற்குச் செல்லவேண்டி வந்தது. ஓடை வரையில் சென்ற குதிரை சட்டென்று நின்றது. பாலமோ பழுது பார்க்கப்பட்டு விட்டிருந்தது. ஆனல், குதிரையோ, இமைமூடித் திறப்பதற்குள் ஒரே தாவாகத்தாவி, ஓடையைக் கடந்தது!" என்று நிறுத்தினர்,

"இளம் டாக்டரோ விழித்தபடியே, டாக்டர்! நான் சொன்னதற்கும் இதற்கும் என்ன தொடர்பு!"'—என்று கேட்டார்.

"நிறைய இருக்கிறது! என் குதிரை, ஓடையைக் கடக்கவேண்டியிருந்த நிலையை, அப்படியே பசுமையாக நினைவில் வைத்திருந்தது!"—என்றார் முதியவர்! இளம் டாக்டரின் முகத்தில் ஈயாடவில்லை!!

செய்வான். ரொட்டித் துண்டு படித்ததாலே வந்த ஆவேசம் அது...என்னைக் கூடப் படிக்கச் சொல்லி எழுதியிருக்கான்.

[படிக்கிருர்]

பாதகனே!

[சுப்புத்தாய் சுட்டுவிடுவதுபோல பார்க்கக் கண்டு பேசுகிருர்]

என்னைச் சொல்ருண்டி!

[மார்பைத் தட்டியபடி]

என்னை!

[சிறிது உருக்கமான குரலில்]

தர்மிஷ்டன்னு பலபேர் சொன்னதை இந்தக் காதாலே கேட்டிருக்கறேன். பரோபகாரின்னும் சொல்றவங்க இருக்கிருங்க. கணக்கு வழக்கிலே கொஞ்சம் கண்டிப்பே தவிர அவருக்குத் தங்கமான மனசுன்னு நேத்துத் தான் இரும்புப் பட்டறை ஏகாம்பர வாத்தியாரு வாயாறச் சொன்ருரு, காதாரக் கேட்டேன்... (அழுத்தமாக) இவன் இருக்கானே உன் மகனுேடை சிஷ்யப் பிள்ளை, கொஞ்சங்கூடக் கூச்சமில்லாமே, தெளிவா,—பாதகனேன்னு பட்டம் சூட்டி, கூப்பிடுகிருன்—கூப்பிட்டு...

[படிக்கிருர்]

படித்துப்பார், ரொட்டித்துண்டு! பாரத் பூஷணன் எழுதியது. பாரத் பூஷண் யார்?

[படிப்பதை நிறுத்திவிட்டுப் பேசுகிருர்]

கேட்க வேண்டிய கேள்விதான்! நீ என்னடா, நானே அதே கேள்வியைத்தான், கேட்கிறேன்...

[மீண்டும் படிக்கிருர்]

பாரத் பூஷணன்; உன் மகன்! இலட்சியவாதி! ஏழை பங்காளன் ஏ! பணம் காக்கும் பிசாசே,

[படிப்பதை நிறுத்தி விட்டுப் பேசுகிருர்]

கேட்குதாடி காது! நாலு வரி முடியல்லே இதற்குள்ளே இரண்டாவது தடவை, பிசாசே! பணம் காக்கும் பிசாசே! சரியாத்தான் எழுதி இருக்கறே. சேர்க்கறேன், காக்கறேன்...... அவ்வளவுதான் - தின்னு ஏப்பம் விட இருக்காண்டா, அவன்; உன்னுேடை ஏழை பங்காளன்.

[மீண்டும் படித்தபடி]

உன்னிடம் கோடி ரூபாய் இருந்தும் யார் உன்னை மதிக்கிருர்கள்? பாரத்பூஷணனுக்கு நாடே மரியாதை காட்டுகிறது.

[உரத்த குரலில் படிக்காமல், மனதுக்குள் படித்துவிட்டு—பேசுகிருர்]

இதைக் கேட்டயா? பாரத் பூஷணன் யாராம் தெரியுமா?

[சுப்புத்தாய் விழிக்க]

ஏண்டி விழிக்கறே இப்படி? இவன் எழுதருண்டி...

[படிக்கிருன்]

எங்களுடைய மனக்கொதிப்பு தான் உனக்கு மகனுக வந்து பிறந்திருக்கிறது.

[சுப்புத்தாய் கடிதத்தைப் படித்து பிய்த்துப் போடுகிருள் கோபமாக.

ராம்லால், புத்தகத்தையும் தூக்கி எறிந்து...]

ராம்:- கொண்டுபோய் அடுப்பு நெருப்பிலே...ரொட்டித் துண்டு...ரொட்டித் துண்டு......

காட்சி 13

இடம்:- மணி மண்டபம் வெளிப்புறம்.

இருப்போர்:- பாரத் பூஷண் விழாத் தலைவர் விழா காண வந்தோர் தமிழாசிரியர்.

நிலைமை:- மாலைகளை ஒருவர் மோடாருக்குப் போடுகிருர்.

எமது வாடிக்கைக்காரர்களுக்கும் வியாபாரிகளுக்கும் நண்பர்களுக்கும்
மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

எல்லாவகையான B & C மில் ஜவுளி ரகங்களும் விற்பனை செய்வதுடன்,
கூட்டுறவு நிறுவன உறுப்பினர்களுக்கு ரொக்கத்திற்கும்
தவணை முறைக்கும் சப்ளைகள் செய்கிருேம்,

கணபதி ஸ்டோர்ஸ்,

போன்: 52424, 51055

501, திருவொற்றியூர் ஹைரோடு, சென்னை-21

விழாத் தலைவரிடம் விடை பெற்றுக் கொள்கிறான் பாரத்.

அனைவரும், கை தட்டி ஆரவாரம் செய்கிறார்கள். ஜே! ஜே! என்ற ஒலி எழுகிறது.

பாரத், காரில் உட்காருகிறான்.

நாலைந்து பேர், அருகே சென்று வணக்கம் கூறுகிறார்கள்.

அவர்களை விலக்கிக் கொண்டு தமிழாசிரியர் வருகிறார்.

தமிழ்:- பாரதா! ரொட்டித்துண்டு, விலை 15 ரூபாய். நானோ பரம ஏழை. ஆகவே விலை கொடுத்து வாங்கிப் படிக்க முடியவில்லை. இரவல் கேட்டால் யாரும் தருவதில்லை. ஆகவே, மாணவமணியே! உடனே எனக்கு ஒரு ரொட்டித் துண்டு அனுப்பிவைக்க வேண்டும். கிடைத்ததும், நூலைப் பாராட்டி ஒரு அகவல் இயற்றலாம் என்று துடியாய்த் துடிக்கிறேன்.

பாரத்:- ஆகட்டும்.... அப்படியே... அனுப்புகிறேன்...

[மோட்டார் புறப்படுகிறது. சிலர் 'ஜே' போடுகிறார்கள்.]

காட்சி 14

இடம்: அழகிய சிறு தோட்ட வீடு' முன்புறம்.

இருப்போர்: ஒரு முரடன், பாரத்பூஷண்.

நிலைமை: மோடார் வந்து தோட்ட வீட்டின் முன்புறம் நிற்கிறது.

பாரத்பூஷண் கீழே இறங்குகிறான். முரடன், கதவைத் திறந்து விடுகிறான்.

பாரத்:- (பதறியபடி) என்ன...... எப்படி இருக்கிறான்...?

முர:- ஒரே ரகளைங்க ... கதவைத் திறந்து வெளியே விடறியா, உடைக்கட்டுமான்னு கூச்சலிட்டு கலாட்டா செய்றான்...

பாரத்:- (வீட்டுக்குள்ளே நுழையாமல்) பாவம்! முத்திவிட்டிருக்கும்...

முர:- பைத்யக்காரச் சேஷ்டை பேச்சு, காணமுங்களா...தெளிவாத்தான் பேசறார்.

பாரத்:- கட்டுபோட்டு இருக்கவே, கூச்சலோட இருக்குது. அவிழ்த்துவிட்டா, பெரிய ஆபத்தாகிவிடும்.

முர:- அப்படிங்களா! சில நேரத்திலே கொக்கரிப்பது பயமாத்தான் இருக்குது. ஏனுங்க, நமக்கு ஏனுங்க வீணான தொல்லை. அவிழ்த்துத் துரத்தி விட்டாப் போகுது.

பார:- கூடாது...... கூடாது. அவனுக்குப் பைத்யம் என்பதுகூட யாருக்கும் தெரியக்கூடாது. ஜாக்ரதையா இரு நான், உடனே இதற்கு ஒரு ஏற்பாடு செய்துவிட்டு, வர்ரேன். (கை கடிகாரத்தைப் பார்த்தபடி) வேறு விசேஷம் உண்டா?

முர:- இல்லிங்க.

[மோடாரில் ஏறிக் கொள்கிறான். மோடார் புறப்படுகிறது]

காட்சி 15

இடம்: அயோத்யா மாளிகை உட்புறக் கூடம்.

இருப்போர்: ராம்லால்.

நிலைமை: களைத்துப் போயிருக்கிறார் ராம்லால்.

சாய்வுநாற்காலியில் படுத்துக் கண்களை மூடிக் கொண்டிருக்கிறார்.

பணியாள் ஓடோடி வந்து

பணி:- சின்னவரு வாராருங்க...

[ராம்லால் முகம் கடுகடுப்பாகிறது.]

ராம்:- (வெறுப்பும் கோபமும் காட்டி) யார்.....மேதாவியா? இங்கேயா...

[வேறோர் வேலையாள் மாலைகளைத் தூக்கிக்கொண்டு, மகிழ்ச்சியுடன் வருகிறான்.

மாலைகளைக் கண்டதும், ராம்லால் மேலும் ஆத்திரமடைந்து...]

ராம்:- மடையா! என்னடா இது... எடுத்துக்கொண்டுபோய் குப்பைமேடு பார்த்துப் போடு—இங்கே ஏன் எடுத்துக்கிட்டு வர்ரே...

[பாரத்பூஷணன் வருகிறான். "அம்மா!" என்று அன்புடன் அழைத்தபடி.

சுப்புத்தாய், உட்புறமிருந்து வருகிறார்கள். மகனை அன்பாக வரவேற்கவில்லை. சரியாகக் கூடப் பார்க்கவில்லை.

ராம்லால் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டிருக்கிறார்.

இருவரின் போக்கையும் கண்டு பாரத்பூஷண் சிறிதளவு திகைப்பு அடைகிறான்.]



பார:- (அவனுடன் அருகே சென்று) அப்பா—!

[ராமலிங்கம், அவனைத் திரும்பிக் கூடப் பார்க்காமல் இருக்கிறார்.]

பார:- என்ன அப்பா இது...

ராம்:- (கேலியாக) சுப்புத் தாயி! யாரோ வந்திருக்காங்க, பாரு. எங்கே வந்தாங்க, ஏன் வந்தாங்கன்னு கேட்டுப் பாரு...

[சுப்புத்தாய் கண்களைத் துடைத்துக் கொள்கிருள்.]

பாரத்:- (சிறிதளவு கோபமாக) என்னப்பா இது, என்னென்னமோ பேசுகிறீர்களே ... தங்களைக் காணவேண்டுமென்று துடியாய்த் துடித்துக்கொண்டு வந்தேன்... எரிந்து விழுகிறீர்களே ...—

ராம்:- (கேலியாக) என்னைக் காணவா வந்திருக்கே! தனியா வந்திருக்கயா, இல்லை, உன் படைகளைக் கூட்டிகிட்டு வந்தயா...

[துள்ளி எழுந்திருக்கிருன் பாரத், திடுக்கிட்டு இரண்டடி பின் வாங்கிச் செல்கிருன்.]

இங்கே எதுக்கு வந்தே? சுரண்டிப் பிழைக்கும் சுகபோகி இருக்கற இடமாச்சே. இங்கே, நீ, வரலாமா? பாவமாச்சே...!

பாரத்:-(தாயைப்பார்த்து) அம்மா! இது என்ன? அப்பா இப்படி எல்லாம் பேசக் காரணம் என்ன?

[சுப்புத்தாய் விம்முகிருர்கள்.]

ராம்:- (மேலும் கேலிக் குரலில்) நாடகமாடுது, குழந்தை. எதாச்சும் தெரியுமா, பாவம்...பப்பா—

[பாரத்பூஷண் தன் அருகே வரக்கண்டு கோபம் கொண்டு...]

கிட்டே வந்தே, வெட்டிப் போடுவேன் வெட்டி! நீ யார்டா, இங்கே வர? நீ மேதாவி! புரட்சிப் புலி! சீர்திருத்தச் சிங்கம்! உனக்கு இங்கே என்ன வேலை, உன்னுடை ரொட்டித் துண்டு இருக்குதே அதை யாருக்காக எழுதினயோ, அந்தக் கும்பலோடு போய்ச் சேரு...இங்கே என்ன வேலை?

பாரத்:- (புன்னகை காட்டி) ஏம்பா! ரொட்டித் துண்டு புத்தகம் படித்து விட்டதாலேத்தான் இத்தனை கோபமா!

[கைகளைத் தட்டிச் சிரிக்கிருன்.]

ராம்:- (கேலிக் குரலில்) செச்சே! கோபம் வரலாமா? நீ புதிய வேதமல்ல எழுதி இருக்கே! கொண்டாடல்ல வேணும்; உன்னை.

பாரத்:- (பெருமிதம் காட்டி) இப்போதுகூட ஒரு பாராட்டுக் கூட்டத்தை முடித்துக் கொண்டு தான் வந்திருக்கறேன்.

ராம்:- வரவேண்டாம்னு தான் சொல்றேன். காது கேட்கல்லே? வெறிப் பயல்க, கை தட்டின சத்தத்திலே காது செவிடாயிட்டுதா!

[பாரத்பூஷண், கூடத்தில் வேருேர் புறமிருந்த நிலைக்கண்ணுடி முன்னின்று உடையைச் சரிப்படுத்திக் கொண்டு...]

பார:- எனக்கு இலேசாகச் சந்தேகம் ஏற்பட்டுது, உலகமே பாராட்டினுக்கூட, அப்பா மட்டும் ஆத்திரமாகத்தான் இருப்பாருன்னு நினைச்சேன் ... சரியாப் போச்சி...

ராம்:- நான் ஆத்திரப்பட்டு என்ன செய்ய முடியும். என்னைத்தான்

அன்பர்கள் அனைவர்க்கும் எமது மனமார்ந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!

எல்லாவிதமான பருப்பு தினுசுகளும் வறுகடலையும்
உயர்தரமான தயாரிப்பாளர் & விற்பனையாளர்

எஸ். ஆர். திருப்பதி அன் பிரதர்ஸ்

[போன்: 52506]

60/1, M. C. ரோடு, வண்ணரப்பேட்டை,

சென்னை-21

யானை கீழே இழுத்துப்போட்டு, மிதிச்சு கூழாக்கிடப் போகுதே! எழுதி இருக்கறியே, உன்னுடைய புரச்சிப் புஸ்தகத்திலே...

பார:- (சிரித்தபடி) என்னு கோபம் வருதப்பா, உனக்கு...சரி...சரி...உள்ளே வாங்க... தனியாப் பேசணும், இரகசியம், அவசரம்......

ராம்:- (கோபம் குறையாத நிலையில்) உன்னோடு பேச்சா? ஏன்? தனியாகவா? என்ன செய்யப் போறே? கத்தி கட்டாரி எடுத்து வந்திருக்கறியா, கொலை செய்ய......

பாரத்:- (கோபமாக) போதும்பா உம்மோட ஆவேசப்பேச்சு... எழுந்து வாங்க உள்ளே...அவசரமான விஷயம்.

[ராம்லாலின் கரத்தைப் பிடித்து இழுக்கிறான், அவர் செல்ல மறுக்கிறார், சுப்புத்தாய் பயந்தேபோகிறார்கள்]

சு:- வேண்டாண்டா பாரத்து! வேண்டாம். விடரீதமா ஒண்ணும் செய்துவிடாதே! (பாரத்பூஷன் தலைசலை என்று ஆடித்துக்கொண்டு) எபத்யமா, உங்க இரண்டு பேருக்கும்.

[ராம்லால் சிறிதளவு பயந்தாலும், மூடுக்குக் குறையாமல், நிற்கிறார். பாரத்பூஷண், அவரைச் செல்லமாக, கரத்தைப் பிடித்து இழுத்து, உள் அறைப்பக்சம் போகிறான். சுப்புத்தாய், அதைப் பார்த்து—]

சு:- வேண்டாம்டா பூஷணம்! நான் போறேன் சமயககட்டுப் பக்கம், நீங்க இங்கேயே பேசுங்க—

[கூடத்து வெளிப்புறக் கதவைத்தாளிட்டுவிட்டு சுப்புத்தாய், சமயற்கட்டு நோக்கிச்செல்கிறார்கள். சோபாவைக் காட்டி ராம்லாலை உட்காரச்சொல்லி மரியாதை செய்கிறான், பாரத். அருகே ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டு, உட்கார்ந்தபடி]

பாரத்:- உட்காரப்பா! ஏம்பா! ரொட்டித்துண்டு படித்துவிட்டு, பயந்தே போய்விட்டயா...நம்ம மகனை இப்படிப்பட்ட முறையிலே எழுதினான்னு ஆத்திரம், உங்களுக்கு...

ராம்:- (கேலியாக) செச்சே! ஆத்திரம் வராலாமா, அறிவுக்கு அரசனுச்சரி! நீ எழுதிய புத்தகத்தைப் படிச்சதும், கட்டித் தழுவி உச்சிமோந்து, முத்தமிட்டவண்டமா, நானு...

பார:- போதும் நிறுத்துங்கப்பா. அப்பா! உங்களுக்கு அந்தப் புத்தகம் பிடிக்காதுன்னு எனக்கு நிச்சயமத் தெரியும். ஆனா, ஊராருக்கு ரொம்பப் பிடிச்சியிருக்கப்பா, இதுவரையிலே பத்து ஆயிரம் ரூபா என் பங்கு, தெரியுமா! பெயர், ரொட்டித்துண்டு, ஆனா குறைந்தது ஒரு இலட்சரூபா கிடைக்கும்னு தெரியுது—தெரியுதா!

ராம்:- (வெறப்பாக) ஆமாண்டா: கிடைக்கும். என்னை வெட்டி வித்தாக்கூடப் பணம் கிடைக்கும்...

பார:- (பதறி) அக்ரமமாப் பேசாதிங்கப்பா...

ராம்:- மானம்கெட்டு, மரியாதை கெட்டு உலாவறதைவிட, சாகலாம்டா, சாகலாம்.

பார:- ஏம்பா, இத்தனை ஆத்திரம். பெரிய பேரறிவாளரெல்லாம் புகழ்ந்து பேசறாங்க...

ராம்:- (ஆத்திரமாக) பேர், அறிவாளிடா, போ! தெரியுதா! அவனுங்களுக்கு என்ன! பாடுபட்டுப் பணம் சேர்த்தவனுங்களா...ஏட்டுக் சுரைக்காய்க...

பாரத்:- கொஞ்சம் ஆத்திரத்தைக் குறைச்சிகிட்டு இப்ப, வர இருக்கற ஆபத்தை—எனக்கு வர இருக்கற ஆபத்தைப்போக்க ஒரு வழி சொல்லுங்க...

ராம்:- உனக்கு, ஏன் ஆபத்து வரப் போகுது! ஊரே திரண்டு நிற்குதே உன்பக்கம், எல்லா அன்னக்காவடிகளுந்தான், உன்னோடு இருக்கிறானுகளே.....புரட்சி ஏற்படப்போகுதே, உன் புஸ்தகத்தாலே! முதலாளிகளெல்லாம் மூலைக்கு! ஓட்டாண்டிகளுக்கெல்லாம் ஒய்யார வாழ்வு! உன்னோட ஏடு, அதுதானே சொல்லுது—

பாரத்:- தொழிலாளர் தோழன், என்று என்னை ஊரே பாராட்டுது. உண்மை தெரியாததாலே, நீங்க ஏசிகிட்டு இருக்கறிங்க—ஏன்னா—

ஒப்பிடும் வாய்ப்பு!

இன்று காங்கிரஸ் நடத்திடும் ஆட்சி, வேறோர் கட்சியிடம் கிடைத்து அந்தக் கட்சி என்னென்ன சாதனைகளைப் பெற்றுத்தருகிறது என்று பார்த்து, இரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்து எது தாழ்ளது என்று தீர்மானிக்கவேண்டும்! ஆனால், வேறு ஒரு கட்சியின் ஆட்சி ஏற்பட்டு, அப்போது கிடைத்திடும் சாதனைகளுடன் ஒப்பிட்டுப்பார்த்தாலொழிய காங்கிரசின் சாதனைகளைப்பற்றிப் பெருமிதத்துடன் பேசுவதிலே பொருள் இல்லை!

ராம்:- தெரியவேண்டிய உண்மை எல்லாம் தெளிவாத் தெரிந்திருக்குடா, தெளிவாத் தெரிந்து இருக்குதன்னேன்.

பாரத்:- என்ன தெரிந்தது உங்களுக்கு. நான் ரொட்டித்துண்டு எழுதி, புயலைக் கிளப்பி விட்டேன்னு...உம்—?

ராம்:- புயலா? நாராசம்டா, நாராசம், நாசம்!

பாரத்:- (செல்லமாக ராம்லால் கன்னத்தைத் தடவியபடி) அப்பா! அப்பா! நடந்ததைக் கேளுங்கப்பா...

[ராம்லாலிடம் மெல்லிய குரலில் பாரத்பூஷண் பேசுகிறான். அவன், கூறும் போது, ராம்லால் மனக்கண்ணால் காண்கிறார், நடந்தவைகளை.]

[முன்பு நடைபெற்ற நிகழ்ச்சிகள்]

காட்சி 16

இடம்:- சிங்காரபுரியில் ஒரு தோட்ட வீடு

இருப்போர்:- பாரத் பூஷண், நண்பர்கள்.

நிலைமை:- தோட்ட வீட்டின் கூடத்தில், வட்டமேஜை போடப்பட்டு, அதைச் சுற்றிலும் நாற்காலிகளில் அமர்ந்துகொண்டு நண்பர்களுடன், பாரத்பூஷண் சிட்டாடிக்கொண்டிருக்கிறான். நண்பர்களில் சிலர், பாரத்துடன் கல்லூரியில் படிப்பவர்கள். பெரிய இடத்துப் பிள்ளைகள் என்பது விளங்கத்தக்க முறையில் உடை, நடை.

மின்சார விசிறி வேகமாகச் சுற்றிக்கொண்டிருந்தும், சீட்டாடுவோர்கிளப்பிவிடும் சிகரட்புகை, கூடத்தைக் கப்பிக்கொண்டிருக்கிறது.

சீமான்களின் வீட்டுப் பிள்ளைகள் சிலர், சிங்கார புரியில் பொழுதுபோக்க வந்தவர்கள், சீட்டாட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர். நோட்டுகள் வேகமாகக் கை மாறுகின்றன.

பாரத்பூஷணன் சீட்டாட்டத்தில மற்றவர்களைத் தோற்கடித்திருக்கிறான் என்பதை அவன் எதிரே குவிந்துள்ள பணமும், மற்றவர்களின் முகத்தில் உள்ள கவலையும் அதை மறைக்க அவர்கள் அசட்டுத்தனமாகச் சிரிப்பொலி கிளப்புவதும், நன்றாக எடுத்துக்காட்டுகிறது.

கூடத்தின் ஓர் கோடியில் இளைத்த நிலையில் காணப்பட்ட ஒரு இளைஞன் ஏதோ மும்முரமாக எழுதிக்கொண்டிருக்கிறான். அவன் எதிரே உளள மேஜைமீது பல புத்தகங்கள் இருக்கின்றன,

சீட்டாட்டக்காரரில் ஒருவன் சற்று உரத்த குரலில ஏதோ ஒரு சினிமாப்பாட்டைப் பாட ஆரம்பிக்கிறான்.

மற்றொருவன், மேஜை மீது தாளமபோடுகிறான்.

சத்தம் கேட்டு, எழுதிக்கொண்டிருக்கும் இளைஞன் முகம் சுளித்துக்கொள்கிறான்.

பாரத்:- (பாடுபவனைப் பார்த்து) டேய், அப்பா, சங்கீத வித்வான்! போதும்டா உன்னுடை சங்கீதம். கதிர்வேலு எழுதுவது கெட்டு விடப்போகுது .....கதிர்வேல்!... இன்னும் எத்தனைப் பக்கம் இருக்கு...

சீட்டாடும் ஒருவன்:- என்னத்தை எழுதிக்கிட்டு கிடக்கறான் கதிரு!

பாரத்:- நம்ம, பாடம்தான்...

கதிர்:- உங்க பாடம் அப்பவே எழுதி முடிச்சாச்சே...

பாரத்:- இப்ப என்ன எழுதறே ...—?

சீட்டாடும் ஒருவன்:- எதையோ கிறுக்கறான் — நீ பார்த்துப் போடடா, சீட்டை.

பாரத்:— பேச்சிலே கவனம் பிசகி சீட்டாட்டத்திலே கோட்டை விட்டுவிடுவேன்னு நினைக்கிறயா? அதுதான் கிடையாது இவரிடம்!

[வெற்றி பெற்றதாகச் சீட்டைக் காட்டி பணத்தைக் குவித்துக்கொள்கிறான்.]

[கதிர்வேல் இருமுகிறான்]

பாரத்:- கதிரு' கலையிலே எழுதிக் கொள்ளேன்...போய்த் தூஙகு.

கதி:- (ஏக்கத்துடன்) தூக்கம் எங்கே வருது?

பாரத்:- உன் ரூமுக்குப் போய்த் தூங்கு.

கதி:- அங்கே மட்டும்...

சீட்டாடுபவன்:- அவன் மனசிலே தான் என்னமோ புகுந்துகிட்டுக் குடையுதே. தூக்கம் வருமா?

பார:- என்னதான் எழுதறே?

கதி:- ஒரு காவியம்.

சீட்டா:- பலே! பலே! காவியமே எழுத ஆரம்பித்துவிட்டா... இனி உருப்பட்டது போலத்தான்...

[கதிர்வேல், எழுதிய தாட்களை எடுத்துக்கொண்டு, வேறு அறைக்குச் செல்கிறான்.
அவன் சென்றபிறகு]

சீட்டா:- பாரத்' இந்தக்கதிர்வேலு எப்படி உன்னோடு சேர்ந்தான்.

பாரத்:- (அலட்சியமாக) நம்மஊர் ...ஏழைப்பய...கல்லூரிச் செலவுக்கே கஷ்டம்—

சீட்டா:- கையிலேதான் காசுகிடையாதே, பயலுக்குக் கல்லூரிப் படிப்பு எதற்காக?

பாரத்:- எங்க அப்பா அதையேத்தான் கேட்பாரு...இவன் திருதிருன்னு விழிப்பான...

மற்றொருவன்:-சுத்த லூஸ்! செமிகிராக! சதா எழுதி எழுதிக்கிழிச்சிக் குப்பையாக்கறதே வேலை.

பாரத்:- கிடக்கறான்...நீ பணத்தைப்போடு...

[போடப்பட்ட பணத்தை அலட்சியமாகக் குவித்துக்கொண்டு, கைகடிகாரத்தைப்பார்க்கிறான்.]

[பல நாட்களுக்குப் பிறகு]

காட்சி 17

இடம்: பாரத்பூஷண் விடுதி—கூடம்.

இருப்போர்: பாரத்பூஷண்

நிலைமை: பாரத்பூஷண் ஒரு அழகியின் படத்தைச் சுவற்றிலே

முத்தமிழ் முழங்குக!

"பைந்தமிழ்க் கல்லூரி"

திண்டுக்கல் (மதுரை மாவட்டம்)

அறிவிப்பு

1967 ஜூன் முதல் அரசினர் அங்கீகாரத்துடன் வித்துவான் இடைநிலை வகுப்புக்கள் துவங்கப் பெறும் என்பதை மகிழ்வுடன் அறிவிக்கின்றோம். தமிழ் வளர்ச்சிக்கு ஆவனவெல்லாம் செய்வோம்.

ஆட்சிக்குழுத் தலைவர்:
தமிழ் வள்ளல், திரு. உ. சின்னச்சாமிப் பிள்ளை.

செயலாளர் & முதல்வர்:
வித்துவான், இரா, இளயநம்பி.

மாட்டி, அழகு பார்த்துக் கொண்டிருக்கிறான்.

சீட்டாட்டம் கலைந்துவிட்டதைக் காட்டும் விதமாக நாற்காலிகள் தாறுமாறாக உள்ளன. கீழே நிறையச் சிகரட் துண்டுகள் விழுந்து கிடக்கின்றன.

இருமல் சத்தம் கேட்டு பாரத் திரும்பிப் பார்க்கிறான்.

கையில் ஒரு பெட்டியுடன் கதிர்வேல் வந்து நிற்கிறான்.]

பாரத்:- எங்கே பிரயாணம், கதிர்வேல்?

கதி:- உன்னிடம்தான் வந்தேன்... பாரத்பூஷண்! அவசரமாக இருபது ரூபாய் வேணும்.

பாரத்:- இருபது ரூபாயா?

கதி:- கடன், இனாம் அல்ல.

பாரத்:- இருபது ரூபாய்! உம்! சீட்டாட்டத்திலே எவ்வளவு போச்சு, தெரியுமா?

கதி:- இருபது ரூபா கொடுக்காவிட்டா, மானம்போகும்...சாப்பாட்டு விடுதியிலே கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள் பாரத் வேறு வழியே இல்லை.

பாரத்:- கடன் வாங்கிவிடலாம் கதிர்வேல்! திருப்பிக் கொடுக்கணுமே. வழி!

கதி:- இதோ இந்தப் பெட்டியை ஈடாக வைத்துக்கொண்டு கடனாக இருபது கொடு.......பத்தே நாளிலே திருப்பிக் கொடுத்து விடுகிறேன். இரண்டு சிறுவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்க இன்று ஏற்பாடாகி விட்டது. பணம் கொடுப்பார்கள்...கொடுத்ததும்...

பாரத்:- (கேலியாக) பெட்டி என்ன வெள்ளியா ஈடுவைக்க...

கதி:- ஒரு முறைக்காகத்தானே.— என்னை நம்பி ஒரு இருபது ரூபா கடன் கொடுக்கக்கூடாதா?

[பாரத்பூஷண் மணிபர்சிலிருந்து 20 ரூபாய் எடுத்துக் கொடுக்கிறான்.

நன்றி தெரிவித்துவிட்டு, பெட்டியை, பாரத் அறையில் வைத்துவிட்டு, கதிர்வேல் போகிறான்.]

[பல நாட்களுக்குப் பிறகு]

காட்சி 19

இடம்: பாரத்பூஷண் அறை

இருப்போர்: பாரத்பூஷண்

நிலைமை: நண்பர்கள் யாரும் இல்லாததால், பாரதபூஷண், கட்டிலில் படுத்துப் புரள்வதும், ரேடியோவைத் திருப்புவதும், மீண்டும் நிறுத்துவதுமாகப் பொழுதை ஓட்டிக்கொண்டிருக்கிறான்.

கண் கவரும் அட்டைப் படங்கள் கொண்ட பத்திரிகைகள் மூலைக்கு மூலை இறைந்து கிடக்கின்றன.

சிகரட் பற்ற வைத்து, புகையை வெளியே விட்டுக் கொண்டிருக்கிறான் சில விநாடிகள்.

சலித்துப் போய் சிகரட்டை அணைத்துப்போட்டு விட்டு, குளிர்பான அறைக் கதவைத் திறந்து பழச்சாறு எடுத்துப் பருகுகிறான்; அதிலேயும் பாதியை வைத்து விடுகிறான்.

தற்செயலாக, கதிர்வேலு வைத்து விட்டுப்போன பெட்டிமீது பார்வை விழுகிறது.

திறந்து பார்க்கிறான். பெட்டி நிறைய எழுதி ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்ட காகிதக் கட்டுகள் காணப்படுகின்றன.

பெரிய எழுத்தில் 'ரொட்டித் துண்டு' என்ற தலைப்பும் இருப்பது தெரிகிறது.

அதை எடுத்துப் பார்க்கிறான்; சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு படித்துப் பார்க்கிறான்.

இரண்டொரு பக்கங்கள் படிக்கும்போதே, சுவை தட்டுகிறது.

மேற்கொண்டு படித்துப் பார்க்கிறான்.

பாரத்! பாரத்!

என்று குரல் கேட்கிறது, வெளிப்புறமிருந்து பாரத், "வாடா, ரமணா" என்று பதில் குரல் கொடுக்கிறான்.

நண்பன் வருகிறான்; பாரத் பூஷண் படித்துக் கொண்டிருப்பதைக் கண்டு.

நண்:- என்னடா அதிசயம் இது! ஒரே அடியாகப் படிப்பிலே மூழ்கிவிட்டிருக்கே?

பாரத்:- வா! வா! நன்றாக இருக்கிறதா என்று பார்த்துச் சொல்லு.

[காகிதக் கட்டைத் தருகிறான்.]

நண்:- (வாங்கிப் புரட்டிப் பார்த்தபடி) என்னது? ரொட்டித் துண்டா? பலே! பலே! கதையா? கதை எழுதிவிட்டாயா நீ? அடிச் சக்கேன்னானும்! ... [சில பக்கங்க



ளைப் படித்துப் பார்த்து] கதை இல்லா ... பெரிய காவியமா இருக்கே—(மரியாதையான முறையில்) பாரத் பூஷண்! எப்படி இவ்வளவு நலதா எழுதனே! அற்புதமா இருக்குதே! சதா சீட்டாடிக் கொண்டு இருக்கிற ஆசாமி...

பா:- சீட்டாட்டம் முடிஞ்சி நீங்க எழுந்து போன பிறகு படுத்துத் தூங்கிவிடுவேனு? உட்கார்ந்து யோசனை செய்து எழுதறது...

நண்:- புரட்சிகரமானதா இருக்குது பாரத்! (படிக்கிருன.) ஏழைகளைக் கசக்கிப் பிழிந்து பணக்காரன் குவிக்கும் பவுன்கள், மூட்டைமூட்டையாக மாளிகைகளிலே உள்ளன. ஆனல் அவைகளெல்லாம் ஒரு காலத்தில் வெடிகுண்டுகளாகி மாளிகைகளை மண்மேடுகளாக்கும்.

பாரத்:- (திடுக்கிட்டு) மாளிகைகள் மண்மேடுகளாகுமா? உட! அப்படியா இருக்குது ... (சமாளித்துக் கொண்டு) ஆமாமாம்! பிரன்ச்சுப் புரட்சி என்ருல் என்னவாம்...

ந:- (ஆர்வத்துடன்) பாரத்! இது அச்சாக வேண்டும் ... அதுவும் எங்கள் போர்க்கோலம் அச்சகத்திலே! அதிர்ச்சி! சமூகத்திலே பெரிய அதிர்ச்சி ஏற்படப் போகிறது! உன் பெயர் எட்டுத்திக்கும் பரவப் போகிறது.

பாரத்:- இரு! இரு! ஒரே அடியாகப் புகழ்ந்துவிடாதே. உன் அப்பா இந்தப் புத்தகம் விலை போகும் என்று நம்பி அச்சடிக்க வேண்டுமே!

ந:- பணம் கொடுத்து, நாமே அச்சடித்து விற்ருல் என்ன?

பாரத்:- நமக்கு வேண்டாம் அந்த வீண்வேலை. அவரே போடட்டும், விற்கட்டும் ... இலாபம் வந்தா, எனக்கு ஒரு பங்கு கொடுத்தால் போதும்...

நண்:- சரி! நானே அப்பாவிடம் பேசி ஏற்பாடு செய்கிறேன்.

பாரத்:- ஒரே ஒரு நிபந்தனை! புத்தகம் வெளி வருகிற வரையில், விஷயம் யாருக்கும் தெரியககூடாது.

நண்:- வெடிகுண்டுபோல, திடலென்று புத்தகம் வெளி வரவேண்டும், அவ்வளவுதானே ...சரி...

[காகிதக் கட்டுகளை எடுத்துக்கொண்டு போகிருன்.

சிகரட் பிடித்தபடி, பாரத் உலவுகிருன் கூடத்தில், பலமான யோசனை செய்தபடி.

தள்ளாடித் தள்ளாடி நடந்து வருகிருன். கதிர்வேல்.

பாரத் பூஷண் ஒரு கணம் பயம் கொள்கிருன்; மறுகணமே சமாளித்துக் கொண்டு, சிரித்த முகத்தோடு, கதிர்வேலுவை அணைத்தபடி வரவேற்கிருன. அணைத்துக்கொள்ளும் போதுதான், கதிர்வேலுவின் உடம்பு நெருப்பாகக் கொதிப்பது தெரிகிறது]

பாரத்:- (பதறியது போலாகி) அடாடா! கதிர்வேல்! என்ன இது...வ்வளவு கடுமையான ஜுரம் கண்டுமா எனக்கு ஒரு வார்த்தை சொல்லி அனுப்பவில்லை...

கதிர்:- (மூச்சுத் திணறும் நிலை) யில்) நாலு நாட்களாக இப்படியேதான இருக்கிறது...தனியாக இருக்கப் பயமாகிவிட்டது, அதனுலேதான், நீ இருக்கிற இடத்திலே போய் விழுந்துவிடுவோம் என்று வந்து விட்டேன்...

பாரத்:- (கனிவு காட்டுபவன் போல) பைத்யக்காரன்! நான் வேறே எதற்குத்தான் இருக்கிறேன், வா! வா!

[அணைத்தபடி உட்புற அறைக்கு அழைத்துச் சென்று தன் படுக்கையிலே படுக்க வைத்து...]

பேசாமல் படுத்துக்கொள்... டாக்டரை வரச் சொல்கிறேன்... பயப்படாதே...டேய்! எல்லப்பா எல்லப்பா...!

[பணியாள் ஓடோடி வருகிருன்]

வாசற்படியைவிட்டு அப்படி இப்படி நகரக் கூடாது...தெரிகிறதா...கதிர்வேலுக்குக் கடுமையானகாய்ச்சல். நீதான் கண்ணுங் கருத்துமா கவனித்துக்கொள்ள வேண்டும், தெரிகிறதா...

[ஒருபோர்வையை எடுத்து கதிர்வேலு மீது விரித்து விட்டு, அறைக் கதவை சாத்திக்கொண்டு வெளியே செல்கிருன்.]

காட்சி 20

இடம்: போர்க்கோலம் அச்சகம்.

இருப்போர்: அச்சகத்தில் பணியாற்றுவோர்.

நிலைமை: ரொட்டித்துண்டு புத்தகம் வேகமாக அச்சாகிக் கொண்டிருக்கிறது.

மெஷினிலிருந்து, அச்சான தாட்களை எடுத்துச் சிலர் அடுக்கிக்கொண்டிருக்கிருர்கள்.

சிலர், அச்சான தாட்களைப் படித்துச் சுவைத்துக் கொண்டிருக்கிருர்கள்.

வேருேர் பக்கம், கட்டு கட்டாக அச்சான பகுதிகள், புத்தகவடிவில் அடுக்கி வைக்கப் பட்டுள்ளன.

மூக்குக் கண்ணுடி போட்ட ஒருவர், பிழை திருத்திக்கொண்டிருக்கிருர்

காட்சி 21

இடம்: பாரத்விடுதி உட்புற அறை.

இருப்போர்: கதிர்வேல், டாக்டர், பாரத்பூஷண்.

நிலைமை:- அசைவு அதிகமில்லாமல் படுக்கையில் கிடக்கும் கதிர்வேலுவை, டாக்டர் பரிசோதித்துப் பார்க்கிறார்.

டாக்:- டைபாயிட்...

பாரத்:- சந்தேகப்பட்டேன்...

டாக்:- ஜாக்ரதையாகக் கவனித்துக்கொள்ளவேண்டும்.......ஒரு வாரம் போகவேண்டும், நல்ல நிலைமை தெரிய.........உடலிலே வலிவே இல்லை......

பாரத்:- டானிக் கொடுக்கலாமா...

டாக்:- (இலேசான புன்னகையுடன்) ஆசாமி பிழைத்து எழுந்திருக்கட்டும் முதலில், பிறகு டானிக் சாப்பிடலாம்...

பாரத்:- பயம் இல்லையே...

டாக்:- எனக்கென்ன பயம்......... இதைவிட மோசமான வியாதிக்காரனை எல்லாம் பார்த்திருக்கிறேன்—

பாரத்:- இவன் உயிருக்கு...?

டாக்:- உத்திரவாதம் கேட்கிறாயா தம்பி!......பயப்படாதே.....ஒரு பத்துநாள் முன்னதாகவே வந்திருக்கவேண்டும்...இருந்தாலும் பரவாயில்லை ....நான் பார்த்துக் கொள்கிறேன்.

[டாக்டரும், பாரத்பூஷணும் என்ன பேசிக்கொள்ளுகிறார்கள் என்பது தெரியாத நிலையில் கிடக்கிறான், கதிர்வேல்.]

காட்சி 22

இடம்: நெடுஞ்சாலை.

இருப்போர்: பலர்

நிலைமை: பத்திரிகைகளின் விளம்பரத் தாட்களைக் கடைக்காரர்கள், தமது கடையிலே தொங்க விடுகிறார்கள்; அதிலே கொட்டை எழுத்தில் ரொட்டித் துண்டு என்ற விளம்பரம், காணப்படுகிறது.

சில இடங்களில் ரொட்டித் துண்டு பற்றிய விளம்பரத் தாளை ஒட்டுகிறார்கள் சுவர்களில்.

புத்தகக் கடைகளில் ரொட்டித் துண்டு புத்தகம் காணப்படுகிறது.

பலர் ஆவலோடு வாங்குகிறார்கள்.

கடைக்காரர், ஒரு பிரதி எடுத்துப் படித்துக்கொண்டிருக்கிறார், சுவைத்து. போர்க்கோலம் அச்சகத்திலிருந்து புத்தகக் கட்டுகள் லாரியில் ஏற்றப்படுகின்றன.



ஐயாயிரம் ரூபாய் செக் தருகிறார், பாரதபூஷணுக்கு அச்சக முதலாளி.

வெளியே உலவப்போன பாரத்பூஷணனைச் சூழ்ந்துகொண்டு, நண்பர்கள் பாராட்டுகிறார்கள்.

காட்சி 23

இடம்: பாரத்தின் விடுதி உள் அறை.

இருப்போர்: கதிர்வேல்.

நிலைமை: நடமாடச் சக்தியற்று கதிர்வேல் படுக்கையில் கிடக்கிறான்.

வேலையாள், ரொட்டித் துண்டு என்ற பெயருள்ள புத்தகம் படித்துக்கொண்டிருக்கக்கண்டு, பதறி, அதைக் கேட்டு வாங்கிப் பார்க்கிறான். தன்னையுமறியாமல் ஆர்வம் பொங்கக் கூவுகிறான்.]

கதி: வெளிவந்துவிட்டதா! புத்தகமாகிவிட்டதா...!

வேலை:- ஊரே கொண்டாடுதே அற்புதமான ஏடு என்று...

கதி:- பாராட்டுகிறார்களா...

வேலை:- சகலரும்! எல்லாப் பத்திரிகைகளும் பாராட்டி எழுதிவிட்டன புத்தலக ஏடு! புரட்சிஏடு! என்றெல்லாம்...

கதி:- ஆமாம்......,சந்தேகமென்ன! புரட்சிஏடுதான்! சமூகக் கேட்டினைப் பொடிப்பொடியாக்கிடும் சம்மட்டி! ஆஹா! காய்ச்சல் காததூரம் ஓடிவிட்டது. களிப்புக் கடலில் மூழ்கிக்கொண்டிருக்கிறேன். ஆடிப்பாடலாம். ஓடி விளையாடலாம் என்று தோன்றுகிறது. பத்து வருஷத்துச் சிந்தனை! பத்து வருஷம், சமூகத்தைப் பார்த்துப் பார்த்துப் பதைத்து, பிறகு சிந்தித்து ஆராய்ந்து கண்ட உண்மைகள்; அவ்வளவும் அந்த ஏட்டிலே உள்ளன.

வேலை:- பத்து வருஷமாகவா சிந்தனை? அவ்வளவு ஆழமான சிந்தனை இருந்ததாத் துளிகூடக் குறி இருந்ததே இல்லையே...

[புத்தகத்தை மீண்டும் பார்க்கிறான் கதிர்வேல்!

பாரத்பூஷண் எழுதியது என்று இருக்கக்கண்டு, பதறி, 'ஓ'வெனக் கூச்சலிட்டு விடுகிறான்.]

கதி:- (அடக்கமுடியாத ஆத்திரத்துடன்) இது என்ன அக்ரமம்! என்ன அநியாயம்! துரோகம்! பாரத்பூஷணன் எழுதினான் என்று இருக்கிறதே. என் சிந்தனை! என் எழுத்து! நான் பெற்றெடுத்த குழந்தை! என் படைப்பு! ஏன் புத்தகம்! ஐயோ! ஐயய்யோ......மோசம்

போனேன்...மோசம் செய்துவிட்டானே...

வேலை:- (பயந்துபோய்) ஐயா! ஐயா!

கதிர்:- (ஆத்திரம் மேலிட்டவனுகி) எங்கே என் பெட்டி? பெட்டி எங்கே? அதிலே நான் வைத்திருந்த செல்வத்தை, சந்தனை செல்வத்தை, படுபாவி, களவாடி இப்படிச் செய்துவிட்டாளே.

[ஆவேசம் வந்தவன் போலாகி]

விடமாட்டேன்! விடவேமாட்டேன். ஊர் திரட்டுவேன் ... உண்மையை உலகறியச் செய்வேன்...பாரத் பூஷணன் செய்த படுமோசத்தை எடுத்துக் கூறுவேன்...

[அழுகுரலில்]

அடப்பாவி! எத்தனை இரவுகள் கண் விழித்தேன் — எண்ணி, எண்ணி உருகிக் கிடந்தேன். சேரிகள் சுற்றினேன்—வறுமைத் தேள் கொட்டியதால் வதைபட்டுக் கிடக்கும் மக்களைக் காண. உரையாடினேன், அவர்கள் உள்ளத்தைத் தெரிந்து கொள்ள. மாடாக உழைத்து ஓடாகிப் போன பாட்டாளிகள் படும் துயரத்தைப் பார்த்துப் பார்த்து, நான்வடித்த இரத்தக்கண்ணீரை அல்லவா, என் எழுதுகோலுக்கு மை ஆக்கினேன்...ஐயோ...

[தலையில் அடித்துக் கொள்கிருன்.]

வேலையாள் அருகே செல்லவே பயப்படுகிருன் கதிர்வேல் நிலைமையைக் கண்டு.

பாரத்பூஷணன் ஓசைப் படாமல் வருகிருன்.

கதிர்வேல் அலறுவதைக் கேட்டுவிடுகிருன்.

கதிர்வேலுக்குத் தெரியாமல் வேலையாளுக்கு ஜாடை காட்டுகிருன், வரச்சொல்லி.

கதிர்வேல், ஆத்திரத்தால் அலறியதால் மயக்கம் மேலிட்டு, படுக்கையில் சாய்ந்துவிடுகிருன்.

வேலையாள் கூடத்தில் இருக்கும் பாரத்பூஷணனிடம் வருகிருன்.

பாரத்:- (மெதுவாக) பாவம்! ஜுர வேகத்தால் மூளை குழம்பிவிட்டது...எழுந்து ஓடிவிட்டாலும் ஓடிவிடுவான்...பிறகு உயிருக்கே ஆபத்தாகிவிடும்...

வேலை:- என்னென்னமோ உளறுகிருரே!

பார:- மூளையிலே கோளாறு ஏற்பட்டால் அப்படித்தான். நான்தான் நாட்டை ஆளும் ராஜா என்று ஆர்ப்பரிப்பான். ஊரில்

உள்ளது எல்லாம் என் உடைமை என்பான். கொக்கரிப்பான்.

வேலை:- ரொட்டித் துண்டு. தன்னுடையதாம், பதறுகிருன், கதறுகிருன்.

பார:- பரிதாபம்! பரிதாபம்! என்ன செய்யலாம். கொஞ்ச நாளைக்கு வெளியே விடாமல் உள்ளேயே கட்டிப் போட்டுவைக்க வேண்டும். வெளியே தெரிந்தால் வெட்கக்கேடு. அடித்து நாசம் செய்துவிடுவார்கள் பாவம்! போ! போ! பக்குவமாகப் பேசிக்கொண்டே கட்டிப் போட்டுவிடு — கதவை வெளிப்பக்கம் பூட்டிவிடு. வாசற்படியைவிட்டு நகராதே...இதற்கு ஒரு தெரிந்த டாக்டர் இருக்கிரு், வரவழைக்கிறேன். நம்மால் ஆனதைச் செய்துபார்ப்போம்...

காட்சி 24

இடம்: அய்யா மாளிகை தனி அறை.

இருப்போர்: ராம்லால் பாரத் பூஷண்.

நிலைமை: பாரத்பூஷண்சொன்னது கேட்டு, ராம்லால் ஆனந்தம் அடைகிறார். முதுகில் தட்டிக்கொடுக்கிறார். அணைத்துக்கொள்கிறார்.

பாரத்:– (சிறிதளவு கவலையுடன்) ஊரெல்லாம் பாராட்டு! விருந்துவைபவம்! தொழிலாளர் தோழன் என்ற பட்டம்! உலக எழுத்தாளர் மகாநாட்டுக்கே அழைப்பு வந்திருக்கிறது அப்பா! இந்தச் சமயத்தில் கதிர்வேல் வெளியே வந்து, கண்டபடி உளறினால், என்கதி என்ன ஆகும்? ரொட்டித்துண்டு நான் எழுதியது அல்ல என்று தெரிந்துவிட்டால், கல்லால் அடிப்பார்கள், காரித்துப்புவார்கள். பெரிய ஆபத்திலே சிக்கிக்கொண்டேன் அப்பா! என்ன செய்வது.

ராம்:– என் வயிற்றில் பால்வார்த்தாயடா மகனே! பதறிப்போனேன், படித்ததும். ஆலைக்குச் சொந்தக்காரனுகி, அதிகாரம்செலுத்தவேண்டியஎன் மகனு இப்படி எழுதினான் என்று ஆத்திரம் எனக்கு.

பாரத்:– ஏம்பா! ரொட்டித்துண்டு புத்தகத்திலே இருப்பதெல்லாம் என் எண்ணம், எனக்குச் சம்மதமான எண்ணம் என்று எண்ணிக்கொண்டுவிட்டீர்கள்?

ராம்:– வேறு எப்படி நினைப்பது? நாடே கூறுதே. புத்தகம் நீ எழுதியதாகத்தானே இத்தனை பாராட்டுதல்.

பாரத்:– பைத்யக்காரர் அப்பா, நீங்கள். ஏழை எளியவர்கள் என்ன எண்ணுவார்கள், என்னென்ன பேசுவார்கள் என்பதை எடுத்துக்காட்டுவது அந்தப் புத்தகம். எனக்கா அப்பா! அந்த எண்ணம் தோன்றும்.

ராம்:– ஊரே நம்பும்போது...

பாரத்:– ஊர் எதை நம்பவில்லை இதை நம்பாதிருக்க, அப்பா! அது கிடக்கட்டும், நமக்கு இது ஒரு விதத்திலே நல்ல வாய்ப்பு, இனி நானே தொழிலாளர் தலைவனுகிவிட முடியும். என் வார்த்தைதான் அவர்களுக்குச் சட்டம். ஆலையிலே வருகிற ஆதாயம் உங்களுக்குத்தான் ஆனால் இப்போது கொடுத்தால் வீணுகச் செலவழித்து விடுவீர்கள், சேர்த்து வைத்து, பிறகு தருகிறேன் என்று நான் சொன்னால் மறுக்கமாட்டான் எந்தத் தொழிலாளியும். ஆலைநிர்வாகத்தை நானே ஏற்றுக்கொண்டு நடத்தலாம்; தொல்லை, இல்லை ... எல்லாம் சரி...ஆனால் கதிர்வேலுவுடைய வாயை மூடவேண்டுமே அதற்கு வழி?

ராம்:– (பெருமிதத்துடன் மகனைப் பார்த்து) உனக்கா தெரியாது... நம்ம வழிகளெல்லாம், ரொம்பப் பழசு...கரடு முரடா இருக்கும்... அறிவாளாலே வெட்டற மாதிரி இருக்கும்... நீயே யோசனை செய்தா, நல்ல வழி தெரியும்...

பாரத்:– ஒரு வழி இருக்குதப்பா! உன்னோட நண்பர் டாக்டர் லோகன், உதவி செய்தா...

ராம்:– சொன்னால் செய்கிறார்... நமக்குப் பலவிதத்திலும் கட்டுப்பட்டவர்; என்ன செய்யணும், சொல்லு...

பாரத்:– கதிர்வேலுவுக்குப் பைத்யம் பிடித்துவிட்டது என்று கூறி, பைத்யக்கார விடுதிக்கு அனுப்பிவிடவேண்டும்......

ராம்:– பலே! பலே! சரியான யோசனை. ஏற்பாடு செய்கிறேன்.........இரு! இரு! உன் அம்மா காலை முதல் கண்கலங்கிக்கொண்டு இருக்கிறு....குடும்பத்திலே கொந்தளிப்பு வந்துவிட்டது என்று...... ....பாவம்! நானும் அவளை அதிகமாகத்தான் வாட்டிவிட்டேன். என் மகன் எப்படிப்பட்டவன் என்பதைக் கண்ணுலேரக் காணட்டும்.

[உரத்த குரலில்]

சுப்புத்தாயி! சுப்புத்தாயி!

[சுப்புத்தாய், தயக்கத்துடன் வருகிறுள். தந்தையும் மகனும் மகிழ்ச்சியாக இருக்கக்கண்டு, முதலில்



ஜன்னலின் கதை?

புதிதாக மணம் புரிந்துகொண்ட இளம் தம்பதிகள் இருவரின் இனிய பேச்சுக்கிடையே கணவன், எதிரே இருந்த ஒரு ஜன்னலைச் சுட்டிக்காட்டி, மனைவியிடம்

" இந்த தீய ஜன்னலைப்பற்றிய கதையை நீ கேட்டிருக்கிறாயா?.'— என்று கேட்டான்,

"இல்லை" என்றுள் அவள். உடனே கணவன் "அப்படியானும் நல்லது! இதன் மூலம் நீ எதனையும் எப்போதும் பார்க்க முடியாது!" என்றுன்.

சில நாட்களுக்குப் பிறகு அவளது தோழி ஒருத்தி அந்த வீட்டுக்கு, வந்திருந்தாள். அந்த ஜன்னலைச் சுட்டிக் காட்டி "இந்த ஜன்னல் மூலம் நீ எதனையும் எப்போதும் பார்க்க முடியாது என்ற கதையைக் கேள்விப்பட்டிருக்கிறுயா? என்று கேட்டாள்,

தோழியும் இல்லை, என்றே கூறினுள்,

அவள் சொன்னுள்: "மிகவும் நல்லது!" அதைப்பற்றி எதைச் சொல்வதானுலும், அது தீயதாகவே இருக்கும்!!

திகைக்கிருள், மெள்ள மெள்ள முகம் மலருகிறது.)

சு:- ஆண்டவனே! கஷ்டமெல்லாம் தீர்ந்ததா? பாரதா! உன் அப்பாவும் நீயும் சண்டை சச்சரவு இல்லாமல் இருந்தாத் தாண்டாப்பா, நான் உயிரோடு இருக்கமுடியும்.

ராம்:- (மகிழ்ச்சி பொங்க) பைத்யமே! பைத்யமே! என் மகனுக்கு என்னடி! துப்பாக்கி வயத்திலே பீரங்கிட அவன்; என் மகன்.

[பாரத் பூஷணனை அணைத்தபடி]

என் மகன்டி! என் மகன்!!

[சில நாட்களுக்குப் பிறகு]

காட்சி : 5

இடம்: ஒரு வைத்திய விடுதி

இருப்போர்; டாக்டர், கதிர்வேல், பணியாட்கள்.

நிலைமை:- பைத்யக்கார விடுதியின் வண்டியில், கதிர்வேலுவை ஏற்றி உட்காரவைக்கிருர்கள். கதிர்வேலுவின் முகம் பயங்கரமாக இருக்கிறது.

ஆடை கந்தலாகி அழுக்கேறி இருக்கிறது.

வண்டி புறப்படுகிறது. கூடி இருந்த சிறுகும்பலை போலீஸ் மிரட்டித் துரத்துகிறது,

ஏழ்மைக் கோலத்தில் ஒரு கிழவர் மட்டும் அங்கேயே திகைத்து நின்று வண்டி போன திக்கு நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிருர்.

போலீஸ்காரர் ஒருவர் அவர் அருகே சென்று...)

போலீஸ்:- பெரியவரே! என்ன அப்படிப் பார்க்கறே...பாதை நடுவிலே நின்றுகொண்டு...

கிழவர்:- என் மகன்யா... மகன்...ஏன் ஒரே மகன் —என் மகன்—

போலீஸ்:- யாரு? அந்தப் பைத்யக்காரனு? சரி! போ! போ!

[கிழவர் முகத்தில் அறைந்துகொண்டு அழுகிருர்.] ●

Grams: GRANDRESS Phone: 36930

நீடித்த உழைப்பிற்கும் நவ நாகரீக ரெடிமேட் ஆடைகளுக்கு சிறந்தது

கிராண்ட் டிரஸ்ஸஸ்

Manufacturers:- GRAND DRESSES

தென்னகம் முழுவதும் எல்லா கடைகளிலும் கிடைக்கும்

BABA SUITS, JEEN SUITS, PYJAMA SUITS, FROCKS, SLACKS, ROMPER ETC. ETC.

தேவைக்கு வியாபாரிகள் தொடர்புகொள்ளவும்.

20, Godown Street, 2nd Floor, MADRAS-1

கருப்புத் தங்கம்

— பழி —

தங்கநிறம் என்பதற்கே, தனிப்பொருளாயிற்றே! அழகுக்கு இலக்கணமாயிற்றே! என்று எண்ணுகிறீர்களா? இது செந்நிறம் கொண்ட தங்கத்தோடு, கருநிறம் கொண்ட மனம் படைத்தவன் ஒருவனை ஒட்டவைத்த கதை- அதனால்தான், தங்கம், கருப்பாகி, கருப்புத் தங்கம் என்ற தலைப்பைப் பெறுகிறது.

இனி கதை-படியுங்கள்.

கண்ணன்:

நான் நேர்மையான தொழில் செய்து பிழைக்க வேண்டும் என்றுதான், கனகசபேசர் அழைத்த பொழுது, ஓடோடிச் சென்றேன். ஆனால், கள்ளத் தங்க வணிகம் செய்பவர் என்பது எனக்கு ஆரம்பத்தில் தெரியாது,

அவர் தொழில்தான் கள்ளவணிகமே தவிர ஆள் நேர்மையின் சிகரம். தொழிலாளிகளிடம் அவர் காட்டும் நேசம், அப்பப்பா, கடவுளுக்கு நிகரானது. அதனால்தான், என் மனச்சாட்சி என்னை தினந்தினம் குத்திச் சொன்னாலும், அவரிடம் பணியாளாக இருந்து வந்தேன். அவர் இட்ட கட்டளைகளை, எத்தகைய ஆபத்துக்கள் எதிர்நோக்கியிருந்தாலும், தட்டாமல், தயங்காமல் செய்துவந்தேன் அவருக்கு,

தில்லை வில்லாளன் M.A.B.L.

நாடு முழுவதும் வாடிக்கையாளர் உண்டு. அவர்களிடம் பல இலட்சம் பெருமானமுள்ள கள்ளத் தங்கத்தை கொடுத்திடுவது என் பணி-என்னை நம்பி, கோடிக் கணக்கான தொகைக்கான தங்கத்தைத் கொடுத்துள்ளார். அதனைக் கொடுத்து, தொகை பெற்றுத் தந்துள்ளேன். அவராக விரும்பித் தரும் பணத்தைத் தவிர, ஒரு சல்லிக்காசுக்குக்கூட ஆசை வைக்கவில்லை. அதனால்தான் அவருக்கு என்மீது கொள்ளை ஆசை-மலை போன்று அசைக்க முடியாத நம்பிக்கை! எனக்கும், செய்வது, நேர்மையற்ற தொழில் என்றாலும், அதிலும் நேர்மையொடு நடந்து கொள்கிறோம் என்கிற திருப்தியால் கவலையற்று நடந்து வந்தேன்.

என் மனைவி கண்ணம்மா, துவக்கத்தில், எனக்கு என்ன வேலை என்று தெரியாமல் இருந்தாள், பிறகு, லேசாகத் தெரிய ஆரம்பித்தவுடன் தடுத்தாள். அதன் பிறகு, கனகசபேசரின் நேர்மைப் பண்பும், எனது தூயதொண்டு மனப்பான்மையும் அறிந்த அவள் என்னைத் தடுத்திடவில்லை. என் செல்வங்கள் மணி, மரகதவல்லி இவர்கள் நல்வாழ்விற்கு, என் வேலை தேவைப்பட்டது. ஆகவே, அவள், அவர்கள்மீது ஆணையிட்டு, நீங்கள் எந்தக்காலத்திலும், பணத்திற்கு ஆசைப்பட்டு முதலாளிக்குத் துரோகம் செய்யாமல் வேலை பார்க்கவேண்டும் என்று உறுதிமொழி வாங்கிக் கொண்டாள். இந்த நேர்மை, தொழிலில் உள்ள நேர்மைக் குறைவை நிறைவு செய்துவிடும் என்பது அவள் சித்தாந்தம். அப்படித்தான் நடந்து வந்தது.

ஆனால், அந்தத் தடவை ஏனோ அப்படி நடைபெறவில்லை.

நள்ளிரவு - கார்மேகத்தின் வீட்டுக் கதவைத் தட்டினேன். என் கைவசம் இருந்த இலட்ச ரூபாய் மதிப்புள்ள தங்கத்தை அவனிடம் கொடுத்துவிட்டு, காலையில் வருகிறேன் என்று கூறிச் சென்றுவிட்டேன்.

காலையில் கார்மேகத்தின் வீட்டிற்குச் சென்றேன்.

முதலில், கார்மேகம் இல்லை என்று அவளது வீட்டிலுள்ளோர் தெரிவித்தனர்.

பிறகு, என் வற்புறுத்தலின் பேரில், தூங்கிக் கொண்டிருந்த கார்மேகத்தின் பின்அறைக்கு அழைத்துச் சென்றனர்.

'பணம் தா' என்றேன்.

'எதற்கு?' என்றான் கார்மேகம்.

'இரவு, தந்த தங்கத்திற்கு' என்றேன்.

'இரவா - தங்கமா - கனவு கண்டாயா?' என்றான்.

கார்மேகம் பேச்சு, விசித்திரமாக இருந்தது.

ஆனால், கடைசிவரை கார்மேகம் சொன்னதை சாதித்துவிட்டான்.

நான் என் செய்வேன்? எப்படி, கனகசபேசர் முகத்தில் விழிப்பேன்; நான் எடுத்துக் கொண்டல்லவா, இப்படி, நாடகமாடுவதாக, நினைக்கத் தோன்றும்? இவ்வளவு காலம் நாணயமாக இருந்த கார்மேகம் ஏன் மாறவேண்டும் என்றல்லவா கேட்பார்?

சிந்தித்தேன் - சிந்தித்தேன் - திரும்பினேன்!

தொழில் நேர்மையற்றது - ஆனால் நான் நேர்மையாளன் - இந்த நம்பிக்கையிலல்லவா, என் வாழ்க்கை ஓடிற்று! - அதற்கு முடிவு வந்துவிட்டது! அந்தோ!

என் கண்ணம்மா, என்ன நினைப்பாள்? இந்த பாவம், பிள்ளைகுட்டி தலையில் விடியும் என்பாளே! நான் தவறு செய்யவில்லை. ஆனால் கள்ள வணிகத்தில் இது வழக்கமாயிற்றே! என் சிந்தனை குழம்பிவிட்டது.

✽

கனகசபேசர்:

கண்ணன் தூக்கு மாட்டிக்கொண்டு இறந்துவிட்டானா? அடப்பாவி, ஒரு இலட்சத்திற்கு, அவன் உயிரை விலைவைத்துவிட்டானே! நான் ஒருகோடிக்கு அவனை மதித்திருந்தேனே! இப்படி ஏங்கினேன்.

"எனக்கு, அவன்மீது துளிகூட அவநம்பிக்கை கிடையாது அவன் நேரில் வந்து நிலைமையைச் சொல்லியிருந்தால், நான் என்னசெய்யப்போகிறேன்? அவனுக்கு நான் எவ்வளவோ செய்ய திட்டமிட்டிருந்தேன். ஆனால் இப்படி அவசரப்பட்டு விட்டானே! அவன் எங்கோ ஏமாந்துவிட்டான். அந்த ஏமாற்றுக்காரன் மட்டும் கிடைத்தால், கண்ணன் மனங்குளிர, கழுமரத்தில் தொங்கவிட்டுக் காட்டுவேன்!

அவன் இறந்து ஒன்பது மாதங்கள் ஆகிவிட்டன- அவன் குடும்பத்திற்கு நான் நிரந்தரமான உதவி கூட செய்து முடித்துவிட்டேன்.

அவன் மனைவி, ஒரு கடிதத்துடன் ஓடிவந்து என் காலில் விழுந்தாள். அது ஒரு மரப்பெட்டியில் இருந்ததாகக் குறிப்பிட்டாள்.

உயர்திரு. கனகசபேசர் அவர்களுக்கு,

நீங்கள் என் தெய்வம் - உங்களுக்கு என் மீது சந்தேகம் வரும் நிலை ஏற்பட்டுவிடுமோ, என்ற அச்சத்தில், என் வாழ்வை முடிந்துக் கொண்டேன் - நான் தங்களுக்குத் துரோகம் செய்யவில்லை - என்னை ஒருவன் ஏமாற்றிவிட்டான் - தங்கத்தை கருப்பாக்கிவிட்டான் - என்னைக் கருப்புத் தங்கமாக்கி விட்டான் - என்னை மன்னியுங்கள்.

தங்கள் ஊழியன்,
கண்ணன்.

இதைப் படித்தேன் - என் உடம்பெல்லாம் புல்லரித்தது. இப்படிப்பட்ட நேர்மையாளனை இழந்து விட்டோமே என்று எண்ணினேன். அதிலும், அந்த எத்தன் பெயர் குறிப்பிடப்படவில்லை. அவன் பெயர் மட்டும் குறிப்பிட்டிருந்தால், என் 'படை'யைக் கிளப்பி அவனை இரவோடு இரவாகக் கொண்டு வரச் செய்து, பழிதீர்த்துக் கொள்வேன். ஆனால், கள்ளன் பெயர் தெரியவில்லை.

என் தொழில், சட்டத்திற்கு விரோதமானது - நியாயத்திற்கு விரோதமானதல்ல - அப்படித்தான் நான் நினைக்கின்றேன். அதனால்தான் கண்ணன் போன்ற நேர்மையாளர்கள் என் பக்கத்தில் நிற்கிறார்கள்!

என் கண்ணன், தணலிலிட்ட தங்கம் - செந்நிறத் தங்கம் - அவனைக் கருப்புத் தங்கம் என்று நான் நினைக்கவில்லை.

ஆனால், அவனைத் தூக்கில் தொங்க, துரத்திவிட்டானே, அந்த துரோகியைத்தான், தேடப் போகிறேன்-தங்கம் என்பதாலேதானே, என் தங்கம் கண்ணனை ஏமாற்றினான்-அவன் பெற்றது, தங்கமல்ல கருப்புத் தங்கம் என்று, அவன் வாழ்வை முடித்து விடுவேன்-இது உறுதி.

அந்தத் தங்கத்தால், அவன் வாழ்வு உயர்ந்து விடாது; கண்ணன் உயிரும், கண்ணம்மாவின் கண்ணீரும், அவர்தம் மக்களின் விம்மலும், என் சீற்றமும், சேர்ந்து, அந்த தங்கத்தை கருப்பாக்கி மண்ணுக்கு சமானமாக்கிவிடும்.

மனிதனை, மனிதனாக்குவது, அவனுக்குரிய நேர்மைப் பண்பு-இது தங்கம் போன்றது!

ஆனால், மனிதனை மிருகமாக்குவது - நேர்மையற்றது மோசபுத்தி - இது தங்கம் என்ற பெயரில் ஏமாற்றும் கருப்புத் தங்கம்!

கண்ணன் தங்கம்-கார்மேகம் கருப்பு-இந்த இருவர் நமக்குத் தருவது கருப்புத் தங்கம்.

கருப்புத் தங்கம் தரும் பாடமோ, நேர்மையாளர் எங்கும் இருப்பார் என்பது அல்லவா?

✽

வியக்காதீர்கள்!

இரும்பு இருக்கிற எந்த இடத்திலும் துரு இல்லாமலிருக்காது என்று தெரியுமல்லவா! டில்லியிலுள்ள குதப்மினாருக்கு அண்மையில், 16-அங்குல விட்டமும், 23-அடி உயரமும் உள்ள தூண் ஒன்று இருக்கிறது.

இது புஷ்கரவமிச அரசன் சந்திரவர்மன் என்பவனால் சுமார் 1500-ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்டதாம்.

எவ்விதச் சிதைவும் இதுவரையில் ஏற்படாத இந்த இரும்புத்தூண், ஒரு அதிசயத்தையும் நிகழ்த்திக் காட்டுகிறதாம்!

என்ன தெரியுமா? வெயிலானாலும், மழையானாலும் தக்கவாறு ஈடுகொடுத்து, துருவே பிடிப்பதில்லையாம்! வியப்பாயில்லையா!

— தயாள்.

கார்டூனும்

அண்ணாதுரை

பதவிப் பித்தம் கொண்டலையும் ஒரு சில அரசியல்வாதிகள், பொதுமக்களின் ஆதரவைப் பெற முடியாத பேர்வழிகள், ஏதாவது குறை கூறிக்கொண்டிருப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள், காங்கிரசாட்சியில் இது சொத்தை, இது சொள்ளை இது ஓட்டை இது உடைசல என்று பேசிக்கொண்டு திரிகிறார்கள். பொறுப்புள்ளவர்கள், கருத்துத் தெளிவுள்ளவர்கள் யாரும் காங்கிரசாட்சியைக் கண்டிப்பதில்லை: மாறாக ஆதரிக்கிறார்கள், பாராட்டுகிறார்கள், வாழ்த்துகிறார்கள்—என்று கூறித் தம்மைத் தாமே தட்டிக் கொடுத்துக் கொள்வதிலே இன்றையக் காங்கிரஸ் ஆட்சியினர் வல்லவர்கள்.

அவர்கள் இதுபோலக் கூறக்கேட்டு, சிலரேனும், கழகமோ பிற கட்சிகளோ வேண்டுமென்றே குறை பேசித்திரிவதாக எண்ணிக்கொள்ளக்கூடும் என்பதால் காங்கிரசாட்சியைக் கண்டிக்கவும், அந்த ஆட்சியின் நடவடிக்கைகளிலே உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டவும், எதிர்க்கட்சியினர் மட்டுமின்றி, வேறு எவரெவர் முனைகின்றனர் என்பதனை எடுத்துக்காட்ட வேண்டி நேரிடுகிறது.

காங்கிரசிலே முன்பு மிக உயர்ந்த இடமும் பொறுப்பான பதவிகளும் வசித்திருந்தவர்கள், இன்றைய காங்கிரஸ் ஆட்சியைக் கண்டிக்கின்றனர்.

பொருளாதாரப் பேரறிஞர்கள், பல்கலைக் கழகத்தவர், நிர்வாகத்துறை நிபுணர்கள், கண்டிக்கின்றனர்.

இதழ்களிலே அவ்வப்போது ஆட்சியின் போக்கைக் கண்டித்து கட்டுரைகளும் தலையங்கங்களும் கேலிச் சித்திரங்களும் (Cartoon) வெளியிடப்படுகின்றன.

இவர்களைப் பதவி கிடைக்காததாலே ஏமாற்றமும் எரிச்சலும் கொண்டவாகளென்றோ, பதவி ஆசை கொண்டு அலைபவர்கள் என்றோ, துணிந்த பேர்வழிகளும் கூறிட முடியாது.

எந்தப் பதவியையும் பெற வேண்டுமென்று எண்ணியிருந்திடினும் பறக்கூடிய நிலையினர்; ஜெயப்பிரகஷ் நாராயணன் என்பதை மறுத்திட மாட்டார்கள்.

ஆச்சார்ய வினோபாவுக்கு நாற்காலிப் பைத்தியம் வந்துவிட்டது என்று கூறிடமாட்டார்கள்—எத்தனை ஆணவம் பிடித்த ஆளவந்தாராக இருப்பினும்.

இதழாசிரியர்கள், பதவியில் இடம் பிடிக்க வேண்டுமென்பதற்காகவே எதை எதையோ எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்று ஆளவந்தாாகள் கூறிடின் ஏமாளிகூட அதனை நம்பமாட்டான். இதழாசிரியர்களில் மிகப் பெரும்பாலானவர்கள், தேசியப் போராட்டம் நடத்தி எழுச்சிமிகக் கொண்டவர்கள், காங்கிரஸ் கட்சி இந்தப் போராட்டத்தை நடத்திற்று என்பதாலே அந்த அமைப்பினிடம் மட்டற்ற மரியாதை கொண்டவர்கள். பல ஆண்டுகளாகக் காங்கிரஸ் தலைவர்களுக்குப் புகழொளி தேடித் தருவதை தேசியத் தொண்டு என்று கருதுபவர்.

அத்தகையோராலேயே, காங்கிரசாட்சியின் போக்கு மோசமாகிக் கொண்டு போவதைத் தாங்கிக் கொள்ளமுடிவதில்லை; குமுறுகின்றனர்; குற்றம் குறைகளைச் சுட்டிக் காட்டினால், ஆட்சி தன்னைத் தானே திருத்திக்கொள்ளும் என்ற நம்பிக்கையுடன், எழுதுகின்றனர்.

எதிர்க்கட்சியினரின் கண்டனத்தை—ஏமாற்றத்தின் விளைவு என்றும், நிபுணர்களின கண்டனத்தை அனுபவமற்றோரின் அபத்தம் என்றும் கூறிடும் காங்கிரஸ் ஆட்சியினர், இதழாசிரியர்களின் கண்டனத்துக்கு என்ன கூறுகின்றனர்? துச்சமென்று கருதுகின்றனர்! இவர்களுக்கு என்ன தெரியும் என்று கேட்கின்றனர்!

இந்தியாவின் பிரதம மந்திரி இந்திரா காந்தி அம்மையாரே, இதழ்களை எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசி விட்டார்கள் என்றால், இடம் பிடித்தவர்கள், இலாபந்தேடிகள் என்னதான் பேச மாட்டார்கள்!

இதழ்களின் போக்கை இந்திரா காந்தி அவர்கள் கண்டித்தது கண்டு மனம் நொந்து, அகில இந்திய பத்திரிகையாளா சங்கமே, தன் வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறது.

சோவியத் நாட்டுக்குச் சென்றிருந்த காமராஜர், பத்திரிகைகளின் போக்கை அங்கு கண்டித்துப் பேசியதுடன், பத்திரிகைகளின் தயவினால் காங்கிரஸ் தேர்தல்களில் வெற்றி பெறவில்லை என்றே பேசிவிட்டார்! இதனால் மனம் வெதும்பிய "டைம்ஸ் ஆப் இந்தியா" எனும் நாள் இதழ்கூட, இது அடுக்குமா என்று கேட்டிருக்கிறது. இதுவரை காமராஜர் சமாதானமோ, விளக்கமோ தரவில்லை.

எதிர்க்கட்சிகளைத் துச்சமென்று எண்ணுவது போலத்தான், இதழ்களைப்பற்றியும் ஆளவந்தார்கள் எண்ணுகின்றனர்; மதிப்பளிக்க மறுக்கின்றனர்.

இதழ் பலவற்றில், காங்கிரசாட்சியின் கேடுபாடுகள், எழுதப்படின், பொதுமக்களின் மனதிலே காங்கிரஸ் எதிர்ப்புணர்ச்சி பரவுமே, அது நல்லதல்லவே, ஆபத்தாகிவிடக் கூடுமே என்ற கவலைகூடக் காங்கிரஸ் ஆட்சியினருக்கு எழுவில்லை. எவராலும் அசைக்க முடியாத விதமாகத் தமது நிலைமை கெட்டிப் படுத்தப்பட்டுவிட்டிருக்கிறது என்று நம்புகிறார்கள்.

இதழ்களோ, ஆளவந்தார்கள் மதிப்பளிப்பினும் தர மறுத்திடினும், மக்களுக்கு உண்மையைக் கூறிட வேண்டும் என்ற கடமை உணர்ச்சியுடன் நடந்திட முற்படுகின்றன; கேடான செயலிலே ஆளவந்தார்கள் ஈடுபடும்போது, கண்டனம் தெரிவிப்பதன் மூலம்,

ஆட்சியின் போக்கைத் திருத்திடலாம், திருத்தவும் செய்யலாம் என்று நம்புகின்றன.

இன்று வரையில், இதழ்கள் தெரிவித்துள்ள கருத்தினை மதித்து காங்கிரசாட்சியினர் தமது போக்கை மாற்றிக் கொள்ளவில்லை.

நாட்டு மக்களின் மனதை அறிந்து அதனை ஆட்சியினருக்குஎடுத்துக்கூறும் கடமை இதழ்களுக்கு. அந்தக்கடமை உணர்ச்சியை இதழ்கள் நிறைவேற்றும் போது, கடுங்கோபம் காட்டுகின்றனர் காங்கிரசாட்சியினர்.

தலையங்கம், கட்டுரை ஆகிய வடிவத்தில் தமது கண்டனத்தை அமைத்துத் தருவதுடன், நிலைமையை நன்கு விளக்கிட, இதழ்கள், கார்ட்டூன்—கேலிச் சித்திரம்—வெளியிட்டு வருகின்றன.

கார்ட்டூன்கள், எடுப்பாக அமைந்து, காண்போருக்குக் காங்கிரசாட்சி எப்படிப்பட்டது என்பதனை எடுத்துக்காட்டுகின்றன.

இத்தனை ஆண்டுகளாக ஈடு எதிர்ப்பற்ற முறையில் அதிகாரம் செலுத்தி வரும்போது, ஏன் காங்கிரசாட்சியினால் மக்களின் ஏழ்மையைப் போக்க முடியவில்லை என்று நாம் கேட்கும்போது ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வருகிறது. ஆனால் நமக்குத் தோன்றுவது போலவே இதழ்களுக்கும் தோன்றுகின்றன.

16 வருடமாக உங்களிடம் சர்வாதிகாரம் இருந்தும், மக்கள் ஏழ்மையில் உழல்வதேன்!



இதழ்கள் கொண்டுள்ள கருத்தை விளக்கிடவும், காங்கிரசாட்சியின் போக்கைக் கண்டிக்கவும், 'தேசிய பாரம்பரியத்துக்கும்' — காங்கிரஸ் பக்திக்கும்— நிதானத்துக்கும் பெயர் பெற்றுள்ள 'சுதேசமித்திரன்' வெளியிட்ட கார்ட்டூன் இது.

இன்றைய காங்கிரசாட்சி, மகாத்மா விரும்பிய முறையிலே ஆட்சி செய்யவில்லை; ஏழைகளுக்கு இதம் தந்திட முடியவில்லை என்ற கருத்துப்பட உள்ளதாகும் இந்தக் கார்ட்டூன்.

இதனைக் கண்ணுற்ற பல்லாயிரவர், இன்றைய காங்கிரசாட்சி, மகாத்மாவின் வழியிலே நடந்திடவில்லை; ஏழைகளுக்கு நல்வாழ்வு அளித்திடவில்லை என்ற கருத்தினை எப்படிப் பெறுமல் போக முடியும்? ஏழை எளியோரை இந்த ஆட்சி ஏமாற்றி விட்டது என்று எதிர்க் கட்சியினர் பேசும் போது இது கட்சி மாச்சரியத்தின் விளைவு என்று எண்ணிக் கொள்ளக் கூடத்தோன்றும்; 'மித்திரன்' கட்சிமாச்சரியம் கொண்டா இந்த கார்ட்டூனை வெளியிட்டிருக்கும்! இந்த இதழே—வெகு நிதானமாக ஆனால் ஆழ்ந்த முறையிலே பிரச்சினைகளை கவனிக்கும் பொறுப்புமிக்க மித்திரனே இன்றைய காங்கிரசாட்சி ஏழையின் இன்னலைப் போக்கத் தவறிவிட்டது என்று இடித்துரைக்க முற்படுகிறது என்றால் நிலைமை மோசமாகிவிட்டது என்றுதானே பொருள்!

> காங்கிரசையா குறைகூறுவது என்று எவரும் கொதித்தெழ முடியாத வகையில் மித்திரன் வெளியிட்டுள்ள கார்ட்டூனில், காங்கிரசை, மகாத்மாவே கண்டிப்பதாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

எத்தனையோ சங்கடங்கள், தொல்லைகள், தடைகள் அதனால்தான் எம்மாலே ஏழைகளுக்குப் போதுமான அளவு இதம் செய்திட முடியவில்லை என்று காங்கிரசாட்சியினர் சமாதானம் கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது. கார்ட்டூனில் காணப்படும் காந்தியார் கேட்கிறார் திட்டவட்டமாக, "16 வருடங்களாக உங்களிடம் சர்வாதிகாரம் இருந்தும் மக்கள் ஏழ்மையில் உழல்வதேன்? என்று.

நீண்ட காலமாக ஆட்சி நடத்துகிறீர்கள். எவருடைய குறுக்கீடும் இல்லாத முறையில் எல்லா அதிகாரமும் பெற்றிருக்கிறீர்கள், இருந்தும் மக்கள் ஏழ்மையில் உழல்கிறார்கள், ஏன்? இந்தக் கேள்வியைக் கார்ட்டூன் மூலம் எழுப்புகிறது இதழ்.

எதிர்க்கட்சிகள் இதே கேள்வியை எழுப்பும் போது, மக்கள் கவனிப்பதை விடக் கூர்மையாகவே, 'இதழ்' எழுப்பும்போது கவனிப்பர்.

ஆளவந்தார்கள், இவ்விதமான கேள்விகளை எதிர்க்கட்சிகள் எழுப்பும்போது கொதிப்படையும் அளவு, இதழ்கள் கார்ட்டூன் போட்டுக் காட்டும்போது கொதிப்படைவதில்லை; காரணம் எதிர்க்கட்சிகள் காங்கிரசாட்சியைக் கண்டிப்பதுடன், 'ஓட்டு' கேட்கவும் செய்கின்றன; இதழ்கள் அப்படிக் கேட்பதில்லை. அதிலே ஒரு திருப்தி, ஒரு மகிழ்ச்சி காங்கிரசாட்சியினருக்கு.

> ஆனால் பொதுமக்கள் காங்கிரசாட்சியிடம் கொண்டுள்ள 'பக்தி' இதழ்கள் வெளியிடும் இவ்விதமான கார்ட்டூன்கள் மூலம், மெள்ள மெள்ள துளைக்கப்படுகிறது. இது எதிர்க்கட்சிகளின் நேரடியான கண்டனத்தை விட வலிவான தாக்குதல், என்பதை நுண்ணறிவினரே உணர்வர்.

மித்திரனே கேட்கிறதே! படமே போட்டுக் காட்டுகிறதே! என்று பல்லாயிரவர் பேசிடச் செய்கிறது கார்ட்டூன்—அந்தப் பேச்சு வலுவடைய வலுவடைய, பரவப் பரவ, நிச்சயமாகக் காங்கிரசுக்கு மக்களிடம் உள்ள பிடி தளரத்தான் செய்யும்; தளர்ந்துவிட்டிருக்கிறது.

'இந்தி' ஆட்சிமொழி ஆக்கப்படுவதை எதிர்க்கட்சிகள் பல எதிர்க்கின்றன; நமது கழகம், 'இந்தி' ஆதிக்க ஒழிப்புக்காக அறப்போர் நடாத்திற்று. காங்கிரசாட்சியினர் பிடிவாதத்தை விடமறுக்கின்றனர். காரணம் அவர்கள் இதர மொழியினரைத் துச்சமென்று கருதுகின்றனர். அவர்களின் உணர்ச்சியைக் கவனிக்க மறுக்கின்றனர்.

இந்தி வெறியர்கள்—இந்தி ஆதிக்கக்காரர்கள்—இந்தி ஏகாதிபத்தியம்—என்று கூறப்படுவதைக் கூட,

எதிர்க் கட்சிகள், குறிப்பாக தி மு. கழகம் கக்கிடும் பகை உணர்ச்சி என்று பொதுமக்களிடம் காங்கிரசாட்சி கூறிவருகிறது.

மற்ற மொழியினர். உரிமை இழந்திடுவர், வாழ்வு இழந்திடுவர், இந்தி ஆட்சிமொழி யாக்கப்பட்டுவிட்டால் என்று நாம் கூறும்போது, 'வீணான பீதி' என்று பேசுவது ஆட்சியினருக்கு வாடிக்கையாகிப் போய்விட்டது.

சுதேசமித்திரன்



ஹிந்தி வெறியர்கள் வ்ருப்பப்படி நடந்தால் இப்படியொரு நிலேதான் ஏற்படக்கூடுமென மற்ற மொழியினர் அஞ்சுவதில் ஆச்சரியமென்ன?

இந்த 'கார்ட்டுன்', மித்திரன் இதழில் காணப்படுவது. இதர மொழியினர் என்ன பாடுபடுவர் இந்தி, ஆதிக்கம் பெற்ருல் என்பதை இதைவிடத் தெளிவாகவும் மனதிலே தைக்கும் விதமாகவும், எந்த எதிர்க் கட்சிக்காரரும் பேசவோ எழுதவோ முடியாது. இந்த கார்ட்டுனைப் பார்த்த பிறகும்; இந்தி ஆதிக்கத்தால் பிற மொழியாளர் நசுக்கப்படுவர், காலின் கீழ் போட்டுத் துவைக்கப்படுவர் என்ற உண்மையினை எவரேனும் உணர்ந்திட மறுத்திடின், அவர்களைக் காங்கிரஸ் சந்தையிலே விலேபோன சரக்கு! — என்று கூறி விடலாம்.

கார்ட்டுன்—மிகத் தெளிவான முறையில் இந்தி வெறியர் வெற்றி பெற்ருல், பிற மொழியினருக்கு ஏற்படக்கூடிய நிலேயைக் காட்டுகிறது.

கழகம், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்திடும்போது, "இதெல்லாம் ஓட்டு வேட்டைக்கு" என்று வெகு எளிதாகப் பேசித் தமது ஏமாளித்தனத்தைக் காட்டிக் கொள்கிருர்களே காங்கிரஸ் வட்டாரததிலே சிலர், அவர்களே கூட, மித்திரன் இந்த கார்ட்டுன் வெளியிட்டிருப்பது, 'ஓட்டு வேட்டை'க்காக என்று கூற முற்படமாட்டார்கள்! ஏமாளிகள் கூட, தமக்கென்று ஒரு எல்லேயை ஏற்படுத்திக் கொள்வார்கள் அல்லவா?

காங்கிரசிடம் பல்வேறு காரணங்களுக்காக — (நியாயமான காரணங்கள்)—பற்று கொண்டுள்ளவர்களுக்கு, இந்தி ஆதிக்கத்தைப் பற்றி கழகமோ வேறு எதிர்க் கட்சிகளோ கண்டனம் தெரிவிக்கும்போது, எரிச்சலாகவே இருக்கும்; நம்முடைய காங்கிரசா இப்படிச் செய்யும்!—என்று கேட்பர். ஆனல் அவர்களேகூட, நிலேமையை 'மித்திரன்' கார்ட்டுன் மூலம் படம் பிடித்துக் காட்டும்போது, எப்படி உண்மையை உணராமல் இருக்க முடியும்? இதுவரையில் நாம், கழகம் கட்சி மாச்சரியத்தாலும் ஓட்டு வேட்டைக்காகவும், காங்கிரசாட்சிமீது பழி கூறித் திரிகிறது என்று எண்ணிக்கொண்டிருந்தோம்; இப்போது 'மித்திரனே' கண்டிக்கிறதே; படமே போட்டுக் காட்டுகிறதே; வீண் பழி சுமத்துவதையா அந்த இதழ் தன் தொழிலாகக் கொள்ளும்! இருக்க முடியாதே. உண்மையைத்தான் இதழ் எடுத்துக் காட்டியிருக்கிறது. நாம்தான் இதுவரையில், காங்கிரசிடம் உள்ள 'பக்தி' காரணமாக, உண்மையை உணராமலிருந்து வந்தோம்; கார்ட்டுன் நமது கண்களைத் திறந்துவைத்தது என்று தான் எண்ணம் கொள்வர். எதிர்க் கட்சியின் பேச்சைக் கேட்கக் கூட விருப்பம் காட்ட மறுத்துவந்த வட்டாரத்திலேயே, இவ்விதமான கார்ட்டுன்கள் மனமாற்றத்தை ஏற்படுத்துவன; ஏற்படுத்திவிட்டுள்ளள.

காங்கிரசாட்சியின் விளேவாக மக்களின் நிலேமை நாளுக்கு நாள் மோசமாகிவிட்டிருக்கிறது என்று எதிர்க்கட்சி கூறும்போது, புள்ளி விவரத்தைத் தயாரித்துக் கொட்டிக் காட்டுவதன் மூலமும் புருவத்தை நெறித்துக் காட்டுவதன் மூலமும் காங்கிரசாட்சித் தலேவர்கள் பதில் அளிக்கின்றனர்.



Peaceful co-existence

இந்த கார்ட்டுன், 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழுடையது. வேறு ஓர் பிரச்சனேயை விளக்க இது வெளியிடப்பட்டுள்ளது என்ருலும், நாட்டு நிலேமை, ஆட்சித் திறமை எப்படி இருககிறது என்பதை, இதனே விடத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்ட முடியாது. இளைத்துக் கிடக்கும் உருவங்களைக் காணும் எவருக்

கும் மனம் பதறாமல் இருக்க முடியாது! மனிதனையும் மாட்டையும் இந்த நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டவர்களை, எனது கட்சியினர் என்று கூறிக் கொள்ளக் கூட உண்மையான காங்கிரசார் கூசுவர்! காங்கிரசாட்சியிலே தேனும் பாலும் கலந்து ஓடும் என்று நம்பிக் கொண்டிருந்தவர்கள் கண்ணில், 'எலும்புக் கூடுகள்' தெரிகின்றன என்றால், இதயத்தில் ஈட்டி பாய்வது போன்ற நிலையினராவர்.

இந்த நிலைமைக்கு நாட்டைக் கொண்டு வந்திடவா பாடுபட்டு சுயராஜ்யம் பெற்றோம் என்று பதறுவர். நமது கட்சியினரை, நல்லவர் என்றும் வல்லவர் என்றும் நம்பிக் கெட்டோமே, ஆட்சியின் கோளாறுகளை எதிர்க் கட்சியினர் எடுத்துக் காட்டியபோதெல்லாம் எரிந்து எரிந்து விழுந்தோமே, 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழ், எதிர்க் கட்சி இதழ் அல்லவே! கட்சிக் கண்ணோட்டம் கொள்வதல்லவே! மகாத்மாவின் திருமகனும் தேவதாஸ் காந்தியை ஆசிரியராகக் கொண்டிருந்த ஏடாயிற்றே! நாட்டு நிலைமையை அந்த இதழ் படம் போட்டுக் காட்டுகிறதே பார்க்கவே பரிதாபமாக, பயங்கரமாக இருக்கிறதே என்று எண்ணிடாத நேர்மையாளர் இருந்திட முடியாது.



இந்தக் கார்ட்டூன், 'ஸ்டேட்ஸ்மன்' நாளிதழில் வெளிவந்தது. எலும்புக்கூடுகள் பேசிக்கொள்கின்றன! உனக்கு என்ன வியாதி? டாக்டர் என்ன சொல்லுகிறார் என்று ஒரு எலும்புக்கூடு கேட்கிறது? மற்றோர் எலும்புக்கூடு சொல்லும் பதில்:

வாங்கும் சக்தி குறைந்துவிட்டது

பண்ட நடமாட்டம் பரவலாக்கப்படுவதிலே குறைபாடு

மாற்றப்பட முடியாத உணவுப் பழக்கம்.

இவை காரணம், இந்த நிலைக்கு என்று கூறுகிறது எலும்புக்கூடு! இந்துஸ்தான் டைம்ஸ் கார்ட்டூன் எலும்புக்கூடுகளை காட்டுகிறது; ஸ்டேஸ்மன் எலும்புக்கூடு ஆகிவிட்டவர்களைப் பேசவைத்திருக்கிறது. காண்போர் என்ன எண்ணுவர்? ஓட்டு வேட்டைக்காகவா இந்தஇதழ்கள் இவ்விதம் படம்போடுகின்றன இல்லையே! நாட்டு நிலைமையை எடுத்துரைப்பது இதழ்கள் மேற்கொண்டாகவேண்டிய 'அறம்' என்பதாலே. நாட்டிலே, காங்கிரசாட்சியினால், உணவுப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை, மக்கள் பஞ்சத்தால் தாக்கப்பட்டுள்ளனர் என்று எதிர்க்கட்சிகள் கூறும் போது கோபம் பொத்துக்கொண்டு வருகிறது. இந்தப் படங்களைப் பார்க்கும்போது? எதிர்க்கட்சிகளின் பேச்சைக் கேட்பதே 'தேசியப்பாவம்' என்று எண்ணிக் கொண்டுள்ளவர்களும்கூட அல்லவா, இந்த கார்ட்டூன்களைக் கண்டதும் வெட்கத்தால் தலைகுனிந்து கொள்வர், வேதனையால் துடிப்பர்.

நாட்டை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்து வைத்துள்ளவர்களை மறுபடியும் அரியாசனம் அமர விடுவது அக்ரமம், அநீதி என்று அவர்களுக்கே அவர்களின் உள்ளம் கூறிடாதா! கட்சிக் கட்டுப்பாடுகளையும் உடைத்தெறிந்துகொண்டு உள்ளத்துக்குள் உண்மையைப் புகுத்த வல்லன இந்தப் படங்கள்.

ஏழை மீதுள்ள சுமை



'மித்திரன்' — கார்ட்டூன்! மாடாக உழைத்து, ஓடாகிப்போன ஏழை படும்பாட்டை எடுத்துக் காட்டுவது. வாழ்க்கைச் செலவு பெருத்துப்போகிறது; அதனை இழுத்துச் செல்லும்போது, பளு அழுத்துகிறது.

ஏழை எளியோர்களைக் காத்திடவே காங்கிரசாட்சி உளது; அந்த நோக்கத்துடனேயே பணியாற்றி வருகிறது என்று பறைசாற்றுகின்றனர்; பண்பாடுகின்றனர்.

இல்லையே, ஏழைக்கு அடுக்கடுக்காக இன்னல் வந்து தாக்குகிறதே; வாழ்க்கைச் செலவு ஏறிப்போய் அவன் தாங்க முடியாமல் தவிக்கிறானே; தற்கொலைகள் பெருகிவிட்டனவே என்று எதிர்க்கட்சிகள் கூறும்போது, கோபத்தால் துடிக்கின்றனர் கோலேந்திகள்.

இந்தப் படம் காணும்போது? இது எதிர்க்கட்சி தயாரித்த படமா? எதிர்க்கட்சி நடத்தும் இதழிலே வெளிவந்ததா? இல்லையே! 'மித்திரன்' வெளியிட்ட படம்! ஏழையின் நிலைமையை விளக்கும் படம்! இந்த நிலைமைக்கு ஏழையைக் கொண்டுவந்துவிட்டவர்கள், மீண்டும் ஆட்சிக்கு வந்திடவேண்டும் என்று கேட்பது எந்த நியாயத்தின் மீது? இந்த எண்ணத்தைத் தந்திடும் விதமாக அல்லவா, படம் அமைந்திருக்கிறது. எதிர்க்கட்சியைத் தாக்கிடலாம்; அவர்தம் பேச்சினைக் கேட்காதே என்று கட்டளை பிறப்பித்திடலாம்! ஆனால் இப்படிப்பட்ட படங்களையுமா மக்கள் பார்த்திடாமல் இருக்கச் செய்யப்போகிறார்கள்? பார்த்திடுவோர், இந்த ஆட்சியை வாழ்த்தியா வரவேற்பார்கள்!

நாட்டை எந்த நிலைமைக்குக்கொண்டுவந்துவிட்டு இவர்கள் தேர்தல்களம் செல்லுகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டும் இந்த கார்ட்டூன், 'டைம்ஸ் ஆப் இந்தியா'வில வெளிவந்தது இரத்தம் ஒழுகும் வாயுடன் புலி அவர்களைப் பின் தொடர்ந்து வருகிறது; ஆளவந்தார்களை.

நிலைமைகளைக் கூறிடும் பதங்களையே அமைத்து புலி வடிவம் கொடுத்துவிட்டிருக்கிறார், கார்ட்டூன ஓவியர்!

கலவரங்கள்

பொருளாதார நெருக்கடி

பற்றுக்குறை

பஞ்சம்

மாணவர் கிளர்ச்சி

இவைகள் நாட்டிலே இன்று! இதற்கான பதங்களையே புலி வடிவமாக்கிவிட்டிருக்கிறார் ஓவியக்காரர்!

இந்த பயங்கரம், இவர்கள் உண்டாக்கியது' இந்தப் பயங்கரம் இவர்களைப் பின்தொடருகிறது. இதனை அறியாமல், 'தலைவர்கள்' தேர்தல் களம் செல்லுகிறார்கள்.

"திரும்பிப் பார்க்காதீர்கள்! ஒரு பயங்கர மிருகம் நம்மைப் பின்தொடர்ந்து வருகிறது'' என்று ஒரு தலைவர் மற்றவர்களுக்குக் கூறுகிறார், நிலைமையைக் காட்ட. மிருகம்! கவலை, கலக்கம், பீதி கொண்ட முகத்துடன் தலைவர்கள்!

நாட்டை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டவர்கள், தேர்தல் களம் செல்லுகிறார்களே இது என்ன விந்தை!—என்று கேட்க இந்தப் படம்.

இதனை எதிர்க் கட்சி காட்டியிருப்போது! கடுங்கோபம் கொண்டிடும் பொதுமக்களிலே ஒரு பகுதியினர்கூட: இந்தப் படம் இதழில் வெளிவரக் காணும்போது, துக்கமும் வெட்கமும் கொள்வரன்றி கோபம் ஏன் கொள்ளப் போகிறார்கள்! கோபம் ஒருவேளை பிறந்திடினும் எதிர்க் கட்சிகளின்மீது இருக்க முடியாது, இவ்வளவு கோணலாட்சி நடத்துபவர்களுக்கு நாம் கொடிதூக்கிகளாகிக் கிடக்கிறோமே என்பதை எண்ணி தம்மீதே கோபித்துக் கொள்ளக்கூடும். நாலுபேர் எதிரே தலைநிமிர்ந்து நிற்கவொட்டாத விதமாக ஆட்சியை அலங்கோலமாக நடத்திக்கொண்டுள்ளனரே என்று காங்கிரஸ் கட்சியின மீது கோபம் வரக்கூடும்.



ஆனந்த கீதமல்லவா பாடுகிறார்கள அமைச்சர்கள்: வயிற்றுப்பாட்டுப் பஞ்சம் வராது! பட்டினிச் சாவு ஏற்படாது — என்றெல்லாம்

உண்மை நிலைமை எப்படி இருக்கிறது என்பதை நாட்டினருக்குக் காட்டிட வெளிவந்துள்ள படம் இது; மித்திரனில்.

கழுகுகள் ஒருபுறம் வட்டமிடுகின்றன, கீழே வீழ்ந்துள்ள பிணங்களையும் குற்றுயிராக உள்ளோர்களையும் மறைத்திட முயலுகிறார் நம்மா அமைச்சர்கள், விளம்பர பலகையைப் பொதுமக்களுக்குக் காட்டுகின்றனர்! ஆனந்தம் ஆனந்தம் என்று பாடுகிறது பலகை!

'பொதுஜனம்' — நாட்டிலே என்ன நடக்கிறது என்பதை அறியாமல், இந்த அமைச்சர்கள் விளம்பரப் பலகையைக் காட்டி உண்மையை மறைக்க முனைகிறார்களே என்று எண்ணி' திரும்பிப் பாருங்கள்!—என்று வட்டமிடும் கழுகுகளைக் காட்டுகிறார். அமைச்சர்களின் போக்கை இதனைவிடக் கடுமையாகக் கண்டித்திட முடியாது! நாட்டு நிலைமையை விளக்கிட, இதனைவிட மேலான சித்திரம் தந்திட முடியாது. தந்தது மித்திரன்! அரசியல் காழ்ப்பா காரணம்? அற்பனும் கூறிட அஞ்சுவான்!

THE MAIL



பதுக்கலை ஒழிப்போம்! பஞ்சத்தைத் துடைப்போம்!—ஆளவந்தார்களின் பரணி! பாடியபடி உள்ளனர்; ஆனால் பதுக்கலை ஒழித்திட முடியவில்லை.

அதனை விளக்கிட 'மெயில்' இதழ் வெளியிட்ட கார்ட்டூன்' இது. ஒருபுறம் உற்பத்தியாளர்! மற்றோர் முனையில் வியாபாரி! நடுவிலே அமைச்சர்! அவர் நிலைமை சித்திரிக்கப்பட்டிருக்கிற விதத்தைப்பார்த்தால் அவரே சிரிப்பார்! இவர்களிடம் 'பந்தாக' ஆகிறது தானியப் பதுக்கல்!! இந்த 'விளையாட்டு' ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, பட்டினி கிடந்திடும் மக்கள், பாத்திரத்துடன் மற்றோர்புறம் நின்றுகொண்டிருக்கிறார்கள், உணவு கொடும்! என்று கேட்டபடி.

பதுக்கலை ஒழிக்க முடியவில்லை! பஞ்சத்தையும் பற்றாக் குறையையும் போக்க முடியவில்லை!-இதனைத் தடுத்திடத்தக்க திறத்துடன் காங்கிரசாட்சி நடத்தப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் கூறும்போது, வீண் கண்டனம்! — என்று அலட்சியம் காட்டிப் பேசுபவர்களும், மெயில் தரும் நிலைமை விளக்கப் படத்தைக் கண்டால், தமது போக்கை ஓரளவுக்காகிலும் மாற்றிக்கொண்டுதானே தீரவேண்டும். 'மெயில்' இதழ், அறிவகம் — அன்பகம் — ஆகிய இடமிருந்தா வெளி வருகிறது!

சுதேசமித்திரன்

இந்த கார்ட்டூன், மித்திரனில் வெளிவந்தது! பட்டினி கிடந்திடும் மக்களுக்கு, அமைச்சர்கள் தந்திடும் பதில் எவ்வளவு பொறுப்பற்றதாக உளதுஎன்பதனை எடுத்துக் காட்டுகிறது.

வருங்காலத் திட்டம்! பசித்த வயிறுக்கு அது தான் சமாதானமாகத் தரமுடிகிறது. திட்ட அமைச்சர் அசோக்மேதாவினால்.

விதைகள் முளைக்கட்டும், உமது பசிபோக்கப் படும் என்கிறார்! அதுவரையில்? பீகார்! வேறென்ன!

இத்தனைப் பொறுப்பற்ற தன்மையுடன் நடந்து கொள்பவர்களையா மீண்டும் ஆட்சியில் அமர்த்துவது என்ற எண்ணத்தைக் கிளறத் தவறுமா, இந்தக் கார்ட்டூன்.

பஞ்சம் மிரட்டிக்கொண்டுள்ள நிலைமையிலே தான், ஆளுங்கட்சியான காங்கிரஸ்கட்சி. தனது கமிட்டிக் கூட்டத்தை நடத்திற்று. அதுபோது ஆங்கில இதழில் வெளிவந்த படம் இது:



பஞ்சமா! வீண்பீதி! யார் சொன்னது பஞ்சம் இருப்பதாக! வீண்புரளி!—என்று ஆளுங்கட்சியினர் பேசுகின்றனர் — உரத்த குரலில்! ஆனால் பஞ்சமோ, சூரியனை விழுங்கிடும் கிரஹணம்போல இருக்கிறது என்று படம் காட்டுகிறது.

'மண்டை ஓடு'—பஞ்சத்தை விளக்கப் போட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. எந்த எதிர்க்கட்சியும் இது போலப் பேசிடின், காங்கிரசின் பூசாரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது! ஆனால், கட்சிக்காக நடத்தப்படாத, பொது இதழில் இந்தப்படம் வெளி வந்திருப்பதால், அவர்களும் தமது ஆத்திரத்தைக் கொட்ட முடிவதில்லை; எதிர்க்கட்சிகள் எதையாவது குறை கூறிக்கொண்டுதான் இருக்கும் என்ற அலட்சியப் போக்கு கொண்டுள்ளவர்களையும் ஓரளவு சிந்திக்கச்செய்திடும்.



கட்டவிழ்ந்துவிட்டது, கந்துகமதக்கரிக்கு!



விலைவாசியைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது காங்கிரசாட்சி என்பது; எதிர்க்கட்சிகள் 'இட்டுக்கட்டுவது' என்று இடிமுழக்கம் செய்கின்றனர் காங்கிரசின் பேச்சாளர்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாகவும் அமைச்சர்கள் பேசுகின்றனர். விலைகள் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதெனச் சில அமைச்சர்கள் பொய்யை மெய்போலாக்கிக் காட்டுகின்றனர். இன்னும் சில அமைச்சர்களோ, விலை ஏற்றம் வளர்ச்சியின அறிகுறி என்று தெம்மாங்கே பாடுகின்றனர்.

மேலேஉள்ள இரண்டு 'மித்திரன்' கார்ட்டூன்களும், விலைவாசிப் பிரச்சினை இந்த ஆட்சியினரால் எந்த நிலைமைக்குத் துரத்தப்பட்டிருக்கிறது என்பதனைத் தெளிவாகக் காட்டுகின்றன.

உற்பத்தியாளர்—வியாபாரி—உபயோகிப்போர்—ஆகிய மூன்று தரத்தாருக்கும் இடையிலே, பொது நன்மையை அடிப்படையாகக்கொண்ட ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய பொறுப்பு ஒரு நல்லரசுக்கு உண்டு.

இந்த ஒரு துறையில் எந்த அளவு வெற்றியை ஒரு அரசு பெறுகிறதோ அந்த அளவுக்குத்தான் ஆளுந்தகுதி பெறறதாகப் பொருள்படும்,

இந்தத் தொடர்பைச் சரியான முறையிலே அமைத்திட காங்கிரஸ் அரசால் முடியவில்லை. அதற்குத் தேவையான திறமையைப் பெற்றுக்கொள்ளவில்லை; அதனால்தான் விலைவாசிப் பிரச்சனை நாளுக்கு நாள், சிக்கல் நிறைந்ததாகி ஆபத்தான கட்டத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

> அடிப்படைப் பிரச்சினை இது. இதிலே வெற்றிபெறத் தவறிவிட்ட ஒரு காரணம் போதும் மீண்டும் காஙகிரஸ்கட்சி அரசாளக் கூடாது என்பதற்கு.

எதிர்க்கட்சிகள் இதுபற்றிக் கூறிடும் பேச்சு அவ்வளவும், காஙகிரஸ் ஆட்சியினருக்கு, ஏதோ கட்சி மாச்சரியப் பேச்சுபோலவே தெனபடுகிறது. மித்திரன் காட்டிடும் படம்பற்றியும் காங்கிரசாட்சி அதே போக்கைக் கொள்ளமுடியாது. இதழின் கருத்தை ஆட்சி அலட்சியப்படுத்திடினும் பொதுமக்கள், அலட்சியப்படுத்த மாட்டார்கள்.

'பாரத்ஜோதி' என்ற இதழில், விலைவாசியைக் கட்டுப்படுத்த எடுத்துக்கொள்ளப்படும் முயற்சியால் விளைந்துள்ள நிலைபற்றி வெளிவந்துள்ள கார்ட்டூன், வெறும் வேடிக்கைக்காக உள்ளதாகத் தென்படவில்லை; மக்கள் எவ்வளவு இடுக்கணுக்கு ஆளாகி இருக்கிறார்கள் என்பதைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

Holding The Price Line



விலைகளைக் கட்டுபடுத்துவோம் என்று ஆட்சியாளர் கம்பீரமாகப் பேசுவது கேட்ட மக்கள் பெருமிதம்கொள்ளவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். உத்திரவு பிறப்பித்தால் போதும், விலைவாசி அஞ்சி கட்டுக்கடங்கிவிடும் என்ற நினைப்புடன் ஆட்சியாளர்கள் உள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டி, அரசு ஆணை பிறப்பித்து அல்ல, தக்க நடவடிக்கை எடுப்பதன் மூலமே விலைகளைக் கட்டுப்படுத்தமுடியும் என்று எதிர்க்கட்சிகள் வாதாடும்போது காஙகிரசாட்சியினர் கோபம்கொள்கின்றனர்.

அலையை என் ஆணையால் அடக்கிடுவேன் என்று கூறி கடலோரம் தன் அரியாசனத்தைக் கொண்டுபோய் போடச்சொல்லி அதன்மீது அமர்ந்துகொண்டு. 'அலையே அடங்கு!' எனறு ஆணை பிறப்பித்தானும் கன்யூட் என்ற பிரிட்டிஷ் மன்னன். அவன் கேலிக்குரியவனானான்!! அந்த நிலைக்கு ஒப்பாக இருக்கிறது. ஆணை பிறப்பித்து விலையை அடக்குவோம் என்று காங்கிரஸ் ஆட்சியினர் பேசுவது என்ற கருத்துப்பட 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஒரு கேலிச்சித்திரம் வெளியிட்டிருக்கிறது. அது இது.

விலைவாசியைக் கட்டுப்படுத்தத் தேவைப்படும் நடவடிக்கைகளை எடுக்கவேணடுமானால், பெரிய முதலாளி

கள், பதுக்கல்காரர்கள், ஆகியோரிடம் பகைத்துக் கொள்ளவும் தயாராக இருக்கவேண்டும். அவ்விதமான துணிவு வரவேண்டுமானல், தேர்தல் நடைபெற அவர்களிடம் கை நீட்டாதிருக்கவேண்டும். காங்கிரஸ் கட்சி அதற்குத் தயாராக இல்லை.

கம்பெனிகள் தேர்தல் நன்கொடை தருவது தடுக்கப்படவேண்டும் என்பதற்கான சட்டம்போட காங்கிரஸ் அரசு (எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியும்) மறுத்துவிட்டது.

கம்பெனிகளிடமிருந்து கொழுத்த தொகையைக் காங்கிரஸ் கட்சி தேர்தல் நன்கொடையாகப் பெற்ற விவரமே வெளிவந்திருக்கிறது.

இந்நிலையில், விலைகளைக் கட்டுப்படுத்தும் முறைகளை விட்டுவிட்டு, மக்களை மயக்கவும், கண் துடைக்கவும், 'சூபர் மார்க்கட்' அமைப்பது போன்ற விளம்பர வேலைப்பாடுகளிலே காங்கிரஸ் அரசு ஈடுபடுவதை எதிர்க்கட்சிகள் கண்டிக்கும்போது, பதவி கிடைக்கவில்லையே என்ற எரிச்சல் காரணமாக இது, என்று கதைக்கிருர்கள்.

காங்கிரஸ் சர்க்காரின் அந்தப் போக்கையும் கண்டித்து, அதுபோன்றே, இன்று ஒரு 'சூபர்மார்க்கட்' ஆகிவிட்டது என்று கேலி செய்து வாங்கிட ஆள் வருமா, வருமா என்று முன் வாயிற்படியிலே இந்திராகாந்தி அவர்களும், அடுத்த வாயிற்படியில் அமைச்சர்கள் சுப்பிரமணியமும அசோக்மேத்தாவும் ஆவலுடன் காத்துக் கிடப்பதாகவும் அங்கு, இந்திராகாந்தியின் வாக்குறுதிகள், அசோக்மேதாவின் திட்டங்கள் என்ற சரக்குகள் மலிவான விலைக்குக் கிடைக்கும் என்று பலகைகள் தொங்குவதாகவும் கேலி செய்து 'இந்துஸ்தான் டைம்ஸ்' கார்ட்டூன வெளியிட்டிருக்கிறது. அது, இது.

"What line are we selling today, boss ?"

இவ்வளவு குறைகளும் நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின மூலம் தீர்க்கப்பட்டுவிடும் என்று பேசுவதிலே காங்கிரஸ் ஆட்சியினர் ஆர்வம் காட்டுகின்றனர். ஆனல் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின கதி என்ன? அவைகளால யார் பயன்பெற்றனர் என்று நாம் கேட்கிறோம். உடனே கோபம் கொள்கின்றனர் ஆளவந்தார். நாலாவது ஐந்தாண்டுத் திட்டமும், தெளிவாக இல்லை, தேவையை உணர்ந்து தீட்டப்பட்டதாகத் தெரியவில்லை, மனம்போன போக்கிலே எழுதப்பட்டதாகத் தெரிகிறது என்றெல்லாம் கூறும்போது, பேதைகளே! திட்டத்தையா கேலி பேசுகிறீர்கள் என்று முழக்கமிடுகின்றனர்.

ஐந்தாண்டுத் திட்டம் எவ்வளவு தெளிவற்றதாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ள கார்ட்டுன், இதோ.

'அசோக்மேதா — திட்ட அமைச்சர் அல்லவா? அவர் திட்டத்தைக்காட்டி விளக்குவதாகப் படம் அமைந்திருக்கிறது. திட்டம் எப்படி இருக்கிறது? கோடுகள — சுற்றிச் சுற்றி! ஒரு விளக்கமற்று! பார்த்ததும், ஏதோ கோணல் கோணலாகக் கோடுகளைப் போட்டிருப்பது போலத்தான் தோன்றுகிறது.

விளக்கமற்று இருக்கிறது திட்டம என்பதனை இந்தக் கேலிப் படம் எடுத்துக்காட்டுகிறது.

அதே இதழில், நாலாவது திட்டம் மக்களின் தேவையைச் சரியாகக் கணக்கெடுக்காமல், அளவு பார்க்காமல் தைக்கப்பட்ட சட்டைபோல இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் முறையில் கார்ட்டுன் வெளியிடப்பட்டிருக்கிறது.



"But won't you be fattened enough in the next ten years!"

சட்டை தைத்துக்கொண்டு வந்த தையற்காரராக அசோக்மேதா காட்சிதருகிருர். யாருக்காக சட்டை தைக்கப்பட்டதோ, அந்த ஆள் இளைத்த உருவத்தினன்! சட்டையோ மிகப்பெரிது! அவனையே மறைத்துவிடக்கூடிய அளவு பெரியது. அவன் திகைக்கிருன் இத்தனைப் பெரிய சட்டையா என்று. அமைச்சர் சொல்கிருர்-அளவு பார்க்காமல் சட்டை தைத்தவர் — இருந்தால் என்ன! அடுத்த பத்து வருஷத்தில் பெருத்துவிடமாட்டாயா! இந்த சட்டை அப்போது சரியாக இருக்கும்! — என்று. அந்த இலட்சணத்தில் விவரம்புரியாமல், திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்று இதழ் கேலி செய்கிறது, திட்டம் தீட்டிடும் காங்கிரசாட்சியினர்.



'இந்து' பத்திரிகை, காங்கிரசின் தலைவர்கள் இருமினாலும், தும்மினாலும், டாக்டருடன் ஓடிச்சென்று சிகிச்சை செய்திடும் நண்பனாக இருந்து வருகிறது அந்த இதழினாலேயே தாங்கிக்கொள்ள முடியவில்லை, நாலாவது ஐந்தாண்டுத் திட்டம் தீட்டப்பட்டுள்ள விதம். கேலிச் சித்திரம் வெளியிட்டிருக்கிறது.

நாலாவது ஐந்தாண்டுத் திட்டம்பற்றிய விவரம் பொறித்த பலகையைக் காட்டி, ஆசிரியர் பாணியில் இந்திராகாந்தி அவர்கள், விளக்கம் அளிக்கிறார்கள். அசோக்மேதாவும், அமைச்சர் சசீன்சவுத்திரியும் உடன் நிற்கிறார்கள் கடுமையான வரிப்பளுவு, பணவீக்கம், போன்றவைகளைத் தோளில் தூக்கிக்கொண்டு 'சாமான்யனுடைய விருப்பம்' என்ற உருவில் காமராஜர் வந்து நின்று இந்திரா அவர்களைக் கேட்கிறார், "அம்மா! இதிலே எனக்கு உள்ள இடம் எது?"—என்று.

இதனைவிடக் கடுமைமிக்க கண்டனம் எதிர்க்கட்சி எதனிடமிருந்தும் வரவில்லை என்று கூறலாம். நாலாவது திட்டம், சாதாரண மக்களுடைய நலனைக்கருதிப் போடப்படவில்லை; அவன் ஏற்கனவே பல்வேறு பாரத்தைச் சுமந்து தத்தளிக்கிறான். அவனுக்கு இதம் செய்வதாகத் திட்டம் அமையவில்லை என்பதனை இந்தப் படத்தின் மூலம் விளக்கி 'இந்து' இடித்துரைக்கிறது, 'இந்து' இதழ் இடம் பிடிக்கும் வேலையிலேயா இருக்கிறது? எதிர்க்கட்சியா நடத்துகிறது இல்லையே! ஆளுங்கட்சியை ஏத்தி ஏத்தித் தொழுது நிற்கிறது. எனினும மக்களுக்கு உண்மையை எடுத்துக்கூறாத தவறிய குற்றம் சுமக்கவேண்டி ஏற்பட்டுவிடுமே என்ற எண்ணத்தால் இந்தப் படத்தை வெளியிட்டிருக்கிறது.

ரூபாயின் மதிப்பைக் குறைத்தது மானக்கேடான செயல் என்று எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவிக்கின்றன. அந்தப் பிரச்சினை பற்றி ஆளுங்கட்சி பேசுவது எவ்வளவு கேலிக்கூத்தாக இருக்கிறது என்பதை விளக்க,

It's still not clear dear—is that a chorus or a brawl?

"இந்துஸ்தான் டைம்ஸ்" இந்த கார்ட்டூனை வெளியிட்டிருக்கிறது. ஆளுங் கட்சியினரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள் திகைக்கின்றனர்; இது என்ன "கோஷ்டி கானமா"—அல்லது அமளி ஆலாபனையா! என்று. மிக முக்கியமான பிரச்சினை, நாட்டுப் பொருளாதாரத்துடன் மிகத் தொடர்பு கொண்ட பிரச்சினை, நாணய மதிப்புக் குறைப்பு; இத்தகைய பிரச்சினையிலேகூட ஆளுங் கட்சிக்குள் ஒருமித்த கருத்து இல்லை! ஊருக்கெலலாம் ஒருமைப்பாடு வேண்டுமென்று வலியுறுத்தும் ஆளுங் கட்சியில், ஒருமித்த கருத்து இல்லை ஆளாளுக்கு ஒரு ஆலாபனையாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது இந்த கார்ட்டூன்.

நாணய மதிப்புக் குறைப்பே கேடானது; அதிலும், அதைத் தொடர்ந்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளாவிட்டால், நிலைமை மேலும் மோசமாகிவிடும் என்று எதிர்க்கட்சியினரும், பொருளாதார நிபுணர்களும் கூறுகின்றனர். அவர்கள்மீது ஆத்திரம் உமிழ்கின்றனர் ஆளவந்தார்கள். தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருவதாக எக்காளமிடுகின்றனர். ஆனால் நிலைமை எப்படி இருக்கிறது? இதோ ஒரு படம்!—அதே இதழில் வெளிவந்தது



நாணய மதிப்பைக் குறைத்த பிறகு உள்ள பொருளாதார நிலைமையை, கட்டுக்கடங்காக மறுக்கும் ஒரு குதிரையாகக் காட்டி. அதனை ஒரு கொட்டிலில் போட்டுப் பூட்டி வைத்திருந்தனர் என்றும் எடுத்துக் காட்டி, கொட்டிலில் பூட்டு போடப்பட்டதே தவிர, கதவு போதுமான அளவு இல்லாததையும் காட்டி, குதிரை கொட்டிலை விட்டு வெளியே ஓடிவிட்டதைக் காட்டி குதிரை பறிபோன பிறகு கொட்டிலைப் பார்வையிடும் புத்திசாலிகளாக, அசோக்மேத்தாவையும் சசீன் சவுத்ரியையும் சித்திரித்துக் காட்டி, காங்கிரசாட்சியின் போக்குக்கு பலத்த அடி கொடுத்திருக்கிறது இதழ்! ஏன? எதிர்க்கட்சி என்பதாலா? இல்லை! நாட்டுக்கு உண்மையை எடுத்துக் கூறியாகவேண்டும் என்ற பொறுப்பினை உணருவதால்.



Don't worry, I'm holding the price-line

அதே இதழில் இது. பணவீக்கம் வெறிநாயாகவும், அதைக கட்டுப்படுத்த போடப்பட்டுள்ள கயிருக விலைவாசி யையும் சித்திரித்துக் காட்டி, விலைவாசியைக் கட்டுப்படுத் தத் தவறியதால், காங்கிரசாட்சியைக் கீழே தள்ளிவிடும் அளவுக்குத் துள்ளி, பணவீக்கம் எனும் வெறிநாய், மக்க ளைக் கடிக்க ஓடுவது போலவும், ஆட்சியாளா, "கவலைப் படாதே! நான் கயிற்றைப் பிடித்துக்கொண்டிருக்கிறேன்" என்று கூறுவது போலவும், படம் தரப்பட்டிருக்கிறது.

பணவீக்கத்தால் மக்கள் தாக்கப்படுகிருர்கள், அதைத் தடுத்திடும் ஆற்றலை அரசு இழந்துவிட்டது என் பது கார்ட்டூனின் கருத்து. ஆற்றலை இழந்துவிட்ட அரசு மீண்டும் அரசாள என்ன உரிமை இருக்கிறது? என்ற கேள்வியை எவர் மனதிலும் எழுப்பிவிடக்கூடியவிதமான படம்! எதிர்க்கட்சி தீட்டியது அல்ல!

இந்நிலையில், பெரிய மோசடிகளைத் துணிந்து செய்து கொண்டு வருகின்றனர், முதலாளிகள். அவர்களை அடக் கிட காங்கிரஸ் அரசு எடுததுக்கொள்ளும் நடவடிக்கை போதுமானதாக இல்லை. 'ராட்சத' சுரு மீன்—கப்பலையே கவிழ்க்கத்தக்கதான பெரிய சுரு மீனைப் பிடிக்க சாதாரண கயிற்றைவீசுவது எப்படியோ அப்படிஇருக்கிறது, மோசடி செய்திடும் முதலாளிகளை அடக்கிட காங்கிரஸ் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கை.

ஜெயந்தி கப்பல் கம்பெனி என்ற அமைப்பின்மூலட' சர்க்காரை மோசடி செய்யத் துணிந்த டாக்டர் தேஜாமீது நடவடிக்கை எடுக்க இந்த காங்கிரஸ் அரசு தவறிவிட்டது. பெரியதோர் மோசடி நடந்திருக்கிறது என்ருலும், பழ மொழி சொல்லுவார்களே, கடபபாறையை விழுங்கிவிட்டு சுக்குக் கஷாயம் சாப்பிடுவது போல என்று, அதுபோல தேஜா பற்றிய நடவடிக்கை இருக்கிறது என்பதைக் காட்ட வெளியிடப்பட்ட கார்ட்டுன், இங்கு தரபபடுகிறது.

இந்த கார்ட்டுன் - கல்கத்தா 'அமிர்த பஜார் பத்திரிகா' வில் வெளிவந்ததாகும்.

கயிறு வீசுபவர், அமைச்சர் சஞ்சீவி ரெட்டியார்!

உள்நாட்டிலே நிலைமை இவ்விதம் இருக்கிறது. உருப் படியான முறையிலே எந்தப் பிரச்சினையையும தீர்தது வைக்க இயலவில்லை. பற்ருக்குறை வளருகிறது. பஞ்சம மிரட்டுகிறது. பிணம் விழுகிறது. கழுகு வட்டமிடுகிறது! இவைகளைக் கவனித்து, தக்க நடவடிக்கை எடுத்து, அதிலே வெற்றி காண முயற்சிக்காமல், உலகுக்கு உப தேசங்களை வழங்கிக் கொண்டு வருகிறது. இந்தப் போக்கை எதிர்க் கட்சிகள் கண்டிக்கும்போது, நல்லது செய்தால் கூடவா கண்டிக்கவேண்டும்? உலக சமாதானம வேண்டும்! ஒரு நாடு மற்ருேர் நாட்டைத் தாக்கக்கூடாது என்று காங்கிரசாட்சி கூறுகிறது, தவரு? அமெரிக்கா தவறு செய்திடும்போது கண்டிபபது குற்றமா? போர் நிறுத்தம் காண திட்டம் கண்டறிந்து கூறுவது தவரு?— என்று அடுக்கிக்கொண்டு போகினறனர் ஆட்சியாளரின் அரவணைப்பிலே சுகம் காண்பவர்கள்.

எதிர்க் கட்சிகள் கேட்பதெல்லாம் நமது வார்த் தைக்கு, யோசனைக்கு, திட்டத்துக்கு, உலக நாடுகளிலே மதிப்பு ஏற்படத்தக்க விதமாக நாம் நடந்துகொள்கிருேமா என்பதுதான்.

நமது யோசனைகளை ஏற்றுக்கொள்ளவும், அதற்கு மதிப்பளிக்கவும், எந்த நாடாவது தயாராக இருக்கிறதா என்பதுதான்.

வியட்நாம் பிரச்சினை பற்றி, இந்திரா காந்தி அவர்கள் ஒரு யோசனை கூறினுர்கள்.

அந்த யோசனையை அமெரிக்காவும் ஏற்கவில்லை, வியட்நாமும் அதற்கு மதிப்பளிக்கவில்லை.

போதாது என்று, அம்மையார் அவர்கள் தமது திட்டத்தை எடுத்துக்கொண்டு சோவியத் ரஷியா சென்ருர் கள். அங்கு சென்று திட்டத்தை சோவியத தலைவரிடம் நீட்டியபோது, அவர் காட்டிய மரியாதையை மிக நாசூக் காக 'இந்துஸ்தான் டைம்ஸ்' படம் போட்டுக் காட்டிற்று.

THE RESPONSE

அம்மையார் தந்திடும் திட்டத்தை, மெத்த நன்றி! என்று கூறி, சோவியத் தலைவர் ஏற்றுக்கொள்கிருர்! எதிலே? குப்பைக் கூடையில்!! கவனித்தால், கேலி புரிகிறதல்லவா?

தேவையில்லாத விஷயங்களைக் கவனிப்பது நிலை மையை உணராமல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது, செல் லுமா என்பதறியாமல் செலுத்துவது போன்றவை, ஒரு அரசு பக்குவம் பெறவில்லை என்பதை எடுத்துக் காட்டு வனவாக விடுகின்றன.

உலக நாடுகள் பலவற்றிலே, நம் நாட்டு பஞ்சம், கடன் தொல்லே, குழப்பம், ஆகியவை பற்றிய பேச்சு மிகுந்திருக்கும் நேரம். எல்லா நாடுகளிடமும் உணவும் பொருளும், கடனுகவும் மானியமாகவும் நாம் கேட்டுப் பெறும் நிலேமை. இந்த நிலேமையில், சர்வதேசப்பிரச்சினே களிலே தலேயிட்டாக வேண்டும், பல நாடுகளேக் கூட்டி மாநாடு நடத்தவேண்டும, திட்டங்களேத் தயாரித்துத் திக் கெட்டும் அனுபடவேண்டும், நடுநிலேமைக் கொள்கைக் காக நாடு பலவற்றை இணேக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வத்தை அடக்கிக்கொள்ள வேண் டாமா? காணுேமே!

அமெரிக்காவிடம் கடனுக்கு மேல் கடனுக வாங்கிய படி இருப்பதால், பிரதம மந்திரி அம்மையாரின் நிலே மையே எப்படி ஆகிவிட்டிருக்கிறது என்பதை 'அமிர்த பஜார் பத்திரிகை' விளக்கி இருக்கிறது இந்த கார்ட்டுன் மூலம்.



கடன் மூட்டைக்குள்ளே அம்மையார் போட்டடைக்கப்பட்டு விட்டுள்ளார்கள். கை மட்டுமே வெளியே தெரிகிறது! அந்தக கரத்திலே ஒரு அறிவிப்புப் பலகை கடன்களே எல்லாம் ஒழித்துக கட்ட அதிகக் கடன் கேட்கிருேம்! —என்று அதிலே எழுதப்பட்டிருக்கிறது நிலேமை இது! எதிர்க்கட்சிகள், காங்கிர சாட்சி, நாட்டைக் கடன்கார நாடாக்கி விட்டது எனறு கூறும்போது எவ்வளவு ஆத்திரம் வருகிறது பிரதமமந்திரியாரை, மூடடைகட்டிவிட்டிருக்கிறது கேலிப் படத்தில்!! என்ன செய்வார்கள்? ஓ! ஓ! எதிர்க்கட்சியின் எதிர்ப்பு என்று இதற்குக் கூற முடியுமா!!

What a Life!

"You can come out sir, there is no firing — those are Diwali crackers!"

இன்றைய அமைச்சர்களேப்பற்றிய மதிப்பீடு எப்படி இருக்கிறது என்பதை விளக்கிட 'டைம்ஸ் ஆப் இந்தியா' வெளியிட்ட படங்கள் இவை. நாட்டை ஆளும் தகுதி எமக்கன்றி வேறு எவருக்கு உண்டு என்று கேட்டு மார்தட்டுகின்றனர்; இங்கு இதழ் தரும் குட்டுகளேபபார்த்தால், பரிதாபமாகக் கூட இருக்கிறது.

வெடிச்சத்தம் கேட்டு அமைச்சர் விரண்டு போய் மேஜைக்கு அடியிலே ஒளிந்து கொள்கிருராம்! உயர், அதிகாரி சத்தத்திற்கான காரணத்தைக் கண்டறிந்த பிறகு, அமைச்சரை வெளியே வரச் சொல்லுகிருர்! "ஐயா! தாங்கள் வெளியே வரலாம்! துப்பாக்கிச் சூடு ஒன்றும் இல்லே. கேட்ட சத்தம் தீபாவளி பட்டாசுச்சத்தம் வேருென்றுமில்லே" — என்று அமைச்சருக்குத் தைரியம் கூறுகிருர்! அத்தனே அஞ்சா நெஞ்சம் அமைச்சருக்கு!!

No. Sir, it has not been a bad year—It has been a good year. This is the first time the ministers are visiting this place!

பட்ட மரம்! அதன் கீழ் பஞ்சத்தால் அடிபட்ட மக்கள்! அதிகாரியும் பணியாளும் புடைசூழ, அமைச்சர் வந்திருக்கிருர் மக்களேக்காண. இந்த ஆண்டு கொஞ்சம் கஷ்டமான ஆண்டு" என்று, விளக்கம் தந்து மக்களின் விசாரத்தைப் போக்கப் பேசுகிருர் அமைச்சர். "இல்லே ஐயா! இந்த ஆண்டு கெட்ட ஆண்டு அல்ல. நல்ல ஆண்டு! இந்த ஆண்டுதான், முதன் முதலாக மந்திரிகள் இந்தப்பக்கம் விஜயம் செய்திருக்கிருர்கள்" என்று பேசுகிருன்; ஏழை! பேச்சா அது? இடித்துக் காட்டுகிருன். தேர்தல் நேரமாகப் பார்த்துத்தானே இந்தத் திருவாளர்கள் தலே காட்டுவார்கள் என்பதனே.



Don't jeer at me. Jeer at him—He wrote this speech!

அமைச்சர் சொற்பொழிவு ஆற்றுகிருர்! சொற்பொழிவைப்படிக்கிருர். கேட்போர் கேலிச் சிரிப்பொலி எழுப்புகின்றனர். கோபம் அமைச்சருக்கு! என் பேச்சையா கேலி செய்கிறீர்கள் என்று கேட்டாரா? இல்லே! என்னேக் கேலி செய்து சிரிக்காதீர்கள்; இந்த பிரசங்கத்தை எழுதிக்கொடுத்தாரே, அதோ அந்த ஆசாமி அவரைக் கிண்டல் செய்யுங்கள்!" என்று கூறி. அதிகாரியைச் சுட்டிக் காட்டுகிருர். அத்தனே அறிவுத்தீட்சணியம்! சொந்தச் சிந்தனே! பேசுபவர் அமைச்சர்;

He's the luckiest among us — there have been no charges at all against him except that he is incompetent and inefficient.

பேச்சு தயாரிப்பவர் அதிகாரி!! இது ஆட்சியின் நிலைமை!!

நாலு மந்திமார் கூடி பேசுகின்றனர். அதிலே ஒரு அமைச்சரைக் காட்டி மற்றொருவர் சொல்லுகிறார், 'நம்மிலேயே இவர்தான் மிகுந்த அதிர்ஷ்டசாலி! இவர் மீது எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லை; திறமையற்றவர் என்பது தவிர! திறமைக் குறைவு என்ற குற்றம் சாட்டப்பட்டவர்தான், எல்லோரைக் காட்டிலும் அதிர்ஷ்டக்காரர் என்றால், மற்ற மந்திரிகள் மீது என்னென்ன குற்றச்சாட்டுகள் இருந்திருக்கக்கூடும் என்பதை யூகித்துக் கொள்ளலாம் அல்லவா! அவ்வளவு ஒழுங்கானவர்கள் இன்றைய அமைச்சர்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது, கேலிப்படம்.

"Honestly, we still cherish your memory, Pop—er,, Bapuji !"

முன்னதைவிட மோசமானது இந்தப் படம் காட்டிடும் நிலைமை. இது 'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழில் உள்ளது.

அக்டோபர் 2! புனிதமான நாள்! மதுவிலக்கு அமுலாகும் நன்னாள்! மகாத்மாவின் திருஉருவப் படத்தின் முன்பு நிற்கிறார் ஒரு காங்கிரஸ் தலைவர்! ஒயிலாக நிற்பதாக எண்ணம்! ஆனால், பாவம் தள்ளாடும் நிலையிலே இருக்கிறார்! கையிலே டிரான்சிஸ்டர் ரேடியோ! ஜேபியில்? கீதை அல்ல! பெண் படம் போட்ட காம இச்சையைத் தூண்டும் இதழ்- மேஜை மீது? நியூயார்க்! பாரிஸ்! ரோம்! இங்கெல்லாம் அவர் போய் வந்தவர் என்பதைக் காட்டும் தோல் பை! பக்கத்தில்? வெளியே சொல்லாதீர்கள் வெட்கக்கேடு! விஸ்க்கி பாட்டில்!!

அமெரிக்க நாட்டு நிருபரொருவர் பஞ்சம் தலைவிரித்தாடும் பீகார் பகுதி சென்றபோது காங்கிரசின் தலைவர்கள் சிலர் மதுபானம் அருந்திக்கொண்டு மந்த காசமாகக் கிடந்தனர் என்று எழுதினாராம்! இந்திரா காந்தியாரிடம் நிருபர்கள் கேட்டதற்கு, நேரடியான பதில் கிடைக்கவில்லை! அவ்விதம் செய்தவர்கள் காங்கிரஸ்காரராக இருக்க முடியாது என்று கூடச் சமாதானம் கூறவில்லை. அப்படி எழுதினவர் உண்மையையே எழுதுபவரா!—என்று ஒரு புதிர்போட்டு அனுப்பி விட்டார்கள்.

காந்தியார் படத்தின் முன்பு நிற்கும் காங்கிரஸ்காரர் ஒருவருடைய நிலைமையைப்படம் போட்டுக் காட்டியிருப்பது அமெரிக்க இதழ் அல்ல!!

சுவற்றிலே தொங்க விடப்பட்டிருப்பது என்ன? குடி மிகப்பெரிய கேடு! காந்தியாரின் மணி மொழி! மேஜை மீது! விஸ்க்கி பாட்டில்! தலைசுற்றும்—அவருக்கு அல்ல-பழக்கப்பட்டவராகவும் துணிந்த போர்வழியாகவும் அவர் இருப்பார்—நமக்கு—இப்படிப்பட்ட நிலையில் காங்கிரஸ் தலைவர்கள் சிலர் இருக்கின்றனரே என்று! இருக்க முடியுமா என்றுகூடச் சந்தேகம் தோன்றும். ஆனால் இருக்கிறார்கள் என்பதால்தான் இந்துஸ்தான் டைம்ஸ் இந்தப் படம் போட்டுக் காட்டுகிறது.



நாட்டு நிலைமை இந்த இலட்சணத்தில் இருக்கிறது. பேச்சோ, பொறி பறப்பதாக! படுத்துக் கொண்டே ஜெயிப்போம் என்பதாக! எதைக்காட்டி? எடுத்துக் காட்டப்பட்டுள்ள இந்தப் படங்களைக் காட்டியா? இந்தப் படங்கள் காட்டிடும் நிலைமைகளைக் காட்டியா? இதோ ஓர் காட்சி! படுத்துக்கொண்டே ஜெயிப்பேன் என்று பேசுகிறாரே அமைச்சர் சுப்பிரமணியம் அவர் தெரியும் காட்சி. கப்பரையும் கையுமாக நிற்கிறார்!

ஐயோ! பசி'—அவர் கெஞ்சுகிறார்! யார் எதிரே நின்று கொண்டு? அமெரிக்க குடி அரசுத் தலைவர் எதிரில்! தலையைச் சொறிந்து கொண்டு கவலைப்படுகிறார். அமெரிக்கத் தலைவர்! ஏன்? பெரிய கொப்பரையிலிருந்து எடுத்தெடுத்து சுப்பிரமணியத்தின் கப்பரையை நிரப்புகிறார்—பலதடவை! போதவில்லை போதவில்லை! பசி! பசி!—என்றே அமைச்சர் கேட்டபடி இருக்கிறார். ஏன்? கப்பரையைக் கவனித்தால் காரணம் புரியும். அடியிலே ஓட்டை! ஊற்றுவது கீழே போய் விடுகிறது! ஓட்டைக் கப்பரையிலே எவ்வளவு ஊற்றினால்தான் என்ன பலன் என்று அமெரிக்கத் தலைவர் திகைக்கிறார்.

அமெரிக்க உதவி மேலும் மேலும் கிடைத்தாலும், ஒழுங்கான நிர்வாகம் இல்லாததாலே, உருப்படியாக வில்லை என்ற பாடத்தைக் காட்டுகிறது, படம்!

இந்த மாபெரும் சாதனை இருக்கிறதே ஓட்டைக் கப்பரையை ஏந்திக்கொண்டு, 'ஐயா! பசி!' என்று கேட்டிடும், மகத்தான சாதனை இதற்காகப் பாராட்டித்தான் மக்கள் ஓட் அளிக்க வேண்டும் என்று அமைச்சர் எதிர்பார்த்து படுத்துக்கொண்டே ஜெயிப்போம் என்று பேசுகிறார்போலும்!

போகவிலாஸ் ஓட்டல் வாசற்படி! உள்ளே இருந்து வருகிறார், அமெரிக்க அதிபர் ஜான்சனும். சோவியத் தலைவர் கோசிஜினும்! கந்தல் உடை! நீட்டிய கரம்! பரிதாப நிலையுடன்! ஐயா! காசு! — கேட்டபடி நிற்பது யார்? படுத்துக்கொண்டே ஜெயிப்பேன் என்று பேசுகிறாரே, அமைச்சர்—அவரேதான்! என்ன பதில் கிடைக்கிறது? ஜான்சன், கோசிஜினைக் காட்டிக் கூறுகிறார்

''முதலில் அதோ அந்த ஐயாவைக் கேள்!'' — என்று கோசிஜின் ஜான்சனைக் காட்டி, இந்த ஐயாவை முதலிலே கேள்!'' என்கிறார்.

"Not me—ask that Sahib first!"

நாட்டு நிலைமை இன்று இது. இந்த நிலைமைக்கு நாட்டைக் கொண்டுவந்து விட்டுவிட்டவர்கள்தான், நாடாளும் தகுதி எமக்கன்றி வேறு எவருக்கு உண்டு என்று கேட்கின்றனர்.

இவர்களின் தகுதி திறமை பற்றி, எதிர்க்கட்சி ஏடுகள் அல்ல, காங்கிரசுக்கு ஆதரவு தேடிடும் ஏடுகளே, கொடுத்திடும் நற்சான்றுகளிலே சிலவற்றைத்தான் இங்கு தர முடிந்திருக்கிறது.

நானும், ராஜாஜி, காயிதேமில்லத் ஆகியவர்களும் ஒரு கழுதை மீது சவாரி செய்வதாக, 'விகடன்' படம் போட்டுக் காட்டிற்று. நண்பர்கள் வருத்தப்பட்டார்கள்! நான் சமாதானம் சொன்னேன்—கழுதை மீது சவாரி செய்வதாகத்தானே படம்! கழுதையாக சித்திரிக்கவில்லையே!—என்று, இப்படி ஏதாவது ஒரு சமாதானம் சொல்லி விட்டால் போதுமா என்று சலித்துக் கொண்டார்கள்.

விகடன் அதிபர், காங்கிரஸ்காரர்! ராஜ்ய சபை உறுப்பினர் அவர் எதிர்க்கட்சிகளைக் கேலிப்படம் மூலம் கேவலப்படுத்துகிறார், பண்பு அல்ல என்றாலும், அது அவர் தம்முடைய கட்சிக்காகச் செய்திடும் 'சேவை' என்று கருதிக் கொள்ளக்கூடும். அவர், என்னிடம் இதைத்தான் எதிர்பார்க்கலாம் என்று கூறும்போது, அவரிடம் வேறு எதிர்பார்க்க நமக்கு ஏது உரிமை? மலக்குழி என்று போர்டு போடப்பட்டுள்ள இடத்திலே நின்று கொண்டு, மல்லிகை மணம் வீசக் கூடாதா என்று கூறுவதும் எதிர்பார்ப்பதும் மிகப் பெரிய தவறு, மதியீனம் அல்லவா!

காங்கிரசுக்கு சேவை செய்வதாக எண்ணிக் கொண்டு நம்மைக் கேலி செய்திடுவது இருக்கட்டும், நாட்டுக்காக, மக்களுக்காக உண்மையை உரைத்திடத்தான் வேண்டும் என்ற நோக்கத்துடன் காங்கிரசாட்சியின் கோணல்கள்பற்றி, 'தேசிய' இதழ்கள் வெளியிட்டுள்ள கேலிச் சித்திரங்களைப் போட்டிருப்பதற்கு என்ன செய்வது என்று கேட்டுவிட்டு, அந்த கார்ட்டூன்களில் சிலவற்றை இங்கு வெளியிட்டிருக்கிறோம். ✽

வான்புகழ் கொண்ட வள்ளுவரைப்பற்றி
தேன் தமிழில், திகட்டாத முறையில்
அருமையான ஆராய்ச்சி நூலாக
தமிழர் யாவரும்
பெருமை கொள்ளத்தக்க வகையில்
உள்ளம் அள்ளும் நடையில்
உயர் தனிக் கருத்துக்களோடு

திரு. சதாசிவம் அவர்கள்
ஆக்கி அளித்துள்ளார்!

பத்திரிகைகள் ஒருங்கே பாராட்டிய
இந்த அரிய நூல்
ஒவ்வொரு இல்லத்திலும்
இருக்கவேண்டிய ஒன்று!

மன்றங்கள், நூலகங்கள்,
படிப்பகங்கள்
ஒவ்வொன்றும்
வாங்கி வைக்கவேண்டிய
கருத்துக் கருவூலம்!
அறிவுக் களஞ்சியம்!

நூல்—
திருவள்ளுவன்
விலை ரூ. 6

இன்றே எழுதுக—
இன்பவாழ்வுப் பதிப்பகம்,
கோயம்புத்தூர்-2

தந்தி: வெண்சங்கு தொலைபேசி: 108

தமிழர் திருநாளில் எங்கள் உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

தமிழ் நாட்டில் தனிச்சிறப்புடையது

வெண்சங்கு சீயக்காய்த் தூள்

மணத்தில் சிறந்தது

செல்வம் ராணி அண் சேகர் பத்திகள்

உருசியில் சிறந்த

வெண்சங்கு மார்க் சேமியாவை

வாங்கி உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்:

S. பெத்தண்ண நாடார்,

வெண்சங்கு தொழிற்சாலை

கீழவாசல், :: தஞ்சாவூர்.

உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள்!

யுனைடெட் இந்தியா ரோலர் பிளவர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்,

தரமிக்க 'கோபுரம்' பிராண்டு மைதா, ரவா

'கப்பல்' பிராண்டு ஆட்டா உற்பத்தியாளர்கள்.

1, அண்ணாபிள்ளை தெரு, :: சென்னை-1

போன்: 21149 தந்தி: MONARCH





மார்க் S. R. & CO,　　　　PHONE No. 573

வியாபார அன்பர்கள் அனைவருக்கும்
எங்களது பொங்கல் வாழ்த்துக்கள்!

சுப்புராமன் அன் கோ.,

62, சந்தை ரோடு, திண்டுக்கல்-3

நாடு நலம்பெற விவசாயம் தேவை!
விவசாயம் நலம்பெற விவசாயக் கருவிகள் தேவை!
ஆகவே எங்கள் கம்பெனியில் தயாரிக்கும்

ஸ்டீல் கொழு, (ஜப்பான் முறைப்படி ஸ்டீலில் தயாரித்தது)
லாடம்,
லாட ஆணி,
மண்வெட்டி,

மற்றும் தங்களுக்குத் தேவையான இரும்பு சாமான்கள்
தயாரிப்பவர்கள்.

எல்லா நகரங்களுக்கும்
ஏஜண்டுகள் தேவை.



வியாபாரிகட்கும், பொதுமக்கட்கும் எமது உளங்கனிந்த

பொங்கல் வாழ்த்துக்கள்!

முத்து மெட்டல் மார்ட்

எம்மிடம் செம்பு, பித்தளை, அலுமினியம் பாத்திரங்களும், யானைமார்க் பக்கட்டுகளும் நியாயமான விலைக்குக் கிடைக்கும்.

ஆர்டர்பேரில், சரக்குகள் குறித்த காலத்தில் தயார்செய்து தரப்படும்.

உரிமையாளர்: S. முத்துவேல்

விவரங்களுக்கு: டெலிபோன்: 53868

முத்து மெட்டல் மார்ட்,

133, திருவொற்றியூர் பெரியசாலை, வண்ணாரப்பேட்டை, சென்னை-21.

சின்னகாஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.

பாலன்
பிக்சர்ஸ்
சபாஷ்
தம்பி!
டைரக்ஷன்
ஜம்பு
கதை
மகேந்திரன் B.A.
வசனம் இசை
முல்லை சத்தி · எஸ்.எம்.எஸ்
பாடல்கள் ஒளிப்பதிவு
வாலி · கர்ணன்
கலை ஸ்டூடியோ
வரதன் · வாஹினி
தயாரிப்பு · K.R. பாலன்
SATHYAM

Somu
அளிக்கும்
திருமகள் கம்பைன்ஸ்
டைரக்ஷன்
தயாரிப்பு
T.S.சேதுராமன்
K.N.ஷண்முகம்
A.R.தியாகராஜன்
திரைக்கதை வசனம் கோபு
பாடல்கள் கண்ணதாசன்
இசை M.S.விஸ்வநாதன்
ஒளிப்பதிவு P.N.சுந்தரம்
கலை கிருஷ்ணராவ்
எடிட்டிங் N.M.சங்கர்
ஸ்டில்ஸ் K.அருணாசலம்
for particulars G.M.VENKATESAM. "SOORA HOUSE" MADRAS-10.